# ஈழத்துப் பண்டிதமணி



பேராசிரியர்

சு.சுசீந்திரராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்
சிவசாமிக்கு
அன்பளிப்பு
சுசீ.
1.2.02

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

11332 S.C

# ஈழத்துப் பண்டிதமணி

சு. சுசீந்திரராஜா
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தொகுப்பாசிரியர்:
கந்தையா ஸ்ரீகணேசன்
B.A. (Hons), M. Phil. (Ling.)
ஆங்கில விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்,
வவுனியா.

இலங்கையில் விற்பனை
பூபாலசிங்கம் புத்தக சாலை
340, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி: 422321

4, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தலைப்பு :*

**ஈழத்துப் பண்டிதமணி**

*ஆசிரியர் :*

**பேராசிரியர் சு. சுசீந்திரராஜா ©**

*தொகுப்பாசிரியர் :*

**கந்தையா ஸ்ரீ கணேசன்**

*வெளியீடு :*

**குமரன் புத்தக இல்லம்**

201, டாம் வீதி, கொழும்பு 12. தொ.பேசி: 421388 | 3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி,வடபழனி சென்னை 26.

ISBN : 955 - 9429 ----------

***TITLE :***

**Elathup Pandithamani**

***AUTHOR :***

**Prof. S. Suseendirarajah ©**

***COMPILATION :***

**Kandiah Shri Ganeshan**

***PUBLISHED BY :***

**Kumaran Book House**

201, Dam Street, Colombo 12. T. Phone : 421388 | 3, Meigai Vinayagar Street, KumaranColony ,Vadapalani, Chennai - 600026.

***PRINTED BY :***

**PRICE : 90.00**

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# சமர்ப்பணம்

இருபதாம் நூற்றாண்டில்

தமிழ்ப் பேரறிஞராக விளங்கிய பேராசிரியர்கள்

மு.வ., தெ.பொ.மீ.

ஆகியோர் நினைவிற்கு.

❀❀❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தமிழ் நாட்டிலே பொதுவாகப் பண்டிதமணி என்னும் தொடர் கதிரேசஞ் செட்டியார் அவர்களைக் குறித்து நிற்பதாலும், அதே தொடர் ஈழத்திலே சி. கணபதிப்பிள்ளை அவர்களைக் குறித்து நிற்பதாலும் இரு வழக்குகளையும் வேறுபடுத்தும் பொருட்டு இந்நூல் "ஈழத்துப் பண்டிதமணி" எனப் பெயர் பெற்றுள்ளது. பண்டிதமணி இருவருமே தமிழ்ப் பேரறிஞர்.

இந்நூல் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பற்றிப் பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராசா அவர்கள் அவ்வப்போது தனித்தனிக் கட்டுரைகளாக எழுதியவற்றின் தொகுப்பாகும். இதனில் உள்ள "பண்டிதமணியின் பேரும் புகழும்" என்ற கட்டுரை முன்னர் சிறியதொரு நூலாக வெளிவந்துள்ளது. அதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1993இல் வெளியிட்டது. "பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்" 1989இல் "சிந்தனை"யில் வெளிவந்தது. "பண்டிதமணியின் மொழிநடை" பண்டிதமணி நினைவு மலரில் வெளிவந்தது. "பண்டிதமணியும் உப அதிபர் கைலாசபதியும்", "நினைவில் நிற்கும் பண்டிதமணி" ஆகிய இரண்டும் தினகரனில் வெளிவந்தவை. "பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்" என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளியிட்ட நூலின் முகவுரைதான் இங்கு "பண்டிதமணி போற்றிய சிந்தனைகள்: அவை வெளிவந்த வரலாறு" என்னும் தலைப்பைக் கொண்டுள்ளது. ஏனைய கட்டுரைகள் இதற்கு முன்பு எங்கும் வெளிவராதவை. இந்நூல் ஒரு தொகுப்பாக வெளிவருவதால் ஒரு கட்டுரையில் உள்ள சில கருத்துக்கள் மற்றும் ஒரு கட்டுரையிலும் வருவது தவிர்க்க முடியாததாகின்றது.

பண்டிதமணி அவர்கள் பற்றி நாம் ஈழத்தவர்களுக்கு அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. அவர் நாவலர் பெருமானுக்குப் பின் தலைசிறந்த ஓர் அறிஞராகத் திகழ்ந்தவர். தமிழும் சைவமும் வளரத் தொண்டாற்றியவர். அவர் பற்றிய உயராய்வு இன்னும் முழுமையாகச் சரிவர நடைபெறாதது கவலைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் பேராசிரியர் சுசீந்திரராசா அவர்கள் மேற்கொண்ட முயற்சி வரவேற்கத்தக்கது. போற்றிப் பாராட்டத்தக்கது. தமது இளமையில் இருந்து பண்டிதமணியை நன்கு அறிந்த பேராசிரியர் அவர்கள் சிறந்த மொழியியல் அறிஞர் மட்டுமல்லாமல் தமிழறிஞரும் ஆவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் (பச்சையப்பன் கல்லூரியிலும், மாநிலக்கல்லூரியிலும்) மு. வரதராசன், அ. ச. ஞானசம்பந்தன், தெ. பொ. மீனாட்சிசுந்தரன் போன்ற பேரறிஞரின் பெருவிருப்பிற்குரிய தமிழ் மாணவனாக விளங்கியவர். தமிழ் இலக்கியத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். சுசீந்திரராசா அவர்களுடைய ஆய்வுகள் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்டவை. அறிவியல் ஆய்வு நெறி முறைகளைக் கடைப்பிடித்து எழுதப்பெற்றவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அவர்களிடம் கற்று ஆராய்ந்து அவரது விருப்பிற்குரிய ஒரு மாணவனாக இருந்தமையால் பண்டிதமணி பற்றிய அவரது கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவதற்கு பேராசிரியரிடம் அனுமதி கேட்டபோது மிக மனமுவந்து உடன்பட்டார். அவர்களுக்கு மிக்க நன்றி கூறுகின்றேன். பண்டிதமணி பற்றி ஆய்வாளர் மேலும் சிந்திப்பதற்கு இந்நூலில் உள்ள கட்டுரைகள் மிகவும் பயன்படும். ஆய்வை நல்லமுறையில் வளர்த்தல் ஆய்வாளரின் கடனாகும். பண்டிதமணி பற்றி அறிந்து கொள்ள விரும்புபவர்கள் இந்நூலை வரவேற்பார்கள் என நம்புகின்றோம்.

இறுதியாக இந்நூலைத் தரமறிந்து பயனறிந்து வெளியிட முன்வந்த குமரன் வெளியீட்டாளர்க்கு எமது நன்றி. அவர்கள் பணி பெரிது.

**கந்தையா ஸ்ரீகணேசன்**
*தொகுப்பாசிரியர்*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம்*
13.06.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | iv |
| 1. | நினைவில் நிற்கும் பண்டிதமணி | 1 |
| 2. | பண்டிதமணியின் பேரும் புகழும் | 15 |
| 3. | பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள் | 57 |
| 4. | பண்டிதமணியின் மொழிநடை | 96 |
| 5. | டாக்டர் உ.வே.சா. ஐயர் அவர்கள் மீது பண்டிதமணி கொண்ட துவேஷமும் மதிப்பும் | 104 |
| 6. | பண்டிதமணியின் காப்பியக் காழ்ப்பு | 114 |
| 7. | பண்டிதமணி ஆய்வில் சிக்கல்களா? | 156 |
| 8. | பண்டிதமணியும் உப அதிபர் கைலாசபதியும் | 164 |
| 9. | பண்டிதமணி போற்றிய சிந்தனைகள் : அவை வெளிவந்த வரலாறு | 175 |
| 10. | சிந்தனைக்கும் விருப்பிற்கும் உரியனவாகப் பண்டிதமணி வழங்கியவை | 184 |
| 11. | பண்டிதமணி – அதிபர் கூட்டரவு | 192 |
| 12. | பண்டிதமணியின் 1951 தமிழ் விழாச் சொற்பொழிவு | 205 |
| 13 | பண்டிதமணியின் பதிப்பு | 211 |
| 14. | சரியான பண்டிதமணியைக் கண்டு கொள்தல் | 214 |
| | உசாத்துணை | 223 |
| | சொல்லடைவு | 229 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# நினைவில் நிற்கும் பண்டிதமணி

நமது நாட்டில் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்கள் பதினைந்து பேர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்களுடன் ஏதேதோவகையில் தொடர்பு கொண்டிருந்தார்கள் எனப் பெருமிதப்பட்டு யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தில் பதிவாளராக இருந்த ஒருவர் பண்டிதமணி நினைவு மலரில் எழுதியுள்ளார். அதனை முதன்முதலாகப் படித்துப் பார்த்தபோது "தன் நெஞ்சறிவது பொய்யற்க" எனும் குறளே நினைவிற்கு வந்தது. யான் சிறுவனாக இருந்த காலந்தொட்டு பண்டிதமணியுடன் கொண்ட சிறிய தொடர்பினையும் அதனால் யான் பெற்ற பயனையும் எங்கேயாவது அமைதியாக - ஆனால் சற்று உரிமையுடன் - கூறி வைத்தல் வேண்டும்; அது சாலப் பொருந்தும்; நீதியும் ஆகும் என்ற எண்ணங்கள் எனது நினைவில் அவ்வப்போது ஊடாடி வந்தன. பலர் பண்டிதமணியுடன் தாம் கொண்ட தொடர்பினைக் கூறிக்கொண்டிருக்கும் போது யான் கூறாது விடின் நெஞ்சை வஞ்சித்தல் ஆகும் அன்றோ! காலப்போக்கில் என் நெஞ்சே என்னைச் சுட்டுவிடும் அன்றோ! இந்த அச்சத்தினால் பண்டிதமணி அவர்களைப் பற்றி எனது நினைவுகளை இங்கு எழுதலானேன். என்றுமே மறக்கமுடியாத பசுமையான சில எண்ணங்கள், சுவையான நினைவுகள் நெஞ்சில் வேரூன்றி நிற்கின்றன.

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை என ஒன்று 1928ஆம் ஆண்டு தொடக்கம் 1961ஆம் ஆண்டு வரை இருந்தது. பின்பு அரசின் ஆணை காரணமாக அது இல்லாமற் போய்விட்டது. அந்தச் சைவாசிரிய கலாசாலை பற்றி இன்றைய இளஞ்சந்ததியினர் பெரும்பாலும் யாதும் அறியார். கலாசாலையை அறிந்தவர்களும் மற்றும் அதன் பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் தாம் வாழும் காலம் வரை அவ்வப்போது கலாசாலை பற்றிப் பேசுவார்கள். பின்னர், கலாசாலை கனவாய்ப் போய்விடலாம். தற்பொழுது "ஆடியபாதம் வீதி" எனப்படும் வீதியிலிருந்து அன்று கலாசாலைக்குச் சென்ற வீதி இன்றும் "கலாசாலை வீதி" என அழைக்கப்படுகின்றது. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை தன் காலத்தில் தலை சிறந்த ஒரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாகப் புகழ் பெற்று விளங்கியது. யாழ்ப்பாணத்திலே தமிழ், சைவம் - இவற்றின் அடிப்படையில் எழும் பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றின் மையக்கருவாகத் திகழ்ந்தது. ஆரம்பத்தில் எதிர்பார்த்தது போல் சைவவித்தியா விருத்திச் சங்கத்து நூற்றுக்கணக்கான பாடசாலைகளின் செயற்பாட்டிற்கு உயிர்நாடியாக விளங்கியது. அன்று கலாசாலை இல்லை என்றால் சைவாசிரியர்கள் எங்கு! குழந்தைகளுக்குச் சைவக்கல்வி எங்கு! அந்தக் கலாசாலையின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் காரணமாக அமைந்தவர்கள் மூவர் எனப் பலர் பறைசாற்றி வந்துள்ளனர். அவர்கள் மூவரும் கலாசாலையில் இருபத்தொரு ஆண்டுகள் அதிபராகப் பணிபுரிந்து காலஞ்சென்ற திரு. சி. சுவாமிநாதன் அவர்களும், இருபத்தெட்டு ஆண்டுகள் உபஅதிபராகப் பணியாற்றிக் காலஞ்சென்ற திரு. பொ. கைலாசபதி அவர்களும், முப்பது ஆண்டுகள் கலாசாலையில் தமிழ், சைவம் எனப் போற்றி வாழ்ந்து விரிவுரையாளராகப் பணிபுரிந்து காலஞ்சென்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் ஆவார்கள்.

இம் மூவர்களுள் ஒருவரது - அதிபரது - குடும்பத்திலே 1933ஆம் ஆண்டு பிறந்து வளர்ந்த காரணத்தினால் சிறுவயதிலேயே சைவாசிரிய கலாசாலை பற்றிக் கேள்விப்பட்டு அதனை அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது உபஅதிபர் பற்றியும் பண்டிதமணி பற்றியும் விளங்கியும் விளங்காமலும் ஏதேதோ அறிந்து கொண்டேன். அவர்களைச் சிறு வயதிலேயே கலாசாலைப் படங்களிலும் நேரிலும் கண்டுள்ளேன். உப அதிபர் அவர்கள் தம் சால்வையைக் கழுத்தைச் சுற்றிப் போடுவது ஏன் எனவும் பண்டிதமணி மூக்குத்தூள் போடுவது ஏன் எனவும் யான் சிறுவனாக எண்ணியதுண்டு. ஒரு முறை தந்தையைப் பார்ப்பதற்குக் கலாசாலைக்கு யான் சென்ற போது கலாசாலை வீதியில் உபஅதிபர் அவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அதிபர் இருக்கிறாரா என்று கேட்டபோது அவர் ஒன்றுஞ் சொல்லாது சென்று விட்டார். "அவர் அப்படித்தான், யோசனையில் போவார்" என்று பின்னர் தந்தையிடம் அறிந்து கொண்டேன். உப அதிபர் ஒரு சிறந்த சிந்தனையாளன் என்றும் அதிகம் சிந்தித்தால் சில சமயம் அவருக்குக் காக்கைவலி வருவது உண்டு ஆதலால் நிர்வாக விஷயத்தில் அவரை அதிகம் சிந்திக்க விடுவதில்லை என்றும் தந்தை பேசிக் கொள்வதும், "காக்கைவலி" எனும் நோய்ப்பெயரை அப்பொழுது யான் முதன்முதல் அறிந்து கொண்டதும் நினைவில் உண்டு. எனது தந்தை தாய், தாய்மாமன் ஒருவர், சிறிய தந்தை ஒருவர், ஒன்பது ஆண்டு மூத்த தமையன், தந்தையின் நண்பர்கள் ஆகியோர் பண்டிதமணி அவர்களுக்கு நேரிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பற்றிய உரையாடல்களிலும் காட்டி வந்த பெரும் மதிப்பை இளம் வயதிலேயே கண்டு, கேட்டு அதனில் பழக்கப்பட்ட உள்ளுணர்வினால் அவ்வழி நின்று யானும் பண்டிதமணி அவர்களை ஒருவகைப் பயபக்தியுடன் போற்றி வரப் பழகலானேன். (மாமனும் சிறிய தந்தையும் கலாசாலையின் ஆரம்பகாலத்தில் அங்கு மாணவராகச் சேர்ந்து பயிற்சி பெற்றவர்கள்; தமையன் 1936ல் இருந்து சில ஆண்டுகள் தந்தையுடன் கலாசாலை வளவினுள் தங்கி பரமேசுவரக் கல்லூரியிலும் பின்னர் பரியோவான் கல்லூரியிலும் கற்றவர்). காலப்போக்கில் இடையிடையே பண்டிதமணி அவர்களோடு நெருங்கிய தொடர்பு பெறும் வாய்ப்புப் பெற்றேன்.

சிறு வயதிலே கணிதம் என்றால் என்பாடு சற்றுத் திண்டாட்டம். அன்று "விஞ்ஞானப் படிப்பு இல்லையென்றால் பிரயோசனமில்லை" என்ற எண்ணம் சமுதாயத்தில் அரும்பிய காலம். பாடங்கள் குறித்துத் தந்தையார் ஒன்றும் வற்புறுத்தவில்லை. அவரவர் விருப்பம் என்று பிள்ளைகளை விட்டு விட்டார். எனக்குத் தமிழ் - அதுவும் இலக்கணம் - இளமையிலே பிடித்த பாடம். கஷ்டமில்லாத பாடமாக இருந்தது. அதனையே எப்பொழுதும் விரும்பிப் படித்துக்கொண்டிருந்தேன். உடன் பிறந்தவர் என்னைத் "தமிழ்ப் பண்டிதர்" என்று குறிப்பிட்டுச் சற்றுக் கேலி செய்ததும் உண்டு. ஆயின் தந்தையார் எனது விருப்பத்தை உணர்ந்து ஊக்கமளித்து வந்தார்.

அன்று தமிழ் நன்கு கற்பதென்றால் பண்டிதர்களிடம்தான் செல்ல வேண்டும்; மரபுவழிக் கல்விக்குப் பெரும் மதிப்பு. சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர் சிலர் பண்டிதர்களாகவும் இருந்தனர். மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலையில் பண்டிதர் வ. முத்துக்குமாரு அவர்களிடமும் பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பண்டிதர் சந்திரசேகரம் அவர்களிடமும் தமிழ் கற்றேன். யூனியன் கல்லூரியில் சிறிது காலம் பண்டிதர் சோ. இளமுருகனார் அவர்களிடமும் தமிழ் கற்கும் வாய்ப்புப் பெற்றேன். இளமுருகனார் அவர்கள் நடேசபிள்ளை அவர்களோடு அரசியல் கருத்து வேறுபாடு காரணமாக பரமேசுவர ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை விட்டுவிலகி அப்பொழுது யூனியன் கல்லூரிக்கு வந்திருந்தார். வித்துவான் கணேசையர் அவர்களிடமும், நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்களிடமும் பள்ளியில் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைக்காத போதிலும் அயல் ஊரவர்கள் ஆதலால் பொதுவாக அவர்களைக் கண்டு பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இவர்கள் அவ்வப்போது வீட்டிற்கு வந்ததும் உண்டு. இவர்களைப் பெரும் புலவர்கள் என்று தந்தையார் கூறுவர்; மதிப்பர். இவர்களைப் பற்றிக் கூறும்போது பண்டிதமணி அவர்களைப் பற்றியும் கூறத் தவற மாட்டார். கேட்கக் கேட்க எனது தமிழார்வம் வளர்ந்தது.

தமிழைச் சிறப்பாகக் கற்பதென்றால் வடமொழியையும் பின்னர் சைவசித்தாந்தத்தையும் கற்பது நன்று; பயனளிக்கும் என்று தந்தையார் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். அதன்படி தமிழையும் வடமொழியையும் நன்கு கற்பதற்கென்றே பரமேசுவரக் கல்லூரியில் பிறெப் எஸ்.எஸ்.சி வகுப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தேன். வித்துவான் வேந்தனார் அவர்கள் தமிழ் கற்பித்தார். வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரிகள் வடமொழி கற்பித்தார். பௌத்தபிக்கு ஒருவரும் வடமொழி சுலோகங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதைக் கற்பித்தார். பின்னர் ஓராண்டு எச்.எஸ்.சி. வகுப்பில் படித்தபோது சு. நடேசபிள்ளை அவர்கள் தமிழும் வரலாறும் கற்பித்தார்.

பரமேசுவரக் கல்லூரியில் படித்த காலத்தில் தான் (1947 - 1949) பண்டிதமணி அவர்களை ஓரளவு நன்கு அறியும் வாய்ப்புக் கிடைத்தது. திருநெல்வேலி சைவப்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. தாமோதரம் பிள்ளை அவர்களும் மற்றும் ஆசிரியர் சிலரும் பாடசாலைப் பின்புறத்தில் இருந்த வீடொன்றில் தங்கியிருந்தனர். சமையல் செய்வதற்கு ஒருவர் இருந்தார். அங்கு இருந்தவர் அனைவரும் சமய ஆசாரப்படி ஒழுகுபவர்; சைவ உணவு அருந்துபவர்; தாமோதரம்பிள்ளை ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பானவர்; பண்பாளர். கலாசாலையில் தங்கியிருந்த தந்தையும் இங்கு மதிய உணவையும் இரவு உணவையும் உண்டு வந்தார். தாமோதரம்பிள்ளை அவர்களோடு யானும் தங்கியிருந்து பரமேசுவரக் கல்லூரியில் படிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

பண்டிதமணி அவர்கள் கலாசாலை வீதியில் ஒரு வீட்டில் தமது பெறாமக்கள் இருவருடன் தங்கியிருந்தார். அவர்களுடைய சமையல் ஆள் இடையிடையே ஓரிரு வாரங்களுக்கு லீவில் சென்றுவிடுவார். அப்பொழுதெல்லாம் பண்டிதமணியும் பெறாமக்களும் மதிய உணவுக்கும் இரவு உணவுக்கும் தாமோதரம்பிள்ளை அவர்களின் விடுதிக்கு வருவார்கள். பெறாமக்களில் ஒருவர் - திரு. சிவராசா - பரமேசுவரக் கல்லூரியில் எனது வகுப்பில் கற்றவர். அப்பொழுது அவர் எனது மிக நெருங்கிய நண்பர்; மிக நல்லவர்; தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற எல்லாப் பாடங்களிலும் மிகக் கெட்டிக்காரன். அவரது கையெழுத்தும் மிக அழகானது. பண்டிதமணியின் இல்லத்திற்கு யான் சிவராசாவுடன் செல்வது உண்டு. பண்டிதமணி அவர்கள் தேநீர் தந்து உபசரிப்பது உண்டு. சிவராசா "குஞ்சி" "குஞ்சி" என்று பண்டிதமணியைப் பற்றிக் கதைகள் பல சொல்லுவார். பண்டிதமணி வீட்டில் இல்லையென்றால் சிலசமயம் அவரது மூக்குத்தூளை எடுத்து விளையாட்டாக உறிஞ்சிவிட்டுத் தும்மு தும்மு என்று தும்மித் துள்ளுவார். எனக்குப் பண்டிதமணி வந்துவிட்டால் எங்களைப் பற்றி என்ன நினைப்பார் என்ற பயம் எழும். சிவராசாவின் தமையன் திரு. தம்பையாவையும் அறிவேன். ஆனால், அதிகம் பழக்கம் இல்லை. அப்பொழுது ஆசிரியப் பயிற்சி முடித்து ஆசிரியராகி விட்டார் என எண்ணுகிறேன்.

விடுதிக்கு இரவு வேளையில் உணவு அருந்த வரும் தந்தை, பண்டிதமணி ஆகியோரும் விடுதியில் தங்கியிருந்த தாமோதரம்பிள்ளை மற்றும் ஆசிரியர்களும் உணவு அருந்திய பின் சிறிது நேரம் இருந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசிச் சிரித்து அளவளாவுவார்கள். பண்டிதமணியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிடிகள் எல்லாரையும் சிரிக்கவைக்கும். அனைவரும் ஒருவரை ஒருவர் மதித்துப் பண்பாட்டுடன் பழகியது என் உள்ளத்தைக் கவர்ந்தது.

சில நாட்களில் மாலை வேளையில் ஆசிரியர் தாமோதரம்பிள்ளை அவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் போகும் போது என்னையும் அழைத்துச் செல்வார். சில நாட்களில் திரும்பி வரும் வழியில் பண்டிதமணி அவர்களைச் சந்திப்போம். ஒன்றாக வருவோம். பண்டிதமணி அவர்கள் சில கதைகளையும் நிகழ்ச்சிகளையும் தலைமை ஆசிரியர் தாமோதரம்பிள்ளை அவர்களுக்குச் சுவையாகக் கூறிக்கொண்டே வருவார். இத்தகைய விஷயங்களைச் சுவையாகக் கூறும் தனி நடை ஒன்று பண்டிதமணியிடம் இருந்தது. கூறுவதைக் கேட்டுக்கொண்டே அவர்கள் பின் வருவேன். ஒரு நாள் கத்தோலிக்கப் பாதிரியார் சுவாமி ஞானப்பிரகாசரின் சொல்லாராய்ச்சியை விமரிசனம் செய்து கொண்டு வந்தார். Wife - வைப்பு என்று சொல்லி எப்படி இருக்கிறது என்று சிரித்தார். பண்டிதமணியின் கிண்டலிலும் சுவைதான்.

யான் பரமேசுவரக் கல்லூரியில் படித்த காலத்தில் பண்டிதமணி அவர்களுக்கும் வித்துவான் வேந்தனார் அவர்களுக்கும் இடையே எழுந்த சிலப்பதிகார சர்ச்சை பெரும்பாலும் ஓய்ந்துவிட்டது என எண்ணுகிறேன். ஆயினும், அவ்வப்போது அது பற்றிய பேச்சு எழும். வகுப்பிலே வேந்தனார் அவர்கள் சிவராசாவை விளித்து "என்ன, குஞ்சி......." என்று தொடங்கிப் பண்டிதமணியின் கருத்துக்கள் பற்றி ஏதாவது சொல்லுவார். சிவராசா சிரித்தவாறு கேட்டுக்கொண்டிருப்பார்; ஏதேனும் சொல்லுவார். சிலப்பதிகார சர்ச்சை பற்றி நமக்கு அவ்வயதில் விளக்கம் ஏது? வித்துவான் வேந்தனார் அவர்கள் அப்பொழுது பரமேசுவரக் கல்லூரி உபஅதிபராக இருந்த திரு. எஸ். சிவபாதசுந்தரம் எம். ஏ (கேம்பிரிட்ஜ்) அவர்களிடம் மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வு பற்றி அறிந்து கொண்டிருந்தவர். உப அதிபர் சிவபாதசுந்தரம் சொன்னதாகச் சில இலக்கியக் கருத்துக்களை வகுப்பிலும் கூறுவார். வித்துவான் வேந்தனார் அவர்கள் அக்காலத்தில் தமிழ்நாட்டில் எழுந்த ஒருவகைப் புரட்சிக் கருத்துக்களை ஏற்று இங்கே மேடைகளில் முழங்கியவர்; வார இதழ்களில் எழுதியவர். கருத்து வேறுபாடு இருந்த போதிலும் வேந்தனார் அவர்கள் பண்டிதமணி அவர்களிடம் பெருமதிப்புக் கொண்டவர்.

திருநெல்வேலி சுற்றாடலில் ஆங்காங்கு பண்டிதமணி அவர்களின் சொற்பொழிவு நடைபெறுவது உண்டு. பரமேசுவரக் கல்லூரியிலோ, சைவாசிரிய கலாசாலையிலோ, திருநெல்வேலி வை.எம்.எச். ஏயிலோ, சைவப்பாடசாலையிலோ அவரது சொற்பொழிவு அவ்வப்போது தவறாது நடைபெறும். பண்டிதமணியின் சொற்பொழிவு அயலிலே எங்கு நடைபெற்றாலும் யான் கேட்கத் தவறுவதில்லை. வானொலியிலும் கேட்பது உண்டு. தமிழாசிரியர் சங்கக் கூட்டங்களிலும் பண்டிதமணி உரையாற்றுவார். தந்தையார் ஆசிரியர் சங்கத்திற்குப் பல ஆண்டுகள் தலைவராக இருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் தலைமையில் நடைபெறும் கூட்டங்களுக்கு யானும் உடன்பிறந்தார் சிலரும் தந்தையுடன் செல்வதுண்டு. பண்டிதமணி ஆங்கில மோகங்கொண்டோரையும் சமுதாயத்தின் போலி மதிப்பீடுகளையும் ஆசிரியர் சங்கக்கூட்டங்களில் நையாண்டி செய்து பேசுவது நினைவில் உண்டு. சமுதாயத்திலே தமிழாசிரியரின் பரிதாபமான நிலையை ஒருமுறை ஒரு நிகழ்ச்சி மூலம் விளக்கினார் : "சொல்வழி கேளாத குமரி ஒருத்தியைப் பெற்றோர் அடக்க முடியவில்லை. என்ன செய்வது என அறியாது கடைசி மருந்தாக "உனக்குத் தமிழ் உபாத்தியாயர் ஒருவரைத்தான் கட்டி வைக்கப் போகிறோம்" என்றார்கள். அவள் நடுநடுங்கி அந்தக் கணமே நல்ல பிள்ளையாக மாறினாளாம். எப்படி இருக்கிறது மருந்து! தமிழாசிரியர் நிலை எப்படி! என்று மேடையில் சிரித்தார் பண்டிதமணி. அவர் இதனை மிகவும் சுவையாகச் சொன்னார். அவர் சொன்னதை அப்படியே இங்கு தரமுடியவில்லை. இங்கு சாரம் மட்டுமே தரப்பட்டுள்ளது.

வடமொழியை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் எனது பயிற்சி போதாது என்று எண்ணி 1950 ஜனவரியில் யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்று எச்.எஸ்.ஸி. வகுப்பில் சேர்ந்தேன். அங்கு பின்னர் இந்தியாவில் உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் பேராசிரியராக இருந்த எம். டி. பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களும் வித்துவான் ஆர். பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களும் வடமொழி கற்பித்தனர். இவர்கள் இருவரும் ஆங்கிலம் நன்கு அறிந்தவர்கள். தமிழ் கற்பித்தவர் திரு. கே. மதியாபரணம் அவர்கள். அவர் தமிழ் ஆர்வம் மிக்க கிறிஸ்தவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்; இயன்றளவு நன்கு படிப்பிப்பவர். தேர்விற்குக் கந்தபுராணத்தில் ஒரு பகுதி பாடமாக இருந்தது. பண்டிதமணிக்குக் கந்தபுராணத்தில் இருந்த ஈடுபாட்டை அப்பொழுதே அறிவேன். சமய அடிப்படையில் பண்டிதமணியிடம் கந்தபுராணத்தைப் பாடங்கேட்க வேண்டும் என்ற ஆசை முகிழ்த்தது. ஒழுங்கு செய்யுமாறு தந்தையிடம் கேட்டேன். "நீயே கேட்டுப்பார்" என்று தந்தை சொல்லிவிட்டார். என்ன சொல்லுவாரோ என்ற தயக்கத்துடன் பண்டிதமணியிடம் சென்று கேட்டேன். அன்புடன் உடன்பட்டு விட்டார். அவரது இல்லத்திற்குச் சென்று சில வாரங்கள் கற்கலானேன். சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்த வண்ணம் பாடல்களைப் படிக்கச் சொல்லிவிட்டு வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் தெளிவான விளக்கம் கூறுவார். நயம் சொல்லுவார். "படித்தேன்" என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டது.

பரமேசுவரக் கல்லூரியில் 1951ஆம் ஆண்டு தமிழ்விழா நடைபெற்றது. இலக்கியப் பகுதியில் தமிழ்நாட்டறிஞர்கள் சிலருடன் ஈழத்து அறிஞர்கள் சிலர் முதன்முதலாக ஒரே மேடையில் சொற்பொழிவாற்றிய பெரும்விழா இதுதான். "ஏட்டிக்குப் போட்டி" என்னும் மனப்பான்மை அறிஞர்கள் அடியுள்ளத்தில் இருக்கத்தான் செய்தது. இலக்கியத்தைப் பொறுத்தவரை ஈழத்துப் புகழைப் பண்டிதமணியும் வேந்தனாரும் நிலைநாட்டுவார்கள் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்பு யாழ்ப்பாணத்தவரிடம் இருந்தது. பண்டிதமணி அவர்கள் அன்பினைந்திணை பற்றி உபஅதிபரிடம் கொண்ட புதிய கருத்துக்களைத் தமிழ்விழாவில் "தமிழ்" என்னும் தலைப்பில் விளக்கி விரித்துக் கூறப்போகின்றார் என்று விழாவிற்கு முன்பே தந்தையார் பலரிடம் கூறியது நினைவில் உண்டு. 1.5.1951 அன்று தான் பண்டிதமணியின் சொற்பொழிவு. விழாப்பந்தலில் முன்னர் என்றும் கண்டிராத சனக்கூட்டம். கூட்டத்தில் யானும் ஒருவன். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார். பண்டிதமணி எழுந்து பேசினார்.

அடுத்த சில நாட்களில் "பண்டிதர் அவர்களின் பேச்சு - எதிர்பார்த்த அளவு எடுக்கவில்லை" எனத் தமது நண்பர்களோடு அளவளாவும் போது தந்தையார் அங்கலாய்ப்புடன் கூறியது நினைவிற்கு வருகிறது. முன்னர் ஒருநாளும் இவ்வாறு கூறியதில்லை. "பண்டிதர் அவர்கள் தாம் எத்தனை முறை கூட்டங்களில் சொற்பொழிவாற்றினாலும் ஏதோ ஒருவகை அவை நடுக்கம் இருப்பதைச் சொன்னது உண்டு; அப்படி இருந்திருக்குமோ" எனவும் அங்கலாய்த்தார். நாட்கள் சென்றன. பண்டிதமணி அவர்கள் செறிந்த கருத்துப் பொருளைக் குறித்த நேரத்தினுள் சுருக்க முடியாமல் சுருக்கிச் சுருக்கிக் கூறியதனாலேயே பேச்சு எதிர்பார்த்த அளவு எடுக்கவில்லை என்ற விளக்கம் வந்தது. சொற்பொழிவு விரைவில் பத்திரிகையில் - தினகரனில் - வெளிவரும் என்று பேசப்பட்டது. அதனைப் படிக்கலாம் என்ற ஆறுதல் தந்தையாருக்கு இருந்தது. சொற்பொழிவு தினகரனில் 13.05.1951 அன்று வெளியிடப்பட்டது. ஆயினும் பண்டிதமணி அவர்கள் அப்பொருள் பற்றித் தொடர்ந்தும் பல ஆண்டுகள் ஆராய்ந்து கொண்டிருந்தார் என அறிந்துள்ளேன்.

தந்தையார் 29.12.1951 அன்றுடன் கலாசாலை அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறியபோது கலாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அவரைக் கலாசாலையில் இருந்து வீடுவரை ஊர்வலமாக அழைத்துவந்து விட்டதும் வீட்டிலே ஊரவர்கள், நண்பர்கள், மற்றும் பழைய மாணவர்கள் குழுமி இருந்தபோது பண்டிதமணி நன்றி கூறி அன்பு ததும்பச் சொற்பொழிவாற்றியதும் இன்றும் நினைவில் உண்டு.

கலாசாலைப் பழைய மாணவர் வெளியிட்ட சேவை நலம் பாராட்டு மலரில் பண்டிதமணி தந்தையார் பற்றி எழுதியதில் இறுதி வரி "இருபது வருஷங்களுக்கு மேலாக ஊடியும் கூடியும் உடன் வாழ்ந்த வாழ்க்கை அனுபவம் இது" என அமைகிறது. கலாசாலையின் ஆரம்ப காலத்தில் தந்தைக்கும் பண்டிதமணிக்கும் சில விஷயங்களில் கருத்து வேறுபாடு இருந்தது என அறிந்துள்ளேன். இதனையே "ஊடியும்" என்ற சொல்லால் பண்டிதமணி குறிக்கின்றார் போலும். கருத்து வேறுபாட்டிற்குக் காரணம் கலாசாலையின் முகாமைக்காரரின் தலையீடு எனப் பின்னர் இருவரும் உணர்ந்தனர் போலும். இது பற்றி எனது மூத்த தமையனும் சகோதரிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குள் சிலவேளை பேசிக்கொண்டது நினைவில் இருக்கிறது. ஆயின் இதைப்பற்றித் தந்தை எதுவும் குடும்பத்தினருடன் யான் அறியப் பேசியதில்லை.

பண்டிதமணி தந்தையுடன் அன்பாகப் பண்பாகப் பழகுவதே நினைவில் உண்டு. இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு மதித்தவர்கள். எனது மூத்த சகோதரரின் திருமணம் எதற்கும் பண்டிதமணி வராதுவிட்டது இல்லை. தந்தையும் பண்டிதமணியும் சேர்ந்து இந்திய யாத்திரை சென்றதும் கோடை விடுமுறைகளில் நுவரெலியா செல்வதும் நினைவில் உண்டு. தந்தையுடன் தாம் இருதடவை நுவரெலியா சென்றது பற்றி பண்டிதமணி ஈழநாடு ஞாயிறு இதழ் ஒன்றில் (14.10.1984) ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

யான் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றபோது (ஜுன் 1955 - ஏப்ரல் 1958) மு. வரதராசன், அ. ச. ஞானசம்பந்தன், அ. மு. பரமசிவானந்தம், அன்பழகன், சீனிவாசன், அன்பு கணபதி, சுப்பிரமணிய ஆச்சாரியார், நடேச நாயக்கர் ஆகியோர் ஆசிரியர்களாக வாய்த்தனர். வாரத்தில் ஒரு நாள் - செவ்வாய்க்கிழமை தோறும் - சென்னை மாநிலக் கல்லூரிக்குக் காலையில் சென்று அங்கு தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரிடம் சிலப்பதிகாரம் முழுவதையும் கல்லூரி-களிடையே நடைபெறும் விரிவுரைகள் (inter - collegiate lectures) மூலம் கற்று வந்தோம். மாலையில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பேராசிரியர் துரையரங்கனாரின் தொல்காப்பியம் சொல்லதிகார விரிவுரை-களும் புருஷோத்தமநாயுடுவின் இலக்கிய விரிவுரைகளும் நமக்கு நடைபெற்றன. அப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்து தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். சென்னையில் தமிழார்வம் மிக்க ஆசிரியர்களோடும் மாணவர்களோடும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழறிஞர் சிலரின் மைந்தரும் நெருங்கிய உறவினரும் எனது உடன் மாணாக்கராக இருந்தனர். ஔவை துரைசாமிப்-பிள்ளையின் மைந்தன் நடராஜன், மறைமலையடிகளின் பேரன் (நீலாம்பிகை அம்மையாரின் மைந்தன்) வைரமுத்து, சுப்பிரமணிய ஆச்சாரியாரின் மைந்தன் கனகசுந்தரம், புருஷோத்தம நாயுடுவின் மைந்தன் ஆகியோர் நினைவில் இருக்கின்றனர். ஆசிரியர்களும் மாணவ நண்பர்களும் "சிலோன்" பற்றி சிறப்பாக யாழ்ப்பாணம் பற்றி என்னுடன் பேசுவார்கள். சுப்பிரமணிய ஆச்சாரியார் தமது ஆசிரியர் சிலோன் கனகசுந்தரம்பிள்ளை பற்றிப் புகழ்ந்து வகுப்பிலேயே அடிக்கடி கூறுவார்; பெரும் மதிப்புக் காட்டுவார். தமது மைந்தனுக்கும் கனகசுந்தரம் என்றே பெயர் வைத்திருந்தார். சென்னையில் இருந்த பேராசிரியர்களும் மாணவர்களும் ஈழத்தில் வாழ்ந்து மறைந்த தமிழறிஞர்களை அறிந்திருந்தது போலச் சமகாலத்து அறிஞர்களை அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணம் அடிக்கடி வந்து சென்ற அறிஞர்கள் இதற்கு விதிவிலக்கு. அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சமகால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களைச் சந்தித்திருந்தார்கள். பண்டிதமணி பற்றி ஏதாவது சொன்னால் இங்கு வராத பலர் "அப்படியா" என்று கேட்டுக் கொள்வார்கள். யாழ்ப்பாணம் வராதவர்கள் பண்டிதமணி பற்றி அன்று தமிழ் நாட்டிலேயே அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு மிகக் குறைவு என்பது உண்மை.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1958ஆம் ஆண்டு பட்டம் பெற்ற பின் கொழும்பில் தினகரன் பத்திரிகை ஆசிரியர் குழுவில் சேர்ந்தேன். அப்பொழுது பத்திரிகை ஆசிரியராக இருந்தவர் வி. கே. பி. நாதன் அவர்கள். ஆயினும், வாரவெளியீடு (ஞாயிறு வெளிவருவது) க. கைலாசபதி அவர்கள் பொறுப்பில் இருந்தது. யான் கைலாசபதியுடன் வாரவெளியீட்டுப் பத்திரிகையில் பணியாற்றினேன். சில மாதங்களுக்குப் பின் நாதன் அவர்கள் பத்திரிகையை விட்டு விலகிவிட்டார். கைலாசபதி அவர்கள் தினகரனுக்குத் தலைமை ஆசிரியரானார். திரு. ஆர். சிவகுருநாதன் செய்தி ஆசிரியராக இருந்து வந்தார். கைலாசபதியும் சிவகுருநாதனும் மிகவும் ஆற்றல் படைத்த இளைஞர்கள். புதிய நோக்குடையவர்களாகக் காணப்பட்டனர். கைலாசபதி இலக்கியத் திறனாய்வில் வல்லுநர் என்ற பெயர் எழத் தொடங்கிவிட்டது. பத்திரிகையில் குறிப்பாக வார வெளியீட்டில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. பத்திரிகை விற்பனை பல மடங்கு அதிகரித்தது.

பண்டிதமணி அவர்களின் நூல் ஒன்று - பாரத நவமணிகள் - மதிப்புரைக்காகத் தினகரனுக்கு வந்தது. முன்பு பத்திரிகை ஆசிரியராக இருந்த நாதன் அவர்களுக்கும் பண்டிதமணிக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. நாதன் அவர்கள் பண்டிதமணியைப் பல விஷயங்கள் குறித்து, சிறப்பாகக் கம்பராமாயணக் காட்சிகள் பற்றி எழுதத் தூண்டியவர். இப்பொழுது தினகரனில் புதிய சூழல்; புதிய நோக்கு; எத்தனையோ மாற்றங்கள். பண்டிதமணியின் நூலுக்குக் கண்மூடிக்கொண்டு புகழ்மாலை சூட்டாது நிதானமான மதிப்புரை வழங்க வேண்டும் என்று பத்திரிகை ஆசிரியர் கைலாசபதி அவர்கள் விரும்பினார். அன்று ஈழத்துத் தமிழர் சமுதாயத்தில் பண்டிதமணி பெற்றிருந்த மதிப்பை நினைவுபடுத்த வேண்டியதில்லை. பண்டிதமணியின் நூலுக்குப் பத்திரிகை ஆசிரியர் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மதிப்புரை எழுதுவது யார்? சிலர் தப்பிக் கொண்டனர். பண்டிதமணியை எனக்குத் தெரியும் என்று யான் அவ்வப்போது உரையாடல்களில் காட்டிக்கொண்டதாற் போலும் இறுதியாக மதிப்புரை எழுதும் பொறுப்பைத் தினகரன் ஆசிரியர் என் தலையில் கட்டிவிட்டார். என்னை அழைத்து வழக்கமான சிரிப்புடன் நூலைத் தந்து "கைவரிசையைக் காட்டும்" என்றார்.

என் மனம் குழப்பமாக இருந்தது. எனக்கு என்ன தெரியும். மதிப்புரை எழுதிப் பழக்கம் இல்லையே என்று நினைத்துக் கொண்டேன். தினகரன் ஆசிரியரின் எதிர்பார்ப்பு, வேண்டப்பட்ட புதுமை நோக்கு, பண்டிதமணியின் ஆளுமை, நடுநிலை ஆய்வும் அதற்கு மரபுவழி அறிஞரிடம் கிடைக்கக்கூடிய ஆதரவும், எனது தந்தையாரின் கருத்துத் தடம் - அத்தனையும் சில நாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை உறுத்தின. கடைசியாக ஏதோ எழுதிவிட்டேன். ஆனால், மிக விழிப்புடனே எழுதினேன் என்றாலும் உள்ளத்தில் ஓர் அச்சம். மதிப்புரை 20.09.1959 அன்று வெளிவந்தது. மதிப்புரையைப் படித்துப் பார்த்த பண்டிதணி அவர்கள் தமது பழைய மாணவர் பஞ்சாட்சரம் அவர்களிடம் "நல்லதொரு புதிய பிடியைச் சுசீந்திரன் பிடித்திருக்கிறார்" என்று சொல்ல, அவர் அதனைத் தாம் 23.09.1959 அன்று தந்தைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். தந்தையார் அக்கடிதத்தை எனக்குக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். பண்டிதமணிக்கு மதிப்புரையின் போக்குப் பிடித்துக் கொண்டது போலும். குறை குற்றம் எதுவும் வெளிப்படையாகக் கூறியதாக இல்லை. கடிதத்தைத் தினகரன் ஆசிரியருக்கும் காட்டினேன். இது ஒரு புறம். எனது தந்தையாருக்கு யான் எழுதிய மதிப்புரை அவ்வளவு பிடிக்கவில்லை. அவர் 9.10.1959 அன்று எனக்கு எழுதிய கடிதத்தில் "உனது விமர்சனம் ஓரளவில் நல்லாய்த்தானிருக்கிறது. பண்டிதமணி "ஒரு புதுப்பிடி" யென்றாராம். நீ களவாய் தப்பிக்கொள்ளக்கூடிய பிடியையே பிடித்துள்ளாய்" என்று எழுதியிருந்தார். அந்தச் சூழ்நிலையிலே, அந்த வயதிலே யான் வேறு என்னதான் செய்திருக்க முடியும்! அந்த மதிப்புரையை அடுத்து கனக செந்திநாதன் பண்டிதமணி பற்றி எழுதிய மூன்றாவது கண் என்னும் நூலும் மதிப்புரைக்காகத் தினகரனுக்கு வந்தது. அதற்கு மதிப்புரை எழுதும் பொறுப்பும் என்னிடம் விடப்பட்டது. மதிப்புரை 18.10.1959 அன்று ஞாயிறு தினகரனில் வெளிவந்தது என நினைவுண்டு.

1960ஆம் ஆண்டு ஜூனில் தினகரன் பத்திரிகையைவிட்டு பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆலோசனைப்படி நவீன மொழியியலில் எம்.ஏ. பட்டம் பெறும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்றேன். 1967ஆம் ஆண்டு டிசம்பர் வரை அங்கு முதலில் எம்.ஏ. வகுப்பு மாணவனாகவும், பின்னர் பி.எச்.டி. ஆராய்ச்சி மாணவனாகவும், இறுதியில் மொழியியல் விரிவுரையாளனாகவும் இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. கற்பதற்கும், ஆய்வதற்கும், அறிஞர்களோடு பழகிக் கலந்துரையாடுவதற்கும் அங்கு அருமையான வாய்ப்புக்கள் - பெறற்கரிய வாய்ப்புக்கள் - கிடைத்தன. அங்கு அந்நாட்களில் விரிவுரையாளராகப் பணியாற்றிய ஒரே ஒரு வெளிநாட்டுத் தமிழன் என்ற முறையில் போலும் அனைவருமே என்னுடன் அன்புகாட்டி மிக நெருங்கிப் பழகினார்கள்.

அண்ணாமலையில் தமிழுக்கு மூன்று வெவ்வேறு துறைகள் இருந்தன. இவற்றைவிட, மொழியியல் கல்விக்கு ஓர் உயர்வாய்வு நிலையம் இருந்தது. இவற்றில் பேராசிரியர்களாக தெ.பொ. மீனாட்சிசுந்தரன், ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எல்.பி.கே. இராமநாதன் செட்டியார் ஆகியோரும் துணைப் பேராசிரியர்களாக இராமசாமிப்பிள்ளை, அருணாசலம்பிள்ளை, வெள்ளைவாரணன், முத்துசண்முகம்பிள்ளை, அகஸ்தியலிங்கம்பிள்ளை ஆகியோரும் விரிவுரையாளர்களாக மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், எஸ்.வி. சண்முகம், இ. அண்ணாமலை, குமாரசுவாமி ராஜா போன்றோர் பலரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். யான் அங்கு படிக்கும் போதே அகஸ்தியலிங்கம்பிள்ளை மொழியியல் பேராசிரியர் ஆனார். பொதுவாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் "சிலோன்" பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் இருந்தது. இதற்கு ஓரளவு தூண்டுதலாக அங்கு கற்ற இலங்கை மாணவர் எண்ணிக்கை அமைந்தது. அப்பொழுது நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் அங்கு கற்றனர். மட்டக்களப்பு பண்டிதர் வி. சீ. கந்தையா, வித்துவான் வேலன் (பீ.ஓ.எல். மாணவர்), பேராதனைப் பல்கலைக்கழகத்து விரிவுரையாளர் தனஞ்சயராசசிங்கம் (ஆய்வு மாணவன்) ஆகியோரும் கற்றனர். அண்ணாமலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் யாழ்ப்பாணத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் பெரும்பாலும் நாவலர், தாமோதரனார், கனகசுந்தரம்பிள்ளை, குமாரசுவாமிப் புலவர், விபுலானந்தர் எனப் பழைய அறிஞர்களைப் பற்றியே பேசுவார்கள். ஒரு சிலர் கணேசையர் பற்றிக் குறிப்பிடுவர். பெரும்பாலும் சமகாலத்து அறிஞர்களை அறியாதே இருந்தனர். முன்னர் சென்னையில் கண்ட நிலை தான் இங்கும்.

ஒரு முறை தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரிடம் பேசிக் கொண்டிருந்த போது பண்டிதமணி பற்றிக் கேட்டேன். "ஆமா தெரியும். பலமுறை சந்தித்துப் பேசியிருக்கிறேன்" என்றார். அவ்வளவுதான். ஒரு சமயம் விடுமுறையில் வீட்டிற்குச் செல்வதற்கு முன் அவரிடம் சொல்லப் போனேன். அப்பொழுது "திரும்ப வரும்போது ஒங்க பண்டிதமணியின் பொஸ்தகங்களை வாங்கியிட்டு வா" என்றார். விடுமுறை கழிந்து திரும்பும் போது கிடைத்தவற்றை வாங்கிச் சென்றேன். பின்னர் அவர் "சமயக் கட்டுரைகள்" எனும் நூலை வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மெதுவாக "எப்படி சேர்" என்று கேட்டேன். "One should admire his scholarship" என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னார். அதற்கு மேல் யான் ஒன்றும் கேட்கவில்லை. அவரும் ஒன்றும் சொல்லவில்லை.

அண்ணாமலையில் இருந்தவர்களுள் யாழ்ப்பாணத்தைப் பற்றி ஓரளவு நன்கு அறிந்தவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களே. யாழ்ப்பாணத்தைப் பற்றி அங்குள்ளவர்கள் பலர் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் அவாவினால் இலங்கை மாணவர் சங்க ஆதரவில் "ஈழமும் தமிழும்" என்னும் பொருள் பற்றி விரிவான சொற்பொழிவொன்று நிகழ்த்துமாறு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களிடம் வேண்டினோம். அவரது வாயிலிருந்து நமது நாட்டறிஞர் பெருமை வெளிவருதல் வேண்டும் என்று விரும்பியே அவ்வாறு கேட்டோம். அவர் "பார்க்கலாமப்பா" என்று சொல்லி விட்டுவிட்டார்.

மத்திய அரசின் தூண்டுதலால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இலங்கையைக் குவிமையமாக வைத்து Orient Occident Week என ஒன்றை 1963அம் ஆண்டு அக்டோபரில் கொண்டாடியது. இக்கொண்டாட்டத்தின் பொறுப்பை அன்று துணைவேந்தராக இருந்த சேர். சி. பி. இராமசுவாமி ஐயர் மீனாட்சிசுந்தரனாரிடம் விட்டுவிட்டார். இக்கொண்டாட்டத்தின் போது ஈழத்தில் வெளியிடப்பட்ட தமிழ் நூல்களைக் கண்காட்சிக்கு வைப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி செய்யுமாறு ஈழத்து மாணவர்களிடம் கேட்கப்பட்டது. இலங்கை மாணவர்கள் முயற்சியால் புத்தகங்கள் வந்து குவிந்தன. பண்டிதமணியின் நூல்களும் வந்தன. அவை அனைத்தும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. கொண்டாட்டத்தில் இந்தியாவிலிருந்த இலங்கைத் தூதுவரும் கலந்து கொண்டார். மீனாட்சிசுந்தரனார் இலங்கையும் தமிழும் எனும் பொருள் பற்றி ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். அவ்வுரையை இலங்கை மாணவர் சங்கம் சிறுநூல் வடிவில் 1964ஆம் ஆண்டில் வெளியிட்டது. அவ்வுரை அக்காலத்தில் சிலோன் ஒப்சேவர் பத்திரிகையிலும் பகுதி பகுதியாக வெளியாகியது. அவ்வுரையில் பண்டிதமணி அவர்களைப் பற்றி "There are scholars like Pandithamani S. Kanapathipillai, who though belonging to the traditional group of Pandits, welcome the new trends in literature" என்று குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்துச் சமகால அறிஞர்களைத் தமிழ்நாட்டு அறிஞர்கள் அறிந்து கொள்வதற்கு வேண்டிய வாய்ப்புக்களை நாமே முயன்று செய்து கொடுத்தல் அவசியம் போலும்!

அண்ணாமலையில் படித்த காலங்களில் விடுமுறையில் வீட்டிற்கு வந்து தங்கியிருந்தபோது பண்டிதமணி அவர்கள் தந்தையாரிடம் வந்ததுண்டு. பண்டிதமணி பெரும்பாலும் தமது பழைய மாணவன் பஞ்சாட்சரம் அவர்களின் காரில் தான் வருவார். தந்தையார் அப்பொழுது பதவியிலிருந்து இளைப்பாறிவிட்டார். பண்டிதமணி அவர்களும் இளைப்பாறிவிட்டார். சந்திக்கும் பொழுதெல்லாம் பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக்-கழகத்தைப் பற்றி என்னிடம் கேட்பார். யான் படித்துக்கொண்டிருந்த நவீன மொழியியல் பற்றி ஆர்வத்துடன் கேட்பார். இலக்கியத்தை, சமயத்தை மொழியியல் என்னும் புதிய கலையைக் கற்பதற்காக விட்டு விடுவதா என்று மெல்லச் சொன்னதும் நினைவில் உண்டு.

ஒரு விடுமுறையின் போது இலக்கிய வழி (திருத்தப் பதிப்பு) வெளியீட்டு விழா ஒரு நாள் அதிகாலையில் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அமைதியான முறையில் நடைபெற்றதும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத் தலைவர் என்ற முறையில் தந்தையாரைப் பஞ்சாட்சரம் அவர்கள் வந்து அழைத்துச் சென்றதும் அங்கு தந்தையார் தலைமை உரை நிகழ்த்தியதும் முதற் பிரதி பெற்று வந்ததும் அப்பிரதியை வீட்டிற்கு வந்த உடனே என்னிடம் தந்ததும் நினைவில் உள. கந்தபுராணம் தக்ஷகாண்டம் உரை ஆசிரியர் பண்டிதமணி அவர்களுக்கு 2.3.67 அன்று கந்தபுராண சிறப்பு விழாவில் தாம் பொன்னாடை போர்த்தியமை பற்றி அண்ணாமலையில் இருந்த எனக்குத் தந்தையார் கடிதம் எழுதியிருந்தார். நூற்பிரதியொன்றை உடனே அண்ணாமலைக்கு வரவழைக்க எடுத்த முயற்சி அப்பொழுது ஏதோ கைகூடவில்லை.

பண்டிதமணி அவர்களை 18.05.69 அன்று தந்தையாரின் மரணச்-சடங்கின் போது இறுதியாக நேரில் சந்தித்து உரையாடினேன். சுடுகாடுவரை வந்து தமது பழைய மாணவர்கள் பலர் மத்தியில் "மூன்று கிழவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு கிழவர்கள் வந்த விஷயம் முடிந்து போய்விட்டார்கள்" எனத் துக்கந் தோய்ந்த குரலில் கூறிச் சென்றார்கள். இலக்கியத்தைக் கைவிட்டு புதிய துறையாகிய நவீன மொழியியலில் மட்டும் நாட்டம் கொண்டிருந்ததாலும் கொழும்பிலேயே பல்கலைக்கழகங்களில் பணியாற்றியதாலும் பின்னர் பண்டிதமணி அவர்களைச் சந்திக்கும் வாய்ப்போ தூண்டுதலோ எழவில்லை.

1980ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்றேன். இலக்கியத்தை ஏதோ விட்டுவிட்டேன்; சமயத்தைப் படிக்கவில்லை. பெரியோர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியவில்லை. பண்டிதமணியவர்களைச் சந்திப்பதற்கு உள்ளத்தில் ஒருவகைத் தயக்கம். நாளைக்கு, நாளைக்கு என்று பிற்போட்டுக் கொண்டு வந்தேன். பழைய மாணவர் ஒருவரை வீதியில் சந்தித்து "பண்டிதமணி சுகமாக இருக்கிறாரா? சந்திக்கலாமா? என்று கேட்டதும் உண்டு. ஒரு நாள் சந்திப்பதற்குப் புறப்பட்டு இடைவழியில் திரும்பியதும் உண்டு. சமயத்தைப் பற்றி ஏதாவது சொன்னால், கேட்டால் ............. என்ற எண்ணம் தான் திரும்ப வைத்தது. தந்தையும் சைவசித்தாந்தத்தைப் படிக்குமாறு வற்புறுத்தி வந்தார். படிக்க வேண்டும் என்று விரும்பி இந்தியாவில் கிடைக்கக்கூடிய நூல்கள் அனைத்தையும் வாங்கியது உண்டு. ஆனால், காரியம் கைகூடவில்லையே. குங்குமம் சுமந்த கழுதைதான் நினைவிற்கு வருகிறது. இதை யான் யாருக்கும் சொல்லியதில்லை. சொல்ல வேண்டிய அவசியமும் எழவில்லை.

ஒருநாள் காலை பஞ்சாட்சரம் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து "பண்டிதமணி ஐயா மோசம் போய்விட்டார்" என்ற செய்தியைக் கூறினார். மூன்றாவது கிழவரும் போய்விட்டாரே என்று கவலைப்பட்டேன். ஆனால், அவர் பழுத்துக் கனிந்த பழமாகவே போயிருக்கிறார் என்ற ஆறுதல். யானும் பேராசிரியர் வேலுப்பிள்ளையும் கலாநிதி பாலசுந்தரமும் ஒன்றாகச் சென்று மரணச்சடங்கில் கலந்து கொண்டோம்; ஒன்றாகவே இருந்தோம். பஞ்சாட்சரம் அவர்கள் வந்து "மூவரில் ஒருவர் சில வார்த்தைகள் பேச வேண்டும்" என்றார். நாம் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தோம். அப்பொழுதும் எனக்குத் தயக்கம். வேலுப்பிள்ளை அவர்களைப் பார்த்து "நீங்கள் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர், நீங்கள் பேசுவதே பொருத்தம்" என்று வேண்டினேன். அவர் உடன்பட்டுத் தலை அசைத்தார்; பின்னர் பேசினார்.

பண்டிதமணியின் நினைவு அத்துடன் நின்றுவிடவில்லை. பண்டிதமணியின் நூல்களை ஆழ்ந்து படிக்க வேண்டும்; அவர் பற்றி ஆராய வேண்டும் என விரும்பினேன். ஆய்வில் என் நெஞ்சறிவதைப் பிசகாது எழுதுதல் வேண்டும்; அர்த்தமற்ற புகழ் பாடுவதைத் தவிர்த்து நிலைக்கக்கூடிய கருத்துக்களை இயன்றவரை சான்றுடன் கூறுதல் வேண்டும் என அன்று உறுதி கொண்டேன்.

11332. S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி அவர்கள் தமிழ்ச்சான்றோர்களுள் ஒருவர் ஆவர். தமிழ்ப் பண்பாடு, சைவப்பண்பாடு ஆகியவற்றின் பிரதிபலிப்பென வாழ்ந்து வந்தவர். திரிகரண சுத்தி கொண்டு காரிய சித்தி பெற்ற பெரியார் எனலாம். அத்தகையவர் நினைவுகள் சிலவேயாயினும் அவை எண்ணிப் போற்றற்குரியன. கற்றல், ஆய்தல், எழுதுதல் என்பவற்றிலே பொழுதைக் கழிக்க வேண்டும் என்ற அகத்தெழுச்சி என்பால் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த அறிஞர் சிலருள் பண்டிதமணியும் ஒருவராவர். பண்டிதமணியை என்றுமே மறக்கமுடியாது. மறத்தலும் ஆமோ பண்டிதமணியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# பண்டிதமணியின் பெரும் புகழும்

நமது நாட்டில் ஏனைய பண்டிதர்களுக்குக் கிடைக்காத பெரும் புகழும் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக முப்பது ஆண்டுகள் பணியாற்றிய பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எவ்வாறு கிடைத்தன? ஒரு கால கட்டத்தில் "பண்டிதர்" என்று சொன்னாலே பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களையே குறித்தமைக்கும், பின்னர் "பண்டிதமணி" என்னும் கௌரவப் பட்டச் சிறப்பு அவர்பால் மட்டும் நிலைத்தமைக்கும் காரணங்கள் யாவை?[1] பல்கலைக்கழகங்கள் வெவ்வேறு துறைகளில் நிகரற்ற பங்களிப்பைச் செய்பவர்களுக்கு கௌரவ டி. லிற். பட்டம் (இலக்கியக் கலாநிதிப் பட்டம்) வழங்கி அவர்களின் மேதகைமையைப் பெருமைப்படுத்துவது உண்டு. இன்று வரை நமது நாட்டில் டி. லிற். பட்டம் பெற்ற தமிழர் சிலருள் ஒருவராகும் தகைமையைப் பண்டிதமணி எவ்வாறு பெற்றார்? பண்டிதமணி பிறந்து வளர்ந்த குடும்பத்தையும் குடும்பச் சூழலையும், அவர் கற்ற கல்வி, கல்வி நிலையங்கள் ஆகியவற்றையும், அவர் வாழ்ந்து வந்த காலத்தையும், அக்காலத்துக் கல்வி நிலையையும், கற்றோர் நிலையையும், கற்றோர் பற்றிய சமுதாய நோக்கையும், பண்டிதமணியின் ஆசிரியத் தொழிலையும், ஆசிரியத் தொழில் புரிந்த கலாசாலையையும், அவற்றின்பாற்பட்ட பணிகளையும், அவர் பெற்ற சமுதாயத் தொடர்பினையும், அவரது சொற்பொழிவுகளையும், எழுத்துக்களையும், அவற்றிலே மிளிரும் புலமைச் சிறப்புகளையும், அவர் கொண்டிருந்த குறிக்கோள், இலட்சியம் ஆகியவற்றையும், அவரது பொது வாழ்க்கை முறையையும், இவை பற்றி அறிஞர் இதுகாறும் கூறியுள்ள கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு மேலே எழுப்பிய வினாக்களுக்கு இயன்றளவு அறிவியல் அடிப்படையில் தெளிவான விடையைச் சுருக்கமாகக் காண்பதே இவ்வாய்வின் நோக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

இங்கு எழுப்பப்பெற்ற வினாக்கள் புதியனவன்று. பண்டிதமணி வாழ்ந்து கொண்டிருந்தபோதே இவை போன்ற வினாக்களை முதன்முதலாகப் பண்டிதமணி பற்றி எழுதிய கனக செந்திநாதன் அவர்கள் 1959ஆம் ஆண்டு தாம் வெளியிட்ட "மூன்றாவது கண்" என்னும் தமது கட்டுரை நூலில் (ப. 14) எழுப்பி விடை காண முயன்றுள்ளார். ஏனையோர் சிலரும் இவை போன்ற வினாக்களை வெளிப்படையாக எழுப்பாது பண்டிதமணி பற்றி எழுதியுள்ளனர்.

கனக செந்திநாதன் சைவாசிரிய கலாசாலையில் 1937ஆம், 1938ஆம் ஆண்டுகளில் கற்றவர். சைவாசிரிய கலாசாலையில், குறிப்பாக ஆரம்ப காலத்தில் ஆசிரிய மாணவர்களுக்கிடையே குரு - சிஷ்ய உறவு இருந்து வந்தது. அங்கு மாணவர்கள் "எழுத்தறிவித்தவன் இறைவனாவன்" என்னும் முதுமொழிக்கேற்ப ஆசிரியர்களைக் குருதேவர் எனப் போற்றிப் பயபக்தியுடன் கற்று வந்தனர். ஆசிரியர்களும் மாணவர்கள் சைவ ஒழுக்கத்தைக் கடைப்பிடித்துக் கற்பதற்கு அன்புடன் வழிகாட்டினர். கனக செந்திநாதன் தமது ஆசிரியர்களுள் பண்டிதமணியைப் பெரிதும் போற்றி வந்தவர்; மாணவனாகக் கற்று ஆசிரிய கலாசாலையை விட்டு வெளியேறிய பின்னரும் பண்டிதமணியுடன் வாழ்நாள் முழுவதும் நெருங்கிப் பழகியவர்; வாரம் ஒருமுறையாவது சந்தித்து வந்தவர்; அவரிடம் பல விஷயங்களை அறிந்து கொண்டவர் (கனக செந்திநாதன் 1959 :7). எனவே, பண்டிதமணியை நன்கு அறிந்த மூத்த மாணவர்களுள் கனக செந்திநாதன் குறிப்பிடத்தக்கவர். பண்டிதமணிக்கும் கனக செந்திநாதனிடம் நல்ல அபிமானம் இருந்தது எனப் பலர் கூறக் கேட்டுள்ளோம்.

கனக செந்திநாதனின் கட்டுரை நூல் பண்டிதமணியின் பேரும் புகழும் பற்றிப் பல அரிய கருத்துக்களைக் கூறுகின்றது. எனவே, பொதுவாகக் கூறுமிடத்து அது பயனுள்ள கட்டுரை என்பதில் ஐயமில்லை. பண்டிதமணியும் இக்கட்டுரையைப் பெரும்பாலும் படித்துப் பார்த்திருப்பார். தம்மையும் தம் கருத்துக்கள் பற்றிய எழுத்துக்களையும் (writings) படித்துப் பார்க்கும் வழக்கம் அவரிடம் இருந்தது. அக்கட்டுரையில் தம்மைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் அவர் ஏற்றுக்கொண்டாரா இல்லையா என்று சொல்ல முடியவில்லை. பண்டிதமணி தம்முடன் நெருங்கிப் பழகிய ஏனைய மாணவர்களுக்கு ஏதாவது சொல்லியிருக்கக் கூடும். இவ்வாறு சொல்லுவதும் அவரது வழக்கம்.[2] அது எவ்வாறாயினும், கனக செந்திநாதன் தமது கட்டுரையில் கொண்ட கருத்துக்கள் சிலவற்றை நாம் இன்று ஆய்வு நிலையில் ஏற்றுக்கொள்ளத் தயங்க வேண்டியுள்ளது. கட்டுரையில் கனக செந்திநாதனின் குருபக்தி ஆங்காங்கு மிக மேலோங்கி நிற்பதை உணர முடிகிறது. இதனாற்போலும் ஆய்விற்கு வேண்டற்பாலதான அறிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கு அக்கட்டுரையில் சில இடத்து இல்லை என்ற அளவிற்கு மங்கிப் போய் உள்ளது. பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றின் சில கூறுகளை ஓரளவு உன்னிப்பாக அறிந்த நாம் பண்டிதமணி பற்றிய சில் முக்கியமான தகவல்களைக் கனக செந்திநாதன் அறிந்தோ அறியாமலோ தமது நூலில் கூறாது விலகி நின்றுள்ளார் என எண்ண வேண்டியுள்ளது. பண்டிதமணி பின்னே எழுதிய சிலவற்றைப் படிக்கும் போது இது தெற்றெனத் தெளி-வாகிறது.[3] கனக செந்திநாதன் எழுதியது பண்டிதமணியின் வாழ்க்கைச் சுருக்கமும் வண்டமிழ்த் தொண்டுமாயினும் அவரது வாழ்க்கை பற்றிய சில முன் நிகழ்வுகள் கட்டுரையில் தெளிவுபடுத்தப்படவில்லை.[4] கட்டுரை நூலில் சில கருத்துக்கள் தவறானவை போலவும் தோன்றுகின்றன.[5] கட்டுரையில் பண்டிதமணியின் எழுத்துக்களை அலசி நுட்பமாகத் திறனாய்வு செய்து கருத்துக்களின் சிறப்பையும் தனித்தன்மையையும் நிலைநாட்டுதலும் இல்லை என்றே கூற வேண்டும். இதற்குக் காரணம் கனக செந்திநாதனின் அணுகுமுறையாகும். அது மரபு வழியின்பாற்பட்டது. அத்துடன் கட்டுரை நூல் 1959இல் வெளிவந்தமையால் பண்டிதமணியின் பிற்கால வாழ்க்கையில் கருத்திற் கொள்ள வேண்டிய சில முக்கியமான நிகழ்வுகள் அதனில் இல்லை.[6] எனவே, எப்படிப் பார்த்தாலும் "மூன்றாவது கண்" வழுவாததும் முழுமை வாய்ந்ததும் எனக் கொள்ள முடியவில்லை.

பண்டிதமணி வாழ்ந்து கொண்டிருந்தபோது கிழக்கிலங்கையைச் சேர்ந்த செபரெத்தினம் என்பவரும் பண்டிதமணி பற்றி எழுதியுள்ளார். அவர் தமது "வாழையடி வாழை" என்னும் கட்டுரை நூலில் பண்டிதமணி கணபதிப்-பிள்ளையையும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையையும் ஒப்பிட்டு எழுதியுள்ளார். செபரெத்தினம் புலவர்மணியை நன்கு அறிந்திருந்தார். ஆனால், அந்த அளவிற்குப் பண்டிதமணியை அறிந்திருக்கவில்லைப் போலும். பண்டிதமணி பற்றி எழுதுவதற்குப் பழைய மாணவர் இருவர் கொடுத்துதவிய குறிப்புக்களே பெரும்பாலும் துணை செய்தன.[7] செபரெத்தி-னத்தின் கட்டுரையில் காட்டப்படும் ஒப்புமை சில இடத்து மேலோட்ட-மானதாகவே காணப்படுகிறது; மற்றும் சில இடத்து வலிந்து கூறப்படுவதாகக் காணப்படுகிறது. இக்கட்டுரையிலும் சில முக்கியமான செய்திகள் கூறப்படவில்லை.[8] மேலும் ஒப்பிடும்போது வேற்றுமைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது விரும்பத்தக்கதன்று. விஷயங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு வேற்றுமைகளையும் மனங்கொள்ளு-தல் வேண்டும். பண்டிதமணிக்கும் புலவர்மணிக்கும் குறிப்பிடத்தக்க அடிப்படை வேற்றுமைகளும் உண்டு என்பதனை ஆய்விலே மறத்தல் ஆகாது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் பேரையும் புகழையும் அறிந்து கொள்வதற்கு அவர் வாழ்ந்த காலத்திலே வெளிவந்த அவரது பாராட்டு மலர்கள் அனைத்தையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி இறந்ததற்குப் பின் பலர் அவரைப் பற்றி எழுதியிருக்கி-றார்கள்; சிலர் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.பண்டிதமணி இறந்ததற்குப் பின் எழுதியவர்களும் எழுதுபவர்களும் தாமாகவோ அழைப்பின் பெயரிலோ எழுதினார்கள்; எழுதுகிறார்கள். சில சூழ்நிலையில் அழைப்பின் பெயரில் எழுதும்போது அழைப்பவர்களின் "எதிர்பார்ப்பு" என ஒன்று நமது சமுதாய மரபில் இருந்து வருகிறது. சில சமயம் இந்த எதிர்பார்ப்பு நடுநிலை ஆய்விற்குக் குந்தகம் செய்யும் வகையில் அமைகிறது.

பண்டிதமணி இறந்ததற்குப் பின் அவரைப் பற்றி வெளிவந்தவற்றுள் பண்டிதமணி நினைவு மலர் (இனி சுருக்கம் கருதி நினைவு மலர் என்போம்) குறிப்பிடத்தக்கது.[9] சமுதாயத்திலே வெவ்வேறு துறையில் ஏதோ வகையில் "பெரியவர்" அல்லது "வேண்டியவர்" என அன்று கருதப்பட்ட பலர் பண்டிதமணி பற்றி மலரில் எழுத வேண்டும் என நினைவு மலர்க் குழுவினர் பெரிதும் விரும்பினர் போலும். எனவே, அன்று வெவ்வேறு தொழில் நிலையில் இருந்த பலர் பண்டிதமணி பற்றி எழுதியுள்ளனர்.[10] மற்றும் சிலர் பலவாறு, தத்தமக்கு எட்டியவாறு, மனம் போன போக்கில் எழுதியுள்ளனர். இவ்வாறு பேரறிஞர் ஒருவரின் நினைவு மலரில் மனம் போன போக்கில் எழுதுவதும் எழுதியதை வெளியிடுவதும் அழகன்று. கட்டுரைக் கருத்துக்களைப் பொறுமையாக நிதானமாகப் படித்துப் பார்ப்பவர்களுக்கு அவை மனம் போன போக்கில் அமைந்துள்ளமை தெளிவாகப் புலனாகும். இங்கு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் தருவோம். முதலாவதாக, ஒருவர் இலக்கிய வகைகளில் தாம் கொண்ட விருப்பு, வெறுப்பு பண்டிதமணியிடமும் உண்டு எனக் காட்ட முற்பட்டுள்ளார். கதை, கவிதை, நாடகம் என்பன இக்கால இலக்கியம், புதுமை இலக்கியம் எனக் கூறுவதைச் சிலர் விரும்பவதில்லை. அவர்களுக்கு இவ்வகை இலக்கியமே பிடிக்காது. பண்டிதமணியும் இக்கருத்துடையர் எனக் காட்ட விரும்பியவர் "பண்டிதமணி ஐயா அவர்கள் சிறுகதையோ, இலக்கண-மில்லாத கவிதையோ, நாடகமோ எழுதவில்லை. கதை, கவிதை, நாடகம் இவைதாம் இக்கால இலக்கியம் என்பர் வெள்ளையர். என்றாலும் இவை எழுதாத பண்டிதமணிக்கு "இலக்கியக் கலாநிதி" என்ற பட்டம் வழங்கப்-பட்டது. பொருள் பொதிந்த பட்டம். ஆகவே இலக்கியம் வேறு; இக்கால இலக்கியம் என்றார்களே அது வேறு" என எழுதியுள்ளார்.[11] ஆயின், இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பண்டிதமணிக்குப் புதுமை இலக்கியத்திலும் ஈடுபாடு இருந்தது என்பது "மூன்றாவது கண்" எனும் நூலில் (ப. 16, 17) வரும் மேற்கோள் ஒன்றின் மூலம் புலனாகிறது. மேலும், பண்டிதமணி "டால்ஸ்டாயின் கதைகள் இரண்டைத் தழுவி "இருவர் யாத்திரிகர்", "செருப்புக் கட்டியின் கதை" என்ற இரண்டு சிறுகதைகளும், சொந்தமாகச் சில கதைகளும், "இரு சகோதரர்கள்", என்ற முடிவு பெறாத ஒரு நாவலும், "நளன் தூது", "வால்மீகிதானோ" முதலிய சில இலக்கிய நாடகங்களும் எழுதியிருக்கிறார்" எனக் கனக செந்திநாதன் (1959 : 36) அப்பொழுதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவிட்டார். இங்கு "சொந்தமான சில கதைகளும்" எழுதினார் என்னும் உண்மையை மறைத்தல் அரிது. பண்டிதமணியின் "கலியுகம் 1ஆம் தேதி" (சிந்தனைக் களஞ்சியம் ப. 188) ஒரு சுவையான சிறுகதை எனலாம். கலித்தொகையில் "சுடர்த் தொடீஇ கேளாய்" எனத் தொடங்கும் செய்யுள், மனோன்மணியத்தில் வரும் சிவகாமி சரிதை என்பவற்றையும் தழுவி சிறுகதைகள் எழுதியுள்ளார். இவற்றைக் கருத்திற் கொண்டு போலும் நினைவு மலரில் யக்ஞ தரிசனம் என்னும் கட்டுரை ஆசிரியர் "பண்டிதமணி அவர்களும் ஒரு சிறுகதை எழுத்தாளர்!" (ப. 131) என்றார். எனவே, உண்மையை நிதானமாகக் கண்டறிக. இரண்டாவதாக, பண்டிதமணி நினைவுமலரில் மற்றும் ஒருவர் "பண்டிதமணி சாதி மத பேதமற்ற ஒரு சமூகத்தை அமைக்க வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்" (ப. 65) என எழுதிவிட்டார். பண்டிதமணியின் மதம் பற்றிய கருத்து உள்ளங்கை நெல்லிக்கனி போன்றது. மூன்றாவதாக, தேசிய செய்திப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் "அனைத்துலகத் தமிழாராய்ச்சி முதல் மகாநாடு 1951இல் திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் நடைபெற்ற-போது பண்டிதமணி அவர்களின் தேசிய உணர்வு பிரபல்யமாகியது" (ப. 192) எனத் தமது கட்டுரையில் எழுதியுள்ளார். கனக செந்திநாதன் (1959 : 33) இதனைத் தோற்ற பிரசங்கத்தில் ஒன்று என்பர். மேலும், அனைத்துலகத் தமிழாராய்ச்சி முதல் மகாநாடு நடைபெற்றது கோலாலம்பூரில் - 1966ஆம் ஆண்டில் ஆகும். திருநெல்வேலி பரமேசுவராக் கல்லூரியில் நடைபெற்றது நான்காவது தமிழ் விழாவாகும். நான்காவதாக, இத்தமிழ் விழாவிலே "பேராசிரியர் சேதுப்பிள்ளை, செஞ்சொற்கொண்டல் சிங்காரவேலனார் போன்ற பேரறிஞர்களும் ....... பங்குபற்றினர்" (ப. 151) என இன்னும் ஓர் ஆசிரியர் தமது கட்டுரையில் எழுதியுள்ளார். இத்தமிழ் விழாவிலே சிங்காரவேலனார் சொற்பொழிவாற்றவில்லை. விழா நிகழ்ச்சி நிரலிலும் அவர் பெயர் இடம்பெறவில்லை. இவ்வாறு நிதானமின்றி மனம்போன போக்கில் எழுதியுள்ளமைக்கு இன்னும் பல காட்டலாம். எழுத்திலும் பேச்சிலும் வழுவாமை (accuracy), நம்பத்தக்க நிலை (authenticity) ஆகியவை போற்றப்படுதல் வேண்டும். மேலும், நினைவு மலரில் எழுதப்படும் பொருள்கள் குறித்து உறுதியான திட்டமொன்று இல்லாதிருந்ததாற் போலும் கூறிய கருத்துக்கள் மீண்டும் மீண்டும் சில கட்டுரைகளில் வந்துள்ளன. முரண்படும் கருத்துக்களும் உண்டு எனக் காட்டினோம். சிங்க நோக்குடன் படித்துக் களைய வேண்டிய சிலவற்றைக் களைந்து விழிப்புடன் சிந்திப்பவர்களுக்கு இம்மலர் பண்டிதமணி பற்றி ஆர்வமூட்டக் கூடிய பல கருத்துக்களை அறிந்து கொள்வதற்குத் துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆயினும், பண்டிதமணியின் எழுத்துக்களை ஆராய்ந்து அவரது தனிச்சிறப்பையும், தன் முதன்மை வாய்ந்த அவரது சாதனையையும் பங்களிப்பையும் நிலைநாட்ட முயலும் கட்டுரைகள் மிக மிகச் சிலவே. பண்டிதமணியின் புலமைச் சிறப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி நிலைநாட்டுவதற்கு இன்று உயிர்க்குருதியாக இருப்பவை அவரது எழுத்துக்களே. குறிப்பாக அறிஞர்களிடத்து, ஆய்வாளர்களிடத்து பண்டிதமணிக்கு நிலையான பேரும் புகழும் தேடித் தந்தவற்றுள் அவரது எழுத்துக்களே முக்கியமானவை. வருங்காலத்திலும் அவ்வெழுத்துக்களே முக்கியத்துவம் பெற்று நிற்கும். அவ்வெழுத்துக்களைப் பொறுமையாக ஆழமாக ஆராய்தல் வேண்டும். ஆய்விலே இன்று உலகளாவி நிற்கும் அறிவியல் நோக்கு - விஞ்ஞான முறை - பிரதிபலித்தல் வேண்டும்.

இனி, பண்டிதமணி பற்றி நாம் அறிய ஆராய்ந்து கொண்டிருப்பவர்களுள் பல்கலைக்கழக மட்டத்தில் இருவர் ஆய்வைக் குறிப்பிடலாம். ஒருவர் "பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை - ஒரு நுண்ணாய்வு" என்னும் பொருள் பற்றி ஆராய்கின்றார்; மற்றவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் சமய சிந்தனைகள் - ஓர் ஆய்வு என்னும் பொருள் பற்றி ஆராய்கின்றார். இருவரும் முதுகலைமாணிப் பட்டம் பெறும் பொருட்டு ஆராய்கின்றனர். யாரும் கலாநிதிப் பட்டம் பெறும் பொருட்டு ஆராய இந்நாள்வரை முன்வரவில்லை. முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## III

நாம் மேலே எழுப்பிய வினாக்களுக்குத் தெளிவான முழுமையான விடை காண்பது எளிதன்று என்பதை உணர்தல் வேண்டும். ஏனெனில், பண்டிதமணியை முறையாக முழுமையாகக் கண்டு செம்மையாக ஆராய்ந்து எழுதுவது அரிதில் முயன்று செய்ய வேண்டிய காரியமாகும். ஆயின், ஒருவர் மட்டும் பண்டிதமணியைச் செம்மையாக ஆராய்ந்துவிட முடியுமா என்பது ஐயமாகும். ஏனெனில், பண்டிதமணியிடம் பல்வேறு துறைகளில் இருந்த நுழைபுலத்தினை நுட்பமாக, தெளிவாக ஆராய்ந்து மதிப்பிடுவதற்கு வேண்டிய ஒரே நிகரான பல்துறை அறிவுத்திறனை இக்காலத்தில் நமது சமுதாயத்தில் தனி ஒருவரிடம் காண்பது அரிது. அறிவுத்துறை ஒவ்வொன்றையும் கூறுபோட்டு ஆழப் பயின்று ஆராயும் போக்கே இன்றைய நிலை. உலகில் இதனையே பல்கலைக்கழக நிலையில் பொதுவாகக் காண்கிறோம். இவ்வாறுதான் ஆய்வுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. நமது நாட்டில் ஆய்வு சிறந்து விளங்கும் பல்கலைக்கழக நிலையில் இன்று யாராவது தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவசித்தாந்தம், மெய்யியல், பண்பாடு எல்லாம் ஒரே நிலையில் நன்கு தெரியும் என்று சொன்னால் நம்புவதற்கு உள்ளம் தயங்குகிறது. வருங்காலம் எவ்வாறு அமையுமோ தெரியாது. மேலும் பண்டிதமணி பற்றிய செய்திகள் நமக்கு இன்னும் சரியாக, முழுமையாகக் கிடைத்தில. பண்டிதமணியின் எழுத்துக்கள் அனைத்தும் கிடைத்தில. உபஅதிபர் பண்டிதமணிக்கு அளித்த ஞான விளக்கம் பற்றியும் அறியாது நிற்கின்றோம். "இவற்றையெல்லாம் இவ்வாறு உபஅதிபர் விளக்கினார்",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவையெல்லாம் உப அதிபர் கருத்து, இவையெல்லாம் பண்டிதமணி தந்த விளக்கம்", "இவற்றைப் பண்டிதமணி ஏற்றார், இவற்றை ஏற்றிலர்" என்று யாராவது விபரங்களைத் திரட்டித் தந்தால் பயன் உண்டு. இவ்வாறு உதவ ஒருவர் இருக்கிறார் என்றால், ஆய்வு விளக்கத்தின் பொருட்டு அவர் முன்வருதல் வேண்டும். ஆனால், யாரும் வரக் காணோம். எனவே, சிக்கல்கள் உள.[12] எனினும், கிடைக்கக்கூடியவற்றைக் கொண்டு இயன்றவரை முயன்று நாம் எழுப்பிய வினாக்களுக்கு அறிவியல் அடிப்படையில் விடை காண முயல்வது ஆய்வு வளர்ச்சிக்குப் பயனுடைத்தாம்.

## IV

பண்டிதமணியின் பேரும் புகழும் பற்றிச் சிந்திக்கும் போது இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த சமுதாயத்தையும் சமுதாயக் கணிப்புக்களையும் தகை ஒப்புக்களையும் (values) நினைவுக்குக் கொண்டு வருதல் விரும்பத்தக்கது. நமது சமுதாயத்திலே பரம்பரையாக வரும் குடும்ப மதிப்பு என ஒன்று போற்றப்பட்டு வந்திருக்கிறது. இதனை ஏனைய நாட்டுச் சமுதாயங்களிலும் காணலாம். ஒருவரை "நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்" என மக்கள் கணிப்பதை நாம் அறிவோம். இதே போன்று குடும்பம், வாழும் கிராமத்தின் பண்பாடு பற்றியும் மக்கள் மதிப்பீடு செய்து பண்டுதொட்டுப் பேசி வந்திருக்கின்றனர்; இன்றும் ஆங்காங்கு பேசி வருவதை நாம் அறிவோம். இம்மதிப்பீடு பொதுவாகக் கிராமத்து மக்களின் செயல்கள், ஒழுக்கம், மனநிலைச் சார்பு, போக்கு என்பவற்றின் அடிப்படையிலே அமைகின்றது. இன்று சமுதாயம் மாறி வருகின்றது; பெரிதும் மாறிவிட்டது. இத்தகைய எண்ணங்களும் மாறுகின்றன. என்றாலும் பழைய போக்கினைப் பழைய நிலைப்பாட்டின் விளக்கத்தின் பொருட்டு நினைவு கூர்தல் அவசியமாகிறது. சரி பிழை கூறுவது இங்கு கருத்தன்று.

பண்டிதமணி பிறந்த ஊர் மட்டுவில்; பன்னிரண்டு வயதிற்குப் பின்னர் வளர்ந்த இடம் தனங்கிளப்பு. மட்டுவில் நாம் அறிந்தவரை எவ்வகையிலும் குற்றங்குறை கூறப்படாத ஊர். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களது ஊரும் மட்டுவில். தமிழ்க் கல்வியிற் சிறந்து விளங்கியவர் உரையாசிரியர் வேற்பிள்ளை. அவர் ஈழ நாட்டின் சிறப்புக்களைக் கூறும் ஈழமண்டல சதகம் எழுதியவர். மட்டுவில் தமிழ்க் கல்விநலஞ் சார்ந்த ஊராக விளங்கியது. அவ்வூர் மக்கள் பலரும் சைவசமயநெறி நின்று வாழ்பவரானார். அந்த ஊரிலே அக்காலத்தில் - 1899ஆம் ஆண்டிற்கு முன் - தோணி மூலம் சிதம்பர யாத்திரை மேற்கொண்ட ஒரு குடும்பத்திலே - உரையாசிரியர் உறவினர் குடும்பத்திலே - தோன்றியவர்தான் கணபதிப்பிள்ளை அவர்கள். அன்றைய சைவப் பாரம்பரியச் சூழலிலே காசி யாத்திரை, சிதம்பர தல யாத்திரை செய்த குடும்பத்திற்குத் தனிமதிப்பு. அவன் அருளால் அவன் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி வரும் வாய்ப்புப் பல குடும்பங்களுக்குக் கிடைப்பதில்லை. கிடைத்த வாய்ப்பைப் பூர்வ புண்ணியம் என்று சமுதாயம் பேசி மகிழ்ந்து வந்தது.

கணபதிப்பிள்ளையவர்கள் ஒழுகலாறு ( ழுக்க நெறி) நிரம்பப் பெற்ற ஒரு குடும்பத்தில் - குடும்பப் பின்னணியில் - பிறந்தவர். அந்த ஒழுகலாறு பண்டிதமணியிடம் வளர்ந்து வந்தது. அதனைப் பண்டிதமணி தாம் இறக்கும் வரை போற்றி நின்று வாழ்ந்தார். ஒழுகலாறு பற்றித் திடமான நம்பிக்கை கொண்டவராகப் பேசியும் எழுதியும் வந்தவர் பண்டிதமணி அவர்கள்.[13] இம்மனத்திடம் எல்லோருக்கும் வருவதொன்று அன்று. இத்திடம் ஒருவரது இளமையிலிருந்தே முகிழ்த்து வர வேண்டியது. பண்டிதமணி இளமையில் யார் யாருடன் பழகினார் என்பதையும் இங்கு சிந்திக்கலாம். பண்டிதமணி அவர்கள் இளமையில் உரையாசிரியர் வேற்பிள்ளை அவர்களது பிள்ளைகள் திருஞானசம்பந்த பிள்ளை (பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தமிழாசிரியராகவும் இந்துசாதனப் பத்திராதிபராகவும் இருந்தவர்), மகாலிங்கசிவம் (பரீட்சை எடாத பண்டிதர் எனப் புகழ்பெற்றவரும் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக இருந்தவரும்), நடராசா (கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கற்று பி. எஸ்ஸி. பட்டம் பெற்று இளவாலையிலும் காரைநகரிலும் கல்லூரி ஆசிரியராக விளங்கியவர்) ஆகியோருடன் "கூடிக் குலாவியும் சேர்ந்து படித்தும்" (நினைவு மலர் ப. X) வந்ததாக அறிகின்றோம். உரையாசிரியர் குடும்பத் தொடர்பு பிற்காலத்திற் கணபதிப்பிள்ளை அவர்களின் பன்முகப்பட்ட ஆளுமை வளர்ச்சியில் நிச்சயமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இளமையிலே அவருக்குக் கிடைத்த இத்தொடர்பு பெறற்கரிய நலமார்ந்த தொடர்பாக அமைந்தது. இத்தொடர்பே குறிப்பாக நடராசாவின் நட்பே கணபதிப்பிள்ளையவர்கள் பின்னர் பண்டிதமணியானமைக்கு வழி வகுத்தது என்றால் மிகையாகாது.[14]

## V

இத்தொடர்பினைத் தொடர்ந்து பண்டிதமணி அவர்களுக்கு நாவலர் காவிய பாடசாலையில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு இருந்து நாவலரின் மாணவ பரம்பரையைச் சேர்ந்தவர் ஆனார். காவிய பாடசாலையில் பல ஆண்டுகள் கற்றார். அங்கு மனேஜராக இருந்தவர் நாவலரின் தமையனாரின் புதல்வரும் நாவலர் சரிதம் எழுதியவருமாகிய த. கைலாசபிள்ளை ஆவர். நாவலர் பாடசாலையிலே பாடஞ் சொன்னவர் சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் ஆவர். குமாரசாமிப் புலவர் மறைவிற்குப் பின் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களிடம் பாடங் கேட்டார். தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளையிடமும் தொடர்பு கொண்டார். ஓர் நெறி நின்று கற்று விளங்கிய தமிழ்ப் பேரறிஞர்களின் சிந்தனையால், வாழும் நெறியால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும் நெறியால், ஆளுமையால் காவிய பாடசாலைச் சூழலிலே கணபதிப்பிள்ளை அவர்களின் சிந்தனையும், வாழும் நெறியும், வழிபடும் நெறியும், ஆளுமையும் உருப்பெறலாயிற்று. அக்காவிய பாடசாலைக் கல்வி முறையில் இருந்து பலர் விட்டு விலகினராயினும் கணபதிப்பிள்ளை அவர்கள் ஆர்வத்துடன் நின்று பிடித்தார்கள். அவரது உள்ளார்ந்த ஆற்றல் நின்றுபிடிப்பதற்குத் துணை செய்தது. கணபதிப்பிள்ளை அவர்கள் 1926இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதரானார்; பேரும் புகழும் பெறத் தொடங்கலானார்.

பண்டிதமணி தாம் கல்வி கற்ற காலத்தில் ஈழநாட்டில் வாழ்ந்த தலைசிறந்த தமிழறிஞர்களிடம் கற்றமை அவரது பிற்காலப் பேருக்கும் புகழுக்கும் அடிகோலியது. மாணவரின் பெருந்திறமையைக் கருதும்போது சமுதாயம் மாணவரின் ஆசிரியரையும் கருதத் தவறுவதில்லை. எல்லோருக்கும் சிறந்த ஆசிரியரிடம் கற்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதுவும் தலைவிதி என்றே சமுதாயம் நம்பி வந்தது. மேலும், காவிய பாடசாலையில் கற்ற நாட்களில் திருநெல்வேலி தெற்கில் இருந்த "ஈரப்பலா வளவில்" கணபதிப்பிள்ளை அவர்களுக்கு நுழைபுலம் (acumen) படைத்த சிலரின் நட்பு எட்டியது. இவர்களுட் குறிப்பிடத்தக்கவர்கள் பிற்காலத்தில் சைவாசிரிய கலாசாலையின் உபஅதிபராக வந்த கைலாசபதி அவர்களும், பரமேசுவர ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அதிபராக இருந்த உளஇயல் அறிஞர் கலாநிதி கு. சிவப்பிரகாசமும், முன்னரே மிகப் பழக்கமான நடராசா அவர்களும் ஆவர். இவர்களின் நட்பு கணபதிப்பிள்ளை அவர்களை ஓரளவு பல்வேறு கோணத்தில் பரந்து பட்டு நோக்க, சிந்திக்க வைத்தது எனலாம்.

காவிய பாடசாலையில் கற்ற பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் ஆசிரிய பயிற்சியின் பொருட்டுக் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து ஈராண்டு பயிற்சி பெற்றார். கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஆசிரிய கலாசாலை ஒரு புதிய கல்விச் சூழலை நல்கியது. உளஇயல், கற்பித்தல் நெறி போன்ற புதிய பாடங்களை அங்கு பயின்றார். இலக்கிய இரசனையை அங்கும் தொடர்ந்து கற்றார் ; மகாலிங்க சிவத்திடம் கற்றார். மீண்டும் மகாலிங்கசிவம் அவர்களின் செல்வாக்கினுக்கு உட்பட்டார். மகாலிங்கசிவம் அவர்களின் திறமைகளைக் கணபதிப்பிள்ளை அவர்கள் போற்றி எழுதியதையும் பேசியதையும் இங்கு நினைவிற் கொள்க. மேலைத்தேய கீழைத்தேய சிந்தனையின் போக்கினை மாணவனாக இருந்து அறிவதற்கு ஆசிரிய கலாசாலைப் பயிற்சி வாய்ப்பளித்தது. கலாசாலையில் பழமையையும் புதுமையையும் ஏற்க வேண்டிய நிலை ஒன்று தோன்றியிருக்கும். கலாசாலையில்பண்டிதமணிக்கன்றி ஏனைய மாணவர்களுக்கும் இந்த வாய்ப்புக் கிடைத்தது என்றாலும் கணபதிப்பிள்ளை அவர்கள் தமது விவேகத்தால் இந்த வாய்ப்பைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார் எனலாம். கலாசாலையிலே அதிபர், ஆசிரியர் ஆகியோரின் மதிப்பைப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தமிழ் இலக்கிய இலக்கண மாணவனாக விளங்கி இருத்தல் வேண்டும். ஆசிரிய பயிற்சி முடிந்ததும் கணபதிப்பிள்ளை அவர்களுக்குக் கிடைத்த உயர் பதவி நமது ஊகத்திற்குச் சான்றாகும்.

## VI

பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண சைவாசிரிய பயிற்சி நிறுவனத்தில் (The Jaffna Saiva Training Institute) 1929ஆம் ஆண்டு தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இந்நியமனம் கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கையில் ஒரு பெருந் திருப்புமையம் எனக் கொள்ளலாம். அது மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தது ; கணபதிப்பிள்ளை அவர்களின் பிற்காலப் புகழுக்கு வித்திட்டது. "அன்றைய ஈழத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கல்விக்கான உயர்பீடமாக அமைந்த அக்கலாசாலை பண்டிதர் கணபதிப்பிள்ளையின் ஆளுமையின் வளர்ச்சிக்குப் பல வகையிலும் களமாக அமைந்தது" (நினைவு மலர் ப. 2) என்பர் பேராசிரியர் வித்தியானந்தன். மேலும், இந்நியமனம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கும் சைவத் தமிழ்ச் சமுதாயத்திற்கும் கிடைத்த பெரும் பேறு என்றும் கருதலாம். பண்டிதமணியின் பேரும் புகழும் தோன்றி ஈழத்தில் தமிழர் வாழும் பகுதிகளுக்கெல்லாம் பரவியமைக்குச் சைவாசிரிய கலாசாலையே பெரும் அளவில் காரணமாய் இருந்தது. குறிப்பிடத்தக்க சில காலகட்டங்களில் பண்டிதமணியின் பேரும் புகழும் சைவாசிரிய கலாசாலையின் பேரும் புகழும் பின்னிப் பிணைந்து வளர்ந்தன.

இந்த இடத்து சைவாசிரிய கலாசாலையில் பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களின் நியமனம் எவ்வாறு நிகழ்ந்தது என சற்றுச் சிந்தித்தல் பொருத்தமானது. அந்நாட்களில் தமிழ் கற்றுப் பட்டம் பெற்றிருந்தவர் ஒரு சிலரே. அன்று ஈழம் முழுவதிலுமே மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்திருந்தவர்கள் ஐவரே. ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த மயில்வாகனனார் (பின்னர் சுவாமி விபுலாநந்தர் எனப் பெயர் பெற்றவர்); இன்னொருவர் வவுனியாவைச் சேர்ந்த இராசையனார். யாழ்ப்பாணத்திலே இருவர் பெண்கள் - அவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் ஆண் - அவரே மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை அவர்கள். சைவாசிரிய கலாசாலையில் நியமனம் பெற்றுப் பணியாற்றிய பண்டிதர் இராசையனார் 1929இல் கலாசாலையை விட்டு விலகினார். இவர் விலகியதும் தக்கார் ஒருவரைத் தேடிய சைவ வித்தியா விருத்திச் சங்கம் பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களின் தகைமையை அறிந்து அவரை நாடி நியமனம் செய்தது. பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கைப் பின்னணியும் பயிற்சியும் புதிதாக அமைந்த சைவாசிரிய கலாசாலையின் இலட்சியங்களுக்கு மிகப் பொருத்தமானவையாகவே இருந்தன. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பயிற்றப்பட்ட "ஆசிரியராக வெளிப்பட்ட உடனே நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் ஓய்வுபெறும் வரை (ஏறக்குறைய ஐந்து வருட காலம்) திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் படிப்பிப்பது என்ற ஒப்பந்தத்தோடு 1929ஆம் ஆண்டு அவ்வாசிரிய கலாசாலையில் விரிவுரையாளரானார்" (மூன்றாவது கண். ப. 14). ஒப்பந்தம் அவ்வாறெனினும் கணபதிப்பிள்ளை அவர்கள் இளைப்பாறும் வரை நிரந்தரமாகவே சைவாசிரிய கலாசாலையில் இருந்துவிட்டார். சைவாசிரிய கலாசாலை பண்டிதர் அவர்களைத் தடுத்தாட் கொண்டது போலும்!

## VII

பண்டிதமணியின் சாதனை, தனித்தன்மை, பெருஞ்சிறப்பு ஆகியவற்றிற்கு ஒரு பின்னணி இருந்து வந்தது. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதைக் கடைப்பிடிக்கும் பொன்மொழியாகக் கொண்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் இலட்சியத்தையும் சைவாசிரிய கலாசாலையின் வரலாறு, குறிக்கோள், அந்தஸ்து, பணிகள், செல்வாக்கு முதலியவற்றையும் குறிப்பிடத்தக்க பின்னணியாக ஓரளவாவது அறிந்து கொண்டால்தான் பண்டிதமணி பேரும் புகழும் பெற்றவாறு தெளிவாகும்.

இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதற்கு முன்பும் யாழ்ப்பாணத்திலே கல்வி கிறிஸ்தவமயமாக்கப்பட்டு சைவர்களை, குறிப்பாக கிறிஸ்தவ பாடசாலைகளில் கற்ற சைவச் சிறார்களை மதம் மாற்றிச் சைவத்தையும் சைவகலாசாரத்தையும் இம்மண்ணிலே இருந்து அழித்து ஒழித்துவிடும் முயற்சி தலை ஓங்கியது. வெள்ளைப் பாதிரிமார் சைவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகச் சொல்லி ஞானஸ்நானம் வழங்கியதை முத்துக்குமார கவிராசசேகரர்

"நல்லவழி காட்டுவோம்
உடுபுடைவை சம்பளம்
நாளுநாளுந் தருகுவோம்
நாம் சொல்வ தைக்கேளும்
எனமருட்டிச் சேர்த்து
நானமுஞ் செய்துவிட்டார்."

என வரும் தமது நீண்ட விருத்தத்தில் வருணித்துப் பாடியுள்ளார். "சைவ பௌத்த பிள்ளைகள் தத்தம் சமயத்தை அறியாத பிரகாரம் செய்வதே கிறித்தவரின் ஆரம்ப வேலை. இதற்கு நான் நல்ல உதாரணம். என் சூழலோ நாவலரோடு தொடர்புபட்டது. என்பாடு இங்ஙனமானால் சாதாரண பிள்ளைகளின் கதி என்னாகும்!" (ஆறுமுக நாவலர் ப. 134) எனப் பண்டிதமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி எழுதியதையும் கருதுக. கிறிஸ்தவ மிஷனரிமாரின் கல்வி இலட்சியங்கள் நமது மரபு, பண்பாடு, தேசிய மனநிலைச்சார்பு ஆகியவற்றிற்கு முற்றிலும் புறம்பானவையாக இருந்தன. கிறிஸ்தவ பாடசாலைகளில் தமிழ்க் கல்வி தராதரம் மிகக் குன்றிப் போய் இருந்தது.[15] யாழ்ப்பாணத்தில் சைவத்தையும் சைவப் பண்பாட்டையும் அழியாது உயிருடன் வைத்துப் பேணுவதற்கு ஆறுமுகநாவலர் அவர்களின் (1822 - 1879) பெரும் முயற்சிகளைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துச் சைவர்கள் மத்தியில் 1923ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் நாள் தோன்றிய ஓர் இயக்கமே சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (The Hindu Board of Education). சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்காக அரும்பாடு பட்டவர் மனேஜர் சு. இராசரத்தினம் அவர்கள். "இந்து போட்" என்னும் பெயரும் "இராசரத்தினம்" என்னும் பெயரும் நெருங்கிய தொடர்பு உடையனவாக வழங்கி வந்தன. ஒரு பெயரை விட்டு மற்றதை ஒருவர் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குத் தொடர்பு இருந்தது. ஆரம்ப காலங்களில் இச்சங்கத்தின் தலைவராக சேர். பொன். இராமநாதன், வைத்தியலிங்கம் துரைசாமி, எஸ். சிவபாதசுந்தரம் போன்ற சைவப்பெரியார் பணியாற்றினர். அக்காலக் கல்வி நிலையை மனதிற் கொண்டு சேர். பொன். இராமநாதன் "தோன்றி வளரும் தலைமுறையினர், 'நாட்டுடைமையாக்கத்தைக் கெடுத்தல்' என்னும் அரக்கனின் வாயில் விழாது, சமுதாயத்தில் இருந்து அழிந்து போகாது காப்பாற்றப்படல் வேண்டும்" என்றும் "கிறிஸ்தவ மிஷனரிமாரின் கல்வி இலட்சியங்கள் நமது மரபு, பண்பாடு, தேசிய மனநிலைச் சார்பு ஆகியவற்றிற்கு முற்றிலும் புறம்பானவை" என்றும் திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரியில் 1926ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1ஆம் நாள் நடைபெற்ற சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர், ஆசிரியர், பாடசாலை உள்ளூர் முகாமையாளர் மகாநாட்டில் சுட்டிக் காட்டினார்.[16] மேலும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் இலட்சியம் பற்றியும், அன்றைய சைவச் சிறார்களின் கல்வி நிலை பற்றியும் கௌரவ திரு. சு. இராசரத்தினம் எம். எல். சி. அவர்கள் "யாழ்ப்பாணத்தில் சைவக் கல்வி" என்னும் பொருள் பற்றி கொழும்பு இந்து மாணவர் இயக்கக் கூட்டமொன்றில் ஆங்கிலத்தில் படித்த ஆய்வுக் கட்டுரையில் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கிக் கூறியுள்ளார்.[17] "உங்கள் பிள்ளைகளின் கல்வியைக் கட்டுப்படுத்தும் உரிமை சைவர்களாகிய உங்களுக்கு உண்டு. தக்க ஆசிரியர்களும் வசதிகளும் கொண்ட பாடசாலைகளை நீங்கள் நிறுவினால் இயல்பாகவே சைவப்பிள்ளைகள் அனைவருமே உங்கள் பாடசாலைக்கு வருவார்கள்" என்று மகாத்மா காந்தி சைவவித்தியா விருத்திச் சங்கத்திற்குத் தமது வாழ்த்தை 27.11.1927 அன்று வழங்கியிருந்தார்.[18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரிமார் அரசினர் ஆதரவுடன் யாழ்ப்பாணத்துச் சிறார்களின் கல்வியைத் தம் ஏகபோகத் தனி உரிமையாக வைத்திருந்தனர். ஆயின், ஆறுமுகநாவலர் காலத்தில் இருந்து அந்த ஏகபோக உரிமைகள் முறியடிக்கப் பெற்று மிஷனரிமாரின் எதிர்ப்புக்கிடையே சில சைவ ஆங்கில தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இனி, சைவாசிரிய கலாசாலை ஆரம்பத்தின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாகப் பார்ப்போம். சைவாசிரிய கலாசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் கிட்டத்தட்ட 1860ஆம் ஆண்டளவில் இருந்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி ஆசிரிய பயிற்சிக் கலா-சாலைகள் தோன்றிக்கொண்டு வந்தன. இவை அனைத்தும் கிறிஸ்தவ கலாசாலைகளே. இக்கலாசாலைகள் கிறிஸ்தவ கல்வியைப் பரப்பும் நோக்குடனே ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தன. சைவர் ஒருவர் பெயர் அளவிலாவது கிறிஸ்தவராக மாறினாலன்றி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் சேரமுடியாதிருந்தது.

சைவப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பணிபுரியக்கூடிய பயிற்றப்பட்ட சைவாசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. அன்றைய நிலையை உணர்ந்து தன்மானங் கொண்ட சைவர் சிலர் மந்த நிலை-யிலிருந்து விடுபட்டெழுந்து சைவாசிரியர்களுக்கு ஒரு பயிற்சிக் கலாசாலை நிறுவுவதற்குக் கிளர்ச்சி செய்தனர். காரைநகர் எஸ். அருணாச்சலம் என்ற தமிழாசிரியப் பெருந்தகை பெரும் முயற்சிகள் செய்தனர். சைவாசிரிய கலாசாலை ஒன்று நிறுவுவது குறித்து 1913ஆம் ஆண்டில் ஒரு சபை அமைக்கப்பட்டது. சைவாசிரிய கலாசாலையைக் கீரிமலையில் அமைப்-பதற்கு அருணாச்சலம் அவர்கள் அரும்பாடு பட்டனர். ஆயினும், அக்கலா-சாலையைக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்வதில் இருந்த கெடுபிடிகளால் முயற்சி கைவிடப்பட்டது. சைவர்களுக்கு ஓர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இல்லாத பெருங்குறையை அரசாங்கத்திற்கு சேர். பொன். இராமநாதனும் சேர். கனகசபையும் சுட்டிக்காட்டி வாதாடியதன் பயனாக சைவாசிரியர்களும் பயிற்சி பெறத்தக்க வகையில் கோப்பாயில் ஐக்கிய பயிற்சிக் கலாசாலை (United Training School) என ஒன்று அமைக்கப்பெற்றது. கிறிஸ்தவர் நால்வரும் சைவர் ஒருவரும் கொண்ட குழு ஒன்றே இக் கலாசாலையை நடத்தியது. இதனில் கத்தோலிக்கர் சேராது தமக்குத் தனியே கலாசாலை நடத்தினர். இக்கலாசாலையில் சைவாசிரிய மாணவர் சிலர் சேர்க்கப்பட்டாராயினும் கிறிஸ்தவ செல்வாக்கே ஓங்கி நின்றது. இக்கலாசாலையைக் கைவிட்டு அரசாங்கமே ஒரு பயிற்சிக் கலாசாலையை நடத்த வேண்டும் என்று சைவர்கள் வற்புறுத்தி வேண்டி நின்றனர். மேற்குறிப்பிட்ட கலாசாலை ஏழாண்டுகள் மட்டுமே நடைபெற்றது. பின்னர் அது மூடப்பட்டு 1923இல் கோப்பாயிலேயே அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. சைவப் பாடசாலைகள் அதிகரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்க சைவாசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பயிற்சியின் பொருட்டு இவர்களில் பலருக்குக் கோப்பாயில் இடமளிக்க முடியவில்லை. ஆதலால், இவர்களுக்குச் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பயிற்சி அளிக்கலாம் என அன்றிருந்த கல்விப் பணிப்பாளர் ஆலோசனை கூறினார். இதனை அடுத்தே 1928ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் திருநெல்வேலியில் யாழ்ப்பாண சைவாசிரியப் பயிற்சி நிறுவனம் (The Jaffna Saiva Training Institute) என்னும் பெயருடன் ஆசிரிய கலாசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை (Saiva Training College, Thirunelvely) எனப் பெயர் பெற்றுப் புகழுடன் விளங்கியது. 1929ஆம் ஆண்டு தொடக்கம் 1951ஆம் ஆண்டுவரை சைவாசிரிய கலாசாலை அதிபராகப் பணியாற்றிய மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்கள் 1930ஆம் ஆண்டு எழுதிய "சைவக் கல்வி இயக்கமும் யாழ்ப்பாண சைவாசிரிய பயிற்சி நிறுவனமும்" என்னும் ஆங்கிலக் கட்டுரையில் வரும் சில வரிகள் இங்கு நினைவுகூரத்தக்கவை : "சைவ வித்தியா விருத்திச் சங்கம் தனது இலட்சியங்களை நிறைவேற்றும் பொருட்டு சைவாசிரியர்களுக்குச் சமயஞ் சாராத பாடங்களில் மட்டுமல்லாமல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஆதரித்து வாதாடிய நமது சமயக் கோட்பாடுகளிலும் அநுட்டானங்களிலும் பயிற்சி அளிப்பதற்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்று இன்றியமையாதது எனக் கருதியது ........ மேதக்க இலட்சியங்களையும் அநுட்டானங்களையும் உள்ளடக்கிய சைவத்தின் மீட்டெழுச்சிக்காகப் பெரும் பணியாற்றுவதற்கு அமைக்கப் பெற்ற இந்த நிறுவனம் முதலாண்டு வகுப்பில் 22 மாணவர்களுடனும் புகுநிலை வகுப்பில் 81 மாணவர்களுடனும் தனது வாழ்க்கைப் பணியை ஆரம்பித்தது ....... இந்த ஆசிரிய பயிற்சி நிறுவனம் அனைத்து சைவவித்தியாவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உயிர்க் குருதியாக அமைந்து சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பெரும் சீர்மை வாய்ந்த சாதனையாக அமையும் என்பதில் ஐயமில்லை."[19]

சைவாசிரிய கலாசாலை சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆதாரக் கல்லாக, உயிர் நிலையாக விளங்கியது. அன்று சைவத் தமிழ்ச் சமுதாய எதிர்பார்ப்பின் சின்னமாக விளங்கியது. இக்கலாசாலை சைவத் தமிழ் ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்கியது. சைவ மக்களிடையே ஓர் எழுச்சியையும் விழிப்பையும் ஏற்படுத்தியது. ஆறுமுகநாவலரின் கனவை நனவாக்கும் பணியில் ஈடுபட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவராக இருந்த சைவப் பெரியார் எஸ். சிவபாதசுந்தரம் அவர்கள் அன்று மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் "பெரும் புகழ் பெற்ற ஆறுமுகநாவலர் அவர்களின் கனவு நனவு ஆகிறது. தின்னவேலியிலுள்ள சைவாசிரிய பயிற்சி நிறுவனத்திற்கும் அனாதைகள் நிறுவனத்திற்கும் ஒருமுறை (நீங்கள்) சென்றால்தான் நாட்டிலே நிலவும் பெரும் தேசீய இனத்திற்குரிய எழுச்சி உணர்வு பற்றி உங்களை நம்பவைக்கலாம்", எனக் கூறியதிலிருந்து சைவாசிரிய கலாசாலையின் சமூகப் பங்களிப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரலாம்.[20] தமிழர் வாழும் பகுதிகளில் இருந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் அனைத்திலும் சைவாசிரிய கலாசாலையின் புகழே சமுதாயத்தில் ஓங்கி நின்றது என்பதைக் காலம் அறிந்த யாரும் மறுக்கமாட்டார்கள், மறக்கவும் மாட்டார்கள். சைவாசிரிய கலாசாலையில் நிறுவன ரீதியாக இருந்த சைவத் தமிழ்ச் செழிப்பு அனைவரையும் கவர்ந்தது. ஆசிரியர்கள் சைவாசிரிய கலாசாலையில் தாம் பயிற்சி பெற்றதைப் பெருமையாகச் சொன்னார்கள்; இன்றும் சொல்கிறார்கள். கிறிஸ்தவ பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கூட, சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை விரும்பி நியமனம் செய்தனர். இஸ்லாமிய பாடசாலைகளிலும் அவ்வாறே, ஒரு காலகட்டத்தில் கல்வி மந்திரியாக இருந்த பதியுதீன் முகமது அவர்கள் கம்பளை சகிராக் கல்லூரி அதிபராக இருந்தபோது தமது கல்லூரியிலும் ஏனைய முஸ்லிம் பாடசாலைகள் சிலவற்றிலும் நியமனம் செய்வதற்குத் தமிழ் ஆசிரியர்களைச் சிபார்சு செய்யும்படி சைவாசிரிய கலாசாலை அதிபருக்குக் கடிதம் எழுதுவது வழக்கமாக இருந்தது.

இவ்வாறு சைவாசிரிய கலாசாலை சமூகத்தில் பெரும் மதிப்பையும் செல்வாக்கையும் பெறுவதற்குக் காரணம் கலாசாலை ஆசிரியர்களும் அவர்கள் மாணவர்களுக்கு அளித்த பயிற்சியும் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரியர்கள் கடைப்பிடித்த ஒழுக்கமும் காட்டிய திறமையுமே ஆகும். சைவாசிரிய கலாசாலையின் இலட்சியங்களை அயராது நிறைவேற்றும் ஆற்றலும் புலமையும் மிக்க ஆசிரியர் பலர், குறிப்பாக மூவர் சைவாசிரிய கலாசாலைக்குக் கிடைத்தனர். இம்மூவர் கலாசாலையின் அதிபர், உப அதிபர், பண்டிதமணி ஆவர். இம்மூவரையும் கலாசாலையின் "மூன்று கண்கள்" (மூன்றாவது கண்: முகவுரை) என்றும் "மும்மூர்த்திகள்" (நினைவு மலர் ப. 70) என்றும் மாணவர் போற்றினர். இம்மூவர் கூட்டரவை "திரிவேணி சங்கமம்" (நினைவு மலர் ப. 70) என வருணித்தனர். இம்மூவரில் இருவர் - அதிபரும் பண்டிதமணியும் - கலாசாலைக்கு வெளியேயும் சமுதாயத்தில் பெரும் பணியாற்றிப் புகழ் பெற்றனர். இப்புகழ் சைவாசிரிய கலாசாலைக்கும் உரியதாகியது. இம்மூவர் புகழ் சைவாசிரிய கலாசாலையின் புகழாகவும் சைவாசிரிய கலாசாலையின் புகழ் இம்மூவர் புகழாகவும் பரிணமித்துத் துலங்கிற்று.

## VIII

நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து வந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை சைவாசிரிய கலாசாலையிலே தனிச் சிறப்புப் பெற்ற ஆசிரியராகவும் இலக்கிய இரசிகராகவும் கல்வி அறிவைக் கைம்மாறு கருதாது வழங்குபவராகவும் பேரும் புகழும் பெற்றார். கற்பிக்கும் போது ஏதோ கடமைக்காகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்துப் பொழுதைப் போக்கி மாணவர் ஐயங்களைத் தட்டிக் கழித்துச் செல்லும் பாங்கு பண்டிதமணி அறியாத ஒன்று. அப்படியான மரபில் பண்டிதமணி வரவில்லை. ஆசிரியன் என்ற நிலையில் தமது சுவதர்மத்தை உணர்ந்து அடிக்கடி ஆசிரிய மாணவர்களிடம் "காரியம் விளங்குகிறதா?" (மூன்றாவது கண் ப. 7) எனக் கேட்டுப் படிப்பிப்பாராம். கற்பித்தலில் எளிமையையும் தெளிவையும் போற்றி வந்தார். மொழிநடையில் மாணவர்களிடம் இருந்து தாம் விலகி நிற்க விரும்புவதில்லை. அதனாற் போலும் "தாம் படிப்பிக்கும்போதோ, ஓர் ஆசிரிய மாணவன் படிப்பிக்கும் போதோ மாணவர்களிடம் அதிகம் இலக்கண சுத்தமாக அறுத்துப் பேசுவதை அவர் விரும்புவதில்லை" (மூன்றாவது கண். ப. 29).

பண்டிதமணிக்கு ஆரம்பத்தில் இருந்தே இலக்கிய இரசனையில் ஈடுபாடு இருந்ததற்குக் காரணம் அவர் இளமையில் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் இரசனைத் திறம் பற்றி பிறர் மூலம் அறிந்தமையே ஆகலாம். பொன்னம்பலபிள்ளையின் இரசனைத் திறத்தை வாயூறி வாயூறி மூன்று நான்கு கட்டுரைகளில் எழுதியுள்ளார். வித்துவசிரோமணியையே இலக்கிய இரசனையில் தமது இலட்சிய புருடராகக் கொண்டார் எனலாம். தாமும் அவர் வழி செல்ல விரும்பினார் போலும். அதற்கு மேலாக, பண்டிதமணி கலாசாலையில் ஆசிரிய மாணவர்களுக்குத் தாம் அளித்து வந்த பயிற்சி காரணமாகவும் தமது இலக்கிய இரசனையை வளர்க்க வேண்டிய ஓர் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பாடசலை மாணவர்களிடம் இலக்கியச் சுவையை ஊட்டும் வண்ணம் ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலே பண்டிதமணி கைதேர்ந்தவர் ஆனார். ஆசிரியர் இரசித்துக் காட்ட மாணவர்களுக்கு வாயூற வேண்டும் என்பது பண்டிதமணியின் இரசனைக் கோட்பாடு. அவர் "பருவமான பிஞ்சு மாங்காய்ப் பிளவுகளோடு, உப்பையும் அளவாகச் சேர்த்து வாயிலிட்டு ஒருவர் சுவைத்தால் மற்றவர்களுக்கு வாயூற வேண்டும். அப்படி வாயூறாவிட்டால், அது பெரிய தவறு; ரசனா விரோதம்" எனக் கம்பராமாயணக் காட்சிகளில் வரும் கட்டுரை ஒன்றில் (ப. 127) கூறியிருப்பதை இங்கு கருதுக. பண்டிதமணி தாம் இரசிப்பதை இரசித்துக் காட்டினார்; அதனைக் கேட்டு ஆசிரிய மாணவரும் ஏனையோரும் வாயூறி இரசித்தனர். பின்னர் அவர்கள் தாமாகவே இரசிக்கப் பழகினர். இது இலக்கியத்தில் தம்மை மறந்து ஈடுபடும் நிலை - உயிர்ப்பு நிலை.

பண்டிதமணியின் இலக்கிய இரசனையையும் அதனைக் கற்பிக்கும் அவரது ஆற்றலையும் கலாசாலையிலும் மற்றும் அவைகளிலும் அறிஞர் பாராட்டிப் புகழலானார். கலாசாலை அதிபர், தாம் பண்டிதமணியின் இலக்கிய இரசனையை நீண்ட நேரம் கேட்டு இரசித்துக் கொள்வது உண்டு என்று கூறுவது நினைவிற்கு வருகிறது. அதிபர் தமிழ் இலக்கண இலக்கியங்களை யாரிடமும் முறையாகக் கற்றதில்லை. பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம், வரலாறு, தத்துவம் ஆகிய பாடங்களையே கற்றிருந்தார். ஆனால், காலப்போக்கில் அவர் தமிழ் இலக்கிய இரசிகராக மாறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

வந்தமைக்கு முக்கிய காரணம் பண்டிதமணியின் தொடர்பே எனலாம். பல ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கில இலக்கியத்தை ஒரு பாடமாகப் பேராசிரியர் லூடாவைக்கிடம் கற்றுக் கொண்டிருந்த தம் மைந்தன் ஒருவருக்கு அதிபர் பண்டிதமணியின் இலக்கிய இரசனையை மணிக்கணக்காகக் கூறி இரசித்துக் காட்டுவது நினைவில் உண்டு. யாழ்ப்பாணத்திலே சிறந்த ஆங்கில இலக்கிய ஆசிரியராகப் பேரும் புகழும் பெற்ற ஹன்டி பேரின்பநாயகம் போன்றோரும் பண்டிதமணியின் இலக்கிய இரசனையை அறிந்து பாராட்டி வந்தனர் (நினைவு மலர் ப. 177).

பண்டிதமணியிடம் மாணவர்களை இலக்கிய ஆசிரியராக நெறிப்படுத்தும் ஓர் ஆற்றல் இருந்தது. "பெருந்தொகையான பண்டிதர்கள், தமிழறிஞர்கள் ஆகியோர் தங்கள் திறமைக்குப் பண்டிதமணியின் நெறிப்படுத்தும் திறமையே காரணம் எனக் கொள்வர்" எனப் பேராசிரியர் வித்தியானந்தன் (நினைவு மலர் ப. 4) கூறியுள்ளார். பண்டிதமணி வழிவந்த பெரியதோர் அறிஞர் குழாம் நமது நாட்டில் உண்டு. சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்கள் பண்டிதமணிக்கும் தம் ஏனைய ஆசிரியர்களுக்கும் என்றென்றும் நன்றியுள்ள நல்ல பழைய மாணவர்களாக இருப்பது கண்கூடு. அதுவும் சைவாசிரிய கலாசாலை வளர்த்தெடுத்த பண்பின்பாற்பட்டதே.

பண்டிதமணி ஏனைய பண்டிதர்கள் செய்ய எண்ணாத நற்காரியங்களைச் செய்ய எண்ணினார்; தமிழ்த் தொண்டராகச் செயற்கரிய செய்தார். சைவ வித்தியா விருத்திச் சங்க மனேஜர், கலாசாலை அதிபர் ஆகியோர் துணை நின்றனர். "பண்டிதமணி செய்த பலவித தொண்டுகளில் அவருக்கு நிலையான பேற்றை அளித்தது அவர் உண்டாக்கிய காவிய பாடசாலை தான்" (மூன்றாவது கண் ப. 21). பண்டிதமணி சைவாசிரிய கலாசாலையில் 1935ஆம் ஆண்டிலே சனிக்கிழமை தோறும் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித வகுப்பும் ஞாயிறு தோறும் மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் பால பண்டித வகுப்பும் ஆரம்பித்தனர். வேதனமின்றிக் கற்பித்தார். பிராமணர் உள்ளிட்ட அனைவருக்கும் போசன வசதி செய்தார். நாலா பக்கங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து கற்கலானார்.

பண்டிதமணி தமது காவிய பாடசாலையை 1938ஆம் ஆண்டில் விரிவுபடுத்தினார். வியாகரண சிரோமணி T. K. சீதாராம சாஸ்திரிகளை ஆசிரியராகக் கொண்டு ஒரு சமஸ்கிருத வகுப்பையும் யாழ்ப்பாணம் நாகவிகாரை பௌத்த குருவைக் கொண்டு ஒரு சிங்கள வகுப்பையும் ஆரம்பித்து வைத்தார். இவ்வாறு விரிவுபடுத்திய போது "திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அக்காலத்தில் ஒரு கலாக்ஷேத்திரமாகவே காட்சியளித்தது" (மூன்றாவது கண் ப. 23). யாழ்ப்பாணத்தில் தமிழ் சமஸ்கிருதப் பண்டிதர்கள் பலராக இருப்பதற்கு இக்காவிய பாடசாலை காரணமாயிருந்தது. இக்காவியப் பாடசாலை பண்டிதமணிக்கும் சைவாசிரிய கலாசாலைக்கும் தேடித்தந்த பேரும் புகழும் சிறிதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

சைவாசிரிய கலாசாலைக்கு வந்து பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளும் காவிய பாடசாலையில் கற்றோரும் - ஈழத்தின் பல பாகங்களில் பணியாற்றினர். அவர்கள் தத்தம் ஊர்களிலும் பாடசாலைகளிலும் ஏனைய இடங்களிலும் பண்டிதமணியின் ஆற்றல், புலமை பற்றிப் பேசிவர, அவரது பேரும் புகழும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து நாடெங்கும் பரவி வந்தது. அன்று யாழ்ப்பாணத்திலே தமிழ், சைவம் என்றால் சைவாசிரிய கலாசாலையை எக்காரணங் கொண்டும் புறக்கணிக்க முடியாத நிலை இருந்து வந்தது. எனவே, யாழ்ப்பாணம் வந்த சைவத் தமிழ் அறிஞர் அனைவரும் தவறாது சைவாசிரிய கலாசாலைக்குச் சென்றனர். இந்த நிலைமை பண்டிதமணிக்கு அறிஞர்களுடன் முறைப்பட்ட தொடர்பு ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. மாணவர் மட்டுமன்றி சைவாசிரிய கலாசாலைக்கு வந்து சென்ற உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர் அனைவரும் யாழ்ப்பாணத்திலே தமிழ், சைவம் என்றால் பண்டிதமணியை மனதில் சிறப்பாக இருத்திச் சென்றனர். இத்தகைய தொடர்பு, வாய்ப்பு, தகைமை ஏனைய பண்டிதர்களுக்குக் கிடைப்பது அரிதாகவே இருந்தது.

இவ்வாறும் பிற கூட்டங்கள், விழாக்கள் மூலமும் பண்டிதமணியுடன் பெற்ற தொடர்பினால் வெளிநாட்டுத் தமிழறிஞர் பலர் பண்டிதமணியைப் போற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளனர்; பேசியுள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேச மேலைத்தேச வாரவிழா (Orient Occident week celebrations) ஒன்றினை இந்திய மத்திய அரசு 1963ஆம் ஆண்டு நடத்திய போது அவ்விழாவில் "இலங்கையும் தமிழும்" என்னும் பொருள் பற்றி ஆங்கிலத்தில் உரையாற்றிய பல்கலைச் செல்வர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் தமது உரையில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் பெயரைச் சிறப்பாகக் குறிப்பிட்டு மதிப்பளித்துப் பேசியது நினைவில் உண்டு.[21]

## IX

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ், சைவம், கலாசாரம், தமிழாசிரியர் கௌரவம், வாலிபர் இயக்கம் ஆகியவற்றைப் போற்றிப் பேணுவதற்கு அன்று இருந்த சங்கங்களில் ஈடுபாடு கொண்டு தாம் கொண்ட கருத்துக்களைச் சங்கங்களில் எந்தவிதமான தயக்கமோ அச்சமோ இன்றிக் கூறிவரலானார். அந்தச் சங்கங்கள் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவ பரிபாலன சபை, கலா நிலையம், தமிழாசிரியர் சங்கங்கள், இந்து வாலிபர் சங்கம், யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸ் என்பன ஆகும். இச்சங்கங்களில் பண்டிதமணி ஆற்றிய பணிகள் மூலம் அவரது பேரும் புகழும் பரவலாயிற்று.[22]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கங்கள் சிலவற்றில் மேலை நாட்டுக் கல்வி அறிவிலும் கீழை நாட்டுக் கல்வி அறிவிலும் சிறந்து விளங்கிய அறிஞர் சிலரும் ஆர்வங் கொண்டிருந்தனர். சு. நடேசபிள்ளை, ஹண்டி பேரின்பநாயகம், கலைப்புலவர் நவரத்தினம், சதாசிவ ஐயர், இந்துபோட் இராசரத்தினம், அதிபர் எஸ். சுவாமிநாதன், க. ச. அருணந்தி, முதலியார் செ. இராசநாயகம், வண. சுவாமி எஸ். ஞானப்பிரகாசர், அப்புக்காத்து எம். பாலசுந்தரம், எஸ். ஆர். கனகநாயகம் போன்றோர் வெவ்வேறு சங்கங்களில் - ஒன்றிலோ பலவற்றிலோ - ஈடுபாடு கொண்டிருந்தனர். பண்டிதமணியும் அன்றைய யாழ்ப்பாணத்து உயர்ந்தோர் குழாத்தில் (elite) பாராட்டுப் பெற்ற ஒருவராகச் சிறப்புறும் வாய்ப்புப் பெற்றார். குறிப்பிட்ட சங்கங்கள் சிலவற்றிற்கு இந்திய நாட்டு அறிஞர்கள் வருகை தந்தபோதெல்லாம் அவர்கள் முன்னிலையில் பண்டிதமணி தமது புலமைச் சிறப்பை நிலை நாட்டத் தவறியதில்லை. வருகை தந்த சிலரின் கருத்துக்களை, குறிப்பாக ஈழத்து அறிஞர் பற்றி அவர்கள் கொண்டிருந்த தவறான கருத்துக்களைத் திருத்தவும் முற்பட்டார். இவ்வாறு அவர்களின் கவனத்தை ஈர்த்தார். கருத்து வேறுபாடு மோதலுக்கும் உள்ளாயிற்று. பரபரப்பு ஏற்பட்டது. இதன் மூலமும் பண்டிதமணியின் பேரும் புகழும் நமது சமுதாயத்தில் பரவியது.

இச்சங்கங்களில் குறிப்பாக கலாநிலையத்தில் பலதிறத்து அறிஞர்களுடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு பண்டிதமணிக்குக் கிடைத்தமையாற் போலும், மேலைநாட்டு அறிஞர் பற்றியும் ஆங்கில இலக்கியம் பற்றியும் மேலும் அறிந்து கொள்ளும் ஆர்வம் - ஏனைய பண்டிதர்களிடம் பொதுவாகக் காணப்படாத ஆர்வம் - பண்டிதமணியிடம் வளர்ந்தது. பண்டிதமணி ஆங்கிலம் கற்க முயன்றும் தோல்வி கண்ட இடத்து ஆங்கில இலக்கியங்களை மொழிபெயர்ப்பு மூலம் படித்து அறியலானார். விஷயம் அறிந்தோர் அவ்விலக்கியங்கள் பற்றிப் பண்டிதமணியின் அறிவு கூர்மையானதாகவே இருந்தது என்பர்.[23]

சைவாசிரிய கலாசாலையின் அக்கம் பக்கமும் கல்வி வளர்ச்சிக்குப் பலம் வாய்ந்த சூழலாக அமைந்திருந்தமையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். பரமேசுவரக் கல்லூரியையும் பரமேசுவர ஆசிரிய பயிற்சிக் கலாசாலையையும் அங்கு பணிபுரிந்த ஆசிரியப் பெருமக்களையும் திருநெல்வேலிச் சுற்றாடலில் வாழ்ந்த அல்லது பணியாற்றிய அறிஞர் அனைவரும் தமக்குள் கொண்ட தொடர்புகளையும் இத்தொடர்புகளால் ஒவ்வொருவரும் தனித்தனியே பெற்ற பயனையும் இங்கு மறத்தல் ஆகாது. பண்டிதமணியும் இங்கு ஒருவராகத் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# X

பண்டிதமணி சிறந்த சொற்பொழிவாளராகவும் ஒரு காலத்தில் பெயர் பெற்ற கண்டனகாரராகவும் நல்ல உரையாடல் வல்லுநராகவும் (conversationalist) விளங்கினார். சைவாசிரிய கலாசாலையில் மூவர் சொற்பொழிவாளராக விளங்கினர். பின்னர் ஒருவர் ஒதுங்கிக் கொண்டார்.[24] பண்டிதமணி விரிவுரையாளர் ஆன காலத்தில் இருந்தே கூட்டங்களில் சொற்பொழிவாற்றத் தொடங்கிவிட்டார். கூட்டங்கள் தமிழர் வாழும் மூலை முடுக்குகள் எல்லாவற்றிலும் நடைபெற்றன. பாடசாலைகள், கல்லூரிகள், கோயில்கள், பொதுச் சங்கங்கள், சபைகள் அனைத்திலும் அவ்வப்போது நடைபெற்ற கூட்டங்களிலும் விழாக்களிலும் பண்டிதமணி சொற்பொழிவாற்றி வரலானார். இதனால் பண்டிதமணி நாடறிந்த அறிஞரானார்.

பண்டிதமணி இலக்கியம், இலக்கணம், அரசியல், தமிழாசிரியர் நிலை, கலாசாரம், சமயம் என்பன பற்றிச் சொற்பொழிவாற்றி வரலானார். குழந்தைகள், பாமரர், கற்றுக்கொண்டிருக்கும் மாணவர், ஓரளவு கற்றவர், நன்கு கற்ற அறிஞர் ஆகியோர் கொண்ட சபையை அறிந்து அதற்கேற்ப சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றல் பண்டிதமணிக்கு இருந்தது. அனைவர் உள்ளத்தையும் தொடும் வண்ணம் பேசும் ஆற்றல் அவரிடம் இருந்தது. ஆசிரியர் என்ற நிலையில் பண்டிதமணி எவ்வாறு தமக்கென ஒரு பாணியை வளர்த்துக்கொண்டாரோ அதேபோலச் சொற்பொழிவிலும் தமக்கென ஒரு பாணியை வைத்திருந்தார். அவரது சொற்பொழிவின் சில அமிசங்களைக் கூறலாம். அவர் தாம் தமிழ்ப் பண்டிதராயினும் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் எளிமையாகவே பேசுவார். பண்டிதத் தமிழை விட்டு யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழை ஒட்டிய ஒரு தராதர இலக்கிய மொழியில்தான் மேடையில் பேசினார். மென்மையாகவே பேசுவார். சொல்லிச் சிரிக்க வேண்டிய இடத்துத் தாமே கொல்லென்று சிரித்து விடுவார். "எங்களுக்குப் பண்டிதமணி கதையைச் சொல்லும் பழகுதமிழ் தான் அளவில்லாமல் சிரிக்க வைக்கும்" என்கிறார் ஒருவர் (நினைவு மலர் ப. 179). விரைவாக, வேகமாக என்றுமே பேசுவதில்லை. பேச்சிலே இடையிடையே சுவையான கதை, துண்டுத் துணுக்குகள் (anecdotes) சொல்லுவார். கருத்தைத் தெளிவுபடுத்த மக்கள் அறிந்த உவமைகளையும் பழமொழிகளையும் கையாள்வார். பேச்சிலே பகடிகள் விடுவதும் உண்டு. ஆரம்ப காலத்தில் பொதுமக்களைக் கவரும் சில்லறைப்பகடிகளும் விட்டார் என்றும் பின்னர் குறைத்துக் கொண்டார் என்றும் அறிகிறோம். சொற்பொழிவிலே வினாவை எழுப்பி விடை கூறும் போக்கும் இருந்தது. சொற்பொழிவின் இடையிடையே சில பாடல்களை இராகத்துடன் பாடி வியாக்கியானம் செய்வதும் உண்டு. காற்பெருவிரல்களை ஊன்றி சற்றுத் துள்ளித் துள்ளிப் பேசுவது அவரது பழக்கம். பேச்சைக் கேட்டு மக்கள் மெச்சினர்; மீண்டும் மீண்டும் சொற்பொழிவாற்ற அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியும் இளைக்காது பேசி வந்தார். சொற்பொழிவு மூலம் மக்கள் அறிவை வளர்த்தார். வாழ்நாளில் பண்டிதமணி பேசிய கூட்டங்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் இருக்கும். வானொலியிலும் பலமுறை பேசியுள்ளார்.

பண்டிதமணி சொற்பொழிவிலும் பேச்சிலும் கண்டன பாணங்கள் தொடுப்பதில் வல்லவர். தாம் கண்டன பாணங்கள் தொடுப்பது பற்றி அவரே கூறியுள்ளார்.[25] பேச்சிலும் எழுத்திலும் தம் நிலையை விடாது வாதித்தல், இடம் அறிந்து கண்டனம் செய்தல், சுடச்சுடக் கொடுத்தல், நகைச்சுவை ததும்ப எதிரிகளை நையாண்டி செய்தல், கிண்டல் பண்ணுதல், விகடமாகப் பேசுதல் ஆகியவற்றைத் தனி ஆற்றல் என்று சமுதாயம் அன்று போற்றி மதித்து வந்தது. இவற்றை உடையவர்களைப் போற்றிப் புகழ்ந்தது. அன்று இந்த ஆற்றல் குறிப்பிட்ட ஒரு மரபுவழி வந்த அறிஞரிடம் சிறப்பாகக் காணப்பட்டது. பண்டிதமணியிடமும் இந்த ஆற்றல் பேச்சிலும் எழுத்திலும் தம் ஆசிரியர் வழி வந்து ஒட்டியது போலும். யாழ்ப்பாணத்தையும் யாழ்ப்பாணத்து அறிஞர்களையும் ஏதோ வகையில் தமிழ்நாட்டறிஞர் சிறுமைப்படுத்து-கின்றனர் எனக் கண்டபோதெல்லாம் பண்டிதமணியவர்கள் கண்டனஞ் செய்யத் தவறியதில்லை. கோமளபுரம் இராசகோபால பிள்ளை, தொழுவூர் வேலாயுத முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் உ. வே. சாமிநாதையர், பேராசிரியர் வையாபுரிப்-பிள்ளை போன்றோர் பண்டிதமணியின் கண்டனத்துக்கு உள்ளானார்கள். (பண்டிதமணி அவர்கள் பற்றிய நினைவுப் பேருரை 1989 : 28). பண்டிதமணி கண்டனகாரர் என்று பெயர் பெற்றார். "வாயைத் திறந்தால் காளமேகம் போல நக்கல், குத்தல், அங்கதச் சுவை மிக்க பேச்சு!" (நினைவு மலர் ப. 177). ஒரு கூட்டத்தில் பண்டிதமணியை சு. நடேசபிள்ளை அவர்கள் "விகடசக்கரக் கணபதி" என்று குறிப்பிட்டாராம் (நினைவு மலர் ப. 53). தொடக்கத்திலே வித்துவக் காய்ச்சலினால் கண்டனம் செய்கிறார் எனச் சிலர் குற்றம் சாட்டிய போதிலும், பண்டிதமணியின் கண்டனங்களும் தாம் கருதும் கருத்துக்களை ஒளிக்காது மறைக்காது கூறும் துணிவும் ஈழத் தமிழ் அறிஞரின் பெருமையை நிலைநாட்டும் பொருட்டே எனக் காலப்போக்கில் உணரப்பட்டமையால், அவை அவருக்குப் பேரும் புகழும் தேடித் தந்தன. கண்டனம் செய்வதைப் பிற்காலத்தில் பண்டிதமணி கைவிட்டுவிட்டார். பண்டிதமணி இலக்கியச் சர்ச்சைகள் கிளப்புவது மூலமும் பேர் பெற்றார். "புது விஷயங்களையும் சர்ச்சைக்குரிய பொருள்களையும் பற்றி ஆசிரிய சங்கங்களிலேதான் முதன் முதல் பேசுவர். ஒரே தரமுள்ளவர்களுக்கு முன்னே தான் இவை பேசப்பட வேண்டும் என்பது அவர் எண்ணம். பிரமாதமான சர்ச்சையைக் கிளப்பிய சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை என்பன ஆசிரிய சங்கங்களிற் பேசப்பட்டனவே" (மூன்றாவது கண். ப. 33).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், சைவம் தவிர்ந்த ஏனைய துறைகளில் அறிஞராக விளங்கிய பலர் பண்டிதமணி உரையாடல் வல்லுநராக இருந்தமையைப் பயன்படுத்தி அவரிடம் இலக்கியம், இலக்கணம், சமயம் பற்றிப் பல விஷயங்களை அறிந்து கொண்டனர். சைவாசிரிய கலாசாலை அதிபர் தமிழிலக்கியத்தையும் சைவசித்தாந்தத்தையும் பற்றிப் பண்டிதமணி அவர்களுடன் அவ்வப்போது நடத்திய உரையாடல் மூலம் தாம் தெளிவு பெற்றமையைக் கூறுவது உண்டு. பண்டிதமணி தம்மைச் சந்தித்து உரையாட வருபவர்களுக்கு எப்பொழுதும் பொருள் பொதிந்தனவற்றையே கூறுவார். பௌதிகப் பேராசிரியராக இருந்த ஆ. வி. மயில்வாகனம் பண்டிதமணியிடம் சென்றதைப் பற்றிக் கூறும்போது, "நானார் என் உள்ளமார்" என்ற திருவாசகத்துக்குப் பண்டிதமணி கூறிய உரை என் உள்ளத்தைப் பெரிதும் நிறைவித்தது; மறக்க முடியாத சம்பவம் அது" என்றார் (நினைவு மலர் ப. 6). இதேபோன்று பிஷப் குலேந்திரன் அவர்களும் தமது அனுபவத்தைக் கூறியுள்ளார் (நினைவு மலர் ப. 209). ஐயங்களைத் தீர்க்கும் பொருட்டுப் பண்டிதமணியிடம் செல்வோர் அவரது சம்பாஷணையை இரசிக்கத் தவறியதில்லை. இவ்வாறு பல்வேறு நிலையில், பல திறத்தோர் மத்தியில், பண்டிதமணியின் பேரும் புகழும் பரவலாயிற்று.

## XI

நமது நாட்டில் கட்டுரைகள், அணிந்துரைகள், ஆசியுரைகள் என எண்ணும்போது ஏனைய பண்டிதர் எவரும் எழுதாத அளவு பண்டிதமணி எழுதியுள்ளார் என்றால் மிகையாகாது. ஏனைய பண்டிதர் எவரும் தாம் பெற்ற அறிவைத் தம் எழுத்துக்களில் வெளிப்படுத்தாத அளவு பண்டிதமணி வெளிப்படுத்தியுள்ளார். இலக்கியம், இலக்கணம், சமயம் தவிர்ந்த பல்வேறு விஷயங்கள் பற்றிப் பண்டிதமணி பெற்றிருந்த அறிவும் - குறிப்பாக ஏனைய பண்டிதர்களோடு, மரபுவழி அறிஞர்களோடு ஒப்பிடும் போது - அவரது சிறப்பியல்புகளுள் ஒன்றாக அமைகின்றது. பண்டிதர்கள் பழமை பேணுபவர் என்னும் கருத்துக்குப் பண்டிதமணி விதிவிலக்காக விளங்கியமையும் அவரது சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். தமது சிந்தனையில் புதுமைக்கும் இடமளித்து விளங்கியவர் பண்டிதமணியவர்கள்.

பண்டிதமணி எழுதியவை கற்றோர் மத்தியில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி அவருக்குப் பேரும் புகழும் பெற்றுத் தந்தன. அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் சிலவும் எழுத்து வடிவம் பெற்றுள்ளன. பண்டிதமணியின் எழுத்துக்கள் பலதிறத்தன. அவை இலக்கிய நயம், இலக்கியத் திறனாய்வு, இலக்கணம், நாவலர் பெருமானின் இலட்சியங்கள், பணிகள், சமயம் பற்றியன ; உரைகள், கதைகள், பாடல்கள், அணிந்துரைகள், ஆசியுரைகள் என்பன ஆகும். இவற்றுள் சில எண்ணிக்கையில் மிகப் பல. பண்டிதமணி நாவலர் பற்றி ஆராய்ந்து எழுதிய அளவிற்கு வேறு யாரும் எழுதவில்லை. நாவலர் பற்றிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில உண்மைகளைத் தமிழ்நாட்டறிஞர் உணரும் வண்ணம் நிலைநாட்டியவர் பண்டிதமணி அவர்களே. பண்டிதமணியின் கருத்திற்கேற்ப சுத்தானந்த பாரதியார் தமது நாவலர் பெருமான் (1948) என்ற நூலில் சிலவற்றைப் பின்னர் நீக்கினார்; திருத்தம் செய்தார். எழுதும் பொருளில் நிபுணர் எனக் கணிக்கப்பட்டவர்களே கலைக் களஞ்சியத்தில் எழுதுமாறு பணிக்கப்பட்டனர். பண்டிதமணி கலைக் களஞ்சியத்தில் ஆறுமுக நாவலர் பற்றி எழுதியமை குறிப்பிடத்தக்கது. பண்டிதமணியின் எழுத்துக்கள் அனைத்திலும் அவரது தனிப்பட்ட கருத்துக்கள் உண்டு. எனினும், கட்டுரைகளே சிறப்புப் பெற்றன. இக்கட்டுரைகளை பொதுமக்கள், படித்தவர் அனைவர் கைக்கும் எட்டக்கூடிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதினார்; ஆனந்தவிகடன் தீபாவளி மலர் போன்ற விசேட மலர்களிலும் எழுதினார். பண்டிதமணி எழுதிய நூற்பாயிரங்களும் பல. "பண்டிதமணியவர்களின் மாணவர்கள் மட்டுமன்றிச் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த எல்லோருமே தமது ஆக்கங்களுக்குப் பண்டிதமணி அவர்களிடம் பாயிரம் பெற விழைந்து நின்றனர்" (நினைவு மலர் ப. 4) என்பர் பேராசிரியர் வித்தியானந்தன்.

பண்டிதமணிக்கு என்றுமே நூல் எழுதும் எண்ணம் இருந்ததில்லை. இதனை அவர் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார். அவர் தமக்கு அவ்வப்போது தோன்றிய கருத்துக்களைக் கட்டுரைகளாகவே எழுதினார். பின்னர், கட்டுரைகள் ஏற்றவாறு தொகுக்கப்பட்டு நூல்களாக வெளியிடப்பட்டன. இவ்வாறு முதன் முதலாக வெளிவந்த நூல் இலக்கியவழி என்பதாகும். இது 1955ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பின்னர் இது திருத்தப் பதிப்பாக 1964ஆம் ஆண்டில் வெளிவந்தது. திருத்தப்பதிப்பில் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் உண்டு. முதற் பதிப்பில் ஆசிரியர் முன்னுரை "புற இதழ்" என்னும் பெயரில் அமைந்துள்ளது. அதனில் தாம் நூல் எழுத என்றுமே நினையாததையும், தமது கட்டுரைகள் நூல் வடிவில் வெளிவருவதில் தமக்குத் தோன்றும் ஆச்சரியத்தையும், கட்டுரைகளைப் படிக்கக் கூடியவர்கள் பற்றியும், கட்டுரைகளைத் திரட்டி நூலாக்கியவர் பற்றியும், கட்டுரைகளின் பிறப்பிடம் பற்றியும் கூறியுள்ளார். திருத்தப் பதிப்பில் ஆசிரியர் தம் முன்னுரையில் ஈழநாட்டிலே தமிழிலக்கிய வரலாறு அரசகேசரியில் இருந்து தொடங்கி வளர்ந்தமையைக் கூறியுள்ளார். முதற்பதிப்பில் 15 கட்டுரைகளே உண்டு. திருத்தப்பதிப்பில் 20 கட்டுரைகள் உண்டு. முதற்பதிப்பில் உள்ள கட்டுரைத் தலைப்புக்கள் சில திருத்தப் பதிப்பில் மாற்றப்பட்டுள்ளன.

சில காலம் பண்டிதமணியின் கட்டுரைகளில் ஒவ்வொன்றை அவ்வப்போது ஆங்காங்கு தேடிப் படிக்கும் வாய்ப்பே இருந்து வந்தது. அவ்வப்போது ஆங்காங்கு வெளிவந்த கட்டுரைகளுள் சிலவற்றை முதன் முதலாக ஒன்று திரட்டி, ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், படிக்கக் கூடியதாக மலர்ந்த நூல் இலக்கிய வழி என்னும் பெயர் கொண்ட நூலே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி இலக்கியவழி எனப் பெயரிட்டமை இலக்கியத்தைக் கற்பதற்கு, இரசிப்பதற்கு வழி என்பதன் பொருட்டே. முதற் பதிப்பில் வரும் பாடங்கள் சிலவற்றை "பாலகர்கள் தொடக்கம் ஆசிரிய கலாசாலை மாணவர் பரியந்தம் அநுபவித்திருக்கிறார்கள்" என எழுதியுள்ளார். இங்கு அநுபவித்தல் என்பது to experience என்னும் பொருளில் ஆகும். அறிவாராய்ச்சி வேறு; உணர்வாம் அநுபவம் வேறு. இலக்கியத்தைப் படிப்பவர்கள் அதனைத் தாமே அநுபவித்துக் கொள்ளப் பழகுதல் வேண்டும் என்பது பண்டிதமணியின் உள்ளக் கிடக்கை ஆகும். ஆறாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு இதனை நன்கு பயன்படுத்தலாம் என்றும் கூறியுள்ளார். ஆசிரியர் முறையாகப் படிப்பித்தால் மாணவர் அநுபவிக்க, இரசிக்கப் பழகிக் கொள்வர் என்பது பண்டிதமணியின் கருத்துப் போலும். திருத்தப் பதிப்பில் ஏதோ காரணம் பற்றி இதைக் கூறாதுவிட்டார். திருத்தப் பதிப்பில் உள்ள 20 கட்டுரைகளில் 9 கட்டுரைகள் ஈழமண்டலச் சார்புள்ளவை ; ஈழத்துப் புலவர்களின் தனித்திறமைக் கூறுகளைப் பலர் அறியச் செய்பவை; தேசிய உணர்வுடன் மிளிர்பவை; ஒருவகையில் ஈழத்தமிழரைப் பெருமைப்படுத்துபவை. இலக்கியவழி பல்கலைக்கழகப் புகுநிலை வகுப்பிற்குப் பாடநூல்களில் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. இதனால் இந்நூலையும் இந்நூல் ஆசிரியரையும் மாணவர் உலகமும் ஆசிரியர் உலகமும் நன்கு அறிந்து கொண்டது. பண்டிதமணியின் நூல்கள் அனைத்திலும் இலக்கிய வழியே பலர் அறிந்த நூலாக, பெரும்பாலானோரின் பாராட்டிற்குரிய நூலாக, செல்வாக்குப் பெற்ற நூலாக விளங்கியது; விளங்கி வருகிறது.

ஆசிரிய மாணவர்களுக்கு இலக்கியங் கற்பித்தலில் பயிற்சி அளித்துக் கொண்டிருந்த பண்டிதமணி, இலக்கியங் கற்க ஆரம்பிக்கும் மாணவர்களையும், மாணவர்களுக்கு இலக்கியங் கற்பிக்கும் ஆசிரியர்களையும் கருத்திற் கொண்டே இலக்கிய வழியில் இடம்பெற்ற கட்டுரைகளை அவ்வப்போது எழுதியிருத்தல் வேண்டும். ஆசிரியர் எவ்வாறு மாணவர்களுக்குப் புலவர்களை, புலவர்களின் பாடல்களை அறிமுகப்படுத்தி, இலக்கியச் சுவையைக் காட்டி, புலவர்களின் பெருமைகளை விளக்கி, மாணவர் உள்ளத்தை ஈர்க்க வேண்டும் என்று பண்டிதமணி எண்ணினாரோ, அதற்கேற்ப - அந்த எண்ணத்தின் தூண்டுதலுக்கேற்ப - இக்கட்டுரைகளை எழுதினார் எனக் கொள்வது பொருத்தமாகும். இந்நூலில் புலவர்களை, பாடல்களை அறிமுகப்படுத்தும் பாங்கினை எண்ணிப் பார்க்கும் போது கட்டுரைகள் அனைத்தும் ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஓர் ஆசானின் அநுபவத் திறமையை, ஆளுமையைப் பிரதிபலித்து நிற்பவை என உணர முடிகிறது. ஒரு மாதிரியாக (as a sample) இலக்கியவழியில் வரும் "இரட்டையர்" என்னும் முதற் கட்டுரையையோ ஐந்தாவதாக வரும் "இலங்கை வளம்" என்னும் கட்டுரையையோ, ஆசிரியன் என்ற நிலையிலாயினும் மாணவர் என்ற நிலையிலாயினும் நின்று படிப்பித்து அல்லது படித்து ஏற்படும் உணர்வை அலசிப் பாருங்கள்; உரிய அநுபவத்தை அவ்வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் நேர்மையாகப் பெற முயன்று பாருங்கள். உண்மையில் பண்டிதமணியின் இலக்கிய அறிமுகப்படுத்துகை தனித்தன்மை வாய்ந்தது. கலை நயப்படுத்திக் காட்டுதலும் தனித்தன்மை வாய்ந்தது. நிகழ்ச்சி-களையும் விபரங்களையும் உணர்ச்சி பூர்வமாக, நுட்பமாக விரித்துரைக்கும் பண்பும் உயிர்ச்சித்திரம் போன்று வருணிக்கும் திறனும் பண்டிதமணியிடம் சிறப்புப் பெறுகின்றன. ஒருவர் தாம் உணர்தலே விசேடம் எனினும், இங்கு ஒரு கட்டுரையின் சில அம்சங்களைச் சுட்டிக் காட்டுவோம்.

"இரட்டையர்" என்னும் கட்டுரை மூன்று பாடல்களை வைத்து எழுதப்பெற்றது. பண்டிதமணி இரட்டையர் என்பவர் யார் எனக் கூறி, அவர்கள் இருவரும் சேர்ந்து பாட்டு இயற்றும் முறையைக் கூறுகின்றார். இது சிறு முகவுரையாக அமைகிறது. ஒருவர் குருடர்; மற்றவர் முடவர் எனக் கூறிய பண்டிதமணி, "இருவரிலும் அதிட்டமுடையவர் முடவர்" எனக் கூறும்போது கற்கும் மாணவர்களுக்கு ஏன் என்று அறியும் ஆர்வம், அடக்கமுடியாத ஆர்வம் தோன்றுகிறது. விளக்கத்தைக் கூறி, "ஏற்றத்திலிருந்து இறக்கத்துக்கு ஓடாமலிருக்க முடியாமற் குருடர் ஓடும்போது முடவருக்குப் பிரயாணம், சுகம் பேசும். குருடர் யாது செய்வார்? பாவம்!" என அதனை அகக்கண்ணில் கண்டு உணர்வோர்க்கு ஒரே சிரிப்பு. சிரிப்பைத் தருவது "ஓடாமலிருக்க முடியாமல் ஓடும்போது", "பிரயாணம் சுகம் பேசும்", "பாவம்" என்னும் வார்த்தைகளே. இனி பண்டிதமணி மேலே என்ன சொல்லப்போகிறார் என்ற அவர் மாணவர்களின் உள்ளத்தில் மலர்வதை முகங்கள் காட்டி விடுகின்றன. அடுத்து வருவன ஒரு பாடலின் இரண்டு வரிகள். இராகத்துடன் இரண்டு வரிகளும் தோன்றுகின்றன. வரிகளின் பொருள் விளக்கப்படுகின்றது. "மலைகளில் ஏறியும் குழிகளில் இறங்கியும் சகோதரத்தைச் சுமந்து எத்தனை காலம் குருடனாகிய யான் அலைவது? அநுபவிக்கும் வேதனைக்கு ஒரு முடிவு வராதோ!" என்று கடவுளுக்குச் செய்யும் விண்ணப்பம் மாணவர் உள்ளத்திலும் இரக்கத்தைத் தோற்றுவிக்கின்றது. அடுத்த கணம், "குருடரின் தோளிலே வெகு குதூகலமாக அமர்ந்திருந்த முடவர்" என்றதும், "வெகு குதூகலமாக" என்ற வார்த்தைகள் மாணவர்களை குதூகலிக்க வைத்துவிடுகின்றன. பின்னர் பாடலின் மறுபாதி, இராகத்துடன் இரண்டு வரிகள், அநுபவிக்கும் வேதனைக்கு ஒரு விளக்கம். அந்த விளக்கத்தை "நடந்து களையாத முடவரின் சித்தாந்தம்" என்னும் போது மீண்டும் மாணவர்களிடம் சிரிப்புத் தோன்றுகிறது. இவ்வாறு இரட்டையரின் வாழ்க்கையை அவர்தம் பாடல்கள் மூலம் விளக்கும் சிறந்த ஒரு முறையால் இலக்கிய நயப்பிலே ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தலாம் எனப் பண்டிதமணி நம்பினார். இன்றைய சமுதாயத்திலே பேச்சு வழக்கில் சாதாரணமாகப் பலர் அறியப் பயன்படுத்தப்படும் சொற்களைப் பொருள் பொதிந்த சொற்களாகத் தக்க இடத்தில் தக்கவாறு பயன்படுத்தி, மாணவர்களிடம் தக்க உணர்வை ஏற்படுத்தும் ஆற்றலைப் பண்டிதமணியிடம் காண்கிறோம். "இந்தப் பிறப்பு", "சேட்டை செய்கின்ற வஸ்து", "கண்ணான கற்பனை", "அங்கே குழுமியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் கவிதாலோகத்திலே தம்மையறியாமலே குதித்துக் கூத்தாடிச் சேட்டை செய்தார்கள்", "வந்த கால் ஆறவில்லை", "வேகின்றதே என்று வேகின்றார் குருடர்" போன்ற சொற்றொடர்களைப் பண்டிதமணி கையாளும் இடமறிந்து நயம் உணர்க. பாடலை விளக்கும் போது எழும் உணர்ச்சி வேகத்திற்கு உரம் ஊட்டுவதற்காகப் போலும், பாட்டிலே இல்லாததையும் பொருந்தும் வகையில் கற்பனை செய்து கூறும் வழக்கம் பண்டிதமணியிடம் காணப்படுகிறது. சில இடத்து சிலவற்றை மிகைப்படுத்தலும் உண்டு. "புராதனமான தமிழ்ப் புலவீர்" என்னும் பாடலை விளக்கும் போது, "முடவர் வெளிப்படாமல் உச்சரித்த வார்த்தையும் புலவர்களுக்கு இன்னதென்று தெரிந்துவிட்டது. இதோ மாமரம் விட்டிங்கு வந்து நிற்பது "புன் குரங்கு" "புன் குரங்கு" என்று சத்தமிட்டார்கள். சிலர் பாட்டை எழுதிக் கொண்டார்கள். சிலர் உரத்தும் படித்தார்கள்" எனக் கூறுவதைக் காண்க. இங்கு இலக்கிய நயப்பு ஒன்றே கருத்து; உண்மை பொய் எனப் பேசுவதற்கு இடமில்லை எனப் பண்டிதமணி கொள்வர்.

தெரிந்தெடுத்த சில செய்யுள்கள் கட்டுரை உருவில் வெளிவந்தவை "கம்பராமாயணக் காட்சிகள்". அவை கம்பராமாயணப் பாடல்களைப் படித்து விளங்கிச் சுவைப்பதன் பொருட்டே எழுந்தவை. அவை பாடல்களின் பெரிதாக்கம்; பண்பு விரி (enlargement). வருணனை இயல்பின. இலக்கிய வழியிலுள்ள கட்டுரைகள் போலன்றி கம்பராமாயணக் கட்டுரைகளில் பண்டிதமணி தரும் விளக்கத்தையும் ரசனையையும் ஓரளவு நன்கு கற்றவர்தான் முற்றாகப் படித்து ரசித்துக் கொள்ள முடியும். ஏனையோருக்குச் சில கட்டுரைகளில் உள்ள விளக்கத்திற்கு விளக்கம் வேண்டியிருக்கும். சில கட்டுரைகளில் பல விஷயங்களைத் தெளித்து விட்டுச் செல்லும் போக்கைக் காண்கிறோம். படிப்பவர்களிடமிருந்து ஒரு பின்னணியறிவை (background - knowledge) பண்டிதமணி எதிர்பார்க்கிறார் போலும். "ஆறு" என்னும் ஐந்தாவது கட்டுரையைப் படித்துப் பார்க்க. ஒரே நூல் பற்றிய கட்டுரைகளாதலால், அவற்றில் கலாசாரப் பின்னணி துலக்கம் பெறுகிறது. கலாசாரத்தில் விளைந்து மலர்கிறது இலக்கியம் என ஆங்காங்கு தெளிவுபடுத்தியுள்ளார். இது இலக்கிய ரசனைக்கு வலுவூட்டுவதாகும்.[26]

பண்டிதமணியை நல்ல இலக்கியப் பகுப்பாய்வாளராகவும் இலக்கிய ஒப்பியல் ஆய்வாளராகவும் சிந்தனையாளராகவும் காண்கிறோம். நல்ல நுட்பமான வருணனைக்குப் பகுப்பாய்வு இன்றியமையாதது என்பதை நினைவிற் கொள்க. பண்டிதமணி வருணனையில் வெற்றி பெற்றார் என்றால் அதற்கு அவரது இலக்கியப் பகுப்பாய்வே காரணம். கம்பர் பாடல்களோடு தொடர்பான ஆய்வுக் கருத்துக்களும் தொடர்பற்ற - பிற இலக்கியம் பற்றிய - ஆய்வுக் கருத்துக்களும் ஆங்காங்கே வருகின்றன. "நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு" என்று சீதாப்பிராட்டி சொன்னதைப் பண்டிதமணி புறநானூற்றில் ஒரு பெண் கூறியதோடு ஒப்பிட்டுச் செய்யும் விளக்கத்தைக் கம்பராமாயணக் காட்சிகள் எனும்நூலில் (ப. 97) காண்க. இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புமைகள் தமிழர் பண்பாட்டிலே கருத்து வளர்ச்சியைக் காண்பதற்கு உதவும். கம்பராமாயணக் காட்சிகள் முன்னுரையில் இளங்கோவின் கண்ணகியையும் கம்பர் தந்த சீதாப்பிராட்டியையும் ஒப்பிடுகின்றார். கோவலன் "எழுகென எழுந்தாய் என் செய்தனை" என்று காட்டு வழியில் நடந்து இளைப்புற்ற கண்ணகிக்குக் கூற, அவள் "போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேனாதலின் ஏற்றெழுந்தனன்" எனக் கூறியதையும், காட்டுவழி நடத்தலரிது, சுடும் எனக் கூறிய இராமனுக்கு, "நின் பிரிவினுஞ் சுடுமோ" எனச் சீதாப்பிராட்டி கூறியதையும் வைத்துப் பண்டிதமணி செய்யும் ஒப்பியல் ஆய்வின் நயநுணுக்கத்தை (subtlety) கருத்திற் கொள்க. "இருவரது பெண்களையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கி எடைபோட்டுக் காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!" எனச் சொல்லித் தமது முடிவைப் பிறர் உய்த்துணரும்படி விட்டு விடுகிறார்.[27] இவ்வாறு விடுதல் பண்டிதமணி கையாளும் ஓர் உக்தியாகும். அவர் சிலப்பதிகாரம் பற்றித் தாம் கொண்ட கருத்தை "இலக்கியம்" என்னும் கட்டுரையில் (பேச்சுச் சுருக்கம்) (செந்தமிழ்க் களஞ்சியம் ப. 132) நிலைநாட்டுதற்குக் காரணங்கள் தந்து வாதிடும் முறையின் வலிமை போற்றற்குரியது. அவரது கருத்தை நாம் ஏற்கலாம், விடலாம், அல்லது மறுக்கலாம். அது வேறு. பரமேசுவர ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பின்னர் பரமேசுவரக் கல்லூரியிலும் பணியாற்றிய வித்துவான் வேந்தனார் அவர்களுடன் பண்டிதமணி "கம்பராமாயணமா, சிலப்பதிகாரமா சிறந்த காப்பியம்" என வாதாடி இலக்கிய உலகில் பரபரப்பை ஏற்படுத்தியதையும் இவ்விடத்து நினைவுகொள்க.

பண்டுதொட்டு இன்றுவரை தோன்றிய இலக்கிய வகைகள் அனைத்திலும் பண்டிதமணிக்கு ஈடுபாடு இருந்தது. அனைத்தும் அவரது சிந்தனையில் இடம்பெற்றன. எனவே, பண்டிதமணியை இலக்கியச் சிந்தனையாளராகவும் (literary thinker) காண்கிறோம். இங்கு அவரது கூற்று ஒன்று காட்டுதல் பொருத்தமாகும் : "இலக்கியம் எது என்று தீர்ப்பதில் முட்டை போடுகின்ற இக்காலத்திலே, காமஞ் செப்பாது கண்டது மொழிவதற்கு ஒரு கனமாப் பலகையோ கன்மாப் பலகையோ எத்துணை ஆவசியகம்! ஆவசியகம்!! (சிந்தனைக் களஞ்சியம் ப. 57).

பண்டிதமணி கூறும் இலக்கியக் கருத்துக்களில் ஆங்காங்கு தற்படைப்புத் திறம் (originality) இருப்பதைக் காண்கிறோம். விசுவாமித்திரரின் கோபத்தைக் காட்டுகின்ற கம்பராமாயணப் பாடல் அடிப்படையில், "குணமென்னுங் குன்றேறி நின்றார் என்ற வள்ளுவரிலே கணமேனும் என்ற வார்த்தைக்கு இனியாயினும், விசுவாமித்திரரின் வெகுளியைப் பார்த்த பிறகாயினும், பரிமேலழகர் உரையைச் சற்றே திருத்தஞ் செய்யல் வேண்டாமோ!" எனப் பண்டிதமணி புதிய கருத்தைக் குறிப்பாகக் கூறுகிறார். பண்டிதமணி "தங்கள் நாயகனில் தான் பிறிது இல் என்று உன்னும் மங்கைமார்" எனும் கம்பராமாயணப் பாடலடியை விளக்கும் போது, "தெய்வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழாஅள்" எனுந் திருக்குறளைக் காட்டி அக்குறட் பொருளைப் புதுமையாக, நுட்பமாக, விளக்கமாகக் கூறுவதையும் (கம்பராமாயணக் காட்சிகள் ப. 152) ஆய்வாளர் மனங்கொள்ளாமல் இருக்க முடியாது. சைவநற்சிந்தனைகள் எனும் நூலில் உலகம் என்னும் பொருள் பற்றிப் பேசும் போது, "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" எனும் வள்ளுவநாயனார் தொடருக்குப் பண்டிதமணி தந்துள்ள விளக்கத்தின் (ப. 18) புதுமையையும் காண்க. மேலும் பண்டிதமணி தமது கம்பராமாயணக் காட்சிகளில் "கடுங்கொடும்பாலை" எனும் கட்டுரையில் (19) பாலைக்கும் உடன் போக்குக்கும் தரும் விளக்கம் (ப. 94) ஒரு வகையில் புதிதாகவே தோன்றுகிறது. இதே போன்று, அதே நூலில் "வந்தாள் ஆர்த்தாள்" என்னும் கட்டுரையில், "கைவரை எனத்தகைய காளை என்றாற் பொருள் பூனை" எனக் கூறுவதையும், ஆறுமுகநாவலர் என்னும் நூலில் (ப. 8) "நீதி வழுவாநெறி முறையில் இட்டார் பெரியோர்" என்பது தமிழ் அன்னையின் வாக்கு. அவ்வாக்கில் "இட்டார்" என்பதற்குப் பொருள், நீதிநெறியில் தம் வாழ்க்கையை வைத்துக் கொண்டவர் என்பதாம்" எனக் கூறுவதையும் ஓர்க. இவ்வாறு இன்னும் காட்டலாம்.

## XII

பண்டிதமணி பரந்துபட்ட அறிவுடையர் என்பது அவரது எழுத்துக்களிலிருந்து புலனாகிறது. தமிழிலக்கியங்கள், சமய இலக்கியங்கள், இலக்கண நூல்கள் பலவற்றை ஆழக் கற்றுணர்ந்தவர். ஏற்ற ஏற்ற இடங்களில் கருத்துக்களைப் பல இலக்கியங்களில் தொடர்புபடுத்தியும் வேறுபடுத்தியும் மேற்கோள்கள் காட்டியும் விளக்கும் அவரது ஆற்றல் பெரிது. இதற்கு வேண்டிய நினைவாற்றலும் அவரிடம் முதுமையிலும் இருந்தது. இவ்வாறு அவர் பல நூல்கள், பல விஷயங்கள், மனிதர் பலர் பற்றித் தமது எழுத்துக்களில் கூறித் தமது அநுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். இதற்குச் சான்று அவரது நூல்களில் ஏராளம். மேலைநாட்டு இலக்கியங்களில் வரும் பாத்திரங்களையும் தமிழிலக்கியப் பாத்திரங்களையும் ஒப்பிட்டு விளக்க முற்பட்டுள்ளார். "கஷியஸ் பொல்லாத சகுனி" (சிந்தனைக் களஞ்சியம் ப. 69) என்னும் கூற்றைக் காண்க. தமிழிலக்கியப் பாடல்களைக் கொண்டு மேலைநாட்டு இலக்கியப் பாத்திரங்களின் பண்புகளை விளக்கும் பரந்துபட்ட அறிவும் (புதுமையும்), ஆற்றலும் பண்டிதமணியிடம் காணப்படுகின்றன (சிந்தனைக் களஞ்சியம் ப. 69 - 70). மொழியியலில் சமுதாய மொழியியல் (sociolinguistics) என ஒரு கிளை இன்று விரைவாக வளர்ந்து வருகிறது. சமுதாய மொழியியல் மொழியையும் சமுதாயத்தையும் இணைத்து ஆராய்வது. இதனில் இன்று பல நாடுகளில் நடைபெற்று வரும் பலகோண ஆய்வுகளில், சமுதாயத்தில் இயற்பெயர்கள் பற்றியதும் ஒன்றாகும். பண்டிதமணி சிலப்பதிகாரம் பற்றித் தமது கருத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநாட்டுவதற்குக் காட்டிய காரணங்களுள் கண்ணகி எனும் பெயருக்குச் சமுதாயத்தில் உள்ள மதிப்புப் பற்றியதும் ஒன்றாகும் (செந்தமிழ்க் களஞ்சியம் ப. 140). இக் காரணத்தைச் சமுதாயக் கண்கொண்டு மிகவும் சுவையாக விளக்கியுள்ளார்.

பண்டிதமணி தமிழ், சைவம் தவிர்ந்த விஷயங்களைப் பற்றியும் பேசுகிறார். பொருளாதார சாத்திரத்தின் முதல் விதி எனப் பேசுகிறார் (சைவ நற்சிந்தனைகள் ப. 9). நாட்டைச் சூறையாடுவதில் பறங்கியர், ஒல்லாந்தர், வெள்ளையர் முறை பற்றிக் கூறுகின்றார் (கந்தபுராண கலாசாரம் ப. 43). ஏர்வின் என்ற வைசிராய் மகாத்மா காந்திக்குச் செய்த மரியாதையை ஒப்பீடு செய்தலுக்குக் கொண்டுள்ளார் (ஆறுமுகநாவலர் ப. 56). விஞ்ஞான மேதை கிருஷ்ணன் பற்றியும் (சிந்தனைக் களஞ்சியம் ப. 25), தாவர சாத்திர அறிஞர் ஜகதீச சந்திரபோஸ் பற்றியும் (கந்தபுராண போதனை ப. 21) குறிப்பிடுகிறார் கணித மேதை இராமானுஜம் - கேம்பிரிட்ஜ் பேராசிரியர் ஹார்டி பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (சிந்தனைக் களஞ்சியம் ப. 238). சோதிடம் பற்றியும் (சைவ நற்சிந்தனைகள் ப. 11) இசையில் இராகம் பற்றியும் (சைவ நற்சிந்தனைகள் ப. 28) பேசுகிறார். ஆங்கில அறிவு அற்றவராயினும் "உலகம் போற்றும் இந்தியத் தத்துவ சாத்திரிகள் புத்த தர்மம் இந்து தர்மத்துக்கு உறுதுணை என்று புத்தகம் ஆங்கிலத்தில் எழுதுகின்றார்கள்" (சமயக் கட்டுரைகள் ப. 89) எனச் சுட்டிக் காட்டியுள்ளார். உளநூல் வல்லவர் மனத்தை அடிமனம் என்றும் மேல் மனம் என்றும் வகுப்பதை ஒப்பீடு செய்தலுக்குக் கொண்டுள்ளார். மேலும்,

> "விஞ்ஞானத்துறை வருமானம் முழுவதையும் விழுங்கிக் கொண்டு உலகத்தைச் சாம்பர் செய்யும் நிலைக்கு வந்துவிட்டது. பல்கலைக்-கழகங்கள் பட்டதாரிகளை உற்பத்தி செய்துவிட்டு, அப்பால் வழிகாட்டத் தெரியாமல் கைகளை விரிக்கின்றன. ஊண், உடைத் தட்டுப்பாடு நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளருகின்றது. அரசாங்கங்கள், கருத்தடை வழியொன்று காண முயல்கின்றன. அநுபவம் முதிர்ந்த இராஜாஜி, "உண்ணும் வாய்-களைக் குறைக்கும் வழி" என்று, அதற்குப் பெயர் சூட்டுகின்றார். அன்றி உண்ணும் வாய்களைக் குறைக்க முயல்பவர்கள் மருத்துவச்-சாலைகளை மூடிவிட்டு, நோயாளிகளைக் கொன்று குவித்து-விடலாமே என்று பரிகாசமுஞ் செய்கின்றார்"
>
> (ஆறுமுகநாவலர் ப. 12 - 13)

எனக் கூறியிருப்பதும் பண்டிதமணியின் பரந்துபட்ட அறிவிற்குச் சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# XIII

பண்டிதமணி ஆறுமுகநாவலரை வியந்து பாராட்டிப் பல விஷயங்களில் பின்பற்றியவர். நாவலரின் பெரும் ஆர்வலர். அவர் ஆறுமுகநாவலரின் கொள்கைகள், கோட்பாடுகள் பலவற்றைப் போற்றி மக்களுக்கு விளக்கியவர். நாவலரின் சமய நீதி, சாதி நீதி பற்றி வெவ்வேறு இடத்து விளக்க முற்பட்டுள்ளார். எடுத்துக்காட்டாக, சாதியினுஞ் சமயமே அதிகம், நாவலர் நீதி நல்ல செய்தி ஆகிய கட்டுரைகளைக் (ஆறுமுகநாவலர் ப. *91, 110*) காட்டலாம். அன்றைய சூழல் நாவலரைச் சீர்திருத்த புருஷராக்கியது, அவருக்குச் சைவசித்தாந்த உணர்ச்சி கந்தபுராணத்திலிருந்து வந்தது (கந்தபுராண கலாசாரம் ப. 20) எனப் பண்டிதமணி கூறுவதை உளங்கொண்டு சிந்தித்தல் தகும். தமிழ்ச் சமுதாயத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்துச் சமுதாயத்தில், நாவலர் பெருமையைச் சற்றும் இளைக்காது விளக்கி வந்த பெருமையுடையவர் பண்டிதமணி. நாவலர் மீது குறையோ பழியோ கூறியவர்களைப் பண்டிதமணி சும்மா விட்டுவைத்ததில்லை. கண்டனஞ் செய்ததை முன்னர் குறிப்பிட்டோம். நாவலர் என்றால் பண்டிதமணிக்கு உயிர்; ஒருவகைப் பைத்தியம் என்றுகூடச் சொல்லலாம். பண்டிதமணி காட்டும் நாவலர் பெருமான் எனத் தனியே விரிவாக ஆராய்தல் விரும்பத்தக்கது. இதேபோன்று பண்டிதமணியின் சமயக் கருத்தையும் சமய அடிப்படையில் தமிழ்க் கலாசாரம் பற்றிய கருத்தையும் தனியே ஆராய்தல் நன்று. அறத்தை வரம்பாகக் கொண்ட கலாசாரப் பின்னணியில் சில இலக்கியங்களை விளக்கும் பண்டிதமணியின் ஆற்றலும் தெளிவும் ஆராயும் உள்ளத்தை ஈர்க்கும். கலாசாரக் கருத்துக்களின் ஊற்றினைக் காலத்தால் முற்பட்ட இலக்கியங்களிலும் பிற்பட்ட இலக்கியங்களிலும் காண்கிறார். வடமொழி இலக்கியங்களிலும் காண்கிறார். இவ்வாறு இன்றுவரை நீண்டதோர் கருத்துத் தொடர்ச்சியினைக் காண்கிறார். தமிழ், வடமொழி, புண்ணிய பூமியாம் பாரதம் என ஒருங்கிணைத்து நோக்குபவர்களிடம் பொதுவாகத் தோன்றும் பரந்த நோக்கும், அதன் அடிப்படையில் எழும் கருத்துக்களும் பண்டிதமணியிடமும் இருப்பதில் வியப்பில்லை. அண்மைக் காலத்தில் நம் நாட்டுப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிலர் தமிழ்நாட்டுத் தமிழ் நூல்களை இங்கு வராது தடுத்துத் தள்ளி வைக்க வேண்டும் என்று குரல் எழுப்பினர். ஆனால் பண்டிதமணியோ "தமிழ் நாட்டின் இலக்கிய வளம் மகா சமுத்திரம். ஈழமண்டலத்திலக்கிய வழி அந்த மகா சமுத்திரத்திற் சென்று சேராதாயின் நின்று வற்றிவிடும்" (இலக்கிய வழி. ப xviii) என்றார். இங்கும் அவரது பரந்த மனப்பான்மையே தெரிகிறது. பண்டிதமணியின் சமயக் கருத்து என எண்ணும் போது உப அதிபர் கைலாசபதி அவர்கள் ஏற்படுத்திய தாக்கத்தைக் கண்டறிதல் வேண்டும். வைத்தியலிங்கம் அவர்கள் தமது தூண்டுதலின் பெறுபேறுதான் பண்டிதமணியின் சமயப் பணிகள் என்று ஒருவாறு கூறுவதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நினைவு மலர் ப. 60) அர்த்தத்தையும் கண்டறிதல் வேண்டும். இத்தகைய ஆய்வுகள் பண்டிதமணியின் பேரும் புகழும் கற்றோரிடத்து நிலைத்து நிற்பதனைத் தெளிவாக்கும்.

# XIV

பண்டிதமணிக்குப் பேரும் புகழும் தேடித் தந்தவற்றுள் அவரது மொழி நடை மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. பண்டிதமணியின் மொழிநடை மிக எளிமையானது எனப் பலர் கூறியுள்ளனர். பொதுவாகப் பண்டிதர் ஒருவரிடம் பண்டிதமணியின் மொழிநடையைக் காண்பது அரிது.

ஆழ்ந்த கருத்துக்களை எளிமையாக, சுருக்கமாக, தெளிவாக எழுதுவது - வெளியிடுவது - எளிதன்று. இவ்வாறு எழுதுவதற்குச் சிந்தனையிலும் மொழியாட்சியிலும் முதிர்ச்சி வேண்டும். சங்கப் பாடல்களில் இப்போக்கினைக் காணலாம். "நின்ற சொல்லர், நீடு தோன்றினியர்" என வரும் நற்றிணை வரியைக் காண்க. இப்போக்கினை உரைநடையில் மிகச் சிலரிடமே காணமுடிகிறது.

பண்டிதமணிக்கு அவர்தம் நடை எப்படி வந்தது? அவரது ஆசிரியர் குமாரசுவாமிப் புலவர் வழி வந்தது எனலாமா?[28] அப்படிக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் சமூக மொழியியலார் கருத்துப்படி குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசும் யாரேனும் இருவரிடம் ஒரே தன்மை வாய்ந்த மொழியைக் காண்பது அரிது. காரணம் இருவர் மொழி அனுபவம் ஒன்றாக இருப்பதில்லை. ஒருவர் அமைக்கும் உருப்படிவம் அவரது சொந்த அனுபவத்தைப் பிரதிபலிக்கும். எனவே, ஒவ்வொருவரும் தத்தம் மொழி, சமுதாயப் பின்னணிக்கேற்ப வெவ்வேறு உருப்படிவத்தினை அமைப்பர்.[29] கணபதிப்பிள்ளையவர்கள் காவிய பாடசாலையில் புலவர் அவர்களிடம் கற்றபோதும், பண்டிதர் பரீட்சை எழுதியபோதும், பிற்காலத்தில் தாம் கொண்ட நடையைக் கையாண்டிருப்பாரா? அதனை அவர்தம் ஆசிரியர் ஏற்றிருப்பாரா? இல்லை என்றே பதில் சொல்லத் தோன்றுகிறது. ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் மாணவனாக இருந்தபோதும் அவர் கையாண்ட மொழிநடை வேறாகவே இருந்திருக்க வேண்டும். அன்றைய தமிழ்க் கல்வி, வசனநடை, தமிழ் ஆசிரியர் எதிர்பார்ப்பு, பயிற்சி முறை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே மேற்கூறியவாறு துணிகின்றோம்.

பண்டிதமணியின் தனித்துவ நடை அவர் சைவாசிரிய கலாசாலையில் ஆசிரியராக அமர்ந்த பின்னரே கட்டின்றிச் சுதந்திரமாக வளர்ந்தது எனத் துணிவதற்கு இடமுண்டு. பண்டிதமணி படித்தவை பண்டைய இலக்கியங்கள். இன்று எளிமையான உரைநடையைப் படித்து எளிமையாக எழுதப் பயிலும் வாய்ப்பு இருப்பது போல் பண்டிதமணிக்கு இருக்கவில்லை எனலாம். பாடசாலை மாணவர்களை எதிர்நோக்கி ஆசிரிய மாணவர்கள் கையாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய மொழியின் தன்மை பண்டிதமணியின் உள்ளத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தது என்றால் மிகையாகாது. போதனையிலும் சாதனை நன்று என மொழியைப் பொறுத்தவரை ஆசிரிய மாணவர்களிடம் வளர்க்க விரும்பிய தெளிவையும், எளிமையையும், எளிமையில் வலிமையையும் தம்மிடத்தே வளர்த்துக் கொண்டார். பொதுப்பட நோக்கும்போது நாவலர் பெருமானின் மொழி நடை பற்றிய நோக்கு பண்டிதமணி தாம் கொண்ட மொழி நடைக்கு இசைவாக அமைந்தது எனலாம்.

இனி, பண்டிதமணியின் மொழி நடையில் வடமொழித் தாக்கம் உண்டா எனச் சிலர் ஐயுறுகின்றனர்.[30] அந்தச் சாத்தியம் இல்லை என்றே துணிகின்றோம். ஏனெனில், பண்டிதமணியின் வடமொழிப் பாண்டித்தியம் அவ்வளவு பெரிதன்று. பண்டிதமணியின் வடமொழி அறிவு அடங்கிப் போகிற (passive) ஒன்றாகவே இருந்தது. வடமொழியில் வாசித்து உணரும் ஆற்றலையே பெற்றிருந்தார். எதுவும் வடமொழியில் எழுதினார் எனக் கூறுவதற்கில்லை. மேலும் வடமொழி பேசப்படாத மொழி. இங்கு பண்டிதமணி சொற்பொழிவில் கையாண்ட தமிழ்மொழி நடைக்கும், சம்பாஷணையில் - சாதாரண பேச்சில் கூட - கையாண்ட மொழிநடைக்கும் எழுத்திலே கையாண்ட மொழிநடைக்கும், நெருங்கிய உறவு - கிட்டத்தட்ட ஒன்றே எனும் ஒப்பு (resemblance) - இருப்பதை நினைவுகூர்தல் வேண்டும். இது இவ்வாறாக, வடமொழித் தாக்கம் பற்றிப் பேசுவதற்கு இடமில்லை எனத் துணியலாம்.

பண்டிதமணியின் மொழிநடையைத் தனியே அறிவியல் அடிப்படையில் ஆராய்தல் விரும்பத்தக்கது. அவரது நடையில் இனங்காணக் கூடிய சிறப்பு அம்சங்கள்சிலவற்றை "இலக்கியவழி" என்னும் நூல் அடிப்படையில் சுட்டிக் காட்டியுள்ளோம்.[31] பண்டிதமணி ஒரோவிடத்து கடும் நடையையும் (பண்டிதர்கள் நடை) கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக, 'வடுவடு நுண்ணயிர்' எனும் கட்டுரையின் முற்பகுதியில் (சிந்தனைக் களஞ்சியம் ப. 44) காண்க. பண்டிதமணி இலக்கணத்தைப் பொறுத்தவரை வைதிகக் கட்டுப்பாடற்றவர். அதனால், அவரது வாக்கியங்களில் பிழை கண்டவரும் உளராம் (மூன்றாவது கண் ப. 38). எளிமையை மேற்கொண்ட பண்டிதமணி ஒரோவிடத்து சந்தி புணர்த்தியும் எழுதியுள்ளார். "உலகந் தோன்றிய நாட்டொட்டு......" (கம்பராமாயணக் காட்சிகள் ப. 63) எனப் புணர்த்தி எழுதியதைக் காண்க. வித்து (சைவநற்சிந்தனைகள் ப. 10), புஷ்பி (சிந்தனைக் களஞ்சியம் ப. 58), பறை (சிந்தனைக் களஞ்சியம் ப. 55) என்பவற்றை வினையாகப் பயன்படுத்தியமை வழக்குக் குறைந்த பண்பு எனலாம். சிறிய சிறிய வாக்கியங்கள் எழுதும் பண்டிதமணி, கிட்டத்தட்ட 220 சொற்களைக் கொண்ட வாக்கியம் (செந்தமிழ்க் களஞ்சியம் ப. 125, 126) எழுதியதும் உண்டு. படித்த அளவிலே கருத்தை எளிதாகக் கிரகிக்க முடியாதவாறும் எழுதியது உண்டு. "கவிஞனைக் கவி செய்யத் தொடங்குவது எவ்வளவு கஷ்டமோ; அதனினும் மகா கஷ்டம், அது தொடங்கிய பின் அவனை அதனைத் தடை செய்து மடக்குவது" (கம்பராமாயணக் காட்சிகள் - ப. xxvii) என எழுதியதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுக. ஓரிரண்டு கட்டுரைகள் எளிதில் புரிந்துகொள்வதற்கு சற்று சிக்கலானவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக 'புதிய முறையிற் புகழ்மாலை' எனும் கட்டுரையைப் (கம்பராமாயணக் காட்சிகள் ப. 63) படித்துப் பார்க்க.

## XV

பண்டிதமணி சில கருத்துக்களை, சிக்கல்களைத் தாமே ஆராயாது ஆய்வாளர்க்கு என விட்டு விடுகின்றார். ஆராய வேண்டும், சிந்திக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆராய்வதிற் பயனில்லாத விஷயங்களையும் கூறுகிறார் :

" ஆறு சமயங்களுந் தனித்தும் சேர்ந்தும் அறுபத்து மூன்று வகையில் அநுட்டிக்கப்படலாம். அறுபத்து மூன்று வகைக்கும் வகைக்கொருவரை உதாரணங் காட்டியது பெரியபுராணம் போலும். இது பெரிதும் சிந்தனைக்குரியது"

(சமயக் கட்டுரைகள் ப. 63)

" சைவம் முதலிய ஆறும் பெரிய புராணத்திலும், தேவாரங்களிலும் மதிப்புப் பெற்றிருக்கின்றன. பாடாண வாதம் முதலியவற்றுக்கு அவ்வாறான மதிப்பைக் காணோம். சமயவாதிகள் இதனை ஆராயக் கடவர்"

(சமயக் கட்டுரைகள் ப. 81)

" தத்துவ உபகாரமும் வன்ன உபகாரமும் ஒரு அளவு சிந்திக்கத் தக்கவை"

(அத்வைத சிந்தனை ப. 17)

" உயிர்தானும் சிவாநுபவம் ஒன்றினுக்கே உரித்து" என்ற சித்தியாரும்; "தாடலை" என்ற திருவருட்பயனும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை"

(அத்வைத சிந்தனை ப. 34)

" புண்ணியம் ஆராயப்பட வேண்டியது"

(சைவ நற்சிந்தனைகள் ப. 4)

" பற்றுக்கள் எப்படி மனிதனைப் பற்றிக் கொண்டன என்பதை ஆராய்வதிற் பயனில்லை"

(சைவ நற்சிந்தனைகள் ப. 19)

இவ்வாறு இன்னும் பலவற்றைக் காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XVI

யாழ்ப்பாணம் தமிழ்ப் பண்டிதர்கள் மிகுந்த இடமாக விளங்கியது. இதனைச் சற்று மிகைப்படுத்தி, யாழ்ப்பாணத்தில் எங்கேயாவது தடுக்கி வீழ்ந்தால், ஒரு தமிழ்ப் பண்டிதர் மீதுதான் விழ வேண்டும் என்று, ஒருமுறை கல்கி ஆசிரியர் எழுதியிருந்தார். இன்றுவரை, ஈழத்துப் பண்டிதர்களுள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு மட்டுமே, இலங்கைப் பல்கலைக்கழகம் 1978ஆம் ஆண்டு இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கியது. தமிழ் இலக்கியத் துறையிலும் சமயத்துறையிலும் பண்டிதமணி ஆற்றிய பங்களிப்பின் மேதகைமைக்காகவே, அவருக்கு அப்பட்டம் வழங்கப்பட்டது. அவரது பங்களிப்பு, சமுதாயத்தில், குறிப்பாகத் தமிழ், சமயக் கல்வி உலகில், பெருந் தாக்கத்தை ஏற்படுத்தியது. இலக்கியக் கலாநிதிப் பட்டமளிப்பின் போது, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத் தலைவர் பல்கலைக்கழக வேந்தருக்குப் பண்டிதமணி அவர்களை அறிமுகம் செய்து ஆற்றிய தமது உரையில், பண்டிதமணியின் தகைமைகளை விளக்கியுள்ளார். அந்த இலக்கியக் கலாநிதிப் பட்டம், சமுதாயத்தில் பேரும் புகழும் பெற்றிருந்த பண்டிதமணிக்கு நிறுவன ரீதியாகப் பேரும் புகழும் ஏற்படுத்தியது. பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு பண்டிதமணி, சைவசித்தாந்த சாகரம், முதுபெரும் புலவர், மஹாவித்துவான், இலக்கியக் கலாநிதி ஆகிய பட்டங்கள் வெவ்வேறு காலத்தும் இடத்தும் வழங்கப்பட்ட பொழுதிலும், கணபதிப்பிள்ளை அவர்கள் "பண்டிதமணி" என்றே பலர் அறிய வாழ்ந்தார்.

## XVII

"வேண்டுமென்றே போற்றுதல் இலம்" என்ற கோட்பாட்டடிப்படையில் இங்கு சில கருத்துக்களைக் கூறியுள்ளோம். இதுகாறுங் கூறியவற்றை ஒருங்கே எண்ணுமிடத்துப் பண்டிதமணியின் பேரும் புகழும் வந்தவாறு (நிலைத்து நிற்குமாறு) ஓரளவாயினும் தெளிவாகும் என நம்புகின்றோம். இங்கு கூறியவற்றில் குறை குற்றங் காணுமிடத்து ஆய்வாளர் அவற்றைச் சுட்டிக் காட்டி, காரணம், சான்று தந்து நிறை செய்வர் ஆக. பண்டிதமணி தாம் வந்த விஷயம் முடிந்து போய்விட்டார். ஈழத்தில் தமிழ் உள்ள வரை, சைவம் உள்ள வரை பண்டிதமணியின் பேரும் புகழும் நிலைக்கும் எனக் கொள்ளலாம். தமிழ்ச் சமுதாயம் பண்டிதமணியை என்றுமே மறவாது. பண்டிதமணி பற்றிய ஆய்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் செழிப்புறுவதாக. அதற்குரிய வழிவகை தோன்றுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. நமது நாட்டில் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, ஏ. பெரியதம்பிப்பிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார் ஆகியோரும் "பண்டிதமணி" என்னும் பட்டம் பெற்றனர். ஆயினும், இவர்களைப் பொறுத்தவரை இப்பட்டம் வழக்கில் நிலைக்கவில்லை.

2. எடுத்துக்காட்டாக, டி. லிற் பட்டம் வழங்கியதை ஒட்டி வெளிவந்த பாராட்டு மலரில், தமிழ் தந்த பண்டிதமணி என ஒரு கட்டுரை உண்டு. "மலரிலுள்ள தமிழ் தந்த பண்டிதமணி என்ற கட்டுரை கவர்ச்சியாக இருக்கிறது. அதை ஊன்றிப் படிக்கும்படி சிலருக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறேன்" என்று பண்டிதமணி தம்மிடம் கூறியதாக பரநிருபசிங்கம் தாம் நினைவுமலரில் எழுதிய எட்டியதும் எட்டாததும் (ப. 47) என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், யான் தினகரனில் பணியாற்றிய போது பண்டிதமணியின் நூல்கள் சிலவற்றிற்கு தினகரன் வார இதழில் எழுதிய மதிப்புரையைப் பண்டிதமணி படித்துப் பார்த்துவிட்டு, அதுபற்றித் தமது பழைய மாணவர் ஒருவருக்குக் கூறினார். பழைய மாணவர் பண்டிதமணி கூறியவற்றைச் சைவாசிரிய கலாசாலையின் இளைப்பாறிய அதிபருக்குக் கடிதமூலம் தெரிவித்தார். அக்கடிதம் என் கைக்கும் கிடைத்தது.

3. "திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை மூன்று கண்களைப் பெற்றிருந்தது; பிரகாசித்தது" எனக் கனக செந்திநாதன் தமது நூல் முகவுரையில் கூறியுள்ளார். முதலாவது கண்; அதிபர் இரண்டாவது கண் உப அதிபர்; மூன்றாவது கண் பண்டிதமணி. கனக செந்திநாதன் தமது நூலில் பெரியார் பலரின் பெயர்களை ஆங்காங்கு குறிப்பிட்டு, அவர்களுக்கும் பண்டிதமணிக்கும் இருந்த தொடர்பைச் சுருக்கமாக விளக்கியுள்ளார். ஆனால், கலாசாலையில் இருபத்தொரு ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றி, சில காலகட்டங்களில் பண்டிதமணியுடனும் ஏனைய ஆசிரியர்களுடனும் கலாசாலை வளவினுள் உடனுறைந்தும் வந்த அதிபரின் பெயரைத் தமது கட்டுரையில் ஓரிடத்திலும் கூறாததும், அதிபருக்கும் பண்டிதமணிக்கும் இருந்த தொடர்பை, உறவைச் சிறிதேனும் கூறாததும் வியப்பிலும் வியப்பே. நூலில் "அதிபர்" என்ற பதவிப் பெயர் மட்டும் இரண்டு இடத்தில் வருகிறது. அதிபர் தமது பதவியில் இருந்து இளைப்பாறிய போது, சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கத்தினால் வெளியிடப்பெற்ற அதிபரின் சேவைநலம் பாராட்டு மலரில் பண்டிதமணி தாம் எழுதிய பாராட்டை "இருபது வருஷங்களுக்கு மேலே ஊடியும், கூடியும் உடன் வாழ்ந்த வாழ்க்கை அனுபவம் இது" என முடித்துள்ளார். இந்த இறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி பொருள் பொதிந்தது எனக் கருதலாம். மேலும், அதிபர், உப அதிபர் ஆகிய இருவருக்கும் கீழே நீண்டகாலம் பணியாற்றியமை "கிடைத்தற்கரியதொரு பெறும் பேறு" எனவும் பண்டிதமணி கூறியுள்ளார் (சுவாமிநாதன் நினைவுமலர் 1969 : 21). கனக செந்திநாதன் சைவாசிரிய கலாசாலையின் மூத்த பழைய மாணவர்களில் ஒருவர்; வாரந்தோறும் பண்டிதமணியைச் சந்தித்தவர். பண்டிதமணி கூறும் "வாழ்க்கை அனுபவம்" "பெரும் பேறு" என்பன கனக செந்திநாதன் அறியாதவையாக இருந்திருக்க முடியாது. சிலவற்றைக் கூறி, சிலவற்றைக் கூறாமைக்குக் காரணம் தெரியவில்லை.

4. கனக செந்திநாதன் 26ஆம் பக்கத்தில் ஏதோ சொல்ல விரும்பி, ஏதோ காரணத்திற்காக அதனைச் சொல்லமுடியாது, "இப்படியே எவ்வளவோ சொல்லலாம். ஆனால், இவ்வளவும் போதும்" என ஒருவாறு மழுப்பி விடுகின்றார் எனக் கருதத் தோன்றுகிறது.

5. தமிழ்நாட்டில் புத்தகம் எழுதும் பேராசிரியர்கள் பணஞ் சம்பாதிக்கவே எழுதுகிறார்கள் என்ற கருத்தின் (ப. 14) தொனிப்பு பொல்லாங்கின் அடிப்படையில் தோன்றிய தவறான கருத்துப் போலவே தோன்றுகிறது. மேலும், சு. நடேசபிள்ளையவர்களை அரசியல் வகுப்புவாதி (ப. 44) எனக் கொள்வதும் சரியா எனச் சிந்திக்க. ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் சில கருத்துக்கள் "பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்" எனும் கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

6. எடுத்துக்காட்டாக, உப அதிபரின் நிழற்படத்தைக் கலாசாலை மண்டபத்தில் இருந்து அகற்றியதால் இந்துபோட்டுக்கும் பண்டிதமணிக்கும் ஏற்பட்ட மனஸ்தாபம், சர்ச்சை.

7. இதனைச் செபரெத்தினம் தமது நூலில் "என்னுரை" என்பதில் கூறியுள்ளார். பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றையும் வண்டமிழ்த் தொண்டையும் யாராவது எழுதினால், அது மிகவும் பயன்படும். பண்டிதமணி தமது சுயசரிதத்தை எழுதியிருந்தால் எத்தனையோ விஷயங்களை அறியக்கூடியதாக இருக்கும். பண்டிதமணி சுயசரிதம் எழுதாததையிட்டு அவரது மூத்த மாணவர்களில் ஒருவரான சு. வே. அவர்கள் கவலைப்படுகிறார்: "கிலுகிலுப்பைகள் எல்லாம் தம்மைப் பற்றி "ஆகா, ஓகோ" என்று சுயசரிதம் எழுதும் காலம் இது. கலியின் கோலத்தால் எழுத வேண்டாதவர் எழுதுவர்; எழுதியேயாக வேண்டியவர் எழுதார்" (பண்டிதமணி நினைவு மலர் ப. 63).

8. பண்டிதமணி நாவலர் காவிய பாடசாலையில் கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கையையும், புலவர்மணி அங்கு கற்ற ஆண்டுகளின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு, அங்கு இருவரும் கற்றதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புமை காண்பது எந்த அளவிற்குப் பொருத்தமாகும் எனச் சிந்திக்க. கணபதிப்பிள்ளையவர்கள் 1917 தொடக்கம் 1927 வரை காவிய பாடசாலையில் இருந்தார் (ஆறுமுகநாவலர் ப. 137). மேலும், கிறிஸ்தவராக மதம் மாறிய புலவர்மணி, ஏன், எப்பொழுது மீண்டும் சைவரானார் என்பது பற்றிக் கட்டுரை எதுவும் கூறுவதாக இல்லை.

9. பண்டிதமணி நினைவு மலர், 1989. பக்கங்கள் 302. வெளியீடு : பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

10. முறையாக எழுதப்பெற்ற சில கட்டுரைகளுள் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் அவர்கள் எழுதிய நாவலர் பரம்பரை (ப. 97) என்னும் கட்டுரையும் ஒன்றாகும். அவர் குறிப்பிடும் நாவலர் பரம்பரையினரைக் கருதும்போது சேர். பொன். இராமநாதனையும் இந்துபோட் இராச-ரத்தினத்தையும் அப்பரம்பரையில் "இணைத்து நோக்க" (நினைவு-மலர் ப. 106) இடமில்லையா என்ற எண்ணம் தோன்றுகிறது.

11. F. X. C. நடராசா, இலக்கிய கலாநிதி பண்டித மணியின் இலக்கிய விமரிசன நோக்கு, ப. 13.

12. முன்பு (குறிப்பு 5) குறிப்பிட்ட "பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்" என்னும் கட்டுரையையும் காண்க.

13. "ஒழுகலாறு" என்னும் கருத்துப் படிவம் (concept) பற்றித் தாம் கொண்டிருந்த கருத்துக்களைப் பண்டிதமணி தமது கட்டுரைகளிலும், இலக்கியத் தொடர் விளக்கங்களிலும், தனி மனிதர் பற்றிய பாராட்டுரைகளிலும் ஆங்காங்கே வெளிப்படுத்தியுள்ளார். அவற்றை ஒன்றுதிரட்டிச் சிந்திக்கும் போது பண்டிதமணியின் உயர்ந்த உள்ளம் புலனாகும்.

14. வித்துவசிரோமணியிடம் படித்த ஆசிரியர் மூவரிடமும் பண்டிதமணி இளமையில் கற்றார். அவர்கள் ஒருவரிடமிருந்து வித்துவ-சிரோமணியின் இலக்கிய இரசனைக் கதைகளை அறிந்ததைத் தவிர, பெரும் பயன் எதுவும் அடைந்ததாகத் தெரியவில்லை. காண்க : சிந்தனைக்களஞ்சியம் ப. 225 - 227. மேலும், பண்டிதமணியிடம் ஏற்பட்ட வித்துவ சிரோமணி ஆதிக்கம் நேராக வந்ததன்று. ஆயின், குமாரசுவாமிப் புலவர் ஆதிக்கம் நேராகத் தோன்றியது.

15. கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் காவிய பாடசாலையில் சேரச் சென்ற போது குமாரசுவாமிப் புலவர் நேர்முகப் பரீட்சை வைத்தார். கணபதிப்பிள்ளையவர்களின் தமிழ் அறிவையிட்டுத் திருப்தி-யடையாத புலவர், "கிறிஸ்தவ பள்ளியில் படித்ததோ?" எனக் கேட்டாராம். விபரம் : சிந்தனைக் களஞ்சியம், ப. 227 - 228.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. காண்க : The Hon. Sir P. Ramanathan, Presidential Address, Conference of the Headmasters, Local Managers and Teachers of the Hindu Board Schools, The Hindu Board, pp iii - vi, 1930.

17. காண்க : Rajaratnam, S., Hindu Education in Jaffna, A paper Read Before the Hindu Students' Movement, Colombo, The Hindu Board, pp 14 - 27, 1930.

18. காண்க : The Hindu Board, p. 1, 1930.

19. காண்க : Swaminathan, S., The Hindu Education Movement and The Jaffna Saiva Training Institute, The Hindu Board, pp 28 - 32, 1930.

20. காண்க : Shivapadasundram, S., An Appeal, The Hindu Board, p. i, 1930.

21. இச்சொற்பொழிவு பின்னர் நூல் வடிவம் பெற்றது. மேலும், இச்சொற்பொழிவு அந்நாட்களில் The Ceylon Observer பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

22. கலாநிலையம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றில் பண்டிதமணி ஆற்றிய பணி பற்றி அறிந்து கொள்வதற்கு : குலரத்தினம், க. சி., பண்டிதமணி அவர்களும் கலாநிலையமும், நினைவு மலர், ப. 49. பஞ்சாட்சரசர்மா, ச. பண்டிதமணி அவர்களும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும்,நினைவுமலர் ப. 212. ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பேரன்பர்கள் இருபத்து மூவருள் ஒருவர் பண்டிதமணி என அவரது புகைப்படம் சங்க வெள்ளிவிழா மலரில் (1950) இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

23. காண்க : Sabaratnam, N., Leavis of Tamil Literature, இலக்கிய கலாநிதி பாராட்டு விழா மலர், ப. 7, 1978.

24. உப அதிபர் ஒதுங்கிக் கொண்டார். மற்றும் இருவரது சொற்பொழிவுத் திறனை உளஇயல் அறிஞர் கலாநிதி கு. சிவப்பிரகாரம் பின்வருமாறு வருணித்துள்ளார் : "The grand Miltonic sweep of Mr. Swaminathan's oratory and the winsome Tennysonian appeal of Pandit's discourses won the applause of hallful audiences" (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மணிவிழா மலர். ப. 23).

25. காண்க: கணபதிப்பிள்ளை, பண்டிதமணி, சி: செந்தமிழ்க் களஞ்சியம், ப. 93, 94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. சமுதாயத்தின் கலாசாரத்தை விளங்கினால்தான் இலக்கியத்தை இரசிக்க முடியும். சீனாவில் இருந்து தமிழ் கற்கவந்த மாணவர்களுக்கு நமது நாட்டார் பாடல்களைக் கற்பித்தபோது, அவர்களால் அவற்றை எள்ளளவும் இரசிக்க முடியவில்லை. காரணம், அவர்களுக்கு நமது கலாசார அறிவு இல்லாததே.

27. ஒரு காலகட்டத்தில் பண்டிதமணி சிலப்பதிகாரத்தை வெறுத்தார். யாழ்ப்பாணத்திலே (புங்குடுதீவில், 1954) சிலப்பதிகார விழா ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பண்டிதமணி "இதோ சிலப்பதிகார விழா என்றொரு கவிக்குரல் காற்றில் பரவுகின்றது; புத்தரே இங்கே கால் வைப்பாரா என்றேங்குகின்ற ஈழத்திலும் பரவுகின்றது. சீதாப்பிராட்டி பிறந்த ஈழம் இந்த ஈழம் (சிந்தனைக் களஞ்சியம், சிந்தனைகளின் சாரம்)" என அங்கலாய்த்து எழுதியுள்ளார்.

28. பண்டிதமணியின் மொழிநடை நெகிழ்ச்சி குமாரசுவாமிப் புலவர் வழிவருவதே எனத் திரு. சிவலிங்கராசாவும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் கொள்வர். காண்க : நினைவு மலர் ப. 170.

29. "We can be sure that no two speakers have the same language, because no two speakers have the same experience of language....... The particular model which he constructs will reflect his own personal experience, so people with different sociolinguistic backgrounds will be led to construct correspondingly different models relevant to language and society" Hudson, R. H., Sociolinguistics, pp 12 - 13, Cambridge, 1987.

30. இதுபற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கூறுவதைக் கருதுக: நினைவு மலர் ப. 170.

31. காண்க : சுசீந்திரராசா, சு., பண்டிதமணியின் மொழிநடை, நினைவு மலர் ப. 19 - 23.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

கணபதிப்பிள்ளை, சி. (1955), *இலக்கியவழி*, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

.................................... (1959), *பாரத நவமணிகள்*, செந்தமிழ் மன்ற வெளியீடு, சாவகச்சேரி.

.................................... (1959), *சைவ நற்சிந்தனைகள்*, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

.................................... (1959), *கந்தபுராண கலாசாரம்*, சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

.................................... (1960), *கந்தபுராண போதனை*, அகில இலங்கை சைவ இளைஞர் மத்திய மகா சபையினர், தெல்லிப்பழை.

.................................... (1961), *சமயக் கட்டுரைகள்*, பதிப்பாளர்: பழைய மாணவர்கள் - சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி.

.................................... (1963), *இருவர் யாத்திரிகர்*, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

.................................... (1964), *இலக்கிய வழி* (திருத்தப் பதிப்பு), திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை பழைய மாணவர் சங்க வெளியீடு.

.................................... (1965), *கம்பராமாயணக் காட்சி* என்னுங் கதை தழுவிய கவிநயக் கட்டுரை.

.................................... (1966), *மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரம்.*

.................................... (1967), *கந்தபுராணம் - தக்ஷ காண்டம் உரை*, இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வெளியீடு, பேராதனை.

.................................... (1968), *நாவலர்*, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் 120 ஆம் ஆண்டு ஞாபக வெளியீடு.

.................................... (1972), *சிந்தனைச் செல்வம்*, குரும்பசிட்டி திருமதி சபாரத்தினம் செல்லம்மா அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது.

.................................... (1978), *சிந்தனைக் களஞ்சியம்*, பண்டிதமணி பாராட்டு விழாச்சபை வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

....................................... (1979), *கோயில்*, கொழும்பு அண்டர்சன் மாடி நிரைச் சைவ கலாசார மன்ற வெளியீடு, கொழும்பு.

.................................... (1979), *ஆறுமுகநாவலர்*, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் தென்மராட்சி பாராட்டு விழாச் சபை.

.................................... (1980), *கம்பராமாயணக் காட்சிகள்*, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

.................................... (1983), *அன்பினைந்திணை*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

.................................... (1984), *அத்வைத சிந்தனை*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

....................................... (1987), *செந்தமிழ்க் களஞ்சியம்*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

........................................ ( ? ), *கதிர்காம வேலவன் பவனி வருகிறான்*, மட்டுவில், சாவகச்சேரி.

குலரத்தினம், க. சி. (1986), *பண்டிதமணியின் காலமும் வரலாறும்*, சஞ்சீவி.

சந்திரசேகரம், ப. (1987), *யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி*, லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிதம்பரப்பிள்ளை, நீர்வேலி இ. (1988), *மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க.*, சுன்னாகம்.

சுசீந்திரராசா, சு. (1985), *பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்*, சிந்தனை, தொகுதி 111, இதழ் 11 - 111. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

....................................... (1989), *பண்டிதமணியின் மொழிநடை*, பண்டிதமணி நினைவு மலர்.

....................................... (1992), 'பண்டிதமணியும் உப அதிபர் கைலாசபதியும்", *தினகரன், வாரமஞ்சரி*, 16.03.1992.

....................................... (1992), "நினைவில் நிற்கும் பண்டிதமணி", *தினகரன், வாரமஞ்சரி*, 23.08.1992.

.................................... *பண்டிதமணி காட்டும் நாவலர் பெருமான்* (கையெழுத்துப்படி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக, செந்திநாதன் (1954), *மூன்றாவது கண்*, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

செபரெத்தினம், க. (1962), *வாழையடி வாழை*, அரசு வெளியீடு, கொழும்பு.

சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கம் (1951), *ஸ்ரீமான் சி. சுவாமிநாதன் அவர்களின் சேவை நலம்* பாராட்டு மலர், யாழ்ப்பாணம்.

நீதிவாணன், ஜெ. (1979), *நடையியல்*, முல்லை வெளியீடு, மதுரை.

நுஃமான், எம். ஏ., (1988), "பத்தொன்பதாம் நூற்றாண்டின் நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுகநாவலரும்," *மொழியியல்*, தொகுதி 11, இதழ் 1 - 4. அண்ணாமலை நகர், தமிழ்நாடு.

பண்டிதமணி சி. க. அவர்களின் நூல் வெளியீட்டுச் சபை (1989) *பண்டிதமணி நினைவு மலர்*, யாழ்ப்பாணம்.

பண்டிதமணி பாராட்டு விழாச் சபை (1959), *பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மணிவிழா மலர்*, யாழ்ப்பாணம்.

............................ (1978), *இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பாராட்டு விழா மலர்*, யாழ்ப்பாணம்.

வேலுப்பிள்ளை, ஆ. (1989), *பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ப் பாரம்பரியம்*, பண்டிதமணி அவர்கள் பற்றிய நினைவுப் பேருரை, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

Hudson, R. A. (1980), *Sociolinguistics*, Cambridge University Press.

*The Hindu Board for the Promotion of Education* (1930), Jaffna, Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்[1]

**ப**ண்டிதமணியைச் சிறப்பாகப் பல்கலைக்கழக நிலையில் ஆராய்தல் வேண்டும் என்று பண்டிதமணியின் இறுதிச் சடங்கின்போதும் பின்னரும் பலர் பேசிக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் வரையறுத்துக் குறிப்பிடக்கூடிய ஒரு காலகட்டத்தில் தமது ஆசிரியப் பணியாலும், புலமை மிக்க எழுத்துக்களாலும், சொற்பொழிவுகளாலும் ஈழத்துத் தமிழ்ப் பாரம்பரியத்திலே குறிப்பாக யாழப்பாணத்துத் தமிழ்ப் பாரம்பரியத்திலே தமிழ்க் கல்வி, கலாசாரம், சைவசமயம் ஆகிய துறைகளில் சுட்டிக்காட்டக்கூடிய அளவு ஒரு பெருந் தாக்கத்தை ஏற்படுத்திச் சமுதாயத்தின் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தார் என்பதில் ஐயமில்லை. இம்மதிப்பை அறிந்து ஏற்றுக்கொண்ட இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதமணிக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம் அளித்தது. பண்டிதமணியின் பணியையும் எழுத்துக்களையும் முழுமையாக நோக்கும்போது அவர் உயர்நிலையில் ஆய்வுப் பொருளாகும் தகுதியுடையர் என்பதை யாரும் மறுத்தல் அரிதாம்.

பல்கலைக்கழக நிலையில் நடைபெறும் பண்டிதமணி ஆய்வு விருப்புவெறுப்பற்றதாய் அறிவியல் அடிப்படையில் இயன்றளவு உலகளாவிய அறிஞர் கூட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக மலர்தல் விரும்பத்தக்கது. அதற்கெனத் தக்கதோர் ஆய்வுநெறியைக் கடைப்பிடித்தலும் இன்றியமையாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பண்டிதமணி இல்லை. ஆயின், அவர் எழுத்துக்கள் உண்டு. அவைதாம் பண்டிதமணி ஆய்வில் இன்று முதன்மை பெற்று அடிப்படையாக அமைபவை. அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் சிலவும் எழுத்திலே அமைந்துள்ளன. இவ்வெழுத்துக்கள் அனைத்தையும் எழுத்தில் உள்ளவாறே விளங்கிக் கொள்ளுதல் கூடும். ஆயின் அவ்வாறு விளங்கிக் கொள்ள முயலுமிடத்துத் தோன்றும் இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு பண்டிதமணியின் காலம், வாழ்க்கை வரலாறு, நோக்கு போன்றவை பற்றிய செய்தியும் துணை செய்யக்கூடும். பெரும்பாலும் இவை ஒருவரது எழுத்துக்களில் வெவ்வேறு தோற்றங்களில் பிரதிபலித்து நிற்பவையே. எழுத்துத் தோன்றிய சந்தர்ப்பம், சூழ்நிலை, சாதனம் போன்றவையும் எழுத்துக்களின் சில இடத்து நுட்பப் பொருளை ஓரளவு தெளிவாக்கவல்லன. இன்றுவரை பண்டிதமணி பற்றிப் பிறர் எழுதியவையும் ஆய்விற்குப் பயன்படக்கூடும்.

நாம் இவை அனைத்தையும் பற்றுக்கோடாகக் கொண்டு பண்டிதமணியை முழுமையாக, செம்மையாக ஆராய முற்படுமிடத்துச் சில சிக்கல்கள் தோன்றுகின்றன. இச்சிக்கல்களையும் இச்சிக்கல்கள் காரணமாக நமது ஆய்வு முழுமை பெறாது, செம்மைப்படாது ஓரளவு தடைப்படும் நிலையெய்துவதையும் இயன்றளவு சுட்டிக்காட்டுவது விரும்பத்தக்கது. இது ஒரு புறம். தமிழ்மொழிப்பற்று, வடமொழிப்பற்று, சைவமதப் பற்று, நாவலர் பற்று, யாழ்ப்பாணப் பற்று என்பனவற்றால் பண்டிதமணி பெரிதும் கட்டுண்டவர். எக்காரணம் கொண்டும் இவற்றிற்குத் தமது நோக்கில் யாதும் குறை நேர்வதைப் பொறுக்கமாட்டாதவர் பண்டிதமணி. பண்டிதமணியின் இந்நிலைப்பாட்டினால் சில சிக்கல்கள் எழுகின்றன. மேலும், பண்டிதமணி காலத்தாலும் இடத்தாலும் கட்டுண்டவர். பழமையில் வளர்ந்து வந்தவர். பின்னர் புதுமை தோன்றிக் கொண்டிருந்த காலத்தைக் கருத்திற்கொண்டு பழமையையும், புதுமையையும் ஒருங்கே போற்றலானார். இதனாலும் சிக்கல்கள் தோன்றியுள்ளன. சில இடத்து பிறர் ஆய்வு எவ்வாறாயினும், கருத்து வளர்ச்சி எவ்வாறாயினும் பண்டிதமணி தமது பற்றுறுதி வாய்ந்த கருத்துக்கள் சிலவற்றை விடாப்பிடியாகக் கூறியுள்ளார். இவற்றை இன்றும் ஏற்றுக்கொள்வது உண்மையிலே சிக்கலாகின்றது. பண்டிதமணியின் சிந்தனை வளர்ச்சியில் உபஅதிபர் பொ. கைலாசபதியவர்களின் பங்களிப்பைப் புரிந்துகொள்வதும் சிக்கலாக உள்ளது. மேலும் பண்டிதமணி மேற்கொண்ட நடைக்கூறுகள் சில அவரது சொந்தத் தனிக்கூறுகளாக அமைந்துள்ளன. அவற்றை விளங்கிக் கொள்வதும் சிக்கலாக உள்ளது. இவை மட்டுமன்றி, இதுவரை பண்டிதமணி பற்றி வெளிவந்தவற்றுள் சில கருத்துக்கள் பண்டிதமணியைப் பற்றற்ற நிலையில் உண்மையாகவும் செம்மையாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வதற்கு ஒருவகைத் தடையாக அமைந்துள்ளன. இதனாலும் சிக்கல் எழுகின்றது. சமுதாயத்திலே பண்டிதமணி பற்றித் தோன்றிய பொது நோக்கு என ஒன்று இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது. இது பலரிடம் வேரூன்றிச் செல்வாக்குடன் காணப்படுகின்றது. இன்று ஆய்வாளர் பண்டிதமணி பற்றிய ஆய்வு நோக்கு என ஒன்றை வளர்க்க முன்வந்துள்ளனர். இதனைப் பலரிடம் எதிர்பார்க்க முடியாது. நமது சமுதாயப் பின்னணியிலே இவ்விரு நோக்குகளும் முரண்படும்போது சிக்கல்கள் எழும். இத்தகைய சிக்கல்கள் அனைத்தையும் ஓரளவு சுட்டிக்காட்டி விளக்கி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

## II

பண்டிதமணி நூற்றுக்கணக்கான தனித்தனிக் கட்டுரைகளை ஏறத்தாழ ஐம்பது ஆண்டு காலத்தில் அவ்வப்போது எழுதி ஆங்காங்கு பல பத்திரிகை, சஞ்சிகை போன்ற வெளியீட்டுச் சாதனங்களில் வெளியிட்டுள்ளார். வெளிவந்த கட்டுரைகள் குறிப்புக்கள் சிலவோ பலவோ பின்னர் பொருளுக்கு ஏற்ப தொகுக்கப் பெற்று சில பக்கங்களையோ பல பக்கங்களையோ கொண்ட நூல் வடிவில் வெளிவந்துள்ளன. இந் நூல்கள்,

1. கோயில் (1979) (ப. 42)
2. கதிர்காம வேலவன் பவனி வருகிறான் (ப. 19)
3. பாரத நவமணிகள் (1959) (ப. 94)
4. சைவநற்சிந்தனைகள் (1959) (ப. 28)
5. கந்தபுராண கலாசாரம் (1959) (ப. 83)
6. கந்தபுராண போதனை (1960) (ப. 99)
7. இருவர் யாத்திரிகர் (1963)
8. சமயக் கட்டுரைகள் (1961) (ப. 200 + 34)
9. சிந்தனைக் களஞ்சியம் (1978) (ப. 251)
10. ஆறுமுகநாவலர் (1979) (ப. 174)
11. நாவலர் (1968) (ப. 60)
12. இலக்கிய வழி (1955) (ப. 115) (1964) (ப. 154 + XXXIX)
13. கம்பராமாயணக் காட்சிகள் (1980) (ப. 199)
14. அன்பினைந்திணை (1983) (ப. 39 + VII)
15. அத்வைத சிந்தனை (1984) (ப. 105 + VI + III)

எனப் பெயர் சூட்டப்பெற்றுள்ளன. கந்தபுராணம் தக்ஷகாண்ட உரை நூலும் தனியாக வெளிவந்துள்ளது. வெளிவர இருப்பவை எனப் பின்வரும் நூற்பெயர்கள் அத்வைத சிந்தனை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.[2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பாரதக் கதைகள்
2. தனிக் கட்டுரைத் தொகுதி
3. விசேட கட்டுரைத் தொகுதி
4. சொற்பொழிவுக் குறிப்புகள்
   i. இலக்கியம் ii. புலமை iii. தமிழ் iv. திருமுறை
5. இலக்கணக் குறிப்பும் படவிளக்கமும்
6. இரண்டு கதைகள்
7. கீதையும் துறவும்
8. காரைக்காலம்மையார்
9. தெய்வயானை திருமணம்
10. அணிந்துரை மஞ்சரி
11. தனிப்பாடல்கள்
12. திருவருட்பயன் உரை

வெளிவந்தவற்றின் திருத்தப் பதிப்புகளும் வெளிவரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்றின் - இலக்கிய வழியின் - திருத்தப் பதிப்பு வெளிவந்துள்ளது. ஏனைய நூல்களுக்குப் பண்டிதமணி செய்த திருத்தங்கள் கையெழுத்துப் பிரதியாக உண்டு போலும்.

## III

மேலே கூறிய இரு வகைகளிலும் பண்டிதமணியின் எழுத்துக்கள் அனைத்தும் அடங்குகின்றனவா என்ற அங்கலாய்ப்பு ஆய்வாளர்க்குத் தோன்றுவது இயல்பே. அடங்குகின்றன என்ற எண்ணத்தை அவ்விரு-வகைகளும் தருவது தவறாகும். வெளிவர இருக்கும் அணிந்துரை மஞ்சரி போன்று பண்டிதமணி எழுதிய முன்னுரை, வாழ்த்துரை, ஆசியுரை, பாராட்டுரை, இரங்கலுரை, போன்றவையும் முழுமை கருதி நூல் வடிவில் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டியவையே.[3] இவற்றில் இருந்தும் அரிய செய்திகளைத் திரட்ட முடியும். பண்டிதமணியின் உள்ளப் பண்பு, மக்கள் தொடர்பு, சான்றோர் பற்றிய மதிப்பீடு, ஒட்டுமொத்தமான நோக்கு, ஆளுமை என்பனபற்றிக் கூறுமிடத்து அந்த முன்னுரை, வாழ்த்துரை முதலியனவும் ஆய்வுக்குப் பயன்படக்கூடும் எனக் கொள்தல் நன்றாகும். வெளிவர இருப்பவற்றை விரைவில் நூல்வடிவில் வெளியிடாவிடின் முழுமை விரும்பும் ஆய்வாளர்க்குப் பெருஞ் சிக்கலாகும். கட்டுரைகளை ஆய்வாளர்கள் தாமாகவே தேடிக்கொள்வது எளிதில் கைகூடக்கூடிய காரியமன்று. நல்ல நூலகங்கள் இல்லாத நமது நாட்டில் - அறிஞர் எழுத்துக்களைப் பேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் பழக்கம் வேரூன்றாத நமது நாட்டில் - அவற்றைத் தேடிக் கண்டுகொள்வது பகீரதப் பிரயத்தனமாகும். பண்டிதமணியின் எழுத்துக்கள் அனைத்தும் வெளிவரும்வரை அவர் பற்றிய முழுமையான, செம்மையான ஆய்வைச் செய்தல் இயலாத காரியமாகிவிடும். எனவே, ஆய்வாளர்க்குத் துணைசெய்யும் வகையில் அவற்றை பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் நூல்வடிவில் வெளியிடுதல் விரும்பத்தக்கது.

பண்டிதமணி ஆய்வைத் தொடங்கலாம், தொடங்க - வெளிவர இருப்பவையும் வந்துவிடுமே - அப்பொழுது ஆய்வை முழுமையாக முடித்து விடலாமே என யாரும் ஆலோசனை கூறினால் அது அவ்வாறு முடிகின்ற காரியமன்று. பண்டிதமணியின் நூல்களை வெளியிட்ட - வெளியிடும் ஒழுங்கு ஆய்வாளரின் ஆய்வுக்குத் துணை நிற்கக்கூடிய வகையில் நெறிமுறை யாதும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. கட்டுரைகளை நூல்களாகப் பகுத்த முறையும் தொகுத்த முறையும் ஆய்வாளர்க்கு தொல்லை தருகின்றன. கட்டுரைகளை "உரை நிகழ்த்தியனவும் எழுதியனவும் ஆய்ந்தனவுமான விஷயங்கள்" (பாரத நவமணிகள், பின்னட்டை, பிற்புறம்) என வெளியீட்டாளர் பகுத்துப் பேசும்போது "எழுதியனவும் ஆய்ந்தனவும்" என்பது தெளிவற்றதாகத் தோன்றுகிறது. வெவ்வேறு வெளியீட்டாளர் பொருளடிப்படையில் கட்டுரைகளை நூல்களாகத் தொகுக்க முயன்றிருக்கிறார்கள். ஆயின் அவர்கள் முழுமையான வெற்றி காணவில்லை. ஒரு நூலில் வந்த கட்டுரையும், கட்டுரைக் கருத்துக்களும் மற்றொரு நூலிலும் வருவதைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக சமயக் கட்டுரைகள் என்னும் நூலில் வெளிவந்த "பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள்" என்னுங் கட்டுரை பந்திகளின் அமைப்பிலும் உடுக்குறி அமைப்பிலும் மட்டும் சிறு மாற்றங்கள் பெற்று சிந்தனைக் களஞ்சியத்திலும் வந்துள்ளது. இவ்வாறு வந்தமைக்குக் காரணந் தெரியவில்லை. ஆறுமுகநாவலர் என்னும் நூலில் உள்ள "நாவலர் நீதி நல்ல செய்தி" என்னுங் கட்டுரைக் கருத்துக்கள் சிந்தனைக் களஞ்சியம் என்னும் நூலில் உள்ள "நாவலர் நீதிமான்" என்னுங் கட்டுரையிலும் வரக் காண்கிறோம். மேலும் வெளியீட்டுச் சபையினர் முயற்சியில் 'சிந்தனைக் களஞ்சியம்' என்ற தொகுப்பு பெரும் குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. சிந்தனைக் களஞ்சியத்திலே இலக்கிய வழி உண்டு; கந்தபுராண கலாசாரம் உண்டு; ஆறுமுகநாவலர் உண்டு; மற்றும் பலவுமுண்டு. சிந்தனைக் களஞ்சியத்தில் வந்துள்ள கட்டுரைகள் காலத்தால் பிந்தியவையாதலால் முன் எழுந்த நூல்களில் இடம்பெறவில்லை எனக் கருத முடியவில்லை. காரணம் 1939ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மடலில் வெளிவந்த "வான்மீகி தானோ!" என்னுங் கட்டுரையும் சிந்தனைக் களஞ்சியத்தில் இடம்-பெற்றுள்ளது. வெளியீட்டுச் சபையினர் ஏதோ தமது வசதிக்கேற்ப சில கட்டுரைத் தொகுப்பை முந்தியும் ஏனையவற்றைப் பிந்தியும் வெளியிட்டு - வெளியிட - இருக்கிறார்கள் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியின் கட்டுரைகள் அனைத்தையும் ஆய்வுக் கட்டுரைகள் எனவோ ஒரே தரமுடையன எனவோ கொள்ள இயலாது. அவரது கட்டுரைகளை நூல்களாக வெளியிடுவதற்கு வகை செய்த முறையை விடுத்து ஆய்வின் பொருட்டு மீண்டும் வகை செய்தல் வேண்டும். ஆய்வாளர் தமது அறிவு, அநுபவம், ஆய்வுநெறி ஆகியவற்றிற்கேற்பவே ஆய்வை வகுத்து அமைத்துக்கொள்வார்கள். நாம் பண்டிதமணியின் வளர்ச்சியைப் பல கோணங்களில் நின்று காண முற்படலாம். வரலாற்றுக் கண்கொண்டு நோக்க விரும்பலாம். அதனை விளக்கமுறை நின்று ஆராய விரும்பலாம். பண்டிதமணியின் கருத்துக்களைப் பிறர் எழுத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய எண்ணலாம். எடுத்துக்காட்டாக, இலக்கியங்களுக்கு அல்லது தேர்ந்தெடுத்த பாடல்களுக்கு விளக்கம், இரசனை எழுதிய பாங்கினை மு. வரதராசன், டி.கே.சி. போன்றோர்எழுத்துக்களோடு ஒப்பிட்டு ஆராயலாம்.[4] பண்டிதமணியின் படைப்புக்கள் அனைத்தையும் (குறிப்பாகக் கட்டுரைகளை) ஒவ்வொன்றாகவும் பின்னர் கூட்டாகவும் பகுப்பு முறையில் ஆராய முற்படலாம். பொருளை வகைப்படுத்தும்போது எழுத்துக்கள் பிரதிபலிக்கும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர், இலக்கிய இரசிகர், இலக்கிய ஒப்பியல் ஆய்வாளர், இலக்கியக் கோட்பாட்டாளர், இலக்கிய உரையாசிரியர், இலக்கண அறிஞர், சமய சிந்தனையாளர், பண்டிதமணி போற்றும் சமுதாயமும் கலாசாரமும், பண்டிதமணி காட்டும் நாவலர், பண்டிதமணியின் பழமையும் புதுமையும், பண்டிதமணியின் மொழிநடை, பண்டிதமணியின் நகைச்சுவை, பண்டிதமணியின் கண்டனம் எனப் பல நிலையில் பலவாறாகச் சிந்தித்தல் தவிர்க்க முடியாததாகின்றது. இதற்கேற்ப கட்டுரைகளை வகுத்தல் வேண்டும். இவ்வாறு, ஆராயுமிடத்து அவ்வந் நிலைக்குரிய பண்டிதமணியின் எழுத்துக்கள் அனைத்தும் வேண்டியவையன்றோ? ஆறுமுகநாவலர், நாவலர் என்ற பெயர்களைக் கொண்ட இரு நூல்கள் வெளிவந்துள்ளன. வெளிவந்த ஏனைய நூல்களிலும் நாவலர் பற்றிய கட்டுரைகள் உண்டு. எடுத்துக்காட்டாக சிந்தனைக் களஞ்சியத்திலும் நாவலர் பற்றிய கட்டுரையைக் காண்க. இந்தப் போக்கிலே வெளிவர இருப்பவற்றிலும் நாவலர் பற்றிய கட்டுரைகள் இடம்பெறா என்று எங்ஙனங் கூறுவது? வெளிவந்தவற்றையும் வெளிவர இருப்பவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏதேனும் ஒரு நிலையில் தானும் முழுமையாக ஆராயக்கூடிய நிலை இல்லை என்றே சொல்லவேண்டியுள்ளது.

## IV

இதுகாறும் வெளிவந்த நூல்களில் பெரும்பாலும் அனைத்து நூல்களுமே கட்டுரைத் தொகுதிகளாக உள்ளன. கட்டுரைகள் ஒவ்வொன்றும் எப்பொழுது எங்கு வெளிவந்தன, அவற்றுள் ஆரம்பத்திலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளாக எழுந்தவை எவை, சொற்பொழிவுகளாக எழுந்தவை எவை போன்ற செய்திகள் ஆய்வுக்கு இன்றியமையாதன. சில செய்திகள் மட்டுமே நமக்குக் கிடைத்துள.

கட்டுரைகள் எழுந்த காலம் பற்றிய செய்தி எந்த நூலிலும் தரப்படவில்லை. விதிவிலக்காகப்போலும் கம்பராமாயணக் காட்சிகள் என்னும் நூலில் ஒரே ஒரு கட்டுரையின் காலமும் இடமும் தரப்பட்டுள்ளன. "வான்மீகி தானோ!" என்னுங் கட்டுரையின் இறுதியில் "ஈழகேசரி ஆண்டு மடல் 1939" எனத் தரப்பட்டுள்ளதைக் காண்க. கட்டுரைகள் தாம் எழுந்த காலவரிசைப் படியே நூற்களில் அமைந்துள்ளனவா அன்றி வேறுயாதும் அடிப்படையில் அமைந்துள்ளனவா என ஒன்றுமே தெரியவில்லை.

பண்டிதமணியின் வளர்ச்சி என்று பேசும்போதே வரலாற்று நோக்கு வந்துவிடுகிறது. வரலாற்றிற்குக் காலம் முக்கியமானது. அவர் கருத்தையும் கருத்து வளர்ச்சியையும் ஆளுமை வளர்ச்சியையும் காண்பதற்கும், நூல்களில் - கட்டுரைகளில் - ஆங்காங்கே வரும் உறவுள்ள கருத்துக்களை ஒப்புநோக்கியும் முரண்படுத்தியும் ஆராய்வதற்கும் கட்டுரைகள் எழுந்த காலம் கருத்திற்கொள்ள வேண்டியதொன்று. இல்லை என்றால் சிக்கல் எழலாம். இலக்கிய வழியில் கவிஞர்கள் என்னுங் கட்டுரைக் கருத்தை குறிப்பாக முதற் பந்தியிலுள்ள கருத்தை ஆராய்வதற்குக் கட்டுரை எழுந்த காலம் அவசியம் அல்லவா எனச் சிந்திக்க. மேலும், "அவர் (கதிரவேற்பிள்ளை) செய்த அகராதிதான் மதுரைத் தமிழ்ச் சங்கம் அச்சிட்ட தமிழ் அகராதி. சொற்களின் சுவரூபத்தையும் அவற்றின் சுத்தமான பொருள்களையும், எடுத்துக்காட்டுவதில் ஒப்புயர்வில்லாதது இந்த அகராதி. இது போன்ற சுத்தமான ஓர் அகராதி இன்னும் வரவில்லை என்றே சொல்லலாம். இனிவரும் அகராதிகளுக்கு அடிப்படையாயும் முன்மாதிரியாயும் இருக்கின்றது இந்த அகராதி" (கந்தபுராண கலாசாரம், ப. 47) என்றும், "கடைச்சங்கம் ஒடுங்கிய கால நிர்ணயம் பற்றிக் கனகசபைப்பிள்ளை செய்த முடிபுதான் இன்றைக்கும் பிரமாணமாயிருக்கின்றது" (கந்தபுராண கலாசாரம் ப. 48) என்றும் பண்டிதமணி கூறியதை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வதற்கோ விடுதற்கோ கூற்று எழுந்த காலத்தை அறிதல் வேண்டும்.[5]

கட்டுரைப் பொருள் முதலியவற்றில் இருந்து சில கட்டுரைகள் எழுந்த காலத்தை ஊகிக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக ஆறுமுக நாவலர் என்னும் நூலில் "ஆறுமுகநாவலர் அவர்கள்" என்னும் கட்டுரை 1968ஆம் ஆண்டு எழுதப்பட்டது என ஊகிக்க முடிகிறது. இதேபோன்று "சிந்தனைக் களஞ்சியத்தில்" "இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்" என்னுங் கட்டுரை மகாத்மா காந்தியின் கொலைக்குப் பின் எழுதப்பட்டது எனக் கூறலாம். அதில் பண்டிதமணி "புருட்டஸ் அந்தப் போதனையை அப்படியே நம்புகிறான்; ஒரு "கோட்சே"யாக மாறுகிறான் (ப. 69) என எழுதியுள்ளார்.[6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள் வெவ்வேறு சந்தர்ப்பத்தில், சூழ்நிலையில் ஏதோ குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக எழுதப்பெற்று வெளியிடப்பட்டவை. பண்டிதமணியே "பல்வேறு சந்தர்ப்பங்களில் சூழ்நிலைமை நோக்கி காலந்தோறும்....... வெளிவந்த கட்டுரைகள்" என ஓரிடத்து (ஆறுமுக நாவலர் முன்னுரை) எழுதியுள்ளார். கட்டுரைகள் பத்திரிகை, சஞ்சிகை ஆகியவற்றிற்கேற்ப அமைப்புப் பெறுதலும் உண்டு. இதேபோன்று யார் யார் வாசிப்பார்கள், வாசிக்கலாம் என மனத்திற் கொண்டு கட்டுரைகள் எழுதப்படுகின்றனவோ அதற்கேற்ப அவை அமைப்புப் பெறுதலும் உண்டு. இச்செய்திகள் மிகவும் பயனுள்ளவை. இச்செய்திகளின் பயன்பாட்டினைப் பண்டிதமணி உணர்ந்திருந்தமையால் போலும் சில நூல்களில் இத்தகைய செய்திகள் சிலவற்றை ஆங்காங்கு தமது முன்னுரை போன்றவற்றில் தந்துள்ளார். அவர் தமது சைவநற்சிந்தனைகள் என்னும் நூலில் உள்ள முகவுரையில் கட்டுரைகள் பற்றிக் குறிப்பிடும்போது அவை "கால இடக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை" என ஒப்புக்கொள்கின்றார். மேலும், "வானவெளியிலும் பத்திரிகைப் பரவையிலும் வெளிவருபவை புத்தக வடிவு எடுக்கும்போது, விஷய அமைப்பிலும் பாஷை நடையிலும் மாற்றம் அடைய வேண்டும் என்பது எனது நிலையாய கருத்து.................. இக்கட்டுரைகள் பிறந்த தேகம் இருந்தபடி எவ்வித மாற்றமுமின்றி.......... வெளியிடப்பட்டிருக்கின்றன" எனவும் தமது கருத்தைக் கூறியுள்ளார். பாரத நவமணிகள் என்னும் நூலின் முகவுரையில் பண்டிதமணி "இந்தத் தொகுதியில் வருகின்ற கட்டுரைகளில் முதல் ஐந்தும் வானொலியில் தொடர்ந்து வந்தவை; மற்றவை பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதியவை" என்று கூறியுள்ளார். இலக்கியவழி முதற் பதிப்பில் "புறஇதழ்" எனவரும் முன்னுரையில் "ஈழகேசரி, தினகரன், இலங்கை வானொலி நிலையம் ஆதியன இப்புத்தகத்தின் விளை நிலங்கள், வினை முதல்கள்" எனக் கூறியுள்ளார். ஆயின் இந்நூற் கட்டுரைகளுள் எது, எதனில், எப்பொழுது வெளிவந்தது என்ற விபரமோ எது கட்டுரையாக, எது சொற்பொழிவாகப் பிறந்தது என்ற விபரமோ இல்லை. கட்டுரைகள் மாணவர்களுக்கென எழுதப்பட்டவை என்பதைப் "புறஇதழ்" கூறுகிறது. இலக்கியவழி திருத்தப் பதிப்பில் "ஈழகேசரி, தினகரன், இலங்கை வானொலி..........." என்ற செய்தி நீக்கப்பட்டுவிட்டது. திருத்தப் பதிப்பைப் பயன்படுத்துவோர்க்கு இடம், காலம் போன்ற செய்தி எதுவும் கிடைக்காது. பொதுவாக நோக்குமிடத்து இத்தகைய செய்திகள் அனைத்து நூற்களிலும் நமக்கு முழுமையாகக் கிடைப்பதாக இல்லை.

சிந்தனைக் களஞ்சியம் என்னும் நூலில் வரும் 'வடுவடு நுண்ணயிர்' என்னுங் கட்டுரை எப்பொழுது எதற்காக எழுதப்பட்டது என்னும் செய்தியறியாது அதனைப் படிக்கும்போது சில மயக்கம் எழலாம். இக்கட்டுரை "வடுவடு நுண்ணயிர்" என்னும் பதிற்றுப்பத்துத் தொடருக்கு விளக்கமாக, நயம் கூறுவதாக அமைகிறதா? அவ்வாறாயின் கொண்ட பொருளுக்குத் தொடர்பற்ற கருத்துக்களை ஏன் கட்டுரையின் பிற்பகுதியில் (சிந்தனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களஞ்சியம் ப. 49 - 57) கூறினார்? காரைநகர் அருளம்பலவனார் செய்திகள் (ப. 56) எதற்கு? இவை ஒன்றுமே அறியாது கட்டுரையைப் படிக்கும்போது கட்டுரை அமைப்புப் புரிவதாக இல்லை.

சில கட்டுரைகளின் தலைப்பு காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக "இலக்கிய வழியில்" "கவி கவியாகிறான்" என்னுங் கட்டுரைத் தலைப்பு பின்னர் "கவிஞன் என்றுங் கவிஞனே" என மாற்'றப்பட்டுள்ளது. "கம்பரில் பாலர் பாடசாலை" என்னுங் கட்டுரை "கம்பரிற் பாலர் கல்வி" என மாற்றப்பட்டுள்ளது. ஒரே ஒரு கட்டுரைத் தலைப்பு மாற்றம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. "ஆறுமுகநாவலர்" என்னும் நூலில் "நாவலர் எழுந்தார்" என்னுங் கட்டுரை இறுதியில் (ப. 50) "மற்றுமொரு குறிப்பு" என்பதன்கீழ் "இக்கட்டுரைக்கு நான் இட்ட தலையங்கம் "காசம் பறந்தது" அதனை மாற்றி "நாவலர் எழுந்தார்" என்றிட்டனர் ஆசிரியர் கல்கி" எனப் பண்டிதமணி எழுதியுள்ளார். இவ்வாறு கூறியதால் இச்செய்தி முக்கியமானது, பயனுள்ளது என்ற உணர்வு பண்டிதமணிக்குப் பிற்காலத்தில் வந்தது என்பது தெளிவாகிறது.[7] "கம்பரில் பாலர்" "கம்பரிற் பாலர்" எனப் புணர்ச்சி இருவகையாக வந்தமையையும் கருத்திற் கொள்க. மாற்றம் சிறிதேயாயினும் பொருள்தர வல்லது இதன் அடிப்படையில் சில நுட்பமான கருத்துக்களை, முடிபுகளைக் கூறமுற்படலாம். இம்மாற்றம் பண்டிதமணியின் புணர்ச்சி முறை பற்றிய நோக்கைக் காட்டி நிற்கிறது.[8] பொதுவாக இத்தகைய மாற்றங்கள் செய்தமைக்குரிய காரணங்கள், முன்னுரை, முகவுரை, வெளியீட்டுரை போன்றவற்றில் கூறப்படவில்லை. முழுமையாக, நுட்பமாக ஆராய்வோர்க்கு வேண்டிய செய்திகள் இல்லையென்றால் சிக்கலாகும். மேலும், இலக்கியவழி முதற் பதிப்பில் உள்ள கட்டுரைகள் "சிலவற்றிற்கு தலைகள் அமைத்தும், சிலவற்றின் வால்களைக் கால்களை அளவுக்கு வெட்டியும், வேண்டிய வைத்தியஞ் செய்து அரும்பத விளக்கத்தோடு இதனைத் தொகுத்து வெளிப்படுத்தியதில் எனக்கு ஒரு சிறிதும் பங்கு இல்லை" எனப் "புற இதழில்" பண்டிதமணி கூறியுள்ளார். கட்டுரைகளின் மூல வடிவம் எங்கெங்கு எவ்வாறு மாற்றப்பட்டது என்பது பற்றி விபரமான செய்தி ஆய்வாளர்க்குப் பயன்படும். ஆயின், விபரம் ஒன்றுமே தெரியவில்லை. பண்டிதமணியின் மேற்காட்டிய குறிப்பு இலக்கியவழி திருத்தப் பதிப்பிலே இல்லை.

மேல்நாட்டு ஆய்வுநுட்பத்தை நாமும் போற்றிப் பேணவிரும்பின் அனைத்துநூற் கட்டுரைகள் பற்றியும் இத்தகைய செய்திகள் கூறப்படுதல் வேண்டும். கட்டுரைகளைத் தொகுத்து நூல்களை வெளியிட்டவர்கள் நூல்களை வெளியிடும் போது ஆய்வு, ஆய்வாளர் இடர்ப்பாடு என எண்ணவில்லைப் போலும். அவர்கள் வருங்காலத்தில் இவற்றை மனங்கொளல் வேண்டும். குறிப்பாகப் பண்டிதமணி இன்று இல்லாதவிடத்து அவரது கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுகின்றவர்களுக்கு பதிப்பாசிரியர்களுக்கு ஒரு பெரும் பொறுப்பு உண்டு. அறிவு அகில உலகிற்கும் பொது என வரும்போது ஏனைய நாடுகளில் வெளிவரும் தரமான பதிப்புகளோடு சரி சமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நின்று பிடிக்கக்கூடியவகையில் நமது நாட்டுப் பதிப்புக்களும் வெளி-வருதல் பெரிதும் விரும்பத்தக்கது. இவையே ஆய்வாளர்க்கு ஆதாரமாக நிற்பவை என்பதை மறத்தல் ஆகாது. செய்வன திருந்தச் செய்தல் வேண்டும். மேலும், பண்டிதமணியின் எழுத்துக்கள் அனைத்தையும், ஒலிப்பதிவிலே உள்ள சொற்பொழிவுகள் அனைத்தையும், இன்னும் அவரைப்பற்றி ஆதாரத்தோடு கூடிய செய்திகள் அனைத்தையும் நல்ல நூலகம் ஒன்றிலே பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்தலும் பயனுடைத்தாம். நூற்றாண்டுகளாக வந்த மரபுவழிக் கல்விமுறை - சிந்தனைமுறை - நமது நாட்டிலே பண்டித-மணியோடு ஒருவகையில் நின்றுவிடுகிறது என்பதனை நாம் நினைவில் கொள்ளும் போது மேற்கூறிய ஆலோசனையின் பயன் தெளிவாகும்.

## V

பண்டிதமணியின் எழுத்துக்களை ஆராயும்போது இன்றைய உயர் கல்வி முறையால் எழும் சிக்கல் ஒன்று உண்டு. பண்டிதமணி பலதுறைகளில் ஆழமான அறிவுடையராகத் திகழ்ந்தார். ஆதலால் இலக்கியம், இலக்கணம், சமயம் போன்ற பல துறைகள் பற்றி எழுதியுள்ளார். இன்று பல்கலைக்-கழகங்களில் பயின்று ஆய்வாளர்களாக விளங்குகின்றவர்களுள் பல துறைகளில் பயிற்சி உடையோர் மிகமிகக் குறைவு. இல்லை என்றே துணிந்து சொல்லிவிடலாம். குறிப்பிட்ட ஏதோ ஒரு துறையில் ஏதோ ஒரு சிறுபகுதியில் ஆழமான பயிற்சி பெறுதலே இன்றைய போக்கு. இந்தப் போக்கு சிறிய சிறிய பகுதிகளில் நிபுணர்களை ஆக்குவது ஆகும். இந்தப் போக்கினை மருத்துவம் முதலிய அறிவியற் துறைகளிலும் காணலாம். இப்போக்கிலே சில இடத்து ஆய்வு கூட்டுமுயற்சியாக அமைதல் இன்றியமையாததாகிறது. பண்டிதமணியை ஒருவரே பிறர் துணையின்றி முழுமையாக, நுட்பமாக ஆராய முடியுமா? தடை இல்லை. ஆயின், ஆய்பவருக்குச் சங்க இலக்கிய அறிவு, சங்கம் மருவிய காலத்து இலக்கிய அறிவு, பக்தி இலக்கிய அறிவு, காப்பியங்களில் பயிற்சி, கம்பராமாயணம், பெரிய புராணம் ஆகியவற்றிலும், தனிப்பாடல்களிலும், பிற்காலத்துத் தாயுமானவர் போன்றோர் படைப்புக்-களிலும், நாவலர், நாவலர் காலம் பற்றியும், இலக்கணம் பற்றியும், சைவசித்தாந்தம் வேதாந்தம் பற்றியும் நல்ல அறிவு வேண்டும். திறமையான ஆய்வு செய்வதற்குத் தற்காலத்து இலக்கியத் திறனாய்வு முறை, மொழி-யியல் நோக்கு என்பனபற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். இத்தகுதிகளை ஒருவரிடத்துக் காணமுடியுமா என்றால் அப்படி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. என்றுமே இருக்க முடியாது என்பது கருத்தன்று. இது இன்றைய குறை, தனித்தனி ஆய்வாளர் எதிர்நோக்கும் சிக்கல். எனவே முழுமையான ஆய்வுக்கு ஆய்வாளர்களின் கூட்டு முயற்சி அல்லது துணை வேண்டற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VI

பண்டிதமணிக்கு நூல் எழுதுவதில் தயக்கம் இயல்பாக இருந்தது ("சைவ நற்சிந்தனைகள்" முகவுரை). எனினும் மிகப்பல கட்டுரைகள் இன்று நூல்களாகியுள்ளன. இந்த நூல்களின் இத்தகைய பிறப்பால் ஆய்வாளர்க்குச் சில சிக்கல்கள் உண்டு. கட்டுரைகளில் வெவ்வேறு பொருள் பேசப்படுகிறது. ஒரே பொருள் பற்றிய கருத்துக்கள் கட்டுரைகளில் ஆங்காங்கே வரவும் காண்கின்றோம். கட்டுரைகளை எழுதும்போது திட்டம் என ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. எடுத்துக்காட்டாக, நாவலர் பற்றி இரு நூல்கள் உள. ஆயினும், கந்தபுராண கலாசாரக் கட்டுரைகளிலும் நாவலர் பற்றிப் பரக்கப் பேசப்படுகிறது. எனவே, குறித்த ஒரு பொருள் பற்றிய கருத்து வளர்ச்சியைக் காணுதல் சிக்கலாகவே அமையும். தனித்தனிக் கட்டுரைகளில் வரும் பொருளை ஆராய்ந்து பின்னர் பல கட்டுரைகளில் வரும் ஒரே பொருள் பற்றிய கருத்தைத் தொகுத்து பல்வேறு நிலையில் ஆராய்ந்து கருத்து வெளியிடுவது எளிதான காரியமன்று. நூலின் ஒட்டுமொத்தமான கருத்து, கருத்தமைப்பு, ஒழுங்கு, ஒருமைப்பாடு எனக் காண்பது சிக்கலாக உள்ளது. இவ்வாறு காணமுயல்வதைக் கட்டுரைகளில் மீண்டும் மீண்டும் கூறப்படும் ஒரே கருத்துக்கள் குழப்புகின்றன.[9] பண்டிதமணியே இக்குறையை நன்கு உணர்ந்தவர். அவர் "கட்டுரைத் தொகுப்பாயிருப்பதனால் ஒரு கட்டுரையில் வந்ததொன்று, மற்றுங் கட்டுரைகளிலும் வரும். அங்ஙனம் வருவது அவ்விடத்துக்கு இன்றியமை-யாததாயும், மீண்டும் மீண்டும் பலவாறு சிந்தித்து மனதில் இருத்துவதற்கு உரியதாயும் இருக்கும்" ("ஆறுமுகநாவலர்" முன்னுரை) என்றார். ஆயின், பண்டிதமணியின் விளக்கத்தை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. ஒரே கருத்துக்கள் கட்டுரைகளில் திரும்பத் திரும்பக் கூறப்படுவதற்குக் காரணம் ஒழுங்குபெற்ற திட்டமின்மையும் எழுதும்போது முன்னர் எழுதியவற்றைக் கருத்தில் கொள்ளாமையுமேயாம். திட்டமிடுவதன் மூலம் கூறியது கூறலைத் தவிர்க்கலாம். சில இடத்துக் கூறிய கருத்தைப் பின்னர் சிறிது மாற்றியும் கூறியுள்ளார். எது சரியெனக் கொள்வதில் சிக்கல் உண்டு. எடுத்துக் காட்டாக திருவாவடுதுறை ஆதீனத்தில் நாவலருக்குச் செய்யப்பட்ட கௌரவத்தைப் பற்றி எழுதியுள்ளார். ஓரிடத்தில் "ஒருமுறை ஆதீன சம்பிரதாயத்துக்கு மாறாக, சுப்பிரமணிய தேசிகர் எழுந்து சென்று நாவலரை வழிவிட்டதுமுண்டு" (ஆறுமுகநாவலர் ப. 56) எனவும் மற்றுமோரிடத்தில் "திருக்கைலாச பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம் எழுந்து நாவலருக்கு மரியாதை செய்யவும் எண்ணியது" (ஆறுமுகநாவலர் ப. 62) எனவும் எழுதியுள்ளார். இரண்டையும் ஒருங்கே சேர்த்துக் கூறாது பிரித்து ஒவ்வொன்றாக வெவ்வேறு இடத்தில் கூறியமை குழப்பமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்தனைக் களஞ்சியம்" எனும் நூலின் முற்பகுதியில் "சிந்தனைகளின் சாரம்" எனத் தரப்பட்டுள்ளது. இதில் தரப்பட்டுள்ள சில கருத்தை மூலக் கட்டுரையில் காணோம். ம. பொ. சி., காரைக்காலம்மையார் பற்றிக் கொண்ட கருத்தையும் அதற்கு சாரத்தில் பண்டிதமணி கூறிய விமரிசனத்தையும் மூலக் கட்டுரையில் காணோம். காரணந் தெரியவில்லை.

கட்டுரைக் கருத்துக்களைத் தரும் முறையாலும் சில சிக்கல்கள் எழுகின்றன. சில கட்டுரைகளில் கருத்துக்களை வரிசைப்படுத்திக் கூறுவதில் ஓர் ஒழுங்கு முறையைக் காணோம். கட்டுரைப் பொருளுக்கு நேரடியாகத் தொடர்பற்ற கருத்துக்கள் - இக்கால நோக்கில் குறிப்புக்களாகவோ அடிக்குறிப்புக்களாகவோ வரத்தக்கவை - கட்டுரையின் பாற்பட்டவையாக வருகின்றன. இவற்றைக் கட்டுரையின் பிரதான கருத்துக்களிலிருந்து வேறுபடுத்திக் கொள்தல் வேண்டும். இல்லையென்றால் கட்டுரையின் முக்கிய கருத்தைக் கிரகிப்பதில் குழப்பம் ஏற்படலாம். இத்தகைய கருத்துக்களைப் பண்டிதமணி சில கட்டுரைகளில் இடையிடையே உடுக்குறிகள் அமைத்து வேறாகவும் வைத்துள்ளார்.

கந்தபுராண கலாசாரம் என்னும் கட்டுரையில் நாவலரின் வியாக்கியானம் பற்றிப் பேசும் பண்டிதமணி அன்று நடைபெற்ற புறச்செயல்கள் ஆகியவற்றை விதந்தோதினாரேயன்றி வியாக்கியான உரையைக் கூறி இரசித்துக் காட்டவில்லை. வியாக்கியான உரையின் சிறப்பன்றோ கட்டுரையில் எதிர்பார்க்கப்படுவது; கட்டுரையின் உயிராவது. ஆரவார வருணனையில் வியாக்கியானப் பொருளை மறத்தல் ஆகாது.

"வித்துவசிரோமணி இலக்கிய ரசனையில் இரசனைகளை எடுத்துக் காட்டுவதில் - ஈடுஎடுப்பு இல்லாதவர் "(ஆறுமுகநாவலர் ப. 2) எனக் கூறிய பண்டிதமணி இதனையடுத்து நாவலரே ஈடுஎடுப்பு இல்லாதவர் என நிரூபித்து விடுகிறார் (ஆறுமுகநாவலர் ப. 2 - 3). இத்தகைய கூற்றுக்கள் அறிவியல் அடிப்படையில் சிக்கலாகின்றன. நாவலர் பெருமையை, புகழை நிலைநாட்டுவதற்கு இவ்வாறு கூறுவது ஓர் உத்தியெனக் கொள்ளினும் முன்னுக்குப்பின் முரண்போலத் தோன்றலாம்.

## VII

இலக்கிய இலக்கணம் பற்றி மரபு வழியில் நின்று எழுதுவது ஒரு முறை; புதிய முறையில் நின்று எழுதுவது வேறு ஒரு முறை. மரபுவழி வருவன பெரும்பாலும் அகச்சார்புடையனவாய் போற்றுதலாகவோ தூற்றுதலாகவோ முறையே விருப்பு நிலையிலும் வெறுப்பு நிலையிலும் எழுவன. மரபு வழியில் ஊறிய அறிஞர் மனம்போன போக்கில் சில கருத்துக்களை விடாப்பிடியாகப் பிடித்து நிற்பர். ஏன் என்றால், "அது அப்படித்தான்" என்று கூறும் நிலையில் நிற்பர். காரணம், சான்று ஆகியவற்றைப் பொருட்படுத்துவதில்லை. புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY UNIVERSITY ...

முறையிலோ அறிவியல் அடிப்படைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. புறநிலை நோக்கு தலைதூக்கி நிற்கும். காரணம், சான்று ஆகியவை பேணப்படும். இந்த இரு முறைகளும் ஒரே இடத்து ஒத்துப்போவது அருமை. இந்த இரு முறைகளிலும் கருத்துக்களிலே மட்டுமன்றி மொழிப் பிரயோகத்திலும் வேறுபாடு இருக்கக் காண்கின்றோம். மரபுவழியில் சில இடத்து மொழிப்பொருள் ஒன்றாகவும் எழுதியவர்தம் அடியுள்ளத்தில் கருதிய பொருள் வேறொன்றாகவும் இருத்தலைக் காணலாம். எடுத்துக்காட்டாக "அவரை ஒப்பாரும் மிக்காரும் இலர்" என மரபுவழியில் எழுதுவார்கள். பொருள் யாது என்றால் "அவர் பெரிய அறிஞர்" என்பர். புதிய நெறியில் இந்நிலைக்கு இடம் அளிப்பதில்லை. மொழிப்பொருளே பொருள் எனக் கொள்ளப்படும். அறிவியல் அடிப்படையில் நடைபெறும் ஆய்விலே ஆய்வு மொழி என ஒன்று போற்றப்படும்.[10]

பண்டிதமணி மரபுவழி தமிழ் பயின்றவர். ஆதலால் அவரிடம் மரபுவழிப்பட்ட சிந்தனை இருப்பது வியப்பன்று. இதனை ஒரு நிலையில் வைத்து ஆராய்தல் வேண்டும். ஏனைய பண்டிதர்மார் பலரிடம் காண முடியாத மரபு வழிப்படாத புதுமையும் அவர் சிந்தனையில் உண்டு. இது வியப்பே. இதனை வேறு ஒரு நிலையில் வைத்து ஆராய்தல் வேண்டும். இவ்வாறு பழமையும் புதுமையும் ஒருங்கே இருப்பதை ஒருங்கே ஆராய்தல் சிக்கலாகும் என்பதில் ஐயமில்லை. பண்டிதமணியிடம் காணப்படும் பழமை புதுமை ஆகிய இரண்டிலும் ஒருவகைக் கட்டிலா ஊசலாட்டம் தோன்றுவது ஆய்வாளர்க்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இரண்டில் எது, எங்கு, ஏன் எனக் கண்டுகொள்வது சிக்கலாகின்றது. அறிவு வளர்ச்சியில் புதுமையை வரவேற்றவர் எழுத்துக்களில் புதுமைக்கே உரிய இடங்களில் பழமையையே காணும்போது நமது உள்ளம் தடுமாறுகிறது.

பண்டிதமணி சில விஷயங்களில் உணர்ச்சி மேலீட்டினால் மிகைபட எழுதியுள்ளார். ஆய்விலே கற்பனைக் கவிஞர் போலவும் மாறியுள்ளார். சில இடத்து கருத்திலும் மொழிப் பயன்பாட்டிலும் நடுநிலை பிறழ்கின்றாரா எனக்கூட எண்ணத் தோன்றுகிறது. சரி, பிழை. சான்று, கருத்து வேறுபாடு என்பனவற்றைக் கருத மறுத்தாரா என எண்ணத் தோன்றுகிறது. இங்கு அவர் கருத்துக்கள் சிலவற்றைச் சிந்திப்போம்.

> "பொன்னம்பலபிள்ளையின் முன்னிலையில் கவிஞர்கள் வந்து வந்து குழுமுவார்கள். ஏற்ற ஏற்ற முறையில் வரிசையறிந்து மதிப்புக் கொடுப்பார் பொன்னம்பலபிள்ளை. அவர் கொடுக்கும் மதிப்புப் பல்கலைக்கழகம் கொடுக்கும் மதிப்பிலும் மேலானது"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 221)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொன்னம்பலபிள்ளையின் காவிய ரசனைகளைக் கண்டவர்களையோ கேட்டவர்களையோ கண்டவர்கள் கூட இக்காலத்துச் சாதாரண ரசனைகளையும் கவிதைகளையும் சகிக்கமாட்டார்கள்"

(கந்தபுராண கலாசாரம். ப. 32).

"ஔவையாரும் திருவள்ளுவருந் தாமே உலகத்தின் இரு கண்கள்"

(கம்ப. 26).

"1879ஆம் ஆண்டு ஆடிமாசம் சுந்தரர் குருபூசைத் தினத்தில் நாவலர் தமது இறுதிப் பிரசங்கத்தைச் செய்தார். "முப்பத்திரண்டு வருட காலம் உங்கள் ஏச்சையும் பொறுத்துக்கொண்டு பிரசங்கஞ் செய்து வந்தேன். இனி ஒருவரைத் தேடிக்கொள்ளுங்கள்" என்று தம்மையும் மறந்து சொன்னார். அதனைக் கேட்டுச் சுவர்கள், தூண்கள் என்றிவையும் கண்ணீர் சொரிந்தன"

(ஆறுமுகநாவலர். ப. 72)[11]

"இராம லக்ஷ்மண பரத சத்துருக்கர்கள் பச்சைப் பசும் பாலகர்கள்; அவர்கள் பாதங்கள் அனிச்சப் பூவினும் மிருதுவானவைகள். அவர்களுடைய மொழியைச் செவிமடுத்த பிறகுதான்,

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளாதவர்

என்ற பாட்டு வந்தது."

(கம்ப. ப. 47)

என்றெல்லாம் பண்டிதமணி எழுதியுள்ளார். "ஏற்ற ஏற்ற முறையில் வரிசையறிந்து மதிப்புக்கொடுப்பவர் பொன்னம்பலபிள்ளை" என எழுதிய பண்டிதமணி தாம் அவ்வழி நிற்காது உணர்ச்சிவசப்பட்டு மல்லாகம் ஆங்கில பாடசாலையில் அன்று படிப்பித்த திரு. இரத்தினசபாபதி உபாத்தியாயரைக் "கணிதமேதை" (சிந்தனைக் களஞ்சியம், ப. 233) என்று வர்ணித்துள்ளார்.

மேலும், நாவலர் வரலாறு எழுதியவர்மீது தமக்கு வந்த கோபத்தையும் தாமே நாவலர் வரலாற்றை எழுத முயன்றதையும் பின்னர் அதனைக் கைவிட்டதையும் பற்றிப் பண்டிதமணி எழுதியதைக் (ஆறுமுக நாவலர், ப. 139 - 141) கருத்திற் கொள்க. நாவலர் பெரியபுராண சூசனம் எழுதத் தொடங்கி காரைக்காலம்மையார் பற்றி எழுதாது நின்றது பற்றிப் பண்டிதமணி தரும் விளக்கங்களைச் (சிந்தனைக் களஞ்சியம், ப. 155) சார்பற்ற நிலையில் ஓர்க.

நாவலர் வரலாற்றை எழுத விரும்பியும் "நாவலர் அவர்களைப் பற்றி ஒன்றுஞ் சொல்லமுடியாது" (ஆறுமுகநாவலர் ப. 141) என்று முடிபுகட்டிய பண்டிதமணி நாவலர் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போதுதான் எழுதினார். ஒரே சமயத்தில் நாவலரை இயன்றளவு முழுமையாக ஆராய்ந்து ஒரு நூல் எழுத விரும்பவில்லைப் போலும். அவர் நன்றாக எழுதியிருக்கலாம். எழுதும் ஆற்றல் அவருக்கு இருந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. திரு. த. கைலாசபிள்ளை எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரம் (1916) விஷயக் கிரமம் பற்றியது என்றும், கனகரத்தின உபாத்தியாயர் எழுதியது (1882) காலக்கிரமம் பற்றியது (ஆறுமுகநாவலர் ப. 87 - 88) என்றும் மதிப்பீடு செய்து கலைக்களஞ்சியத்தில் ஆறுமுகநாவலர் என்னுங் கட்டுரையில் நாவலரது எழுத்துக்களை ஐந்து பிரிவாக வகுத்துக் காட்டும் பண்டிதமணி ஆறுமுகநாவலர் பற்றித் தாம் எழுதியவற்றைத் திட்டமிட்டு வகைசெய்து குறிப்பிட்ட ஒரு காலத்திலேயே எழுதியிருப்பாராயின் அது சிறந்த ஆய்வாக அமைந்திருக்கும்.[12] நாவலர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளைச் சரித்திரத்திற்கு ஆதாரமாகக் கொள்ளாது நாவலரின் எழுத்துக்களையும் நாவலர் பற்றி அவர் காலத்திலே பிறர் எழுதியவற்றையும் தேடி அவற்றைத் தக்க ஆதாரங்கள் எனக் கொண்டு சரித்திரத்தைப் பண்டிதமணி சிறிதேனும் மீள அமைத்துத் (re - construct) தந்திருக்கலாம். கர்ணபரம்பரைக் கதைகளைத் தனியே திரட்டித் தந்திருக்கலாம். இரண்டும் பயனுள்ளவையாக அமைந்திருக்கும்.[13] ஆயின் நாவலரைப் பற்றிப் பல விஷயங்களை எழுதிய பண்டிதமணி நாவலரிடத்துப் பக்திப் பரவசத்தில் மூழ்கியமையால் போலும் இறுதியில் "நாவலர் அவர்களைப் பற்றி ஒன்றுஞ் சொல்லமுடியாது" என்ற முடிபுக்கு வந்தார். அவர்களைப் பற்றி ஒன்றுஞ் சொல்லமுடியாது என்னுங் கட்டுரை இறுதியில் நாவலர் எழுதியவற்றிலிருந்து நாவலரின் ஆளுமையை ஓரளவு பிரதிபலிக்கும் பந்திகள் சிலவற்றை நூற்பெயர், பக்கம் முதலிய விபரங்களோடு மேற்கோளாகத் தந்து "இப்படிப்பட்டவர்களைப் பற்றி எம்மனோரால் என்னதான் சொல்ல முடியும்" (ஆறுமுகநாவலர், ப. 146) என்று தாம் சரித்திரம் எழுதாமைக்கு விளக்கம் கூறுகிறார்.

முன்னர் பண்டிதமணி பெரியபுராணக் கதைகளைப் பற்றி எழுத ஆசைப்பட்டுப் பின்னர் அந்த எண்ணத்தைக் கைவிட்டு "கதை வேறுபடாமல் ஒரு அக்ஷரத்தைக் கூட மாற்றி அமைக்கிறதற்கு எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்ற முடிபுக்கு வந்து சேர்ந்தேன்" (ஆறுமுகநாவலர் ப. 139) என்றார். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை இக்காலத்துக்கு ஏற்றவாறு எழுத வேண்டும் என்ற பண்டிதமணியின் ஆய்வுள்ளத்தை ஒரு நிலையிலும் அந்த ஆய்வுள்ளம் பக்திப் பரவசத்தால் மறைவதை மற்றொரு நிலையிலும் இங்கு காண்கின்றோம்.

மேலும், இலக்கிய வரலாறு, மொழி, மதம் பற்றிப் பண்டிதமணி கூறியுள்ள சில கருத்துக்களையும் இன்றைய ஆய்வுநிலையில் சரியென ஏற்றுக்கொள்வது சிக்கலாக உள்ளது. சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.[14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சங்கச் செய்யுள்கள் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுபவைகள் எட்டுத்தொகை நூல்களேயாம்"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 42)

"ஆரியமும் தமிழும் தந்தையும் தாயும்"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 96)

"ஆரியம் அறிவு நடை, தமிழ் அன்பு நடை, காரியம் ஒன்றே"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 97)

"நடை வேறுபட்டதால் பாஷை துவிதப்பட்டது; ஆரியம் தமிழ்; உண்மையில்; அத்துவிதம் ஏகம்"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 97)

"ஆரியமும் தமிழும் ஒரு சாதியார் வழங்கிய இரு வேறு பாஷைகள் ஒன்று ஆண்; ஒன்று பெண். நடைவேறு. பொருள் ஒன்று"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 99)

"பொருள் பிறழ நடைபிறழும். நடைபிறழப் புற்றீசல் போலப் புதிய புதிய பாஷைகள் தோன்றும். அவைதாம் எண்ணில"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 99)

"பரிசுத்த பாஷைகள் - மூல பாஷைகள் - இரண்டே. அவை ஆரியமும் தமிழும்"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 99)

"பிறழ்வுப் பெருக்கம் பிற்காலத்தில் ஆராய்ச்சியாகி, அறிவும் அன்புமான ஆரியம் தமிழ் என்னும் ஒருமைப் பாஷைகளைத் தொடர்பற்ற இருவேறு பாஷைகளாக்கிவிட்டன"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 133)

"புத்த சமண அறம் அறத்துக்குப் புறம்; அறம்புறம்"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 107)

"அறத்துக்குப் புறம்பான சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரங்கள்....."

(சிந்தனைக் களஞ்சியம். ப. 110)

"சங்கப் புலவர்களிலே சமண பௌத்தர்களும் இருந்தார்களென்பது எட்டுணையும் பொருத்தமற்றது"

(சிந்தனைக் களஞ்சியம். ப. 111 - 112)

*பண்டிதமணி சிலப்பதிகாரம் அறத்துக்குப் புறம்பானது என்றார். கண்ணகி வழிபாடு செய்பவர்களைச் சிவத்துரோகிகள் என நாவலர் கூறியதைப் போற்றித் தமது நூலில் (கந்தபுராண கலாசாரம் ப. 82) மேற்கோள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளார். ஆயின், பண்டிதமணி தமது முதிர்ந்த வயதில் ஆற்றிய வானொலிப் பேச்சொன்றில் "தீதும் நன்றும் பிறர் தர வாரா" எனும் அறத்திற்கு விளக்கம் கூறும்போது சிலப்பதிகாரத்திலிருந்து மேற்கோள் காட்டி, கண்ணகியை "தெய்வக் கண்ணகி" எனக் குறிப்பிட்டுள்ளார் (அத்வைத சிந்தனை ப. 97). இதனை "மனமாற்றம்" எனக் கொள்வதா? அவ்வாறாயின் அதற்குரிய காரணம் தெளிவாக இல்லை.

## VIII

ஆய்வு வளர்ச்சியால் காலத்துக்குக் காலம் கருத்துக்கள் மாறுவது உண்டு. மதம், அறம் பற்றிய நோக்கு மாறுகிறது. அவை புதுப்புது விளக்கம் பெறுவதும் உண்டு. ஒன்றின் மீதுள்ள விருப்பம் காரணமாக மற்றொன்றின்மீது ஏற்படும் வெறுப்பு விலக்கப்படுகிறது. சனநாயகத்தில் கருத்து வேறுபாட்டிற்கு இடமளிக்கப்படுகிறது. கருத்து வேறுபாடு காழ்ப்பை உண்டாக்காவண்ணம் போற்றப்படுகிறது. இது ஒருவகைத் தர்மம் என எண்ணப்படுகிறது. குறுகிய நிலையை விடுத்துப் பரந்த நிலையில் விஷயங்கள் ஒப்பிடப்பட்டுச் சிந்திக்கப்படுகின்றன. மனித அறம் யாது, இலக்கியம் எனப்படுவது யாது போன்றவை இன்று உலகளாவிய நிலையில் பேசப்படுகின்றன. இவற்றிற்கேற்ப அறிஞர்கள் தம் கருத்துக்களைப் பக்குவப்படுத்திக் கொள்கின்றனர். ஆயின் பண்டிதமணியின் கருத்துக்கள் சில பற்றுறுதி வாய்ந்தனவாக, மாற்ற முடியாதனவாக அமைந்துவிட்டன. இது மட்டுமன்றி, தாம் கொண்ட கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துடையோரைக் கண்டித்துக் கிண்டல் செய்யும் பாங்கு பண்டிதமணியிடம் காணப்படுகிறது. இவற்றிற்குக் காரணம் ஒருவகை விருப்பு வெறுப்பா என எண்ணத் தோன்றுகிறது.

இங்கு "சிந்தனைக் களஞ்சியத்திலே" 'சீவகசிந்தாமணி' என்னுங் கட்டுரையில் (ப. 58 - 67) வருங் கருத்துக்களை நினைவிற் கொள்க. சீவகன் துறவு, இந்திரன் துறவு, அருச்சுனன் துறவு, புத்தரின் துறவு, திராட்சைப் பழம் எட்டாத நரியின் துறவு - அத்தனையும் பொய்த்துறவுகளாம்[15] இவை மனைவி மக்களோடு கோபித்துக்கொண்டு சிலர் கதிர்காமம் புறப்படுகிறது போன்ற பொய்த்துறவுகளாம். இக்கட்டுரையில் காவியம் இலக்கியம் என வேறுபாடு செய்து சீவகன் பொய்த்துறவைப் புனைந்து கூறுவதால் சிந்தாமணி ஒரு காவியமாவதன்றி இலக்கியமாகாது என்றும் "கண்ட கேட்ட பொருளை வைத்துக்கொண்டே அப்பொருளின் பொய்ம்மையை வெளிப்படுத்தி, அதன்மூலம் மெய்ப்பொருளைக் காணும் முகமாக நூல் செய்தால் அது இலக்கியமாகும்" (சிந்தனைக் களஞ்சியம் ப. 65) என்றும் விளக்கியுள்ளார். பண்டிதமணி தாம் கொண்ட கருத்துக்கு ஆதாரமாக நாவலர், சேக்கிழார் போன்றோர் கருத்துக்களைக் கூறியுள்ளார். ஆறுமுகநாவலர் தமிழ்ப்புலமை என்ற கட்டுரையில், இலக்கிய வரிசையில் சிந்தாமணி முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியங்களைச் சேர்க்கவில்லை என்றும் இக்கருத்துக்கள் தாம் கண்ட புதிய கருத்துக்களுமல்ல; யாழ்ப்பாணக் கருத்துக்களுமல்ல - ஆனால் சேக்கிழார் முதலிய மகான்களின் கருத்துக்கள்; தாய்நாட்டுக் கருத்துக்கள் பழைய கருத்துக்கள் என்றும் எழுதியுள்ளார். ஆதாரமாகக் காட்டப்பட்டோர் அனைவரும் மரபு வழியில் கருத்துக்களைப் பேணியவர்கள்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் மரபுவழியில் தமிழ் பயின்றவர். ஆயின், பண்டிதமணி போல புதுமையையும் ஏற்றவர். சாமிநாதையர் புதுமையாகக் கொண்ட கருத்துக்களைப் பண்டிதமணியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிந்தாமணியைப் பாராட்டி எழுதிய ஐயர் அவர்களைப் பற்றிப் பண்டிதமணி கூறுவதைக் கருதுக.

"டாக்டர் ஐயா அவர்கள் உமாபதி சிவத்தின் அருட்பெருமைகளை உணர்ந்தவர்களாயிருந்தும், துரதிஷ்டவசமாகப் பொய்யே கட்டிநடத்திய சிந்தாமணியென்றால் நமக்கென்ன! நாம் விரும்புவது தமிழ்ச் சுவை, சொற்சுவை, பொருட்சுவை" என்று தடித்த எழுத்தில் உரைத்திட்டார்கள்.

தமிழ்த் தாத்தா இப்படி உரைப்பாராயின், பொய்ம்மையில் சுவை காண்பாராயின், இனித் தாய்நாட்டு நிலையை ஆராய்வதிற் பயனில்லை. பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குவது புலைமையாமன்றி புலமை ஆகாதே. தாய்நாடு செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் சமரசம் பண்ணிச் சாம்பார் பண்ணுகின்றது. பொருளைப் பற்றிய சிந்தனையற்ற சாதாரண கவிஞனும், தெய்வப்புலவர் திருவள்ளுவரும் இன்றைய தாய்-நாட்டுக்கு ஒரு பண்டந்தான் (சிந்தனைக் களஞ்சியம் ப. 67) என எழுதியுள்ளார்.

"சங்கப் புலவர்கள் சான்றோர்கள். அவர்களுள்ளே சமணர் பௌத்தர்-களும் இருந்து தமிழாராய்ந்தார்கள் என்று எழுதிவிட்டுப் போய்விட்டார்கள் டாக்டர் ஐயா அவர்கள். பைத்தியம் பிடித்த குரங்குக்குப் புளித்தகாடி செய்கின்ற வேலையை அந்த எழுத்து இன்றைக்குச் செய்கிறது" (சிந்தனைக் களஞ்சியம் ப. 111 - 112) எனவும் எழுதியுள்ளார்.

"பவணந்தி ஒரு சமணன். நல்ல முகூர்த்தத்தில் நன்னூல் செய்யப்-பட்டது. அது எத்தனையோ இலக்கியங்களையும் விழுங்கித் தொல்காப்பி-யத்தையும் வழக்கறச் செய்துவிட்டது. நம்மவர்கள் தமக்கென ஒன்று இல்லாதவர்கள் ஆனார்கள். சார்ந்ததன் வண்ணமாய் நடுக்கடலிலே தத்தளிக்கின்றார்கள்...... தொல்காப்பிய நூலை உரைகல்லாகக் கொண்ட தமிழ்நாடு இன்றைக்கு, ஒரு நூல் தோன்றினால், அதை மிலேச்ச நாடு ஆகிய பிறநாடு மதிக்க வேண்டும் என்கிறது" (சிந்தனைக் களஞ்சியம் ப. 111) எனக் கூறியதையும் கருத்திற் கொள்க.[16]

"நாவலர் அவர்களுக்கு நல்ல இங்கிலிஷ் வரும். அந்த நாட்களில் எந்த உத்தியோகமும் பெற்றிருக்கலாம். சட்டசபைக்குக் கூடப் போயிருக்-கலாம். கொஞ்சம் அரசாங்கத்தை அணைத்து வைத்திருந்தால், இப்பொழுது சாமிநாதையர் பெற்ற பட்டங்களுக்கு மேலே பெற்றிருக்கலாம், என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண்வேலை செய்துவிட்டார்கள்! போங்கள்" (ஆறுமுகநாவலர் ப. 148) என எழுதியதையும் கருதுதல் வேண்டும். வேறோர் இடத்தில் கிண்டல் செய்வதற்கு இந்தியப் பேச்சுத் தமிழைக் கையாண்டுள்ளார். பண்டிதமணி வரணும், முடியணும் ஆகிய சொற்களைக் கையாண்டுள்ளதைக் காண்க (ஆறுமுக நாவலர் ப. 149). "சுடச் சுடக் கொடுப்பதிலும், கருகலாக நையாண்டி பண்ணுவதிலும் பண்டிதமணி பேர் பெற்றவர்" எனக் கனக செந்திநாதன் (மூன்றாவது கண் ப. 37) கூறியது இங்கு நினைவிற்கு வருகிறது. கனக செந்திநாதன் இதனை ஓர் ஆற்றல் என்றே எண்ணினார் போலும்.

அண்மைக் காலங்களில் எழுந்த இலக்கிய வரலாற்று நூல்கள் சிந்தாமணிக்கு அளிக்கும் இடத்தைக் கருதும் போதும், சமணம் பற்றிக் கருதாது நன்னூல் பயன்படுத்தப்பட்டு வரும் போதும், சங்கப் புலவர்கள் பெயர்களில் பௌத்த மதச் சார்புடைய பெயர்கள் இருக்கின்றபோதும் பண்டிதமணி கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொள்வது சிக்கலாக உள்ளது. ஓரிடத்து "ஏற்ற பாஷை நடை கைவரவேண்டும்" (கந்தபுராண கலாசாரம் ப. 33) என்று பண்டிதமணி கூறியுள்ளார். ஆய்விலே ஏற்ற பாஷை நடை கைவராதவிடத்து சிக்கல் தோன்றும். ஐயர் அவர்களை மறுத்துக் கூறும்போது பண்டிதமணி கையாளும் மொழியும் மொழிநடையும் ஒருவகைக் காழ்ப்பையும் கிண்டலையும் காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. கருத்துக்களை ஏற்காது தக்க காரணங்கள் காட்டி மறுப்பது ஒன்று; அதனை விட்டு அல்லது அதனோடு காழ்ப்பையும் கொட்டித் தனது மனநிலையையும் காட்டிவிடுவது வேறொன்று. ஆய்வு பற்றற்ற நிலையில் நடைபெறாதுவிடின் சிக்கல்தான்.

இலக்கியம் தமிழிலே மட்டுமன்றி உலக மொழிகள் பலவற்றிலும் உண்டு. இலக்கியம் என்பது யாது எனத் தமிழ்ச் சிந்தனை இருப்பது போல பிறமொழி, கலாசார அடிப்படையிலும் உண்டு. இலக்கியம் பற்றி உலகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொதுமையான சிந்தனை என ஒன்றை எண்ணும் போது பண்டிதமணியின் நிலைப்பாடு பழைய நிலைப்பாடு ஆகும். சிந்தனை வளர்ச்சியிலே பழைய கருத்துக்கள் பலவற்றை நாம் தியாகம் பண்ண வேண்டிய நிலை உருவாகுவது ஆச்சிரியமன்று. இலக்கியத்திலே மட்டுமன்றி மொழியைப் பொறுத்தவரையிலும் இந்நிலை உண்டு. மாற்றம் என்பது பலவற்றிற்குப் பொதுவானது. சமயம் பற்றிய கருத்துக்களும் நின்றபடி நிற்கின்றன என்று நடைமுறையில் உள்ள சமயத்தைப் பார்த்துச் சொல்ல முடியவில்லை. இது போன்றதே கலாசாரமும். பழையநிலை வரலாற்றின் பாற்பட்டதாகி விடுகிறது. நடைமுறையில் இல்லாததாகி விடுகிறது. நாம் அதனை விரும்பாமல் இருக்கலாம். ஆயினும் மாற்றம் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. இந்த மாற்றத்தால் இருந்தது இல்லாமல் போகிறது என்று அஞ்சவேண்டியதில்லை; கவலை கொள்ள வேண்டியதில்லை. தொடர்ச்சி இருந்துகொண்டே இருக்கிறது; இருக்கும்.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமானை அறிஞர்கள் தம் ஆய்விலே வெவ்வேறு கோணத்திலிருந்து பார்த்துள்ளார்கள் என்பதனைப் பண்டிதமணி உணர்ந்துள்ளார். சிலரின் ஆய்வுப் பார்வையைப் பண்டிதமணி பொறுத்துக்கொள்வதாக இல்லை. இந்நிலைப்பாட்டினைப் புரிந்துகொள்வது ஆய்வு உள்ளத்திற்குச் சிக்கலாகவுள்ளது. சுத்தானந்தர் எழுதிய நாவலர் பெருமான் என்ற புத்தகத்தை ஏற்றுக்கொண்டது போல் பண்டிதமணி ம. பொ. சிவஞானகிராமணியார் எழுதிய வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு என்ற நூலை ஏற்றுக்கொள்ளவில்லை. "ம.பொ. சிவஞானகிராமணியார் எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற புத்தகத்தில் காணும் நாவலரை 'நாவலர் பெருமானில்' காண முடியவில்லை" (ஆறுமுகநாவலர் ப. 88) எனக் கூறியுள்ளார்.[17] "தாய்நாடாகிய தமிழ்நாடு 'கடவுள் இல்லை' சிலை தாபிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. 'கடவுள் உண்டு' என்ற நாவலருக்கு இனி அங்கே இடமில்லை. அதில் நூதனம் இல்லை" (ஆறுமுகநாவலர் ப. 89) என்றும் எழுதியுள்ளார். கிராமணியாருடைய நூல் நாவலர் மரபில் வளர்ந்த பண்டிதமணியின் உள்ளத்தை நோக வைத்துவிட்டது என்பது தெளிவு. பண்டிதமணி நாவலரை மகாத்மா காந்தியோடும், புத்தரோடும் சில விஷயங்களில் ஒப்பிடுவதை நாம் இங்கு நினைவு கூர்ந்தால் பண்டிதமணி உள்ளம் நோவதை நாம் புரிந்து கொள்ள முடியும். இது ஒருபுறம். மறுபுறம் புத்தர் துறவைப் பொய்த்துறவு என்றார் என நினைவு கொள்ளும்போது முரண்பாடா எனத் தோன்றும் எண்ணத்தைப் போக்குவது சிக்கலாகின்றது.

தமிழ்நாட்டில் 'கடவுள் இல்லை' நிலைக்குப் பின்னரும் கோயில்கள் நிலைத்து நிற்கின்றன; கோயில்கள் கட்டப்படுகின்றன; பூசை, வழிபாடு, திருவிழா நடைபெறுகின்றன. நாவலர் பற்றிப் பேசப்படுகின்றது. பண்டிதமணியே ஆங்காங்கு நூலில் பேசும் சனநாயகத்தில் கடவுள் இல்லை என்பதற்கும் இடமுண்டு.[18] இந்தியநாடு வேற்றுமையில் ஒற்றுமை காணும் பல்சுவை நாடு. ஆதலால் நாவலருக்கு இனியும் அங்கே இடமுண்டு. நாம் கவலைப்பட வேண்டியதில்லை.[19]

## IX

ஒரு நூற்றாண்டுக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி பண்டிதமணி எழுதும்போது தாம் அவற்றை நேரில் கண்டது போலவே வருணித்து எழுதியுள்ளார். உண்மையாக இடம்பெற்ற நிகழ்ச்சிகளையும் கற்பனை என எண்ணக்கூடிய சில கட்டுரைகளில் கலந்து எழுதியுள்ளார். மேலும் தாம் கூறும் கருத்துக்களுக்கு ஆதாரம் இன்றியமையாதது என்ற நினைவு இல்லாது எழுதியுள்ளார். எது உண்மை, எது கற்பனை, உண்மையெனக் கொள்வதற்கு ஆதாரம் எங்கே என ஆய்வாளர் சிந்திக்கும்போது குழப்பம் ஏற்படுகிறது. சில எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குவோம்.

UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாவலரும் புராணபடனமும்" என்னுங் கட்டுரையில் (ஆறுமுகநாவலர் ப. 2) 1872ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டம் பற்றி எழுதும்போது,

"மனேஜர் செய்த இந்த ஒழுங்கு முன்னமே எங்கும் பரவிவிட்டது. மூலை முடுக்குகளிலுள்ள வித்துவான்களும் வந்துவிட்டார்கள். புராணம் கேட்கும் ஆர்வமுள்ள பெண், ஆண் அத்தனை பேரும் குழுமிவிட்டார்கள். எள்ளிட இடமின்றி எங்கும் நெருக்கம் மிக்க போதும் அமைதி குடிகொண்டிருந்தது. யாவரும் மாமனையும் மருகரையும் மாறிமாறிப் பார்த்தபடி இமையவர்களாயிருந்தார்கள்"

என எழுதியுள்ளார். மேலும்,

"ஒரு காலத்திலே தருமபுரத்திலே குமரகுருபரர் "ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள" என்று பெரியபுராணத்தில் வரும் அருமைச் செய்யுளுக்கு விரிவுரை நிகழ்த்தியருளினார். அந்த விரிவுரையை, "வேதக் காட்சிக்கு அன்று நடந்த விரிவுரை ஞாபகஞ் செய்வ-தாயிருந்தது" (ஆறுமுகநாவலர் ப. 3) என்றார். இந்த ஒப்புமைக்கு ஆதாரம் யாது எனத் தெரியவில்லை.

பண்டிதமணி நாவலர் செய்த பிரசங்கங்களில் தலைசிறந்ததும் உருக்கம் நிறைந்ததும் எது என்றும், அவர் செய்த புராண விரிவுரைகளில் தலைசிறந்ததும் உருக்கம் மிக்கதும் எது என்றும் உறுதியாகச் சுட்டிக்-காட்டுவதற்கு (ஆறுமுகநாவலர் ப. 3) நாவலர் செய்த பிரசங்கங்கள் அனைத்தையும் புராண விரிவுரைகள் அனைத்தையும் ஒப்புநோக்கி ஆராய்ந்திருத்தல் அவசியமன்றோ? அவ்வாறு செய்து முடிவு கட்டுவதற்கு வாய்ப்பு ஏது என அறியேம்.[20] இத்தகைய கூற்றுகளுக்கு, முடிபுகளுக்கு ஆதாரம் யாது எனவும் அறியேம். இந்நிலையை ஏற்பது சிக்கலான காரியம். பண்டிதமணி நாவலர் பற்றிக் கூறும் பல கருத்துக்களுக்குத் தக்க உறுதியான ஆதாரங்கள் காட்டாதமையால் அவற்றை ஆய்வதும் நாவலர் ஆய்வுக்குத் துணையாகக் கொள்வதும் சிக்கலாக உள்ளது.

ஆறுமுகநாவலர் என்னும் நூலில் "அந்த மகானுக்கு வணக்கம்" என்னுங் கட்டுரையில் (ப. 98) மகா மகோபாத்தியாய ஈசான சிவாசாரியார் மூலம் பண்டித மதன் மோகன் மாளவியா நாவலர் முதலாம் பாலபாடத்தில் கடவுளைப் பற்றி எழுதிய வாக்கியங்களை அறிந்து "எழுந்து, இரு கரங்களையும் சிரமேற் கூப்பி, யாழ்ப்பாணம் இருக்கும் திக்கு நோக்கி, "அந்த மகானுக்கு வணக்கம்" என்று மிக உருக்கத்துடன் வணக்கஞ் செய்தார்" எனப் பண்டிதமணி தாம் கூறுவதற்கு ஆதாரங் கூறவில்லை.

"........... பார்சிவல் பாதிரியார் யாழ்ப்பாணத்துத் தமிழ்க் கிறிஸ்தவர்களைப் "பஞ்சாட்சரக் கிறிஸ்தவர்கள்" என்று சிலேடையாகச் சொல்லுவாராம். "சம்பளம்" என்ற வார்த்தையில் ஐந்து அட்சரங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாட்சரம் என்பதற்குப் பாதிரியார் சொல்லுகிற ஒரு கருத்து (சம்பளம்) இது. மற்றக் கருத்து வெளிப்படை" (கந்தபுராண கலாசாரம் ப. 23 - 24) என்று பண்டிதமணி எழுதியுள்ளார். அவர் இதற்கும் ஆதாரங் காட்டவில்லை. மற்றும் ஓர் நூலில் வரும் அடிக்குறிப்பொன்றில் பண்டிதமணி "பஞ்சாக்கரம் - ச - ம் - ப - ள - ம் இப்பெயரைப் பார்சிவற் பாதிரியாரே வழங்குபவர் என்று கதையுண்டு" (நாவலர் ப. 2) எனக் கூறியுள்ளார். "கதை"யை எந்தளவிற்கு ஆதாரமாகக் கொள்ளலாம் என்பது சிக்கல். கைலாசபிள்ளையின் ஆறுமுகநாவலர் சரித்திரமும் இதுபற்றிக் கூறியுள்ளது. ஆயின், கூறிய கருத்திலே நுட்பமான சிறிய வேறுபாடு உண்டு.[21] ஆய்வாளர் சில முக்கியமான கூற்றுக்களுக்-காவது போதிய ஆதாரந் தரப்பட்டுள்ளதா எனத் தேடுவர். இல்லையென்றால் அவற்றைத் தம் ஆய்வுக்கு ஆதாரமாகக் கொள்ளத் தயங்குவர்.

ஏதோ காரணத்திற்காக எங்கிருந்தோ மறுப்புரை தோன்றலாம் என்ற சாத்தியம் இருப்பின் ஆதாரம் மிகமிக இன்றியமையாதது. கறல் விசுவநாத-பிள்ளை பற்றி எழுதுமிடத்து "அவர் (கின்ஸ்பெரி சி. வை. தாமோதரம்-பிள்ளை) குரு கறல் விசுவநாதபிள்ளை மதம் மாறி நாவலரை எதிர்த்து நின்றவர். பின் நாவலர் நீதியைக் கண்டு நாணிப் பொன்னூசியால் தம் நாக்கைச் சுடுவித்துச் சைவத்துக்குத் திரும்பினார். இதனைக் கண்ணுற்ற பார்சிவசற் பாதிரியார் "மதமாற்றஞ் செய்வது மாற்றுவோர் தம்மைத் தாம் ஏமாற்றுவதாம்" என்பதை நன்குணர்ந்து நாணினார்" (ஆறுமுகநாவலர் ப. 61) என எழுதியுள்ளார். ஆதாரம் இல்லாதவிடத்து இதனை மறுக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். பாதிரியார் நாணியமை ஒரு முக்கியமான கருத்து; ஆய்வுக்குப் பயன்படக்கூடிய கருத்து. எனவே, ஆதாரம் மிக இன்றியமையாதது.

ஆய்வுக்குத் தக்க சான்றின் இன்றியமையாமையைத் தெற்றத் தெளிந்தவர் பண்டிதமணி. நாவலர் பற்றிய சில செய்திகளைத் "தக்க சான்று காட்டி நிருபித்துவிட்டார் எப். எக்ஸ். ஸி. அவரது கண்டுபிடிப்புக் கோடிபொன் பெறும்" (ஆறுமுக நாவலர் ப. 166) எனப் பண்டிதமணி "தக்கசான்று" பற்றிப் பேசியுள்ளார். "நாவலரும் பார்சிவல் துரையும்," என்னுங் கட்டுரை முடிவில் (ஆறுமுக நாவலர் ப. 36) உவெஸ்லியன் மிஷன் 1855ஆம் ஆண்டில் வெளியிட்ட "றிப்போட்" புத்தகத்தில் 20ஆம் பக்கத்தையும், பாதிரிமார் எழுதிய "Hindu Pastors" என்னும் புத்தகத்தையும் தாம் கூறும் கருத்துக்கு ஆதாரமாகக் காட்டுகிறார். மேலும், 'நாவலர் எழுந்தார்' என்னும் கட்டுரை முடிவில் (இலக்கியவழி ப. 67) "ஒரே ஒரு குறிப்பு" எனத் தமக்கு நாவலர் பற்றிய கட்டுரைச் செய்தி வந்த வழியை விளக்கியுள்ளார். ஆயின், இவ்வாறு சில இடத்து ஆதாரந் தந்து ஏனைய இடத்துத் தராதொழிந்தமை சிக்கலாகவே உள்ளது; அவ்வாறு செய்தமை ஏனோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## X

பண்டிதமணி தமது எழுத்துக்களில் சிலர் பெயரைக் குறிப்பிடாது "ஒரு பெரியார்", "ஒரு மகான்" (சைவ நற்சிந்தனைகள் ப. 3, 41), "அறிஞர் ஒருவர்" (கம்ப. முன்னுரை), "சிந்தனைச் செல்வரும் தத்துவ விசாரத்தில் மூழ்கி-யிருப்பவருமான மகான்" (ஆறுமுக நாவலர் ப. 90), "தத்துவப் பெரியார் ஒருவர்" (ஆறுமுகநாவலர் ப. 95 - 96), "மேலைப் புலவர் ஒருவர்" (சிந்தனைக் களஞ்சியம் ப. 71) எனக் குறிப்பிட்டுள்ளார். பல இடங்களில் இவ்வாறு கூறக் காண்கிறோம். இவர்கள் கருத்துக்களை மேற்கோளாகவும் காட்டியுள்ளார். இவ்வாறு காட்டும்போது படிப்போர், ஆய்வோர் அவர்கள் யார் என அறிய விரும்புவார்கள். ஆய்வுக்கு இச்செய்தி இன்றியமையாததாகலாம். அவர்கள் யார் என ஆய்வாளர் தாமாகவே அறிந்து கொள்வது சிக்கலாகும்.

இதேபோன்று மற்றுமோர் சிக்கல் உண்டு. அது செய்திகளைப் பெரிதுபடுத்திக் காட்டிவிட்டுப் பின்னர் ஒன்றும் சொல்லாது ஒழிதலாகும். எடுத்துக்காட்டாக, நாவலரையும் அவர் மருமகர் பொன்னம்பலபிள்ளை-யையும் "ஒரு பிரதான இடத்தில் ஒருங்கு தரிசிப்பது எப்பொழுதாயினும் கிடைக்கக் கூடியதொன்று அன்று. நாவலர் அவர்கள் முன்னிலையில் பொன்னம்பலபிள்ளை தலைகாட்டுவதில்லை. அது மிகப் பெரிய சரித்திரம். அது கிடக்க" (கந்தபுராண கலாசாரம், ப. 35, 36) எனக் கூறி வேறு விஷயத்தைக் கூறுகிறார். அவர் கூறும் அந்தச் சரித்திரத்தை ஆய்வாளர் அறியமுடியாதமை சிக்கலாகும். எவ்வாறு, எங்கு அறியலாம் என்பதும் தெரியவில்லை.

## XI

பண்டிதமணி சைவாசிரிய கலாசாலையில் உப அதிபராக இருந்த பொ. கைலாசபதியவர்களை ஒரு தெய்வப் பிறவியாகவும் மனிதத் தெய்வ-மாகவும் (அத்வைத சிந்தனை ப. 78) மகாத்மாவாகவும் (அத்வைத சிந்தனை ப. 80) மகானாகவும் (அத்வைத சிந்தனை ப. 81) நெற்றிக் கண்ணராகவும் (அத்வைத சிந்தனை ப. 84) கொண்டவர். கைலாசபதியவர்கள் தமக்கு "நடாத்திய பாடம் ஆயிரத்துக்குக் குறையா" என்றும் "அவர் கூறியவற்றில் விளங்கிக் கொண்டவை எவை என்பது தான் பெரிய கேள்வி" என்றும் "விளங்காதவைகளையும் ஒதுக்காமல் எழுதியதுண்டு" (சிந்தனைக் களஞ்சியம் ப. 238) என்றும் கூறியுள்ளார். இவ்விடத்து "இராமானுஜத்தின் கணித முடிபுகளை "ஹார்டி" என்பவர் விளங்காமலும் எழுதிவைத்திருந்தார் என்று கேள்விப்பட்டதுண்டு" என்றும் கூறியுள்ளார். ஆயின், இன்று கைலாசபதியவர்களின் கருத்துக்களைத் தனியாக எடுத்து நாம் இனங்காண முடியாது நிற்பது பெரும் சிக்கலாகும். கைலாசபதியவர்களிடமிருந்து தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற சிந்தனைகளைப் பண்டிதமணி குறிப்பாகக் கூறியிருப்பின் அவை இருவர் பற்றியும் ஆய்வதற்குப் பயன்படும். கைலாசபதியின் சிந்தனையையும் பண்டிதமணியின் சிந்தனை விளக்கத்தையும் வேறுபடுத்திக் காணுதல் கூடும். ஆயின் கைலாசபதியவர்களின் கருத்துக்கள் எனக் குறிப்பாகக் கூறப்பட்டிருப்பவை - மேற்கோள் குறியீடுகளுக்குள் வருபவை மிக மிகச் சிலவே - இரண்டு அல்லது மூன்று போலும்.[22] உப அதிபர் கண்ட உண்மைகளுள் உதாரணத்துக்கு ஒன்று அத்வைத சிந்தனையில் (ப. 85) தரப்பட்டுள்ளது. பண்டிதமணியவர்கள் கைலாசபதியின் கருத்துக்களையும் விளக்கங்களையும் விளங்கிக் கொண்டாரோ இல்லையோ, பிறர் பொருட்டு (ஹார்டிபோல) அவற்றைத் திரட்டித் தந்திருக்கலாம். கைலாசபதியை நன்கு புரிந்தவர் ஒரே ஒருவர்தான் - பண்டிதமணிதான். அவரிடமன்றி வேறு யாரிடமிருந்து நாம் இதனை எதிர்பார்க்கலாம்? பண்டிதமணியின் சிந்தனைகள் பல நூலாக வெளிவந்துள. ஆயின், கைலாசபதியின் சிந்தனைகள் நமக்குக் கிடைத்தில.

இன்றைய நிலையில் கைலாசபதியவர்களின் சிந்தனைகளையும் அவற்றின் அடிப்படையில் பண்டிதமணியிடம் தோன்றிய கருத்துக்களையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் விளக்கக்கூடிய நிலையில் யாருமே இல்லை. வேண்டிய தரவுகளும் (data) இல்லை. சிந்தனைக் களஞ்சியத்தில் கைலாசபதி பற்றி 'அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்' (ப. 232) என ஒரு கட்டுரை வருகிறது. ஆய்வின்பொருட்டுப் பிறர் கைலாசபதியைப் பற்றி அறியமுடியாத வகையில் தான் இதனைப் பண்டிதமணி எழுதியுள்ளார். கைலாசபதியின் ஞானத்தை, சிந்தனையைத் தெற்றெனக் காட்டும் வகையில் அவர் சொன்ன கருத்துக்களையும் விளக்கங்களையும் தரவில்லை. கட்டுரையில் ஆய்வாளர் எதிர்பார்ப்பதைக் காணமுடியவில்லை. கட்டுரை ஆரவாரமாகவே அமைந்துள்ளது.

கட்டுரை இறுதியில் "இன்றைய பிரச்சினைகள் அனைத்துக்கும் உபஅதிபரின் போதனைகளில் சுத்தமான நீதியான தீர்வு உண்டு. அதனை எடுத்துச் சொல்லுவதற்கு ஆளும் கேட்போரும் வேண்டும்; அன்றிக் காலமும் இடமும் முக்கியமானவை. கேட்போரின்றிச் சொல்லுவதற்குத் தகுதியின்றிச் சொல்லத் தொடங்குவது பாலைக் கமரில் உகுப்பதாகும்." (சிந்தனைக் களஞ்சியம், ப. 238 - 239) என்று எழுதியுள்ளார். ஆய்விலே இந்நிலைப்பாட்டினை எவ்வாறு விளங்கிக்கொள்வது? பண்டிதமணிக்கு நாவலர் சரித்திரத்தையிட்டு வந்த கோபம் போன்ற கோபம் ஆய்வாளர்க்கு வரக்கூடாதா எனக் கேட்கலாம் போலத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## XII

சி. வை. தாமோதரம்பிள்ளை பற்றி எழுதும்போது "அவருடைய தலை "எஸ்.வி. ஆகக் குழம்பவில்லை; வாலும் ஆடவில்லை. ஆங்கிலம் வால் மடங்கித் தலைகுனிந்து தாமோதரம்பிள்ளையின் முன்னிலையில் வாய்பொத்தி நின்றது. சி.வை. தாமோதரம்பிள்ளை தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை ஆய்விட்டார். S. V. தாமோதரம்பிள்ளை என்று அவர் மறந்தும் எழுதுவதேயில்லை. அவர் இங்கிலீசுக்காரனுக்குப் பிறக்கவில்லை; தமிழன் பெற்ற அருந்தமிழ்ப்பிள்ளை" (கந்தபுராண கலாசாரம், ப. 45) என எழுதிய பண்டிதமணி காசிவாசி செந்திநாதையர் அவர்கள் இயற்றிய வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பாட வினாவிடை என்னும் நூலில் 130ம் வினாவிடையின் அடிக்குறிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள A B C D எனும் எழுத்துக்களின் பயன்பாட்டை மனமுவந்து ஏற்றுள்ளார் போலும். இப்பயன்பாடும் மாற்றம் எனும் புதியதொரு கலாசாரத்தின் பாற்பட்டதா என விளங்கிக் கொள்தல் வேண்டும்.

## XIII

ஆறுமுகநாவலர் என்னும் நூலின் அநுபந்தம் என்னும் பகுதியில் ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில் (ப. 169) பண்டிதமணி "நாவலர் எழுதியனவும் பதித்தனவுமாகிய புத்தகங்களை யாழ்ப்பாணத்தில் பெறவும் பாலபாடங்களையும் சைவ - வினாவிடைகளையும் இளம்பிள்ளைகள் பயிலவும் வழிசெய்யக் கடவார்கள்" என எழுதியுள்ளார்.[23] பாலபாடங்களுக்கும் சைவவினாவிடைகளுக்கும் இன்று எத்தகைய வரவேற்பிருக்கும் எனக் கருதுதல் அவசியம். நாவலர் காலத்துச் சூழ்நிலையில் அவை பெரும் பயனளித்தன. காலம் மாறிவிட்டது, சமுதாயம் மாறிவிட்டது, கருத்து மாறிவிட்டது, மொழி மாறிவிட்டது. ஒன்றைப் பற்றிய கருத்தைப் பிறருக்கு - சிறப்பாக இளைஞர்களுக்கு - கூறும் முறையும் மாறிவிட்டது. இவை மாறிக்கொண்டே செல்லும். பாலபாடங்கள், சைவவினாவிடைகள் ஆகியவற்றில் இன்றும் பயனுள்ளவை இல்லாமல் இல்லை. அவற்றைத் தெரிந்தெடுத்துத் தக்க முறையில் நூலாகப் பதிப்பிக்கலாம். நாவலர் பெருமான் எழுதியதில் கைவைப்பதற்கு நாம் யார் என்ற நோக்குடையவர்க்கு இது சிக்கலாகும். இவர்கள் மனமும் காலப்போக்கில் மாற்றமடையலாம். திருவாசகத்திற்கு உரை எழுதக்கூடாது என எண்ணிய ஒரு காலமும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# XIV

பண்டிதமணி செய்யுள் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டும் போது சிலவற்றை இரட்டை மேற்கோள் குறியீடுகளுக்கிடையேயும் வேறு சிலவற்றை ஒற்றை மேற்கோள் குறியீட்டிற்கிடையேயும் தந்துள்ளார். இவ்வாறே உரைநடையிலிருந்தும் மேற்கோள்கள் வருகின்றன (ஆறுமுக நாவலர் ப. 406). இரண்டு வகைக்கும் உள்ள வேறுபாடு விளங்கவில்லை. எடுத்துக்காட்டாக சிந்தனைக் களஞ்சியம் என்னும் நூலில் "நளன் தூது நாடகம் என்னும் நளன் வள்ளன்மை" என்ற கட்டுரையிலும் அதே நூலில் வரும் "தாடலைப் பட்டார் மணிவாசகனார்" என்ற கட்டுரையிலும் வரும் மேற்கோள் குறியீடுகளை ஒப்புநோக்குக. உரைநடையிலிருந்து மேற்கோள் தரும்போது எந்தவிதமான குறியீடும் இல்லாதிருக்கவும் காண்கிறோம். எடுத்துக்-காட்டாக, சிந்தனைக் களஞ்சியம் என்னும் நூற்கட்டுரை ஒவ்வொன்றின் முடிவிலும் பெரும்பாலும் நாவலர் கருத்துக்கள் மேற்கோளாகக் குறியீடின்றித் தரப்பட்டுள்ளன. பண்டிதமணி மொழி, இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்-களைப் பயிற்றியவர். பண்டிதமணியின் நூல்களை வெளியிட்டவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள். இவர்கள் அனைவரும் குறியீடுகளையும் அவற்றின் விளக்கத்தையும் அறிந்தவர்கள். பண்டிதமணியின் நூல்களைப் படிப்பவர்கள் தமிழ் மாணவர்கள் என்பதையும் அறிந்தவர்கள். குறியீடுகள் முறையாகக் கையாளப்படாதபோது ஆய்வாளர்க்கும் சிக்கல் என்பதை மேலும் விளக்கவேண்டியதில்லை.

செய்யுள் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டும்போது அவை எந்த இலக்கியத்தில் வருகின்றன என்று பெரும்பாலும் கூறியுள்ளார். ஆனால், சில இடத்துக் கூறவில்லை. உரைநடையிலிருந்து மேற்கோள் காட்டும்போதும் இவ்வாறே. எடுத்துக்காட்டாக, "வரிசை அறிதலோ அரிதே என்கிறார் கபிலர்" (கம்பராமாயணக் காட்சிகள் ப. 75) என்றும் "கோபம் மிகுதலாலே தவம் மிகுகின்ற கொடிய முனிவன் துருவாசன்" என்பது வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் வியாக்கியானம் (கம்ப-ராமாயணக் காட்சிகள் ப. 57) என்றும் கூறியுள்ளார். இவை எங்கிருந்து காட்டப்படுகின்றன எனத் தெரியவில்லை. மற்றுமோரிடத்து "நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு" என்று ஒருநாள் பிராட்டி சொன்னவள். இதனைக் கம்பர் சொல்வதற்கு மிக முன்னமே, புறநானூற்றில் ஒரு பெண், சகக மனஞ் செய்கின்றவள், பெருந்தோட் கணவன் பிரிந்தானாக, அவன் உடலைத் தகிக்கும் அழலும், தாமரைத் தடாகத்துக் குளிர்ந்த சலமும் ஒன்று என்றவள்" (கம்பராமாயணக் காட்சிகள் ப. 97) எனப் பண்டிதமணி எழுதியுள்ளார். இங்கு புறநானூற்றில் எந்தப் பாடலில் அந்தப் பெண் வருகிறாள் என்று கூறவில்லை. பண்டைய இலக்கியங்களில் நல்ல பயிற்சியுடையோர் மேற்கோள்களை ஒருவாறு கண்டறிந்து கொள்ள முடியும். ஆனால், இது அனைவர்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிதன்று. உரைநடையிலிருந்து காட்டப்படும் மேற்கோளைக் கண்டு-கொள்வது யார்க்கும் எளிதன்று. மேற்கோள்கள் எங்கிருந்து கையாளப்படு-கின்றன என வாசகர், ஆய்வாளர் அறிதல் வேண்டும். இச் செய்தி இல்லை-யென்றால் விளக்கம் குறையலாம்; ஆய்வு சிக்கலாகலாம்.

பண்டிதமணி பல கட்டுரைகளிலே இடையிடையே மூன்று உடுக்குறி அமைத்து எழுதியுள்ளார். சமயக் கட்டுரைகள் என்னும் நூலில் வரும் சில கட்டுரைகளில் ஓர் உடுக்குறி மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. உடுக்-குறிகளை எவ்விடத்து ஏன் பயன்படுத்தி உள்ளார் என்பதனை விளங்கிக் கொள்வது சிக்கலாக உள்ளது. ஒரு வரியையோ, ஒரு பந்தியையோ, சில பந்திகளையோ, ஒரு மேற்கோளையோ, பல மேற்கோள்களையோ இரண்டு வரிசை உடுக்குறிகளுக்கிடையே எழுதும் வழக்கத்தைப் பண்டிதமணியிடம் காண்கிறோம். கட்டுரையின் பிரதான கருத்தோடு செல்லாத-ஒரு குறிப்பாக வரக்கூடிய கருத்தை அல்லது கருத்துக்களை உடுக்குறிகளுக்கிடையே சில கட்டுரைகளில் தந்துள்ளார். அதே சமயம் சில கட்டுரைகளில் அடிக்குறிப்பு, குறிப்பு எனவும் வரக் காண்கிறோம். எடுத்துக் காட்டாக இலக்கிய வழிக்கட்டுரையொன்றின் முடிவில் கட்டுரையின் பகுதியாக "ஒரே ஒரு குறிப்பு" என எழுதப்பெற்றுச் சில கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன (ப. 67).

சமயக் கட்டுரைகள் என்னும் நூலில் வரும் ஒரு கட்டுரை "சிந்தனைக் களஞ்சியத்திலும்" வருகிறது. முதலில் ஓர் உடுக்குறி ஆங்காங்கு பயன்-படுத்தப்பட்டுள்ளது. பின்னர், "சிந்தனைக் களஞ்சியத்தில்" வரும் அதே கட்டுரையில் மூன்று உடுக்குறிகள் கையாளப்பட்டுள்ளன. முன்னர் ஓர் உடுக்குறி வந்த இடத்துத்தான் பின்னர் மூன்று உடுக்குறிகள் வந்துள்ளன எனக் கூற முடியவில்லை. உடுக்குறி வரும் இடம் மாற்றம் பெற்றுள்ளது. உடுக்குறியின் பயன்பாட்டில் ஓர் ஒழுங்குமுறை இருப்பதாகத் தெரியவில்லை. அதன் அர்த்தம் சிக்கலாக உள்ளது.

பந்திகளை அமைப்பதிலே ஒருவர் வெவ்வேறு முறைகளை மாற்றி மாற்றிக் கையாள்கின்றார் என்றால் அம்முறைகள் அர்த்தம் உள்ளவை என்றே கருதுதல் வேண்டும். பண்டிதமணி தமது கட்டுரைகளில் பந்திகளின் அமைப்பை இவ்வாறு மாற்றி மாற்றி அமைத்துள்ளார். ஆயின் அப்பந்திகளின் அமைப்புமுறையின் பொருள் ஆய்வாளர்க்குச் சிக்கலாக உள்ளது. எடுத்துக்காட்டாக,

" அபிமந்யுவின் சங்கநாத ஒலிவெப்பமே, இன்றும் நின்று, இன்று போல் என்றும் நின்று மனித இதயங்களை வெதுப்புமேயானால்,

அந்தச் சந்தர்ப்பத்தில் கூண்டிலடைக்கப்பட்ட அந்த மகா வீரசிம்ம-மான அபிமந்யுவின் இருதய வெப்பம் எப்படி இருக்குமோ! அந்த வெப்பத்தை யார் கற்பனை செய்யமுடியும்! அதனை ஒருவாறு கற்பனை செய்ய முடியு-மானால் இராம, இலட்சுமணர்கள் அணுகுகின்ற, இந்தப் பாலை,

அபிமந்யுவின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சுபோல் என்றும் ஆறாதரோ என்று ஒரு அளவுக்குச் சொல்லி அமையலாம்" (கம்பராமாயணக் காட்சிகள் ப. 95).

இவ்வாறு பந்திகளை அமைத்தல் நடையின்பாற் படுமாயினும் பந்திகளை ஏன் இப்படி அமைத்துக் கொண்டார் என்பதை விளங்கிக் கொள்வது சிக்கல்,

மேலும் ஓர் எடுத்துக்காட்டு.

" தாடகையின் ஆவியைப் பருகிக் கொட்டாவி தணிக்கக் காத்துக் கிடக்கின்றது அவன் கைப்பாணம். அப்படிப்பட்ட பாணத்தை,"அவள் ஆவியை உண்" என்று ஏவினானல்லன்; அவன் அந்தக்கரணஞ் சிறிதாயினும் தொழிற்படவில்லை.

"பெண்
என மனத்திடை
நினைந்தான்"

ஐயையோ, பேயும் இரங்குகின்ற பண்டம் அல்லவா எதிரில் நிற்பது" (கம்பராமாயணக் காட்சிகள் ப. 129).

பண்டிதமணி தமது கட்டுரைகளில் பந்திகளை அமைத்துக்கொள்ளும் விநோதத்தை கம்பராமாயணக் காட்சிகள் என்னும் நூலில் 28ஆவது கட்டுரையில் - வழிநடைக்காதை என்னும் கட்டுரையில் (V. பக். 141 - 145)- பரக்கக் காணலாம். பந்திகளின் முடிவிலே காற்புள்ளி இட்டுப் பல பந்திகளை எழுதிச் செல்வதைக் காணலாம்.

ஒரே கட்டுரை இரண்டு நூல்களில் வருகின்றது. பந்தி அமைப்பில் மட்டும் வேறுபாடுகள் உண்டு. எனவே, பண்டிதமணிக்கு இப்பந்தி அமைப்பு முறை முக்கியத்துவம் உடையதாக இருந்திருக்க வேண்டும். அதனை நாமும் விளங்கிக் கொள்தல் வேண்டும். "பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள்" என்னும் கட்டுரையின் பந்தியமைப்பு வேறுபாட்டை "சமயக் கட்டுரைகள்" என்னும் நூலிலும் (ப. 76) "சிந்தனைக் களஞ்சியம்" என்னும் நூலிலும் (ப. 240) காண்க.

## XV

பண்டிதமணி பற்றிச் சிலர் அவ்வப்போது எழுதியுள்ளனர்; இப்பொழுதும் எழுதுகின்றனர். இங்கு அனைவரையும் கருத்திற் கொள்வது எளிதன்று. எனவே, கனக செந்திநாதன், செபரெத்தினம், எப். எக்ஸ். ஸி. நடராசா, கலாநிதி சண்முகதாஸ் ஆகியோர் எழுதியவற்றை மட்டும் கருத்திற் கொள்வோம். கனக செந்திநாதன் "மூன்றாவது கண்" என ஒரு நூல் வெளியிட்டுள்ளார். அதனில் பண்டிதமணியின் வாழ்க்கைச் சுருக்கமும் வண்டமிழ்த் தொண்டும் கூறப்பட்டுள்ளன. செபரெத்தினம் எழுதியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழையடி வாழை என்னும் நூலாகும். அதனில் பண்டிதமணியையும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையையும் ஒப்பிட்டுள்ளார். நடராசா பண்டிதமணி பற்றிக் கட்டுரை எழுதியுள்ளார். கலாநிதி சண்முகதாஸ் பண்டிதமணி பற்றி "ஒரு யுக புருஷன் பண்டிதமணி" என மதிப்பீட்டுரையொன்று எழுதியுள்ளார். இது கம்பராமாயணக் காட்சிகள் என்னும் நூலில் பண்டிதமணி பற்றி ஓர் அறிமுகம் போல அமைந்துள்ளது.

இவை அனைத்திலும் பண்டிதமணி பற்றிப் பல அரிய செய்திகளும் கருத்துக்களும் உளவாயினும் ஒரு பக்தி நிலைப்பாடு செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. பக்தி நிலையிலே போற்றுதல் எழுவது உண்டு. அதனை இவற்றில் காண்கிறோம். சில சமயம் இந்தப் போற்றுதல் உச்ச நிலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. கருத்துக்களைக் கூறும் முறையும் கருத்துக்களைக் கூறுவதற்குக் கையாளப்பட்டுள்ள மொழியும் மொழிநடையும் அளவு கடந்த இரசிப்பைக் காட்டி நிற்கின்றன. நடுநிலை பிறழ்ந்து விருப்பு வெறுப்புக்கு ஆளாகிச் சிலவற்றைக் கூட்டுவதும், குறைப்பதும், மறைப்பதும், திரிப்பதும் இப்பாராட்டு மரபில் வருவன போலும். ஆய்வுக் கண்ணோட்டத்தில் விழிப்பாக இல்லாத இடத்து இவற்றைப் படிக்கின்றவர்கள் தம் சிந்தனை ஒருவழிப்படுத்தப்படுகிறது. இதனால் எழும் சிக்கலை உணராது ஆய்வாளர் குழப்பமடைந்து பெரியதோர் தாக்கத்திற்குள்ளாகிவிடுவர். யாரோ சொன்னார்கள், எழுதினார்கள்; ஆதலால் நாமும் அவ்வாறே சொல்லுவோம், எழுதுவோம் என்ற போக்கிலே அறிவியல் நோக்கைக்கூட மறந்துவிடக்கூடும்.

முதற்கண் "மூன்றாவது கண்" என்னும் நூலை எழுதிய கனக செந்திநாதனின் ஆய்வுப் பக்குவத்தையும் நோக்கையும் உணர்ந்து கொள்ள முயல்வோம்.[24] அவர் தம் நூலில் பண்டிதமணி பற்றியும் ஏனையோர் சிலர் பற்றியும் இலக்கியம் போன்ற விஷயங்கள் பற்றியும் எழுதியவற்றுள் சிலவற்றை ஆராய்வதன் மூலம் கனக செந்திநாதனின் நிலைப்பாட்டினை ஓரளவாவது உறுதியாகத் தெளிந்து கொள்ளலாம். அவரது பின்வரும் கருத்துக்களைச் சற்று நிதானத்துடன் விழிப்பாகச் சிந்திப்போம்.

1. "இக்காலச் சிந்தனையாளர்களில் ஈடுஇணையற்றவர் என்று போற்றப்படும் உப அதிபர் ................................" (ப. 6).

2. "சம்பாஷிணையை ஒரு கலையாக வைத்திருப்பவர் அவர்தான்" (ப. 7) (அவர்தான் என்பது பண்டிதமணி).

3. "கற்பனையின் எல்லையாகவும், சொற்பொழிவுத் தோன்றலாகவும் யாழ்ப்பாணத்தின் ஒளி விளக்காகவும் இருந்த மகாலிங்க சிவம் அவர்களையும்.............." (ப. 7).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. "தமிழ்நாட்டுப் புலவர்கள் மெச்சத் தலைநிமிர்ந்து நின்று யாழ்ப்பாணத்தின் பரம்பரைப் பெருமையைக் காத்த இரு பெரு மக்களின் (குமாரசாமிப் புலவர் கைலாசபிள்ளை) வாழ்க்கை முறைகளையுங் கற்றார்" (ப. 13).

5. "அருமையான தலைப்பும் அதற்கேற்ற புனைபெயரும் கொடுப்பதில் அவருக்கு நிகர் யாருமில்லை" (ப. 35) (அவருக்கு என்பது பண்டிதமணிக்கு).

6. "சிலப்பதிகாரம் - சிந்தாமணி - மணிமேகலை ஆகியன பொருட்பிறழ்வுடையன என அவர் வெளியிட்ட புலமை - இலக்கியம் - தமிழ் என்ற கட்டுரைக் குறிப்புக்கள் இன்னும் தகர்க்கப்படவே இல்லை. இவற்றை வைத்துக்கொண்டு தமிழ்பேசும் நல்லுலகம் எத்தனை வருடங்களுக்கும் ஆராயலாம்" (ப. 38) (அவர் என்பது பண்டிதமணி).

7. "பழைய இலக்கியங்களை எளிமை ஆக்குகிறோம் என்று சிலர் எழுதும் விளக்கம் அதன் புனிதத் தன்மையையே கெடுத்து விடுகிறது என்பது உண்மை" (ப. 50).

இன்னும் இவை போன்ற பல கருத்துக்களைக் காட்டலாம். கனக செந்திநாதனின் இத்தகைய கருத்துக்களை ஆய்வாளர் ஏற்றுக்கொள்வதற்குத் தயங்க வேண்டியுள்ளது. தமிழறிவுலகத்தை மிகக் குறுகச் செய்து பரந்த நோக்கிலே எழும் சிந்தனையின்றி ஆய்வின்றி ஏதோ மனதில் வந்தவற்றை ஏற்று உயர்படியிலுள்ள சொற்களால் (superlative words) கழிமிகையுரையாக (sweeping statements) கூறிச் செல்லும் போக்கினைக் காண்கிறோம். எழுத்திலும் கருத்திலும் நிதானத்தையும் சரிசமநிலையுடைய நோக்கையும் (balanced view) காணோம். ஏழாவது மேற்கோளில் "அதன் புனிதத் தன்மை" என்பது யாது? அது தெளிவற்றதாக உள்ளது. பழைய இலக்கியங்களுக்கு உள்ள புனிதத்தன்மை பிற்காலத்து இலக்கியங்களுக்கு இல்லையா? ஏன் இல்லை? ஒன்றுமே விளங்கவில்லை.

பண்டிதமணி நல்ல எழுத்தாளர் என்பதைக் காட்டுவதற்கு அவர் எழுதியவற்றிலிருந்து சிலவற்றைக் காட்டி "இப்படியெல்லாம் அழகிய தமிழில் எழுதியிருப்பவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள்" (ப. 35) என்று கனக செந்திநாதன் கூறியுள்ளார். ஆயின், கனக செந்திநாதன் காணும் "அழகிய தமிழ்" எது, அதன் பண்புகள் எத்தகையன, அதனை ஏன் "அழகிய தமிழ்" எனலாம், ஏனையோர் தமிழில் இருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது என்பவற்றிற்கு விளக்கம் இல்லை. மற்றுமோரிடத்து "அவர் எப்படிப்பட்ட புனைபெயருள் ஒளித்து விளையாடினாலும் அவருடைய இரசிகக் கூட்டம் அவரைக் கண்டுபிடித்துவிடும். அவருடைய "முத்திரை" எந்தக் கட்டுரையிலும் இல்லாமற் போகாது" (ப. 35 - 36) என்றும், "பண்டம், அண்ணலும் நோக்கினான், எவர்தாம் முன் அணைந்தனர், மாகமடங்கலும், மிண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாவாதம், உலோகாயதனெனும் ஒண்டிறற் பாம்பு, புல்லறிவிற் புத்தன், உண்டிருந்து வாழ்வதற்கே, நாவலர் பொன் மொழிகள் இவை பண்டிதமணியின் முத்திரைகள் (ப. 36) எனவும் எழுதியுள்ளார். பண்டிதமணியின் பாணிபற்றியும் (மொழிப்) புரட்சி பற்றியும் பேசப்பட்டுள்ளன (ப. 37). ஆயின், பண்டிதமணியின் முத்திரை யாது? பாணிகள் யாவை? அவர் செய்த புரட்சிகள் யாவை? அவை ஒவ்வொன்றின் பண்புகள் யாவை? பிறருடைய முத்திரை, பாணி ஆகியவற்றிலிருந்து வேறுபடும் முறை யாது? இவற்றை ஒப்பிட்டும் முரண்படுத்தியும் (compare and contrast) பெறக்கூடிய விளக்கத்தைப் புறநோக்கில் நிலை நாட்டுதல் வேண்டும். இந்த விளக்கத்தின் அடிப்படையில் யாரும் பண்டிதமணியின் முத்திரையை, பாணியைப் பரிசோதனைக்குட்படுத்தி இனங்கண்டு கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். ஆயின், கனக செந்திநாதனின் கூற்று அகநோக்கில் எழுந்த வெற்றுரையாகவே காட்சியளிக்கின்றது.

கனக செந்திநாதன் பண்டிதமணி பற்றிச் சில நல்ல வினாக்களை எழுப்பியுள்ளார். அவை பின்வருமாறு: "............. யாழ்ப்பாணத்திலே பண்டிதமணி சி. க. அவர்கள் போற்றிப் புகழப்படுவதேன்? அவர் சாதித்ததென்ன? தமிழ்நாட்டுப் பேராசிரியர்களைப் போல் நாற்பது புத்தகங்களையோ - நானூறு சிறுகதைகளையோ எழுதிவிட்டாரா? அல்லது சங்கத்துச் சான்றோர் நூல் எதற்காவது புத்துரை எழுதிப் புகழ்பெற்றுவிட்டாரா? (ப. 14). ஆயின், இவ்வினாக்களுக்குத் தெளிவான விடையை அவர்தம் நூலில் தேடிப் பார்க்கும் ஆய்வாளர் தக்க விடை காணாது ஏமாந்துபோக வேண்டியுள்ளது. எழுப்பிய வினாக்களுக்கு ஒப்பீட்டடிப்படையில்தான் விடை காணுதல் முடியும். இது எளிதான காரியமன்று.

ஓரிடத்து "நல்ல தலைமையும், சிறந்த இரசிகக் கூட்டமும் சந்தித்து விட்டால் அவர் பிரசங்கம் உச்ச நிலைக்குப் போய்விடும். இவை இல்லாது தோற்றுப்போன பிரசங்கங்களும் உண்டு. தமிழ்விழாப் பிரசங்கம் அப்படித் தோற்ற பிரசங்கத்தில் ஒன்று" (ப. 33) என எழுதியுள்ளார். "நல்ல தலைமை" எது? "சிறந்த இரசிகக் கூட்டம்" எது? பிரசங்கத்தின் வெற்றி தோல்வியைக் கண்டு அதன் அடிப்படையில் நல்ல தலைமையும் சிறந்த இரசிகக் கூட்டமும் சந்தித்தன அல்லது சந்திக்கவில்லை என முடிவு கட்டுவதா அன்றி நல்ல தலைமையும் சிறந்த இரசிகக் கூட்டமும் சந்தித்தனவா அல்லது சந்திக்கவில்லையா எனக் கண்டு அதன் அடிப்படையில் பிரசங்கம் வெற்றி அல்லது தோல்வி என முடிவுகட்டுவதா என விளங்கவில்லை. கனக செந்திநாதன் காட்டும் காரணம் தெளிவற்றதாக, பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது.

அன்று விழாவிற்குத் தலைமை தாங்கியவர் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள். விழா நடைபெற்ற இடம் திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரி. குழுமியிருந்தவர்கள் வழக்கம் போல யாழ்ப்பாணத்தவர்கள்தான். பண்டிதமணியின் வழக்கமான இரசிகர்களும் இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவென்ற காரணத்தினால் மக்கள் கூட்டம் மிக அதிகமாகக் காணப்பட்டது. அன்று தான் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் (பொருள் : இக்கால இலக்கியம்) பேராசிரியர் மு. வரதராசனார் (திருக்குறள்), திருமதி. மகேஸ்வரி மகாதேவா (சமய இலக்கியங்கள்), வித்துவான் க. வேந்தனார் (வாழும் இலக்கியம்) ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். சீனிவாசராகவனை அடுத்து பண்டிதமணி 'தமிழ்' என்னும் பொருள் பற்றிப் பேசினார். அன்று நல்ல தலைமையும் சிறந்த இரசிகக் கூட்டமும் சந்திக்கவில்லை என்று கண்மூடிக் கொண்டு எளிதாகக் கூறிவிட முடியுமா?

செபரெத்தினம் பெரும்பாலும் கனக செந்திநாதனைப் பின்பற்றியே பண்டிதமணி பற்றி எழுதியுள்ளார். எனவே கனக செந்திநாதன் பற்றிக் கூறிய கருத்துக்கள் பெருமளவு செபரெத்தினத்துக்கும் பொருந்தும்.

செபரெத்தினம் ஓரிடத்து பண்டிதமணி பற்றி "பிழையைப் பிழை என ஒப்ப மறுக்கும் போலிக் கூச்சம் இல்லாதவராகிய இவர் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்னும் பெருங்காப்பியங்கள், பொருட் பிறழ்வுடையன என்று எடுத்துக்காட்டியபோது தமிழறிஞர்களிடையே பரபரப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டபோதிலும், அதனை வேறு ஆதாரங்கள் காட்டி மறுத்துரைக்கவோ கண்டிக்கவோ ஒருவரும் முன்வரவில்லை" (ப. 61) என எழுதியுள்ளதைப் படிக்கும்போது வேந்தனார் சிலப்பதிகாரம் பற்றிப் பண்டிதமணியின் கருத்துக்களை மறுத்து எழுதியது நினைவிற்கு வருகிறது. எனவே செபரெத்தினத்தின் இத்தகைய முடிபை ஏற்றுக்கொள்வது ஆய்வாளருக்குச் சிக்கலாகும். இங்கு சிலப்பதிகாரம் பற்றிப் பிற்காலத்தில் எழுந்த ஆய்வு நூல்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொள்தல் வேண்டும். அதன்மூலம் சமுதாயத்தில் சிலம்பு ஏற்படுத்திய தாக்கத்தை உணர்ந்து கொள்ளலாம். சிறந்த இலக்கியம் என உலக மொழிகள் சிலவற்றில் சிலம்பு மொழிபெயர்க்கப்பட்டுள்ளதையும் நினைவிற் கொள்க.

ஒருவர் பற்றி இருவர் எழுதியதில் முரண்பாடு இருப்பின் அது ஆய்வாளருக்குச் சிக்கலாகும். பண்டிதமணி என்ற பட்டம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கு யார் கொடுத்தது? கனக செந்திநாதன்படி "கல்கி" தான் (ப. 25). செபரெத்தினத்தின்படி "முன்பு தினகரன் பத்திராதிபராயிருந்தவரும், தமிழபிமானம் உள்ளவருமான வி. கே. பி. நாதன் அவர்கள்" (ப. 92) ஆவர்.

இனி எப். எக்ஸ். ஸி. நடராசா அவர்கள் பண்டிதமணியின் மொழிநடை பற்றிக் கூறிய கருத்தைச் சிந்திப்போம். அது பின்வருமாறு:

> "சொற்கள் சொட்டுச் சொட்டாக வரும்; பொட்டுப் பொட்டாகவும் வரும். திலகமிட்ட நுதல் பொலிந்து பேரழகுடன் விளங்குதல் போல பண்டிதமணியின் வசன நடையும் துலங்கும். சொட்டுச் சொட்டான சொற்களினூடே பொட்டுமிட்டுப் பொடியும் வைப்பார் ஊடுருவி வாசித்தால் உண்மை விளங்கும்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



இது அகநிலையில் எழுந்த ஆரவார வருணனையாகும். இங்கு கற்பனையும் உண்டு. கற்பனை செய்து பார்க்கக் கூடியவர்கள் தான் இதனை விளங்கிக் கொள்ள முடியும். எப். எக்ஸ். ஸி நடராசா அவர்களைப் போல கற்பனைத் திறனுள்ளவர்கள் பண்டிதமணியின் மொழிநடையை எத்தனையோ விதமாக வருணிக்க முன்வரலாம். இவற்றை ஏற்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது. ஏற்பதற்கு ஆதாரங்கள் காட்டுதல் அரிது; மறுப்பதற்கும் ஆதாரங்கள் காட்டுதல் அரிது. சொற்கள் சொட்டுச் சொட்டாக வருகின்றன என்றோ வரவில்லை என்றோ நிலைநாட்டுதல் எங்ஙனம்? ஆய்ந்து ஆழ்ந்து நோக்கும் போது இத்தகைய கூற்றுக்கள் அர்த்தம் அற்றவையாகவே அமைகின்றன.

கனக செந்திநாதன், செபரெத்தினம், எப்.எக்ஸ்.ஸி. நடராசா ஆகியோர் தற்கால ஆய்வு முறைகளில் பயிற்சி பெறாதவர்கள். அவர்கள் இவ்வாறெல்லாம் எழுதுவது ஆச்சரியமன்று. அவர்கள் மரபுவழி நிற்பவர். ஆனால், தற்கால ஆய்வு முறைகளில் சிறந்த பயிற்சி பெற்றவர்களும் நவீன மொழியியலில் பெறுதற்கரிய பயிற்சி பெற்றவர்களும் தம் பயிற்சியைத் துறந்து மரபுவழி நிற்பவர் போல் எழுதுவது பெரிய ஆச்சரியம் ஆகும். கலாநிதி சண்முகதாஸ் அவர்கள் "ஒரு யுக புருஷன் பண்டிதமணி" என்னுங் கட்டுரையில் முன் குறிப்பிட்டோர் வழிநின்று பண்டிதமணியை "ஒரு யுக புருஷன்" ஆக வருணித்துள்ளார். இதன் பொருள் பொருந்துமாற்றைச் சிந்தித்தல் வேண்டும். மேலும், "பண்டிதமணியின் வாழ்க்கை ஒரு பெரிய கதை என்னால் அக்கதையைச் சொல்ல முடியுமோ தெரியவில்லை. "பாற்கடலை ஆசையாலே பூசை நக்கியது போல" என்றானே கம்பன். என் நிலையும் அதுதான்" என எழுதியுள்ளார். எவ்.எக்ஸ்.ஸி. நடராசா "சொற்கள் சொட்டுச் சொட்டாக வரும்........." எனக் கூறியதைப் பொன்னே போற் போற்றித் தமது கட்டுரையில் மேற்கோளாகக் கொண்டுள்ளார். கலாநிதி அவர்கள் பண்டிதமணியின் "தத்துவ விசார நடை இறுக்கியிறுக்கி அமைக்கப்பட்ட-தொன்றாகும்" என வருணித்துள்ளார். "இறுக்கியிறுக்கி" என்பதன் பொருள் பொருந்துமாறு யாதோ என விளங்கவில்லை. மற்றுமோரிடத்து "திரு.பொ. கைலாசபதி எழுத்து நடையினையும் அவரிடங் கொடுத்துவிட்டார் போலி-ருக்கிறது" என எழுதியுள்ளார். இங்கு அவரிடம் என்பது பண்டிதமணியிடம் ஆகும். ஆயின் இவ்வாறு கருதுவதற்குத் திரு. கைலாசபதியவர்கள் எவ்வளவு எழுதியுள்ளார்; அவர் எழுத்துக்கள் நமக்குக் கிடைக்கின்றனவா எனச் சிந்தித்தல் வேண்டும்.

இவ்வாறு பண்டிதமணி பற்றி எழுதுவோர் தம் மனம்போன போக்கில் எழுதுவதற்கு மக்கள் மத்தியில் பெரும்செல்வாக்கு உண்டு; வரவேற்பு உண்டு. பத்திரிகைகளும் போற்றி வரவேற்று வெளியிடுகின்றன. இவ்வாறு எழுதாதுவிடின் மதிப்பு இல்லாது போய்விடும் போலத் தோன்றுகிறது. பல்கலைக்கழகத்திடமும் பலர் இதனையே எதிர்பார்க்கின்றார்கள் போலும்.[25]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY



ஆயின் அந்த எதிர்பார்ப்பிற்கு நாம் அடிமையாதல் கூடுமா? கூடுமாயின் மக்களைத் தவறான வழியில் இட்டுச்சென்ற குற்றத்திற்கு வருங்காலத்தில் ஆளாக மாட்டோமா?[26] மேற்கூறிய சூழலை மாற்றி ஆய்வு என அகில உலக ரீதியாகப் போற்றப்படுமொன்றை நிலைநாட்டுதல் நம் கடன் அன்றோ? சிந்திப்பீர்களாக. அனைத்துலகும் போற்றும் ஆய்வு முறையைத் தமிழிலும் ஏற்படுத்தி வழிகாட்ட வாரீர்.

## குறிப்புகள்

1. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கலைப்பீடத்தில் ஆய்வையும் ஆய்வு நெறியையும் போற்றி வளர்க்கும் பொருட்டு அமைக்கப்பெற்ற Academic Forum ஆதரவில் 17.07.1987 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட முதலாவது ஆய்வுக் கட்டுரை; சில மாற்றங்களுடன் இங்கு வெளியாகிறது. முதலில் இக்கட்டுரையை எழுதியபோது பயனுள்ள சில கருத்துக்களைக் கூறிய பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களுக்கு நன்றி.

2. 1959இல் வெளிவந்த "கந்தபுராண கலாசாரம்" என்னும் நூலைத் தொடர்ந்து வெளிவரும் பண்டிதமணியின் நூல்கள் :

    1. இராமாயணக் கட்டுரைகள்
    2. அன்பினைந்திணை
    3. சைவசமயக் கட்டுரைகள்
    4. கந்தபுராணக் கட்டுரைகள்
    5. துறவும் கீதையும்
    6. காரைக்காலம்மையார்
    7. தெய்வயானை திருமணம்
    8. கோயில்
    9. திருவருட்பயன் விருத்தியுரை
    10. திருவருட்பயன் சிற்றுரை

    எனக் கூறப்பட்டது. பின்னர் இவற்றில் சில மாற்றங்கள் நடைபெற்றன போலும்.

3. அணிந்துரை மஞ்சரி என ஒரு நூல் வெளிவர இருக்கிறது. எனினும், பண்டிதை திருமதி பொன். பாக்கியம் எழுதிய நாவலர் சரித்திர ஆராய்ச்சி என்னும் நூலுக்குப் பண்டிதமணி வழங்கிய அணிந்துரை ஆறுமுகநாவலர் என்னும் நூலில் நாவலர் சரித்திர ஆராய்ச்சி என்னும் தலைப்புடன் கட்டுரையாக வெளிவந்துள்ளது. பண்டிதையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பெயரும் அந்நூற்கு எழுதப்பட்ட அணிந்துரையின் தலைப்பும் ஒன்றாகிவிட்டது! பண்டிதமணியின் நாவலர் என்னும் நூல் கனகரத்தின உபாத்தியாயரின் ஆறுமுகநாவலர் சரித்திரத்திற்கு (இரண்டாம் பதிப்பு) முன்னுரையாக எழுதப்பட்டது.

4. பண்டிதமணி "டி.கே.சி. என வழங்குகின்ற சிதம்பரநாத முதலியார் இலக்கிய இரசிகர். அவருக்குக் கம்பராமாயணமென்றால் உணவு வேண்டா. அவருடைய உயிர்ப்பு கம்பராமாயணம்" (சிந்தனைக் களஞ்சியம் ப. 52) என எழுதியுள்ளார். ஆயின் இன்று அறிவியல் அடிப்படையில் ஆய்வோர் டி.கே.சி. யை வேறு கண்கொண்டு நோக்குவர். அவர் இரசனையை ஏற்பதற்குத் தயங்குவர். மு. வரதராசன் சங்கப் பாடல்களுக்கு எழுதிய விளக்கத்தை, இரசனையை - குறிப்பாக ஓவச் செய்தி போன்றவற்றை - கருத்திற் கொள்க.

5. (கதிரைவேற்பிள்ளை) என அடைப்புக்குறிக்குள் விளக்கத்திற்காகத் தரப்பட்டது. நூலில் இல்லை.

6. பண்டிதமணிக்குக் கால உணர்வு சிறிதும் இல்லையெனக் கூறமுடியாது. வண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தமக்கு நடந்த நேர்முகப் பரீட்சை நாளை நினைவிற் கொண்டு 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி என எழுதியுள்ளார் (சிந்தனைக் களஞ்சியம் ப. 22).

7. இலக்கிய வழியிலும் 'நாவலர் எழுந்தார்' என்னுங் கட்டுரை வருகிறது. அங்கு இச்செய்தி கூறப்படவில்லை.

8. இதனைத் தற்பொழுது பல்கலைக்கழகத்து ஆராய்ச்சி மாணவர்கள் ஆராய்கின்றார்கள். காண்க. இ. சுபதினி, தமிழ்மொழியில் லகரமெய்யீற்றுப் புணர்ச்சி: அன்றும், இன்றும். (வெளிவரவுள்ளது)

9. கட்டுரைகள் பலவற்றிலும் திரும்பத் திரும்பக் கூறப்படும் கருத்துக்களையும் காட்டப்பெறும் மேற்கோள்களையும் ஒன்று திரட்டினால் பண்டிதமணியின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து ஊறி மேலோங்கி நின்ற கருத்துக்கள் எனச் சிலவற்றைக் கூறமுடியும் போலும்.

10. ஆய்வாளர் "ஆய்வுமொழி", "அறிவியல் மொழி" (empirical language) எனப் பேசுவதைக் கருத்திற் கொள்க.

11. கைலாசபிள்ளையின் ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் "அன்றைய பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர் விட்டழாதவர் அங்கே ஒருவருமில்லை. வித்தியாசாலையிலுள்ள தூண்கள் மரங்கள் தாமும் உருகின. இதுவே இவருடைய கடைசிப் பிரசங்கம்" (ப. ஙங) என உள்ளது. இதுதான் ஆதாரம் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இங்கு நாவலர் சரித்திரத்தை "கனகரத்தினம்பிள்ளை எழுதியது கொஞ்சம் சுருக்கமானது மாத்திரமன்றிச் சில கதை மாறுபாடு-களையும் உடையது; செல்லையாபிள்ளை எழுதியது மிகச் சுருக்க-மானது" என்று கைலாசபிள்ளை தமது ஆறுமுகநாவலர் சரித்திரம் என்னும் நூலின் முகவுரையில் எழுதியது நினைவிற்கு வருகிறது. செல்லையாபிள்ளை எழுதிய நாவலர் சரித்திரம் பற்றிப் பணிடிதமணி ஒன்றும் குறிப்பிடவில்லை.

13. இப்பொழுதுகூட பல்கலைக்கழக நிலையில் யாராவது முயன்று இப்பணியைச் செய்யின் அது மிகவும் பயன்படும். இதனைத் தமிழறிஞர் மனங்கொள்தல் வேண்டும். இது செய்ய முடியாத காரியமன்று.

14. இங்கே தரப்பட்டுள்ளவற்றுள் சில "பண்டிதமணி சிந்தனைகள்" எனப் பெரிதும் போற்றப்பட்டு நாளிதழ்களில் வெளியிடப்பட்டன. பார்க்க ஈழநாடு 22.03.87. (ப. 7).

15. ஆயின் சில விஷயங்களில் பண்டிதமணி ஆறுமுகநாவலர் பெருமானையும் புத்தர்பெருமானையும் ஒப்பிட்டுப் பேசியுள்ளார். பார்க்க "ஆறுமுக நாவலர்" (ப. 16).

16. இங்கு ஆறுமுகநாவலரின் இலக்கணச் சுருக்கம் பெரும்பாலும் நன்னூல் அடிப்படையில் எழுந்தது என்பதை நினைவிற் கொள்தல் வேண்டும். நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை பற்றியும் சிந்திக்க. மேலும், நாம் ஆய்வு முறையில் (research methodology) இன்னும் முன்னேறவில்லை. முன்னேற்றங் கண்ட பிறநாடுகள் நாம் எழுதுவதை மதிக்க வேண்டும்என விரும்புவதில் தவறுமில்லை. பல்கலைக்கழகங்களில் இருந்து தமிழ் ஆராய பிரித்தானிய நாட்டிற்குச் செல்கிறார்களே எனக் கேலி செய்த காலமும் உண்டு. அங்கு செல்வது பெரும்பாலும் ஆய்வு முறையை அறிந்து கொள்வதற்காகவே.

17. இராமலிங்கர் - நாவலர் வழக்குப் பற்றி சுத்தானந்தர் கொண்ட முடிபையுங் கற்பனை என்கிறார் "நாவலர் சரித்திர ஆராய்ச்சி" எழுதிய பண்டிதை திருமதி பொன். பாக்கியம். பார்க்க ப. 31.

18. எடுத்துக்காட்டாக பண்டிதமணி ஆறுமுகநாவலர் என்னும் நூலில் "நாவலர் சரித்திர ஆராய்ச்சி" என்னும் கட்டுரையில் "ஜனநாயக உலகம்" பற்றிப் பேசுகிறார்.

19. "நாவலருக்கு இனி அங்கே இடமில்லை" என்பது வீண் அச்சமாகும். ஆய்வின் அடிப்படையில் கருத்து வேறுபாடு இருக்கலாம். அதனை அறிஞர் வரவேற்று ஆராய்ந்து உண்மை காண்பது அழகு. நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு நின்று விட்டது; முடிந்துவிட்டது எனக் கூற முடியுமா? நாவலர் பற்றிய ஆய்வு இக்கால முறைக்கேற்றபடி முழுமையாக அறிவியலடிப்படையில் நடைபெறவில்லை. எதிர்காலத்தில் மீளாய்வு செய்ய வேண்டியும் ஏற்படலாம்.

20. "இன்றுவரையும் தமிழிலே குறியெழுத்தில் எழுதும் வகை இல்லாமையினால் இவருடைய பிரசங்கமொன்றும் பூரணமாக அச்சில் வரவில்லை. அது பெருந்துக்கம்" (த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம்).

21. "பாதிரியாரும் தமக்குக் கீழேயுள்ள கிறிஸ்தவர்கள் பலர் பஞ்சாட்சரக் (சம்பளம்) கிறிஸ்தவர்களென்றும், சைவருள்ளும் இவர் ஒருவரே சரியானவரென்றும் நிச்சயமாக அறிந்துகொண்டபடியாலும், தமக்கு இவர் போன்ற வேறு பண்டிதர் அகப்படாமையினாலும், இவருடைய கேள்விகளுக்கெல்லாம் உடன்பட்டார்" (த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், ப. கக) (இவர் என்பது ஆறுமுகநாவலர்).

22. கந்தபுராண போதனை என்னும் நூலில் வரும் "சமயத்தைப் பற்றிய சில கருத்துக்கள்" என்னும் கட்டுரையில் "எப்படிப்பட்டவர்கள் சமயபாடம் படிப்பிக்கலாம்" என்று ஒரு மகானிடம் கேட்டபோது கிடைத்த விடையை பண்டிதமணி தந்துள்ளார். அந்த மகான் உபஅதிபர் தானா என்ற எண்ணம் தோன்றுகிறது.

உப அதிபர் கைலாசபதி அவர்களின் ஓரிரு சிந்தனைகளைப் பிற நூல்களிலும் காணலாம். பண்டிதை திருமதி பொன். பாக்கியம் எழுதிய நாவலர் சரித்திர ஆராய்ச்சி என்னும் நூலின் முன்னுரையில் "உப அதிபர் அவர்கள், "ஒருவருக்கு நோக்கு வேறு, அவர் நிற்கும் நிலைக்களம் வேறு" என்று போதித்தது உண்டு" என வருவதைக் காண்க.

23. பண்டிதமணியின் பரிந்துரையை ஏற்றுப்போலும் யாழ்ப்பாண மாவட்டக் கலாசாரப் பேரவை சைவ வினாவிடை முதலாம் புத்தகத்தை அச்சேற்றியுள்ளது.

24. கனக செந்திநாதனின் "மூன்றாவது கண்" என்னும் நூலுக்கு 18.10.59 இல் வெளிவந்த ஞாயிறு தினகரனில் யான் மதிப்புரை எழுதியதாக நினைவில் உண்டு. பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து தினகரனில் பணியாற்றிய அந்நாளில் என்ன எழுதினேன் என்பது நினைவில் இல்லை. அதனை இப்பொழுது பார்த்துப் படிக்கும் வாய்ப்பும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இத்தகைய எதிர்பார்ப்பை 20.07.1987 அன்று வெளிவந்த முரசொலியில் "பொடிப்பொழுது" என்னும் பகுதியில் எழுதப்பெற்ற செய்தியிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

26. பொடிப்பொழுதுச் செய்தியைத் தவறானது என முற்றிலும் மறுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து துணைவேந்தராக இருந்த தமிழ்ப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் 15.09.1987 அன்று வெளிவந்த ஈழநாடு நாளிதழில் (ப. 4) எழுதியதைக் காண்க. ஆய்வுநெறி உணராதோர் எதிர்பார்ப்பிற்குப் பல்கலைக்கழகம் அடிமை ஆதல் ஆகாது என்பதே பேராசிரியரின் உள்ளக் கிடக்கை.

## உசாத்துணை நூல்கள்


கணபதிப்பிள்ளை, சி. (1955), *இலக்கிய வழி*, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

................................ (1959), *பாரத நவமணிகள்*, செந்தமிழ்மன்ற வெளியீடு, சாவகச்சேரி.

................................ (1959), *சைவநற் சிந்தனைகள்*, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

................................ (1959), *கந்தபுராண கலாசாரம்*, சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

................................ (1960), *கந்தபுராண போதனை*, அகில இலங்கை சைவ இளைஞர் மத்திய மகாசபையினர், தெல்லிப்பளை.

................................ (1961), *சமயக் கட்டுரைகள்*, பதிப்பாளர் : பழைய மாணவர்கள், சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி.

................................ (1963), *இருவர் யாத்திரிகர்*, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

................................ (1964), *இலக்கிய வழி*, (திருத்தப் பதிப்பு) திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, பழைய மாணவர் சங்க வெளியீடு.

................................ (1968), *நாவலர்*, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் 120ம் ஆண்டு ஞாபக வெளியீடு.

................................ (1978), *சிந்தனைக் களஞ்சியம்*, பண்டிதமணி பாராட்டு விழாச் சபை வெளியீடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

................................... (1979), *கோயில்*, கொழும்பு அண்டர்சன் மாடி நிரைச் சைவ கலாசாரமன்ற வெளியீடு, கொழும்பு.

................................... (1979), *ஆறுமுக நாவலர்*, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்களின் தென்மராட்சி பாராட்டுவிழாச் சபை.

................................ (1980), *கம்பராமாயணக் காட்சிகள்*, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

.............................. (1983), *அன்பினைந்திணை*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

................................. (1984), *அத்வைத சிந்தனை*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

................................... (?), *கதிர்காம வேலவன் பவனி வருகிறான்*, மட்டுவில், சாவகச்சேரி.

கனகரத்தின உபாத்தியாயர், வே. (1968), *ஆறுமுகநாவலர் சரித்திரம் (மறுபிரசுரம்)*, யாழ்ப்பாணம் நாவலர் நூற்றாண்டு விழாச் சபையின் வெளியீடு.

கைலாசபிள்ளை, த. *ஆறுமுகநாவலர் சரித்திரம்*.

கனக, செந்திநாதன். (1959), *மூன்றாவது கண்*, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

செபரெத்தினம், க. (1962), *வாழையடி வாழை*, அரசு வெளியீடு, கொழும்பு.

நீதிவாணன், ஜெ. (1979), *நடையியல்*, முல்லை வெளியீடு, மதுரை.

பாக்கியம், பொன். (1970), *நாவலர் சரித்திர ஆராய்ச்சி*, வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம்.

Enkvist, N. E. (et al) (1964), *Linguistics and Style*, Oxford University Press, London.

Spencer. John (ed) (1965), *Linguistics and Style*, Oxford.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# பண்டிதமணியின் மொழிநடை

## I

'பண்டிதமணியின் மொழிநடை' என ஒன்று உண்டா? உண்டு என்பதே விடை. ஆயின் எப்படித் தெரியும்? பண்டிதமணியின் நூல்களைப் படித்த பழக்கத்தினால் ஏற்படும் உள்ளுணர்வு அவ்வாறு கூறுகிறது.' அந்த உள்ளுணர்வை நம்பலாமா? நிலை நாட்டுதல் கூடுமா?

உலகில் ஒருவரைப்போல மற்றொருவர் இல்லை. இதே போன்று ஒருவரைப் போன்று மற்றொருவர் மொழியைப் பேசுவதில்லை; எழுதுவதுமில்லை. இது மொழியியற் கருத்தும் ஆகும். எனவே மேற்கூறிய உள்ளுணர்வு பிழையாகாது. உள்ளுணர்தல் ஒன்று; அதனை நிலைநாட்டுதல் வேறொன்று. உள்ளுணர்வைத் தூண்டுதலாகக் கொண்டு அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து உண்மை எனப் போற்றப்படுவதைத் தக்க சான்றுகளுடன் நிலைநாட்டுதல் வேண்டும்.

பண்டிதமணியின் மொழிநடை 'நல்ல நடை', 'அழகான நடை', 'அருமையான நடை', 'எளிய நடை', 'சுவையுள்ள நடை' எனப் பலர் பேசக் கேட்டுள்ளேன். ஆயின் இத்தகைய நடைகளை வரையறுத்து விளக்குவார் இல்லை. எனவே இத்தகைய கூற்றுக்கள் விளக்கமற்றுப் போகின்றன; ஆதாரமற்ற தற்சார்புடைய கூற்றுக்களாக அமைந்து விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

பண்டிதமணியின் மொழிநடையை ஏனையோரின் மொழிநடை-யிலிருந்து வேறுபடுத்திய பின்னர்தான் ஒட்டு மொத்தமாகப் பண்டிதமணியின் மொழிநடை எனப் பேசுதல் கூடுமன்றோ? வேறுபடுமாற்றை ஒப்பியல் அடிப்படையில்தான் கண்டுகொள்ள முடியும். பண்டிதமணியின் மொழி நடையை மொழி ஆட்சியின் பல நிலைகளிலே புள்ளியியல் அணுகுமுறையை மேற்கொண்டு ஆராய்தல் வேண்டும். பண்டிதமணியின் தனிக் கூறுகளை ஒப்பியல் அடிப்படையில் சுட்டிக் காட்டுதல் வேண்டும். இதன் பொருட்டுப் பண்டிதமணியின், நூல்கள் அனைத்தையும் அவை எழுந்த கால வரிசைப்படி துருவித்துருவிப் படித்தல் வேண்டும். பண்டிதமணியின் சமகாலத்தவர் நூல்களையும் மொழி நோக்கிலே படித்தல் வேண்டும். பழைய மொழி-யமைப்பையும் கருத்திற் கொள்ளல் வேண்டும். தக்கதோர் நெறி நின்று திரட்டிய தகவல்களை ஒப்பீட்டாய்வு செய்த பின்னர்தான் பண்டிதமணியின் மொழிநடை பற்றி நிதானமாகப் பேச முடியும். இது எளிதான காரியமன்று; நீண்ட நாள் ஆய்வாகும்.

ஆதலால் இங்கு பண்டிதமணி எழுதிய நூல்களுள் "இலக்கிய வழி" என்னும் நூலை மட்டும் கருத்திற்கொண்டு அவரது மொழி பற்றிச் சில கருத்துக்களைத் தற்காலிகமாகக் கூற முற்படுவோம்.[2]

## III

ஈழநாட்டுப் புலவர் என்னுங் கட்டுரையில் சின்னத்தம்பிப் புலவரைப் பற்றிக் கூறும்போது பண்டிதமணி "இலக்கணத் தமிழிலே, "முதலியார் வீடு யாதோ?" என்று வட தேசத்து வித்துவான் சிறுவர்களை வினாவினார்" என்று எழுதியுள்ளார். இங்கு "இலக்கணத் தமிழ்" என்னும் தொடரையும் அது பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தையும் கருத்திற் கொள்க. இவ்விடத்து "இலக்கணத் தமிழ்" என்று விதந்து கூறியதன் காரணம் யாது? 'முதலியார் வீடு', 'முதலியார் வளவு' போன்ற தொடர்கள் சாதாரண மக்கள் பேச்சிலும் சிறுவர் பேச்சிலும் வழங்குபவை. "யாதோ" என்பதற்குப் பதிலாக 'எது' எனினும் இலக்கணத் தமிழ் ஆகும். ஆனால் 'எது' என்னும் வினாச் சொல் விலக்கப்பட்டுள்ளது. காரணம் அது சிறுவர்மொழியிலும் வழங்குவது என்றதனால் போலும். "யாதோ" என்பது பொதுவாகச் சிறுவர் மொழி வழக்கில் வருவதில்லை. அது சிறுவர்களுக்குப் புதுமையான மொழி வழக்காகும். எனவே தான் அதனைச் சுவாரஸ்யமாக "இலக்கணத் தமிழ்" என்று பண்டிதமணி கூறினாரோ!

பண்டிதமணி யார் யாரை நினைவிற் கொண்டு தமது கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினாரோ அவர்கள் அனைவருக்கும் அவரது மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. பண்டிதமணி கூறிய "இலக்கணத் தமிழ்" போன்ற தமிழ் அவரது நூலில் இல்லை எனலாம். தாம் எழுதுவது மற்றவர் பொருட்டு என்பதனை என்றும் மறந்ததில்லை. பண்டிதமணி பெரும்பாலும் தற்காலத்து வழக்கு முறைகளை அனுசரித்தே எழுதியுள்ளார்.

## IV

தமிழ் மொழியிலே உள்ள எத்தனையோ வகைகளுள் யாழ்ப்-பாணத்துப் பேச்சுமொழி ஒருவகை. இவ் வகைக்குமட்டும் உரிய சிறப்புக் கூறுகள் உண்டு. இவை இலக்கிய வழக்கில் வருவதில்லை. இலக்கிய மொழிக்கு மட்டும் உரிய சிறப்புக்கூறுகள் உண்டு. இவை பேச்சு மொழியில் வருவதில்லை. பேச்சு மொழி, இலக்கிய மொழி ஆகிய இரண்டிற்கும் பொதுவான மொழிக் கூறுகளும் பலவுண்டு. இவை இரண்டிலும் வருபவை. பண்டிதமணியின் நூலில் மூன்றாவது வகைக் கூறுகளை அதிகம் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக "சீவக சிந்தாமணியிலே வருகின்ற கனிதரும் மரங்கள் கொடிகள் செடிகளை - சூளாமணியிலே வருகின்ற பழங்கள் நிறைந்த மாடங்களை - அந்தக் கம்பன் என்கின்ற வம்பு, பொருள் செய்கிறானில்லை" (ப. 9) என எழுதியுள்ளார். இங்கு வினைமுற்றைக் கருதுக. படிக்கிறான் இல்லை, செய்யிறான் இல்லை எனப் பேச்சில் வரும் அமைப்போடு ஒப்பிடுக. மேலும் "ஒரு காலத்தில் மண்ணுலகை விழுங்கினவர்" (ப.7) என்னும் பண்டிதமணியின் வாக்கியத்தில் "விழுங்கினவர்" என்பதற்குப் பதிலாக விழுங்கியவர் என்றாலும் ஏற்றுக் கொள்ளப்படும். இரண்டாவது அமைப்பு இலக்கிய வழக்கிலே மட்டும் வருவது. முதலாவது அமைப்பு பேச்சிலும் இலக்கியத்திலும் வருவது. 'இவர்தான் பாடினவர்' போன்ற அமைப்பு பேச்சிலே வருவதையும் 'இவர்தான் பாடியவர்' போன்ற அமைப்பு பேச்சிலே வராததையும் கருத்திற் கொள்க. பண்டிதமணிக்கு விருப்பமானது முதலமைப்பு.[3]

"ஒன்று ஆண், மற்றது பெண்; கணவன் மனைவி" (ப.11), "இடிமுழக்கம், மின்னல், காற்று, மழை" (ப.11) - இவையும் பண்டிதமணியின் வாக்கியங்கள். மூன்றாவது வகைக் கூறுகள் அதிகம் இருப்பதனால்தான் பண்டிதமணியின் நடை பலருக்கு எளிய நடையாகிறது போலும். பண்டிதமணி கையாண்டுள்ள வாக்கிய அமைப்புக்கள் காரணமாகப் படிப்போர்க்குக் கருத்துக் குழப்பம் தோன்றும் நிலை நூலில் இல்லை எனத் துணியலாம். கருத்திலும் கருத்து வெளிப்பாட்டிலும் அவருக்குத் தெளிவுண்டு.

பண்டிதமணி சிறிய சிறிய வாக்கியங்களை விருப்புக் காரணமாகக் கையாண்டுள்ளார். சிறிய வாக்கியங்களைப் பொருட் செறிவுடையனவாக எழுதுதல் எளிதன்று. அவ்வாறு எழுதுவதற்கு அறிவு முதிர்ச்சியும், அநுபவமும், ஆற்றலும் வேண்டும். அவரது நூலில் ஒரு சொல்லே ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கியமாக அமைதலைக் காணலாம். இரு சொற்களால் அமைந்த வாக்கியங்கள் உண்டு. மூன்று, நான்கு, அல்லது ஐந்து சொற்களால் அமைந்த வாக்கியங்களும் உண்டு. இடையிடையே நீண்ட வாக்கியங்களும் வருகின்றன. ஒரு நீண்ட வாக்கியம் ஒரு பந்தியாகவும் உள்ளது. ஆயின் இவ்வகை மிகக் குறைவு. அவை அனைத்து வகைகளையும் புள்ளியியல் அடிப்படையில் கணக்கிட்டு மதிப்பிடமுடியும். சுருக்கமாகக் கூறின் அவரது வாக்கிய அமைப்பிலே பழமையும் உண்டு; புதுமையும் உண்டு. பழமை குறைவு; புதுமையே அதிகம் எனலாம். வாக்கியத்தில் சொற்கள் பொருளுணர்ந்து இடமறிந்து கையாளப்பட்டுள்ளன. அதாவது தக்க இடங்களில் தக்க சொற்கள் வருகின்றன. அவை பெரும்பாலும் அனைவருக்கும் பழக்கமானவை. "அடியாத மாடு படியாது" (ப.72) போன்ற பழக்கமான பழமொழிகளையும் "இடறு கட்டை" (ப. 3), "கால் வைத்தல்" (ப. 56) போன்ற மரபுத் தொடர்களையும் "கண்டதார் கேட்டதார்" (ப. 52), "அது கிடக்க" (ப. 70) போன்ற பொருள் பொதிந்த சொற்றொடர்களையும் கையாண்டுள்ளார். ஒரு சில சொற்கள் மட்டுமே சிலருக்குக் கடினமானவையாதல் கூடும். அவை பெரும்பாலும் வடமொழிச் சொற்களாகக் காணப்படுவது காரணமாகலாம். எடுத்துக்காட்டாக பிராரத்தம் (ப. 66), ஆவாகனம் (ப. 67).

## V

பண்டிதமணி தமது கட்டுரைகளிலே வரும் சில சொற்களுக்குத் தாம் கருதும் பொருளையும் கூறிச் செல்லும் நடையுத்தியைக் கையாண்டுள்ளார். இதனை அவரது ஏனைய நூல்களிலும் காணலாம்.[4] இங்கு "இலக்கிய வழி"-யிலிருந்து சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம்.[5]

> "இரட்டையர். ஒரு தாய் வயிற்றில் ஒரே கருப்பத்தில் இரட்டையாய்ப் பிறந்தவர்கள் இரட்டையர்" (ப. 1)

> "காளமேகம் ஆசுகவி. ஆசுகவி என்றால் விரைந்து பாடுகின்ற புலவன் என்பது கருத்து" (ப. 6)

> "அந்தக் கம்பன் என்கின்ற வம்பு, பொருள் செய்கின்றானில்லை. வம்பு-புதுமை" (ப. 9)

> "புலவர்கள் என்றால் அறிஞர்கள்" (ப. 48)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VI

"இலக்கியவழி"யிலே உள்ள இருபது கட்டுரைகளில் பெரும்பாலானவை இலக்கியம் பற்றியவை. புலவர் வரலாறு, நூல் வரலாறு பற்றிய கட்டுரைகளும் உண்டு. கட்டுரைகளில் இறந்தகால நிகழ்ச்சிகளைக் கூறும்போது அவற்றை இறந்த காலத்தில் வருணிக்கலாம்; நிகழ்காலத்திலும் வருணிக்கலாம். இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கு இடமுண்டு. பண்டிதமணி இலக்கியக் காட்சிகளை - நிகழ்ச்சிகளை - மட்டுமன்றி ஏனைய காட்சிகளையும் பெரும்பாலும் நிகழ்காலத்திலே வருணித்துள்ளார். "நாவலர் எழுந்தார்" எனக் கட்டுரைத் தலைப்பை இறந்த காலத்தில் தந்தாராயினும் கட்டுரையுள் காட்சிகளை நிகழ்காலத்திலேயே வருணித்துள்ளார். இது தவிர, ஒரே கருத்தை நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் கூறக்கூடிய இடங்களிலும் பண்டிதமணி நிகழ்காலத்தையே விரும்பிக் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக,[6]

(அ) கதைகள் தாய்ப்பாலுடன் சேர்ந்து இரத்தத்திற் கலந்து தேகம் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றும், மிருதுவான நரம்புத்துய்களிற் குடியிருக்கின்றன என்றும் பலரும் பலவிதமாகக் கதைகளைப் பற்றிக் கதைகள் <u>சொல்லுவார்கள்.</u>

(ஆ) கதைகள் தாய்ப்பாலுடன் சேர்ந்து இரத்தத்திற் கலந்து தேகம் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்றும், மிருதுவான நரம்புத்துய்களிற் குடியிருக்கின்றன என்றும் பலரும் பலவிதமாகக் கதைகளைப் பற்றிக் கதைகள் <u>சொல்லுகின்றார்கள்.</u>

ஆகிய இரு வாக்கியங்களும் ஒரே கருத்தைப் புலப்படுத்த வல்லன. ஏற்றுக்கொள்ளத் தக்கவை. ஆனால் நடையில் மட்டும் சிறிய வேறுபாடு உண்டு. பண்டிதமணியின் வாக்கியம் நிகழ்கால வினைமுற்றைக் கொண்டது (ப. 10); இங்கே இரண்டாவது இத்தகைய நிலையில் பண்டிதமணி மிகக் குறைவாக வருங்காலத்தையும் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக,

"தாயே, என் அருமைத் தந்தை எனக்குக் கட்டளை இட, அதனைத் தாங்கள் எனக்கு வந்து <u>சொல்லுகிறதானால்</u>, அதைவிட வேறு என்ன பாக்கியம் இருக்கிறது. அருமை அன்னையே, தாங்கள் எனக்கு ஒன்று <u>சொல்லுவதானால்</u>, அதனை மன்னன் கட்டளை என்றா சொல்ல வேண்டும்" (ப. 76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII

'ஒன்றாகப் பழகினோம்', 'ஒன்றாய்ப் பழகினோம்' போன்ற வாக்கியங்களில் ஆக, ஆய் என்பன ஒரு பொருளைத் தருவன. ஆக இலக்கிய வழக்கில் வருவது. ஆய் இலக்கிய வழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இரண்டிலும் வருவது. சிலர் ஆக என்பதைக் கையாள்வர், மற்றும் சிலர் ஆய் என்பதைக் கையாள்வர். இன்னும் சிலர் இரண்டையுமே மாறி மாறிக் கையாளக் கூடும். மூன்றாவது வகையினர் எதனைக் கூடுதலாகக் கையாள்கின்றனர் எனப் புள்ளியியல் அடிப்படையில் கண்டு அதனை நடைக்கூறாகக் கொள்ளலாம். பண்டிதமணி "இலக்கியவழி"யில் ஆய் என்பதனைக் கையாண்டுள்ளார். எடுத்துக் காட்டாக "இரட்டையாய்' (ப. 1), "ஆக்குவதாய்" (ப. 3), "மயமாய்" (ப. 8), "தேவனாய்" (ப. 13), "திரள் திரளாய்" (ப. 61).

## VIII

வினைகளுள் ஒரு வகை வினைகள் எதிர்மறை விகுதியை நேரடியாக ஏற்கும். எடுத்துக்காட்டாக செய்: செய்யா. மற்றும் ஒருவகை நேரடியாக மட்டுமன்றி, க்க் சேர்ந்த பின்னரும் ஏற்கும். எடுத்துக்காட்டாக படி: படியா, படிக்கா. நமது பேச்சு வழக்கில் க்க் பெரும்பாலும் வருவதில்லை. பண்டிதமணி க்க் என்பதை விலக்கிக் கொண்டார். எடுத்துக் காட்டாக "களையாத முடவர்" (ப. 2), "பல்லை இளியாமல்" (ப. 7), "பறியாமலே பழுத்து ....." ( ப. 8), "மௌனத்தைக் குலையாமலே" (ப. 14).

## IX

வெவ்வேறு நடையுத்திகளால் மிகுதிப் பொருளைப் புலப்படுத்தலாமாயினும் பண்டிதமணி சொற்களை இரட்டிக்க வைத்தே அதனைப் புலப்படுத்துகின்றார். எடுத்துக்காட்டாக "விம்மி விம்மி" ( ப. 6), "அழுது அழுது" (ப. 58), "திரள் திரளாய்" (ப. 61), "இறைத்து இறைத்து" (ப. 77). பண்டிதமணியின் கட்டுரைகளில் திரும்பத் திரும்பப் பயின்று வரும் சொற்களுள் "சற்றே" என்னும் சொல் சுட்டிக் காட்டத் தக்கது. அது பயின்று வரும் நூற் பக்கங்களில் சில பின்வருமாறு : ப. 9, 12, 14, 20, 26, 30, 34, 36, 72.

11332, S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## X

பெரும் மதிப்பைக் குறிப்பதற்கு 'அவர்கள்' என்னும் சொல்லைப் பண்டிதமணி இயற் பெயர்களோடு பயன்படுத்தியுள்ளார். எத்தனையோ புலவர் பெயர்கள் "இலக்கிய வழி"யில் வருகின்றன. எல்லோருக்கும் பண்டிதமணி 'அவர்கள்' என்பதை வழங்கவில்லை. சிலருக்குச் சில கட்டுரைகளில் வழங்கி வேறு சில கட்டுரைகளில் வழங்கவில்லை. 'துரை' என்னும் சொல்லை சேர் பொன். இராமநாதன் பெயரோடு சேர்த்து சேர் பொன். இராமநாதன் துரை எனக் கூறியுள்ளார். (பக். 62, 66). பல கட்டுரைகளில் 'நாவலரவர்கள்' என்றே கூறும் பண்டிதமணி ஈழநாட்டுப் புலவர் என்னுங் கட்டுரையில் 'அவர்கள்' என்ற சொல்லைக் கைவிட்டுவிட்டார்.

இவ்விடத்து "இலக்கிய வழி" என்னும் நூல் பண்டிதமணி காலத்-துக்குக் காலம் எழுதிய கட்டுரைகளின் (சொற்பொழிவுகளின்) தொகுப்பு என்பதனை நினைவுகூர்தல் வேண்டும். கட்டுரைகள் எழுந்த காலக் கிரமம் பற்றிய செய்தி நூலிலே இல்லை. இச் செய்தி ஆய்வுக்கு குறிப்பாக மொழி ஆய்வுக்கு முக்கியமானது. இல்லாதபோது ஆய்விலே சில சிக்கல்கள் எழுவதற்கு இடமுண்டு.

## XI

பண்டிதமணி பிறமொழி வெறுப்பற்றவர். கிரந்த எழுத்துக்களுடன் சொற்களைக் கையாண்டுள்ளார். எடுத்துக்காட்டாக "ஸ்தம்பித்து விட்டன" (ப. 16), "க்ஷேமந்தானே" (ப. 69). வடமொழிச் சொற்கள் பலவற்றையும் கலந்து எழுதியுள்ளார். சில ஆங்கிலச் சொற்களையும் ஏற்றுள்ளார். "அப்பீல்" (ப. 63) ஓர் எடுத்துக்காட்டு. வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியும் தமிழ்ப்படுத்தாமலும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற அவரது எண்ணம் அவரது நடையிலே தெரிகிறது. வேடம் எனக் கொள்ளாது "வேஷம்" (ப. 17) எனக் கொண்டவர் தேவபாஷை எனக் கொள்ளாது "தேவபாடை" (ப. 74) எனக் கொண்டுள்ளார்.[7] இதே போன்று "ஆதிசேஷன்" (ப. 7) எனவும் "விபீடணன்" (ப. 14) எனவும் எழுதியுள்ளார்.

## XII

பண்டிதமணியின் மொழிநடை பற்றி இன்னும் கூறலாம். ஆயின் ஆராயாமல் எதையும் கூறலாமா? ஆய்விலே அவசரம் ஆகாது. ஆய்விலே ஆழ்ந்த பயிற்சி பெற்ற அறிஞர்கள் பண்டிதமணியைப் பல கோணங்களில் நின்று நிதானமாக ஆராய முன்வருதல் வேண்டும். ஆய்வுலகம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையான கருத்துக்களைக் கூற முற்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. இதுவரை யாரும் பண்டிதமணியின் மொழிநடையை ஆராய்ந்ததாகத் தெரியவில்லை.
2. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இலக்கிய வழி, திருத்தப் பதிப்பு, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்க வெளியீடு - 2, 1964.
3. இலக்கண நிலையில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவற்றுள் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுப்பது நடையியலில் "நடைநிலைத் தெரிவு" எனப்படும்.
4. பண்டிதமணியின் சமயக் கட்டுரைகள் என்னும் நூலைப் பார்க்க. பாடு - பெருமை (ப. 28), பிரமை - மயக்கம் (ப. 29), சத்து - உண்மை (ப. 45), "வைநாயிகர்" என்று பெயர் - வினாவுகிறவர்கள் என்று அர்த்தம் (ப. 61).
5. இவ்வுத்தி பண்டிதமணியின் தனிநடையியற் கூறாகுமா எனச் சிந்தித்தல் தகும்.
6. விளக்கத்திற்காகச் சில சொற்களுக்குக் கீழ் கோடிடப்பட்டுள்ளது.
7. "தேவ பாடையி லிக்கதை செய்தவர்" எனத் தொடங்கும் பாடலை மேற்கோள் காட்டியமையால் ( ப. 74) பண்டிதமணி பாடலில் உள்ளது போல் தாமும் தேவபாடை என எழுதினார் என்று விளக்கங் கூற முற்படலாம். ஆயின் ஏனைய இடங்களையும் சொற்களையும் கருத்திற்கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# டாக்டர் உ.வே.சா. ஐயர் அவர்கள் மீது பண்டிதமணி கொண்ட துவேஷமும் மதிப்பும்

**ப**ண்டிதமணிக்கு டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மீது சில காரணங்களுக்காகத் துவேஷம் உண்டாகியது. அதே சமயம் பண்டிதமணி ஐயர் அவர்களின் ஆற்றலை, திறமையை, தமிழ்த் தொண்டினைப் போற்றி மதிக்கத் தவறியதில்லை. ஆனால் பொதுவாகப் பார்க்கும்போது பண்டிதமணியின் துவேஷந்தான் பளிச்சென்று தெரிகிறது. ஏன் என்றால் பண்டிதமணி எழுதிய ஒரு கட்டுரைத் தலைப்பு 'டாக்டர் உ. வே. சா. ஐயர் அவர்களில் ஏன் இந்தத் துவேஷம்' என அமைந்தமை எனலாம். இக்கட்டுரை வினா ஒன்றிற்கு விடை கூறுவது என அனைவரும் கொள்வார்கள். அந்த வினா கட்டுரைத் தலைப்பாக உள்ளது. இக்கட்டுரை "செந்தமிழ்க் களஞ்சியத்தில்" இடம் பெற்றுள்ளது.

பண்டிதமணிக்கு ஐயர் மீது துவேஷம் இருந்ததா? அது எத்தகையது? அதனை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? இவை கட்டுரைத் தலைப்பைக் கண்டதும் உள்ளத்தில் எழும் வினாக்கள். இவற்றிற்கு விடை யாது? விடையை எங்கே காணலாம்? துவேஷம் ஏன் வந்தது என்பது பின்னர் எழும் வினா. இவ்வினாவைப் பண்டிதமணியே எழுப்பி விடை கூறுவது போலவே தமது கட்டுரையை எழுதியுள்ளார். ஆயின், பண்டிதமணியின் துவேஷம் ஏன் என்பதற்கு விடை காண்பதற்கு முன் அவரது துவேஷத்தைக் கண்டு அளத்தல் வேண்டுமல்லவா? ஏன் என்பதற்கு விடை தரும் கட்டுரையிலே தான் துவேஷமும் பொதிந்துள்ளது எனச் சிலர் கொள்கின்றனர். ஆனால் இந்தக் கட்டுரையை எழுதுவதற்கு முன்னரும் பண்டிதமணி தமது துவேஷத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியுள்ளார். இதே கட்டுரையில் (பக். 95) "அண்மையில் வந்த செந்திநாதையர் மலரில், சாமிநாதையாவை வலிந்திழுத்து ஒப்பிட்டுப் பழிவாங்கியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். பண்டிதமணி கூட்டங்களிலும் ஐயர் அவர்கள் மீது தமக்கிருந்த வெறுப்பைப் புலப்படுத்தியிருப்பார். ஒருமுறை சேக்கிழார் பற்றிப் பேசும்போது சிந்தாமணியையோ, ஐயர் அவர்களையோ தாம் தீர்த்துக்கட்டப்போவதாக சிலர்பால் எண்ணம் இருந்தது என்றும் இதே கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். பண்டிதமணி "இந்தத் துவேஷம்" எனக் கட்டுரைத் தலைப்பில் கூறுவது எந்தத் துவேஷத்தை என்ற வினாவிற்கு இடமளிக்கிறது. கட்டுரையில் உள்ள துவேஷத்தையா? அன்றி அவர் துவேஷத்தை வெளிப்படுத்திப் பேசியும் எழுதியும் வந்த காலத்தில் இருந்த துவேஷத்தைக் குறிக்கிறதா எனச் சிந்தித்தல் வேண்டும். பண்டிதமணியின் கட்டுரைகள், சொற்பொழிவுகள் அனைத்தும் நமக்குக் கிடைக்கின்றன என்று சொல்லக்கூடிய காலம் இன்னும் தோன்றவில்லை. பண்டிதமணி 335 வரிகளில் எழுதி வேறு ஒருவர் பெயரில் வெளியிடப்பெற்ற இரங்கற்பா ஒன்று உண்டு (மூன்றாவது கண், பக். 18-19). அதிலே உ.வே.சா. ஐயர் அவர்கள் கண்டிக்கப்படுகின்றார். இரங்கற்பா வேறு ஒருவர் பெயரில் உள்ளபோது அதிலே காணப்படும் துவேஷம் பண்டிதமணியின் துவேஷம் எனச் சட்ட பூர்வமாக வாதாட முடியாதல்லவா? எனவே பண்டிதமணியின் துவேஷத்தை சரிவர அளத்தல் அரிதே. பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் கட்டுரைகளைத் தம் விருப்பிற்கேற்பத்தான் தெரிந்தெடுத்து வெளியிடுகின்றனர் போலும். நல்ல கொள்கை ஒன்றை வகுத்துக்கொள்ளவில்லை. பண்டிதமணி வாழ்ந்தபோது அவரது ஒப்புதல் சம்பிரதாயமானதாகலாம். பண்டிதமணி தமது துவேஷம் ஏன் என்பதற்கு விடை கூற முற்படும் கட்டுரையிலும் ஐயர் அவர்கள் மீது சில கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தித் தமது கோபத்தை, வெறுப்பைப் புலப்படுத்தியுள்ளார் என்பது உண்மை.

ஐயர் அவர்கள் மீது பண்டிதமணிக்கு இருந்த வெறுப்புப் பற்றிச் சச்சிதானந்தனைத் தவிர வேறு யாரும் ஆய்வு நோக்கில் எதுவும் எடுத்துக் கூறியதாகத் தெரியவில்ல. சச்சிதானந்தன் ஆற்றிய உரையொன்றில் பண்டிதமணிக்குச் சாமிநாதையர் மீது உள்ள வெறுப்பைக் காட்டுவனவாகப் பத்துக் கூற்றுக்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன. சச்சிதானந்தன் கருத்துப்படி அவற்றுள் "ஐயரவர்கள் கால்கள் யாழ்ப்பாணத்தைத் தீண்டாதபோதும் தாபம் அடங்கவில்லையென்பது மிக உயர்ந்த அளவில் வெறுப்பைக் காட்டும் கூற்று" ஆகும். அவையனைத்தையும் அவர் உரையில் காண்க. நாமும் சச்சிதானந்தன் காட்டாத ஒன்றைக் காட்டலாம். பண்டிதமணி ஐயர் அவர்களின் பாதங்களைச் "சமணத் திருவடிகள்" (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 91) என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியின் கட்டுரைத் தலைப்பைப் பார்த்துவிட்டு ஏன் இந்தத் துவேஷம் என்பதற்குக் கட்டுரையில் தக்க விடை நேரே வரிசையாகக் கூறப்படும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் உண்மையிலே காரணங்களைக் கட்டுரையில் தேடிப்பிடிக்க வேண்டியுள்ளது. காரணங்கள் இவை இவை என வெளிப்படையாக நேரே கூறப்பெறாமல் கூறப்பெற்றுள்ளன. பண்டிதமணியின் கட்டுரை ஏழு உபதலைப்புக்களைக் கொண்டுள்ளது. அவை 'ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்', '1951 தமிழ் மகாநாடு', 'சேக்கிழார் விழா', 'கொழும்பில் நாவலர் குருபூசை', 'எப். எக்ஸ். சி. கண்டு பிடிப்பு', 'பாயிர விஷயம்', 'உண்மையற்ற செய்திகள்' என்பனவாகும். இவற்றில் பண்டிதமணியின் துவேஷத்திற்கு மூன்று காரணங்களைக் கண்டறிய முடிகிறது. அவை பின்வருமாறு:

1. சாமிநாதையர் எழுநூறு பக்கம் கொண்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தை நாவலரும், மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் சந்தியாத பிரகாரம் எழுதியமை.
2. சமண பௌத்த காவியங்களைப் பதித்தமை.
3. திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம், பாயிரம் வாங்குவதற்கு நாவலர் பின் நின்றார் என்று ஐயர் எழுதியமை. அதாவது, மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தில், 198 ஆம் பக்கம் தொடக்கம் 2 ஆம் பிரிவு தொடங்கி, 229ஆம் பக்கம் வரை, நாவலருக்குப் பாயிரம் அளித்தது இறுதியாக உள்ள பகுதிகள் உண்மையற்றவைகள்.

இவை முறையே கட்டுரையின் முதற்பகுதியிலும், இரண்டாம் பகுதியிலும், ஐந்து - ஏழாம் பகுதிகளிலும் உள. "செந்தமிழ்க் களஞ்சியம்" திறவு கோலில் இரண்டு காரணங்களே கூறப்பெற்றுள்ளன.

நாம் கண்ட மூன்று காரணங்களில் இரண்டு நாவலர் தொடர்புடையவை. மற்றது நாவலர் கருத்து நோக்குடன் தொடர்புடையது. பண்டிதமணி நாவலர் பெருமானிடம் கொண்டிருந்த ஈடுபாட்டை அறிவோம். அவரது ஆத்மீக குருவாகிய பொ. கைலாசபதியும் நாவலர்போல் நமக்காளில்லை என்றார். பண்டிதமணி நாவலர் தர்மத்திலே வளர்ந்து, வாழ்ந்து, இறைவனடியெய்தியவர். யாரும் நாவலர் விஷயத்தில் பிழை விட்டால் - வேண்டும் என்று பிழை செய்தால் - அதனைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பைப் பண்டிதமணியிடம் எதிர்பார்க்க முடியாது. அவரது நிலைப்பாட்டை ஆறுமுகநாவலர்ப்பைத்தியம் எனலாம். இதனை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பண்டிதமணியே குறிப்பிட்டுள்ளார்.

இனி, பண்டிதமணி தமது துவேஷம் ஏன் என்பதற்கு விளக்கந்தரும் கட்டுரையில் சில விஷயங்கள் நமக்குத் தெளிவாக இல்லை. இங்கு அவற்றையும் சுட்டிக்காட்டி விடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயர் அவர்கள் கால் வைக்கக் கூசிய யாழ்ப்பாணத்துக்கு, கால் நிலத்தில் ஊன்றாதவர் ஒருவர் அழைக்கப்பட்டார். அவரே, பண்டிதமணி கதிரேசச் செட்டியார்."

என்பதில் 'கால் நிலத்தில் ஊன்றாதவர் ஒருவர்' என்பது இன்று கட்டுரையைப் படிப்பவர்க்குத் தெளிவற்றுக் கிடக்கின்றது. செட்டியாருக்கு ஒரு காலில் குறைபாடு இருந்ததை வருங்காலத்தில் எவ்வாறு கண்டு கொள்வார்களோ! மேலும்,

"ஐயர் அவர்களின் கால்கள் யாழ்ப்பாணத்தைத் தீண்டாதபோதும் என் தாபம் அடங்கவில்லை. அவர்கள் பதித்த பௌத்த காவியங்களை என் கைகள் தீண்டின. ஐயர் மேலெழுந்த தாபம். அவர்கள் பதித்த காவியங்களிலுமா என்ற எண்ணமும் நிலவியது. அதில் எனக்குப் பங்குண்டு போலும்."

எனக் கூறுவதில் பண்டிதமணியின் பங்கு யாது என இன்று அறியமுடியாது உள்ளோம். தமிழ் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய சேதுப்பிள்ளை பற்றிக் கூறும்போது,

"அன்பினைந்திணை என்னுதலிற்றோவெனின் தமிழ் நுதலிற்று' என்பதில் தமிழ் என்பது பற்றி நான் சொற்பொழிவாற்றினேன். சமண பௌத்த காவியங்களைச் சங்கம் அங்கீகரிக்குமா என்ற பிரச்சினையை எழுப்பினேன். என் கருத்துக் காத்திரமானதாயிருக்கலாமாயினும், தலைவர் என் விஷயத்தில் 'கூனி'யாயிருந்தார். முன்னமே என் கண்டன பாணங்களுக்கு இலக்காகி இருந்தவர் தலைவர்."

எனக் கூறுகிறார். தலைவரின் செயல் பற்றி விபரமறிய ஆவற்படுவதோடு அவர் மீது பண்டிதமணி தொடுத்த கண்டன பாணங்கள் பற்றியும் மேலதிகமாக அறிய ஆவற்படுகின்றோம். மேற்குறித்த விஷயம் பற்றி மேலும் எழுதும்போது பண்டிதமணி,

"திரு. சேதுப்பிள்ளை அன்று தாம் நடந்துகொண்டதற்குப் பச்சாத்தாபம் உற்றார் என்று நான் அறிந்ததுண்டு. அதனால் நான் குற்றமற்றவனென்று சொல்ல முடியாது. ஒன்றைச் சொல்லும்போது, சொல்லுவோன், தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும் என்பது பழைய மரபு."

என்கிறார். 'நான் குற்றமற்றவன் என்று சொல்லமுடியாது' என்னும்போது குற்றம் எதுவாக இருக்கலாம்? பண்டிதமணி தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளவில்லையா? போன்ற எண்ணங்கள் தோன்றுகின்றன. மேலும் மூன்று தோல்விகள் பற்றிப் பேசுகிறார். இவை அவரது சொற்பொழிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியன.நேரக்கட்டுப்பாடும், நாவலர் குருபூசையில் எதிர்பாராத வகையில் தெ. பொ. மீ. தமக்கு முன் பேசியதும் தோல்விக்குக் காரணமா? பண்டிதமணி மூன்று தோல்விகளும், நல்ல பாடங்கள்; தெய்வத்தாற் கிடைத்தவைகள்; அது தமக்கு வேண்டும் என்றெல்லாம் எழுதியுள்ளார். பண்டிதமணி ஏன் இப்படி எழுதினார் எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. காலப்போக்கில் இவை புரியாதனவாகப் போகலாம். அப்பொழுது விபரங்கள் இன்றி ஊகங்கள் மட்டும் பயன்படா. பண்டிதமணியின் சில கட்டுரைகளுக்கு விளக்கக் குறிப்புக்கள் வேண்டும் போலும். பண்டிதமணியுடன் நெருங்கிப் பழகியவர் சிலர் இன்றும் உளர். அவர்கள் இதனைச் செய்வது நன்று. யாரும் உதவமுன்வருவார்களா?

இனி ஒட்டுமொத்தமாகத் துவேஷத்திற்குரிய காரணங்களைப் பார்க்கலாம். பண்டிதமணி தமது "நாவலர்" என்னும் நூலில் (பக். 13),

> "மீனாட்சி சுந்தரம்பிள்ளை நாவலரைத் தெய்வம் போற் போற்றினவர். அப்படியிருந்தும் இச் சம்பவம் விரிந்த காரணம் மீனாட்சி-சுந்தரம்பிள்ளையின் சரித்திரத்தில் வரவில்லை. தொளாயிரம் பக்கங் கொண்ட மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம் நாவலரும் பிள்ளையும் எவ்விதத்திலாயினும் சந்தியாத வகையில் எழுதப்-பட்டிருக்கிறது. பிள்ளையின் சரித்திரம் எழுதிய ஐயர் அவர்கட்கு நாவலரைக் காணுஞ் சந்தர்ப்பங் கிடைக்கவில்லை. கண்டிருந்தால் அவர் வாழ்க்கை வேறாயமைந்திருக்கும்."

என எழுதி மனம் நோகின்றார். மேலும் ஆறுமுகநாவலர் என்னும் நூலில்,

> "மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களும் நாவலர் அவர்களும் அங்கே செய்யுள் இங்கே வசனம் என்று பாராட்டும்படி வாழ்ந்தவர்கள்....... பிள்ளையும் நாவலரும் கபில பரணர், டாக்டர் உ. வே. சாமிநாதையர் 700 பங்கங்கொண்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் பிள்ளையும் நாவலரும் ஒருவரை ஒருவர் சந்திப்புச் செய்யாத பிரகாரம் எழுதிவிட்டார். ஐயர் பிள்ளையின் சரித்திரத்தை எழுதி அரை நூற்றாண்டு கழித்துத்தான் வெளியிட்டார். காலதாமதத்தின் கருத்துச் சிந்திக்கத்தக்கது."

எனப் பண்டிதமணி எவ்வித துவேஷத்தையும் வெளிப்படுத்தாது தமது கருத்தைக் கருத்தாக எழுதியுள்ளார். அதே நூலில் மற்றுமோரிடத்தில்,

> "திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், நாவலர் பதிப்புக்களுக்குப் பாயிரஞ் செய்தபோது, திருவாவடுதுறை ஆதீன வித்துவானாய் இருக்கவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் கற்பனை முழுமையான தவறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் காலதத்துவத்துக்கு அப்பாற்பட்டவர்கள். தங் கருத்துக்கு இசையக் காலத்தை முன்னாகப் பின்னாக வைத்துக் கொள்வது அவர்களுக்கு இயல்பு.

ஐயர் அவர்கள் பிறந்தது 1855 மாசி. அவர்கள் தமது ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களைச் சந்தித்தது 17 ஆம் வயதில். சந்தித்த ஆண்டைச் சொல்லும்போது 1870 என்கின்றார்கள் ஐயர் அவர்கள். 1855 + 17 = 1870? எப்படி? 1870 இல் வடக்கே முக்கிய வழக்குகளில் வாகை சூடிய நாவலரின் புகழ் உச்ச நிலையை எய்தியது. அதனைச் சற்றே கிரகணஞ் செய்து. மட்டந்தட்டும் பொருட்டே ஐயர்வாள் 1871 ஆம் ஆண்டுச் சந்திப்பை 1870 என்று வைத்துக் கொண்டார்கள்."

எனக் கூறியுள்ளார். இங்கு 'ஐயர்வாள்' என்ற சொற்பிரயோகம் துவேஷத்தைக் காட்டுகின்றது.

பண்டிதமணி அதே நூலில் (பக். 117) ஐயர் அவர்களின் ஆற்றாமை எனப் பின்வருவனவற்றைக் கூறியுள்ளார்.

"நாவலர் பதிப்புப் பாயிரத்தால் பிள்ளை ஆதீன வித்துவானாய்ப் பிரகாசித்தார் என்பதனைப் பொறாது, பாயிரஞ் செய்தற்கு முன்னமே பிள்ளையை ஆதீன வித்துவானாக்கி, நாவலர், ஆதீன வித்துவானான பிள்ளையிடம் பாயிரம் பெறுதற்கு, ஒருவர் மூலம் பெரிதும் இரந்து பின்னின்றாரென்றும்,

அருவருக்கத்தக்க இரப்புரைக் கடிதமொன்றை, நாவலர் பெயராற் புனைந்து விட்டார்கள் ஐயர் அவர்கள். அக்கடித நடை மானாபரணரான நாவலரால் எழுதப்படாதது என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது. சம்பவ காலம் ஐயருக்கு 5 வயசு நிரம்பாத காலமாயினும், பொய்யையும் பிடிகொடாமற் புனைந்திருக்க வேண்டும். ஆசை வெட்கம் அறியாது! நிற்க,

இரப்புரைக் கடிதத்தை மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் காண்க.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம் 1933 ஆம் ஆண்டில் வெிவந்தது. 1934 ஆம் ஆண்டு கடிதத்தின் பொருந்தாமைகள் ஆராயப்பட்டன."

இவ்வாறு பண்டிதமணி ஒன்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளில் ஐயர் அவர்கள் பற்றி எழுதியுள்ளார். ஆனால், 'டாக்டா உ. வே. சா. ஐயர் அவர்களில் ஏன் இந்தத் துவேஷம்' என்ற கட்டுரையில்தான் அவரது துவேஷ உணர்வைப் பிரதிபலிக்கும் பல வார்த்தைகள் இடம் பெறுகின்றன. ஏனைய கட்டுரைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் பற்றிக் கூறியவை பண்டிதமணியின் துவேஷத்தைப் பளிச்சென்று காட்டுவனவாக இல்லை. அவற்றில் துவேஷத்தைத் தூண்டிவிடக்கூடிய நிகழ்வுகளைக் காண்கின்றோம். அவற்றிலும் ஏன் இந்தத் துவேஷம் என்பதற்கு விடை உண்டு.

யாருக்கும் ஒருவரிடம் துவேஷம் ஓங்கி நிற்கும்போது எந்த விதத்திலும் அவருக்குப் பாராட்டுக்கூற மனம்வராது . இது மனித இயல்பு. என்றாலும் அறிவு நிலையில் உண்மையை மறைக்க முடியாது. பண்டிதமணி ஐயர் அவர்களைப் பாராட்டித் தனிக் கட்டுரை எழுதவில்லை. ஆயின் தமது கட்டுரைகளில் இடையிடையே ஐயர் அவர்களைப் பாராட்டியுமுள்ளார். தமிழ் நாட்டார் ஐயர் அவர்களைப் போற்றி வருகின்றனர். சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியது. சென்னை மாநிலக் கல்லூரி முன்றிலில் ஐயரவர்களின் பெரிய சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

ஐயர் அவர்கள் சிறந்த பதிப்பாசிரியர் என்ற எண்ணம் பண்டிதமணிக்கு உண்டு. ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க விழாவுக்கு ஐயர் வந்தால்,

> "ஐயர் அவர்களின் பதிப்பு விசேஷங்களை நான் எடுத்துப் பேசுகிறேன்; உலாவரும்போது தீவட்டி பிடிக்கிறேன்; செலவுக்கு ரூபா ஐம்பது தருகிறேன்; அவர் வரார்."

எனக் கோபஆவேச நிலையில் கூட ஐயரின் பதிப்பு விசேஷங்களை மறுக்கவில்லை. 'உலாவரும் போது தீவட்டி பிடிக்கிறேன்' என்பது கிண்டலாகத்தான் தொனிக்கிறது. ஆதலால் முதற் கூற்றும் கிண்டல் எனக் கொள்ளவேண்டியதில்லை. பண்டிதமணி தமது ஏனைய கட்டுரைகள் சிலவற்றில் ஐயர் அவர்களின் பதிப்புக்களைப் போற்றியுள்ளார். அதற்குப் பின்வருவன சான்றாகும்.

> "ஐயர் அவர்கள் சீவகசிந்தாமணியை மூன்று முறை பதித்திருக்கிறார்கள். பதிப்பு ஒன்றிலொன்று விசேடம் படைத்தது. மூன்றாம் பதிப்பு உச்சமானது. தமிழிலே திருத்தமான பதிப்பாலே உயர்ந்ததொரு புத்தகம் என்றால் அது சீவகசிந்தாமணியேயாம்." (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 108).

> "ஐயர் அவர்களின் முத்தான பதிப்புக்கள் மூன்று: ஒன்று சீவக சிந்தாமணி; மற்றையவை சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவாம்." (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 109).

> "பழைய நூல்களை ஆராய்ந்து பதிப்பதில் தாமே தமக்கிணையானவர்கள் ஐயர் அவர்கள். அந்தத் தனிச் சிறப்பினால்......" (ஆறுமுகநாவலர், பக். 113).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாமோதரம்பிள்ளையின் அழுகையில் பிற்காலத்தில் சாமிநாதையரும் பங்குபற்றினார்." (ஆறுமுகநாவலர், பக். 60).

"1885 ஆம் ஆண்டில் தொல்-பொருளதிகாரம் அச்சிட்ட பிறகு, கற்றறிந்தார் ஏத்துங் கலித்தொகையைப் பரிசோதனஞ் செய்து கொண்டு, சி. வை. தாமோதரம்பிள்ளை திருக்குடந்தையிலே வாசஞ் செய்த காலத்திலே தான், பிள்ளையின் பழக்கம் டாக்டர் ஐயருக்கு உண்டாயிற்று. ஐயர் சீவக சிந்தாமணியைப் பரிசோதித்து எழுதி வைத்திருந்தார். அத்னைப் பிள்ளைக்குக் காட்டினார். பிள்ளை தமிழ் நூல்கள் அழிந்துபடுகின்றனவே என்று ஏங்கிக்கொண்டிருப்பவர். ஆகையினாலே, அதனை விரைவில் அச்சிடும்படி தூண்டினார். அன்றித் தம்மிடம் இருந்த இரு ஏட்டுப் பிரதிகளை ஐயருக்கு உதவினார்." (இலக்கிய வழி, பக். 138).

பண்டிதமணி தமது இலக்கியக் கோட்பாடு, அறம் காரணமாகச் சில இலக்கியங்களை வெறுத்தார். ஆனால் பதிப்பு என்று நோக்கும்போது ஐயர் அவர்களின் பதிப்புக்களைப் பாராட்டியுள்ளார். இன்று அறிஞர்களும் ஆய்வாளரும் ஐயர் அவர்களின் பதிப்புக்களையே தராதரமானவை எனக் கொள்கின்றனர். சென்னை மாநிலக் கல்லூரியில் யான் தெ. பொ. மீனாட்சி சுந்தரனிடம் சிலப்பதிகாரம் பாடங்கேட்டபோது அவர் வகுப்புக்கு ஐயர் அவர்களின் பதிப்பையே கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தியது நினைவில் உண்டு. அவர் ஆய்வாளர்களையும் ஐயர் அவர்களின் பதிப்பையே ஆதாரமாகக் கொள்ளும்படி வற்புறுத்துவார்.

பண்டிதமணியின் வேறு சில கூற்றுக்களும் அவர் ஐயரிடம் மதிப்புக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகின்றன. அக்கூற்றுக்களுள் சில பின்வருவன.

"நாவலரின் மாணவரில் ஒருவர் காசிவாசி செந்திநாதையர். தமிழுக்குச் சாமிநாதையர் போலச் சித்தாந்தத்துக்குச் செந்திநாதையர் என்று பாராட்டும்படி அவர் திகழ்ந்தார்." (இலக்கிய வழி, பக். xv).

"அந்தச் சம்பவம் தமிழ்த் தாத்தாவும் மஹாமஹோ பாத்தியாயருமான டாக்டர் சாமிநாதையர் அவர்கள் பிறப்பதற்கு முந்தியது." (இலக்கிய வழி, பக். 130).

"தமிழ்ச் சரித்திரத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி நாவலர் அவர்கள் சரித்திரம்; பிற்பகுதி சி. வை. தாமோதரம்பிள்ளை சரித்திரம். அதற்குப் பிறகுதான் டாக்டர் சாமிநாதையரின் சரித்திரம்." (இலக்கிய வழி, பக். 138).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டாக்டர் உ. வே. சாமிநாதையர் கதைகளைச் சொல்லிமுடிக்கிற மாதிரி முடிக்கிறதற்காக நானும் எனக்கிந்தக் கதை வந்த கதையைச் சொல்லியிருக்கிறேன்." (இலக்கிய வழி, பக். 157).

"இவ்வழக்கில் சாட்சியஞ்சொன்ன முக்கியஸ்தர்கள் மூவர். ஒருவர் மஹா மஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர். மற்றையவர் காசிவாசி செந்திநாதையர். இருவரும் முறையே தமிழுக்கும் சமயத்துக்கும் பிரதிநிதிகள் என்று கொண்டாடப்படுபவர்கள்." (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 174).

மதிப்பைக் காட்டுவன என நாம் கொண்டவற்றில் சிலவற்றைச் சச்சிதானந்தன் தமது உரையில் (பக். 18-20) பண்டிதமணியின் வெறுப்புக்குக் காட்டாகக் கொண்டுள்ளார். பொருத்தம் சிந்திக்கற்பாலது.

ஒருவர் மற்றொருவர் மீது கொள்ளும் பொறாமை ஏதோ ஒன்று கைக்கெட்டாத நிலையையும் அந்நிலை பொறாமை கொள்பவரது விருப்பிற்கு அல்லது போற்றுதலுக்குரியது என்பதையும் காட்டவல்லது. பண்டிதமணி ஆறுமுகநாவலர் என்னும் நூலில் (பக். 117),

"மகாவித்துவான் ஸ்ரீமீனாக்ஷி சுந்தரம்பிள்ளை அவர்கள் பற்றி மஹா மஹோபாத்தியாயர் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் எழுதிய விரிவான பெரிய சரித்திரத்தைக் கண்டபோது, எனக்குண்டான குறித்த பைத்தியத்திலே, (ஆறுமுக நாவலர்ப் பைத்தியம்) போதாக் குறைக்குக் கொஞ்சம் பொறாமையும் வந்துவிட்டது."

என்று எழுதும்போது சாமிநாதையரிடம் தாம் கொண்டிருந்த மதிப்பையும் புலப்படுத்துகின்றார். அது போன்ற சரிதம் ஒன்று நாவலருக்கும் வேண்டும் என்று விரும்பினார். உண்மையிலே அத்தகைய சரிதம் நாவலருக்கு இல்லாதது பெருங்குறையே.

மேலும் பண்டிதமணி, சாமிநாதையர் என்ற பெயரைக் குறிப்பிடும்போது பெரும்பாலும் 'அவர்கள்' எனச் சேர்த்து எழுதித் தம் மதிப்பைக் காட்டுகின்றார். அவ்வாறு பிறருக்கு மதிப்புக் கொடுப்பது சைவாசிரிய கலாசாலையின் பொதுப் பண்பாடாக இருந்து வந்தது. இறுதியாக கலாநிலையத்தில் ஐயர் அவர்களது உருவப்படத் திறப்பு விழாவின்போது அன்னார் ஆற்றிய தமிழ்த் தொண்டையும், அவரது எளிய இனிய உரைநடையையும், பண்டிதமணி போற்றினார் (மூன்றாவது கண், பக். 49) என்பதையும் குறிப்பிடுதல் வேண்டும். குறைகளைக் குறைகளாகக் கண்டு அறிஞர்தம் நிறைகளைப் போற்றுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

கணபதிப்பிள்ளை, சி. (பதிப்பு) *சேற்றூர் அருணாசலக் கவிராயர் பத்திய ரூபமாக இயற்றிய ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரம்,* முகவுரை, பவ வருடம், ஆவணி மாதம், மட்டுவில்.

.............................. (1964), *இலக்கிய வழி.*

.............................. (1968), *நாவலர்.*

.............................. (1979), *ஆறுமுகநாவலர்.*

.............................. (1987), *செந்தமிழ்க் களஞ்சியம்.*

கனக, செந்திநாதன். (1959), *மூன்றாவது கண்,* வரதர் வெளியீடு,

சச்சிதானந்தன், க. (1993), *பண்டிதமணியின் மும்முகங்கள்,* பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தின உரை, பண்டிதமணி வெளியீட்டுச் சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# பண்டிதமணியின் காப்பியக் காழ்ப்பு

## I

தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் உண்டு என்று பெருமிதப் படுகின்றோம். இவற்றைத் தமிழ்த்தாயின் அணிகலன்கள் என்று கொள்கின்றோம். இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப் போற்றப்படுகின்றன. சிலப்பதிகாரம் தலைசிறந்த காப்பியமாக, இலக்கியமாக அறிஞர்களின் நெஞ்சை அள்ளுகின்றது. அது உலக மொழிகள் சிலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; உலக இலக்கியமாக ஏற்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் பற்றி நடைபெற்ற மாநாடுகள் பல; எழுந்த ஆய்வு நூல்கள், கட்டுரைகள் மிகப் பல.

## II

எனினும், சிந்தாமணி கற்றோரைக் கொள்ளை கொண்டது; சிலப்பதிகாரம் கற்றோர் மற்றோர் யாவரையும் கொள்ளை கொண்டு தலைதூக்கியது என எழுதிய ஈழத்துப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களைப் பொறுத்தமட்டில் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை ஆகிய முப்பெருங் காப்பியங்களும் சிறந்த இலக்கியமாகப் போற்றத்தக்கனவல்ல. காரணம், இவை சமண - பௌத்த மதத்தொடர்புடையவை;[1] சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்திற்குரிய அறக் கோட்பாடற்றவை; அறத்துக்குப் புறம்பானவை. இவற்றைச் சங்கம் அங்கீகரிக்காது. இவற்றில் வரும் கதாபாத்திரங்கள் சில அருவருக்கத்தக்கவை; கண்டிக்கப்பட வேண்டியவை. இவற்றின் இழிவாந்தன்மை கம்பராமாயணம், பெரிய புராணம் ஆகியவற்றில் வரும் சில கதாபாத்திரங்களோடு ஒப்பு நோக்கிப் பார்க்குமிடத்துத் தெளிவாகும். இவ்வாறெல்லாம் பேசுவதற்குப் பண்டிதமணியால் முன்வைக்கப்படும் வாதமும் அவ்வாதம் வெளிப்படும் மொழிநடையும் உள்ளத்தைக் கவர்வன. இக்காப்பியங்களில் பண்டிதமணிக்கு ஏற்பட்ட காழ்ப்பை "சிந்தனைக் களஞ்சியம்," "கம்பராமாயணக் காட்சிகள்," "செந்தமிழ்க் களஞ்சியம்" முதலிய நூல்களிலே உள்ள கட்டுரைகள் சிலவற்றில் பரக்கக் காணலாம். இவை முதலில் சொற்பொழிவுகளாகவே பேசப்பட்டனவாம்.[2]

தமிழறிஞர் பலர் போற்றிய, போற்றிவருகின்ற காப்பியங்களில் பண்டிதமணிக்கு எந்நாள் தொட்டு, ஏன் இந்தக் காழ்ப்புத் தோன்றியது எனச் சிந்திப்பதும், அவரது காழ்ப்பின் கனம், ஆழம் எத்தகையன எனக் காண்பதும், பண்டிதமணி கூறும் இலக்கியத்தின் அற அடிப்படை அல்லது கோட்பாடு யாது எனத் தெளிவதும், இக் காப்பியங்கள் பற்றி ஏனையோர் கருத்து யாது எனக் கண்டறிவதும் பயனுள்ளவையாக அமையும்.

பண்டிதமணி தம் இளமையில் பண்டித வகுப்பில் இக்காப்பியங்களைப் படித்திருப்பார் (சிந்தனைக் களஞ்சியம், பக். 230). நாவலர் காவிய பாடசாலையில் பயிலும்போது சீவகசிந்தாமணியை முதற் பரிசாகப் பெற்றுள்ளார் (முத்திரையிற் பண்டிதமணி, பக். 41). இவற்றை அன்று இலக்கியங்களாகச் சுவைத்தாரோ தெரியவில்லை. அவர் தம் கன்னி எழுத்து முயற்சியாக 1926 ஆம் ஆண்டு மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரம் எழுதினார். அதனில் "செந்தமிழிற் கண்ணகியின் தெய்வத்திறம் பாட", கற்புக் களஞ்சியமே கண்ணகியே", "சிலப்பதிகாரம் என்னும் தேனே", "காத்தருள்வாய் கண்ணகி வாழி" என்றெல்லாம் பாடினார். பின்னர் கண்ணகி மீது காழ்ப்புக் கொண்டு பலவாறு இழித்துரைத்தார். இளங்கோவடிகளை, சிலப்பதிகாரத்தை வெறுத்தார். சிலப்பதிகாரத்தில் வரும் கோவலன், மாதவி போன்ற ஏனைய பாத்திரங்களைக் கண்டித்து எழுதினார். நாவலர் கண்ணகியைச் செட்டிச்சி, புறச்சமயத்தவள் என்று கூறி கண்ணகி வழிபாட்டைக் கண்டித்தமையைக் கந்தபுராண கலாசாரம் என்னும் நூலில் உள்ள 'சூத சங்கிதையில் ஏகாத்மவாதிகளின் விளையாட்டு' என்னும் கட்டுரையில் மேற்கோள் காட்டி விளக்கினார். பின்னர், கண்ணகி தோத்திரம் பாடி 40 ஆண்டுகள் கழிந்த நிலையில் அந்நூல் அச்சாகியபோது அதற்கு மறுப்பு எதுவும் தெரிவிக்காது முன்னுரை வழங்கி வரவேற்றார். அவரது மனநிலை அன்று மாறி நின்றவாறு ஆராயற்பாலது.

தம் இளமையில் கண்ணகியைப் போற்றிய பண்டிதமணி பின்னர் "ஆறுமுகநாவலர் எழுத்துக்களின் செல்வாக்காலே பாதை மாறினார்" என்பர் வேலுப்பிள்ளை.[3] இக்கருத்துப் பற்றிச் சிந்தித்தல் தகும். பண்டிதமணிக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பராமாயணம் என்றால் உயிர் போன்றது. ஆயின் நாவலர் கம்பராமாயணத்தை இவ்வாறு போற்றியதாக அறியோம். அவர் பெரிய புராணத்தையே உயிர் எனப் போற்றியவர்.[4]

"பண்டிதமணி காலப்போக்கிலே சமயத்தை இலக்கியமாகவும் இலக்கியத்தைச் சமயமாகவும் நோக்குபவராக மாறினார். ஆரம்ப காலத்தில் இருந்தே பண்டிதமணி இலக்கியத்தின் அற அடிப்படையை வலியுறுத்தி வந்தார். அறக் கோட்பாட்டுக்கு அப்பாற்போவது இலக்கியமல்ல, கலையல்ல என அடித்துக்கூறி, பல இலக்கிய சர்ச்சைகளை இவர் கிளப்பினார்" என வேலுப்பிள்ளை கூறுவது பண்டிதமணியின் காப்பியக் காழ்ப்பை விளக்குவதற்கு நல்லதொரு முன்னுரையாக அமையும்.[5] சமயம் என வேலுப்பிள்ளை கூறுவது பண்டிதமணி போற்றிய (சைவ) சமயத்தையே எனக் கொள்தல் வேண்டும். அவர்பால் பௌத்த சமண சமயங்களுக்கு எள்ளளவேனும் இடமில்லை எனக் கொள்தல் வேண்டும். அறம் என்பதையும் அவ்வாறே கொள்தல் வேண்டும். எனினும் பண்டிதமணி நாவலர் போற்றாத கம்பராமாயணத்தை முற்றிலும் ஏற்பவராகவே காணப்படுகின்றார். சைவம், வைஷ்ணவம் என்னும் போது கந்தபுராண கலாசாரம் என்னும் நூலில் (ப. 32) பண்டிதமணியின் கருத்தொன்று உற்று நோக்கத்தக்கது. அது,

> "கந்தபுராணத்தைக் கைகூப்பி வணங்குவதில் அவர் (பொன்னம்பலபிள்ளை) தவறியதில்லை. நாவலர் அவர்களுக்குப் பிறகு ஒரு சமயம் பொன்னம்பலபிள்ளை கம்பராமாயண ரசனை மிகுதியாலே அதில் சிவபரம்பொருளுக்கு இழுக்கு வரும் இடங்களை வேறு பிரகாரம் அமைத்துக்கொண்டு வண்ணை வைத்தியேசுவரன் கோவிலிலே கம்பராமாயண வியாக்கியானம் ஆரம்பித்தார். அது கவியரசர்களுக்குக் கிடைத்தற்கரியதொரு அமிர்த பானமாயிருந்தது. ஆனால், கந்தபுராண கலாசாரம் மிக்க இந்த நாட்டிலே கம்பராமாயணம் மதிக்கத்தக்கதேயாயினும் அருணூல்களுக்குரிய சிவசந்நிதிக்கு அது அடாது என்ற கருத்தும் இருந்தது. பொன்னம்பலபிள்ளைக்கு எதிர் சொல்ல ஆள் ஆர்? நாவலர் அவர்கள் இல்லையே! கம்பராமாயண ரசனை நடந்தது. வாலிவதை உச்சநிலையை எய்தியது; அவ்வளவுதான். அந்த அளவில் பொன்னம்பலப்பிள்ளை இரசிகர்கள் கதறக் கதற மறைந்து விட்டார். வாலிக்கு அம்புவிட்ட சோகம் பொன்னம்பல பிள்ளையை இழந்த சோகம் ஆயிற்று. இந்தச் சோகம் கந்தபுராணத்துக்குரிய சிவ சந்நிதியில் கம்பராமாயணம் படிக்க நேர்ந்ததேயென்ற கண்ணீருடன் இங்கு இன்றும் பெருகுகின்றது."

என உள்ளது. இது நாவலரின் நிலைப்பாட்டைத் தெளிவாக்குகிறது. மேலும் இவ்விடத்து வள்ளலாரிடம் மடாதிபதிகள் கண்ட குறைகளிலொன்று, வைணவர் தெய்வத்தைப் புகழ்ந்து பாடியதுமாம் என்பதும் கருதற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி சமண, பௌத்த காவியங்களைச் சங்கம் அங்கீகரிக்குமா என்ற பிரச்சினையைக் கிளப்பியவர். "புத்தரொடமணர்கள் அறவுரை புறவுரை" என்ற சம்பந்தப்பெருமான் அருள்வாக்கில் ஊறியவர். "சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்சித்தர்" எனச் சம்பந்தர் கூறியது பண்டிதமணிக்கு உடன்பாடு. "ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயனறிகிலா அந்தகர்" என்று சமணபௌத்தப் புலவரின் பொருளிழுக்கமும் காட்டப்பட்டது என்பர். சமண பௌத்தப் புலவர்களுக்கும் ஆரியம் வரலாம்; தமிழ் வரலாம். ஆனால், அவற்றில் ஆளப்படும் பொருளுக்கும் அவர்களுக்கும் வெகு தூரமாம். இவை புதிய கருத்துக்கள் அல்ல; சேக்கிழார் முதலிய மகான்களின் கருத்துக்கள்; தாய்நாட்டுக் கருத்துக்கள்; பழைய கருத்துக்கள் (சிந்தனைக் களஞ்சியம், பக். 66) என்கிறார் பண்டிதமணி. "கடைச் சங்கம் ஒடுங்கியதும் ..... தமிழ் வேளமுண்ட விளாங்காயானது" (சிந்தனைக் களஞ்சியம், பக். 100-106) என்றார். "சங்கம் ஒடுங்கிப் பொருள் மரபு குன்றிய காலத்திலே, சீவகசிந்தாமணி முதலிய காவியங்கள் தலையெடுத்தன. கம்பர் உதயமானதும் அவை சவிமடிந்து போயின" (கம்பராமாயணக் காட்சிகள், முன்னுரை) என்பர் பண்டிதமணி.

மேலும், பண்டிதமணி "புத்த சமண அறம் அறத்துக்குப் புறம்; அறம் புறம். சங்கத்துச் சான்றோர்கள் சிந்தித்த அறம் வேறு; சங்கத்துக்குப் பிறகு: புத்தர் சமணர் நடத்திய அறம் வேறு. முதல்வன் கருத்தை விசாரியாது மனிதப் புத்தி நடத்திய அறம், புத்த சமண அறம்; புத்த சமணர்கள் முதலில் அறத்தைத் தலைகீழ் செய்தார்கள்" (சிந்தனைக் களஞ்சியம், பக். 107). சங்கப் புலவர்களுள் சமணர், பௌத்தர்கள் இருக்கவில்லை; சங்கப் பாடல்களிலே சமண பௌத்த மணமே இல்லை எனப் பண்டிதமணி பலவாறு கூறியுள்ளார். சமண பௌத்தர்கள் சங்கப் புலவர்களில் இருந்தார்கள் எனக் கூறியவர்களைக் கண்டித்துமுள்ளார்.[6]

சைவாசிரிய கலாசாலை உபஅதிபர் பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகளில் இலக்கியத்தின் அறக்கோட்பாடு பற்றிய சிந்தனைகளும் உண்டு. இலக்கியத்தின் அறக்கோட்பாடு என்னும் விஷயத்தில் பண்டிதமணி கைலாசபதிவழி நின்றாரா என நோக்குதல் இன்றியமையாதது. தமிழ் இலக்கியம் நால்வகைப் படலாம்; இலக்கியம் விரும்பப்படத்தக்கதாய், தருமவிரோதமின்றிக் கண்டது; கற்பனை; செல்லும் வழியைத் தூய்மை செய்வது எனக் கூறிய உப அதிபர் இளங்கோ முதலியோர் தம்மையும் பழைய புலவர் வரிசையில் நினைக்க நூல் செய்தவர்; இது கபடம் என்றும் சமண காவியங்கள் காவியப் பிறழ்வு என்றும் (பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள், பக். 43, 44, 46, 49, 98, 105) கூறியுள்ளார். பண்டிதமணி உப அதிபரின் தொடர்பால் பெரிதும் மாறியவர். ஒருவரது வாழ்க்கைத் தத்துவம்அவரது இலக்கியக் கொள்கையை நிர்ணயிக்கக் கூடியது.

பண்டிதமணி அனைத்துக் காவியங்களும் இலக்கியம் ஆகா என்பர். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், ஆராயாமல் கண்ட கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொருளை அப்படியே வைத்து நூல் செய்தால், அது கவிஞனின் திறமைக்குத் தக்கவாறு ஒரு காவியமாவதன்றி இலக்கியமாகாது. கண்ட கேட்ட பொருளை வைத்துக் கொண்டே, அப்பொருளின் பொய்ம்மையை வெளிப்படுத்தி, அதன் மூலம் மெய்ப்பொருளைக் காணும் முகமாக நூல் செய்தால் அது இலக்கியமாகும்" (சிந்தனைக் களஞ்சியம், பக். 65) என்பர். கந்தபுராணம் இலக்கியமாம்; பாரதம் இலக்கியமாம்; சீவகசிந்தாமணி இலக்கியமாகாதாம் - சீவகனின் பொய்த்துறவைப் புனைந்து செல்வதால்.

## III

இனி, குறித்த முப்பெருங்காப்பியங்கள் ஒவ்வொன்றிலும் பண்டிதமணிக்கு ஏற்பட்ட காழ்ப்பைச் சற்று விரிவாகக் காண்போம். முதற்கண் சிலப்பதிகாரத்தைக் கொள்வோம். இதுகாறும் வெளிவந்த பண்டிதமணியின் நூல்களில் சிலப்பதிகாரம் பற்றித் தனிக் கட்டுரை எதனையும் காணோம். வேந்தனாருடன் 1948 ஆம் ஆண்டு 'ஈழகேசரி' இதழ்களில் சிலப்பதிகாரம் - கம்பராமாயணம் பற்றி நடைபெற்ற வாதத்தின்போதும் கண்ணகி பற்றி ம.பொ.சி. உடன் வாதிட்ட போதும் (பண்டிதமணி நினைவு மலர், பக்.62) பண்டிதமணி சிலப்பதிகாரம் பற்றி எழுதியவை பேசியவை அவர் தம் நூல்களில் இடம்பெற்றுள்ளதாக அறியேம். பண்டிதமணியின் கட்டுரைகளைத் தொகுத்து வகுத்து நூல்களாக வெளியிடுவதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை போலும். சிலப்பதிகாரம் பற்றிய கட்டுரைத் தலைப்பின்றிப் பிற விஷயங்கள் பற்றிப் பண்டிதமணி எழுதிய கட்டுரைகளில் சிலப்பதிகாரம் பற்றி இடையிடையே கூறப்பட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பண்டிதமணியின் சிலப்பதிகாரக் காழ்ப்பை விளக்க வேண்டியுள்ளது. சில கட்டுரைகளில் பண்டிதமணியின் காழ்ப்புச் சில வரிகளில் மட்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது; ஏனைய சில கட்டுரைகளில் சற்று விரிவாக உள்ளது.

இதுகாறும் வெளியிடப்பெற்ற பண்டிதமணியின் நூல்களின் பட்டியல் ஒன்று செந்தமிழ்க் களஞ்சியத்தின் பின்புற அட்டையில் உண்டு. அதனில் கண்ணகி தோத்திரமே முதல் நூல். சமயக்கட்டுரைகள் பத்தாவது நூல் இலக்கிய வழி (திருத்தப் பதிப்பு) பதினோராவது நூல். கம்பராமாயணக் காட்சிகள் பன்னிரண்டாவது நூல். நாவலர் பதினான்காவது நூல். சிந்தனைக் களஞ்சியம் பதினேழாவது நூல். கம்பராமாயணக் காட்சிகள் இருபதாவது நூல். அத்வைத சிந்தனை இருபத்திரண்டாவது நூல். செந்தமிழ்க் களஞ்சியம் இருபத்தி மூன்றாவது நூல். பின்னர் வெளிவந்தது பாஷை - இலக்கணம், இலக்கியம் கற்பித்தல் என்னும் நூல். இந்த நூல்களில் உள்ள கட்டுரைகள் சிலவற்றில் ஆங்காங்கே பண்டிதமணியின் சிலப்பதிகாரக் காழ்ப்புப் புலனாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகக் கூறுமிடத்து, சிலப்பதிகாரம் சமண காப்பியம் எனக் கொண்டு அதனைப் பண்டிதமணி வெறுக்கின்றார். அவர் "சமண பௌத்த காப்பியங்கள் அனைத்துக்கும் ஒப்புயர்வற்ற ஏகப் பிரதிநிதி சிலப்பதிகாரம் என்று கொள்ளலாம்" (சிந்தனைக் களஞ்சியம், பக். 63) என்பர்.

"சமயக் கட்டுரைகள்" என்னும் நூலில் பதின்மூன்றாவது கட்டுரை 'சமயம்' என்னும் தலைப்பைக் கொண்டுள்ளது. இந்நூலில் இந்த ஒரு கட்டுரையில் மட்டும் (பக். 102) பண்டிதமணி சீதை, கண்ணகி ஆகிய இருவர் பற்றித் தாம் கொண்ட கருத்தை மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அது,

> "நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு' என்கின்றாள் சீதை. சீதையின் உடன் போக்கை இனி யாருந் தடுத்தல் முடியாது.
>
> 'உடுத்த துகிலோடும் உயிர் உக்க உடலோடும்' இராமனுக்கயலில் அவனுடன் போக அவள் ஆயத்தமாய் விட்டாள். அவளுக்குக் கணவனை அன்றிக் காட்டுவதற்கு இங்கே ஒரு பண்டமும் இல்லை.
>
> கணவனுடைய, 'உயிருடன் சென்ற ஒரு மகள்' கதை சிலப்பதி-காரத்திற் சிந்திக்கத்தக்கது."

என உளது. பண்டிதமணி "அவளுக்குக் கணவனை அன்றிக் காட்டுவதற்கு ஒரு பண்டமும் இல்லை" எனக் கூறியது கோவலன் இறந்தது குறித்து இளங்கோ கணவனை இழந்தார்க்குக் காட்டுவது இல் எனக் கூறியதை நினைவூட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் கதைகள் பல இருப்பினும் முக்கி-யத்துவம் வாய்ந்ததாக கணவனுடைய உயிருடன் சென்ற ஒரு மகள் (பாண்டிமா தேவி) கதையைக் குறிப்பிடுகிறார் பண்டிதமணி. பாண்டிமா-தேவியை உயர்த்துவதன் மூலம் கண்ணகி தாழ்த்தப்படுகிறாள்.

பண்டிதமணி கம்பராமாயணக் காட்சிகள் என்னும் நூலின் முன்னுரையிலும் இளங்கோவின் கண்ணகியையும் கம்பர் தந்த சீதா பிராட்டியையும் ஒப்பிட்டு சீதையின் உயர்வைச் சொல்லாமற் சொல்லிவிடுகிறார். இங்கு அதனைக் காண்க.

> "எழுகென எழுந்தாய் என் செய்தனை' என்று காட்டு வழியில் நடந்து இளைப்புற்ற கண்ணகிக்கிரங்கி, 'என் கருத்துக்கிணங்காமல் நீ என்னுடன் வர மறுத்திருக்கலாமே' என்கின்றான் கோவலன். 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கை-யேனாதலின் ஏற்றெழுந்தனன்' என்கின்றாள் இளங்கோவின் கண்ணகி
>
> காட்டுவழி நடத்தலரிது. 'வழிகள் கல்லரக்குங் கடுமைய'. கற்கள் வெப்ப மிகுதியால் நிலை பெயரும் சுடுகாடு என்கின்றான் ஸ்ரீராமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நின் பிரிவினுஞ் சுடுமோ.' உன் பிரிவிலும் பார்க்கச் சுடுவதொன்று உண்டோ என்கின்றாள், கம்பர் தந்த சீதாபிராட்டி.

இருவர் பெண்களையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கி எடை போட்டுக், காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!"

சிலப்பதிகாரத்தையும் பெரியபுராணத்தையும் ஒப்பிடும் பண்டிதமணி ஒரு கட்டத்தில் பெரிய புராணம் திருமுறை; அருள்வாக்கு; அதனோடு சிலப்பதிகாரத்தை ஒப்பிடுதல் சாலாது எனக் கூறி, கோவைக் கம்பரோடு ஒப்பிடுதலே சாலும் (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 111) என்கிறார். மீண்டும் 'நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு' எனக் கூறிய சீதையையும் 'போற்றா ஒழுக்கம் புரிந்தோய்.......' எனக் கூறிய கண்ணகியையும் ஒப்பிட்டு, கோவலன் கண்ணகியிடம் மன்னிப்புக் கேட்பதொரு சந்தர்ப்பத்தில், கண்ணகியின் பெண்மை வெண்ணெயாயுருகுதற்குரியதொரு சந்தர்ப்பத்தில், கண்ணகி கணவனை நோக்கி 'நடவாத நடை நடந்தவனே; வா என்றாய், வந்து தொலைந்தேன்' என்றாளே! என ஏங்கி, சீதை எங்கே? கண்ணகி எங்கே? பெண்ணுலகமே தீர்வு காண்க" (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 111) என்கிறார்.

செந்தமிழ்க் களஞ்சியத்தில் இடம்பெறும் 'இலக்கியம்' என்னும் மற்றும் ஒரு கட்டுரையிலும் பண்டிதமணி சீதையையும் கண்ணகியையும் ஒப்பிடுகின்றார். ஒப்பீட்டிற்கு அடிப்படை மேலே இருவரும் கூறியதாகக் காட்டப்பெற்றவைதான். சீதையிடம் வள்ளுவர் கூறும் பெண்மையின் இலட்சணங்கள் உண்டு என்றும்; ஆனால் கண்ணகியிடம் இல்லை என்றும் பண்டிதமணி காட்ட முயல்கின்றார். பண்டிதமணிக்கு எழும் சந்தேகம் ஒன்று (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 133) உண்டு:

> "கோவலன், இராமனைப் போல 'நீ இவண் இருத்தி; வருந்தலை; நான் போய் வருகின்றேன்' என்பானாயின் கண்ணகி, 'யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையள்' ஆதலின், வெறுஞ் சொற்றிறம்பாது, கோவலனைத் தொடராதே, வாளா இருப்பள் போலும்."

மேலும், கம்பர் கண்ணகியைப் படைப்பதாயின் இச்சந்தர்ப்பத்தில் வேறுவகையாகவே பேசவைத்திருப்பார்; வேறு வகையாகவே கோவலனை விளிக்க வைத்திருப்பார் எனப் பண்டிதமணி கருதுகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாகப் பண்டிதமணி,

> "ஓ தமிழ்ச் சங்கமே, கண்ணகியை, வள்ளுவரில் உரைத்துச் சீதையோடு ஒப்பிட்டு, அவள் எடையைக் 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!
>
> இரு பாத்திரங்களினதும் கூற்றுக்களை ஆராய்ந்து, இரு பெண்களையும் பிரசவித்த கலைஞர்களையும் எடைபோட்டுப் பாத்திரங்களின் கூற்றுக்கள், சந்தர்ப்பங்களில் வைத்து, யார் நாடகக் கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் தீர்க்கத்தக்கது. அவரவருக்குரிய ஸ்தானத்தை, அவரவருக்கு வழங்குவதே நீதி."

எனக் கூறி (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 133) கண்ணகியை மட்டந் தட்டுகிறார். பண்டிதமணி பாஷை - இலக்கணம் இலக்கியம் கற்பித்தல் என்னும் நூலில் (ப. 55) திறனாய்வு பற்றிக் கூறும்போது "திறனாய்வில், பாத்திரங்களையோ, புலவர்களையோ எடுத்துக்கொண்டு ஒப்பிட்டுக் கணித்தல் ஒருவகை" எனக் கூறி, எடுத்துக்காட்டாக ஆசிரியர் சந்தர்ப்பங்களை விளக்கிவிட்டு கோவலன் 'எழுகென எழுந்தனை என் செய்தனை' எனப் பிரலாபித்தபோது கண்ணகி கூறியதையும் இராமன் காட்டுக்குப் போகுஞ் சமயத்தில் 'நடத்தல் அரிதாகும் நெறி, நீ இங்கேயே இரு' எனக் கூறியபோது சீதை கூறியதையும் - இரு பெண்மைக்குரல்களை ஒப்பிடும்படி மாணவரிடம் சொல்லலாம் என்கிறார். இங்கு பண்டிதமணி தம் கருத்தையோ முடிவையோ எதிர்பார்ப்பையோ கூறவில்லை.

அடுத்துப் பண்டிதமணி பெயர் அடிப்படையில் கண்ணகியை இழிவுபடுத்துகின்றார். சீதை, சாவித்திரி, தமயந்தி என்னும் பெயர்கள் சமுதாயத்திலே பெற்றிருக்கும் மதிப்பு கண்ணகி என்னும் பெயருக்கு இல்லை என்று பண்டிதமணி சுட்டுகின்றார்.

"ஒரு பெண்ணை 'அடி சீதா!' 'அடி தமயந்தி' என்று அழையுங்கள், அவள் முகம் மலர்கின்றது. 'எடி கண்ணகி' என்றால் அவள் நெருப்பெடுப்பாள். சீதை இலங்கையை நெருப்பெடுத்தவள்; தமயந்தி வேடனைச் சாம்பராக்கினவள்; அப்படியிருக்கவும், அவர்கள் பெயரை மகிழும் ஒரு பெண், கண்ணகி பெயரை வெறுப்பதேன். இது சிந்திக்க வேண்டியது.

கண்ணகி, காந்தாரி, கைகேயி வரிசையைச் சேருகின்றாளா? சாவித்திரி, தமயந்தி வரிசையைச் சாருகின்றாளா? உலகம் சான்று பகரட்டும்.

'கோத்திரம் அறிந்து பெண் கொடு' எதற்கும் பூர்வ கோத்திரம் ஆராய்வது நன்று."

எனவும் (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 140) கூறி, கண்ணகியைத் தாழ்த்துகின்றோர். கோவலன், கண்ணகி ஆகியோர் கோத்திரம் பற்றியே குறிப்பிட்டுள்ளார். அத்வைத சிந்தனை 10, கன்மம் 5 இல் அகல்யை, மண்டோதரி, வியாழன் மனைவியாகிய தாரை மூவரும் திரௌபதி, சீதை போலத் தீண்டாத கற்புடைய செழுந்திருக்கள் என்பர். சீதையையும் திரௌபதியையும் சமனாகக் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியிடம் வேறு சில காரணங்களுக்காகவும் குறை காணப்படுகின்றது. இளங்கோவின் தமையன் செங்குட்டுவன் கண்ணகியை அங்கீகரிக்கவில்லை என்றும் கண்ணகியைச் செயிரொடுவந்த சேயிழை என்றான் என்றும், "செயிர்" மோசமான அடை (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 64) என்றும் பண்டிதமணி சுட்டிக் காட்டுகின்றார். மேலும் செயிர் முற்றிய கண்ணகிக்குக் காப்பியம் செய்த காரணம் என்ன? என்று அவர் வினவி, விடையாக

> "இளங்கோவிடம் எவரையும் வசீகரிக்க வல்ல அழகான திணைப் பாடல்கள் உண்டு. திணைப் பாடல் கைவந்தவர் இளங்கோ. அப்பாடல்களைக் காட்டுவதற்கு அவருக்கு வாய்ப்பாயிருந்தது கண்ணகி கதை."

என்று கூறுவதும் (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 64) கருதற்பாலது.

சீதையையும் கண்ணகியையும் ஒப்புநோக்கிய பண்டிதமணி சிலப்பதிகாரத்துப் பாண்டியன் நெடுஞ்செழியனையும் பெரிய புராணத்துப் புகழ்ச் சோழரையும் ஒப்புநோக்கி இருவரும் அபுத்திபூர்வமாக நிகழ்ந்த பழிக்கு அஞ்சி உயிர் நீத்தவர்கள் என்பர். கண்ணகியோ பாண்டியன் பழிக்கஞ்சி உயிர் நீத்த நீதியை மதித்திலள்! சிலப்பதிகாரம் மதித்திலது எனினுமாம் எனக் கொதிக்கின்றார். அவ்வாறு நீதியை மதியாதது நீதி தானோ என்று சேக்கிழார் நாயனாரின் திருவடிக்கீழிருந்து சிந்தித்துத் தெளிதல் வேண்டும் என வேண்டுகின்றார். பெரிய புராணத்தில் புகழ்ச் சோழரின் பட்டத்து யானையையும் பாகர்கள் சிலரையும் கொன்ற எறிபத்தர் புகழ்ச்சோழரைச் சந்திக்கும் முறையை விபரித்த பண்டிதமணி 'கோவலனைக் கொன்ற கொடியோய்' என்று சீறிச் சினந்து கொண்டு, பாண்டிய மன்னனைச் சந்திக்கின்றாள் உக்கிர கண்ணகி (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 110) என்கின்றார். அவர்,

> "பெரிய புராணச் சந்திப்போடு சிலப்பதிகாரச் சந்திப்பை ஒப்பிட்டுக் காமஞ்செப்பாது கண்டது மொழிவார் உளராயின், அவர் சிலப்பதிகாரத்தில் வருஞ் சிலம்புகளுக்கு உள்ளீடு மணியுண்டு; சிலப்பதிகாரத்துக்கு மாத்திரம் உள்ளீடான மணி ஒன்றுமே இல்லை என்பதைக் காணவல்லார் ஆவர்."

எனக் (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 110-111) கேலி செய்கின்றார்.

மேலும், செந்தமிழ்க் களஞ்சியத்தில் இலக்கியம் என்னும் கட்டுரையில் (பக். 135) பண்டிதமணி,

> "'கேடும்பெருக்கமும் இல்லல்ல'. வள்ளுவர் மந்திரம், கோவலன் கேட்டுக் காரணத்தை ஆராய்ந்து, பாண்டியன் நீதிக்குக் கண்ணகி தலைவணங்கி, ஒரு எறிபத்தர் ஆகலாம். நேயத்தே நிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமலனடிக்குச் சிறிதே இடம் கொடுக்கலாம். ஆனால் கண்ணகி கொதிக்கின்றாள். செத்த பாம்பை அடிக்கின்றாள். அரசனிறந்தது கண்டு வைத்தும் 'ஒட்டேன் அரசோடொழிப்பேன் மதுரையையும்' என்கின்றாள், எரிக்கின்றாள்."

என்று சினங்கொள்கின்றார். தமிழ் நாட்டிலே, இலக்கிய உலகிலே ஒரு பாத்திரம் என்ன செய்தது? ஒரு பெண் என்ன செய்தாள் என்று விசாரம் இல்லையாம். கண்ணகி பெண்மையைச் செய்யவில்லை, ஆதலால் இலக்கியத்தில் இடமில்லை என்பர். கண்ணகி ஓர் ஆண்மாரி என்ற கருத்தும் தொனிக்கிறது.

கண்ணகியையே விட்டுவைக்காத பண்டிதமணி கோவலன், மாதவி ஆகியோரை விட்டுவைப்பாரா? மேற்குறிப்பிட்ட கட்டுரையில் (பக். 142) "சிலப்பதிகாரம் ஒரு மாதவி. இதில் மயங்கிய கோவலர் பலர்" எனக் கூறும் உவமையே அவரது காழ்ப்பைப் புலப்படுத்துகிறது.

சிலப்பதிகாரத்தில் குறை காணும் பண்டிதமணி சகோதரத்துவம் எவ்வாறு கம்பனால் கையாளப்படுகிறது; இளங்கோவினால் எவ்வாறு கையாளப்படுகிறது என ஒப்பிடுகிறார். இலக்கியவழி என்னும் நூலில் 'கம்பன் செய்த வம்பு' என்னுங் கட்டுரையில் ஸ்ரீராம சகோதரத்துவமும் சிலப்பதிகார சகோதரத்துவமும் ஒப்புநோக்கப்படுகின்றன." என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" என்பது பிரசித்தி பெற்ற ஒரு சமண காவியமாகிய சிலப்பதிகாரத்தின் உயிர் நிலையையே அசைத்து விட்டது என்பர் பண்டிதமணி. நிமித்திகனொருவன் இளங்கோவிடம் இராசலக்கணம் அமைந்திருக்கிறது என்றபோது தமையன் செங்குட்டுவன் சீறியெழுந்தான். ஸ்ரீராம சகோதரத்துவத்தைக் கம்பன் காட்டியதன் பின் உயிர் வாழ்வதெப்படி என வினவுகின்றார் பண்டிதமணி. அதனால் சிலப்பதிகார அபிமானிகள் நிமித்திகனைச் சீறியவன் இளங்கோ என்று மாற்றியமைக்கும் நிலை நேர்ந்தது என்றும், ஆயின் இம்மாற்றம் நூலுக்கும் அடியார்க்கு நல்லார் உரைக்கும் மாறு என்றும் பண்டிதமணி கூறியுள்ளார். இக்கருத்துக்கள் இலக்கியவழி முதற் பதிப்பில் உள்ள 'கம்பன் செய்த வம்பு' என்னுங் கட்டுரையில் இல்லை.

இதே கருத்தைப் பண்டிதமணி கம்பராமாயணக் காட்சி என்னும் நூலில் 'என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ' என்னுங் கட்டுரையிலும் கூறியுள்ளார். இராமன் கூற்றினால் கைகேகியின் வாய் அடைப்புண்டது; கம்பனுக்கு முன்னே - ஆயிர வருஷம் முந்திப் பிறந்ததும், நெஞ்சை அள்ளுவதுமான சிலப்பதிகாரமே அந்தக்குரலைக் கேட்டதும் கைகேகியின் நிலையை எய்தியது எனக் கூறித் தம் காழ்ப்பை வெளிப்படுத்தியுள்ளார் ஈழத்துப் பண்டிதமணி. பாரதப் பண்பாடு இருந்தபடியைக் கம்பன் எடுத்துக்காட்டினான் என்றும் சிலப்பதிகாரம் செங்குட்டுவனுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை குனிய நேர்ந்தது என்றும் கூறியுள்ளார். சிலம்பின் தோல்வி இவ்வாறு பேசப்படுகின்றது. இராமன் நிலையும் செங்குட்டுவன் நிலையும் கம்ப-ராமாயணக் காட்சிகள் என்னும் நூலின் முன்னுரையிலும் மிகச் சுருக்கமாகப் பேசப்படுகின்றன.

இச்சூழ்நிலையில் இராமனைக் கம்பன் கையாண்ட விதம் வேறு; ஆதிகாவியம் எழுதிய வால்மீகி எனும் ஒப்பற்ற முனிவர் கையாண்ட விதம் வேறு எனப் பண்டிதமணி மேற்குறிப்பிட்ட நூலின் சிறப்புப்பாயிரத்தில் (பக். 6) விளக்கியுள்ளார். வான்மீகியின் படி கைகேயி தசரதன் முன்னிலையில் ஸ்ரீராமனை நோக்கித் தான் வரம் பெற்ற சம்பவங்களைத் தெரிவித்து, வரத்தின்படி இராமனைக் காட்டுக்கு ஏவுகின்றாள். இராமன் மறுக்கின்றான்; கடுஞ் சொற்களினாலே அவளைச் சுடுகின்றான். இத்தகைய இராமனுக்கு ஒரு இராமாயணம் - அதுவும் ஆதிகாவியம் - ஒப்பற்ற ஒரு முனிவர் பெருமானால் செய்யத்தான் வேண்டுமா! எனப் பண்டிதமணி சீறுகின்றார். மேலும்,

> "சிலப்பதிகாரத்தைக் கையிலெடுத்ததும் இராசலக்ஷணத்தைப் பொறாதே சீறுகின்ற ஒரு தமையன் வருகின்றான். அந்தச் சிலப்பதிகாரத் தமையனுக்கு ஒரு அண்ணனாய் வருவான் போன்று தானே, வான்மீகி ராமன் தோன்றுகின்றான்."

எனக்கூறும் பண்டிதமணி வான்மீகி இராமாயணத்தையும் இலக்கியமல்ல என்று தள்ளிவிடுவார் என்பதில் ஐயமில்லை. வான்மீகியின் வடுப்பட்ட இராமனை ஏற்காது கம்பன் வம்பு செய்து மாற்றிவிட்டானாம்.

பண்டிதமணி இளங்கோவிடம் கவிஞன் என்ற நிலையில் சில குறைகளைக் காண்கின்றார். கம்பராமாயணக் காட்சியில் 'தூய சிந்தனையுந் திரிந்தது' என்னுங் கட்டுரையில் அவர் "துஷ்ட நிக்கிரகம் ஒன்று நிகழ வேண்டுமேயானால், அது சித்தித்தற்கு ஒரு பரம சற்பாத்திரத்தைப் பழுதுசெய்ய வேண்டுமா? என்ற வினாவைப் பொதுவாக எழுப்பி," ஒரு கோவலன் கொலையுண்டிறக்க வேண்டுமானால், பழிக்கஞ்சுகின்ற பரம சற்பாத்திரமாகிய ஒரு பாண்டியனுடைய அறங்கரைநாவைத் தடுமாறும்படி செய்துதானா அதனை நிகழ்த்தல் வேண்டும்! என வினவுகின்றார்.

கண்ணகியிடம் குறை இருந்தபோதிலும் அவள் காப்பியக் கதாநாயகி என்றதனால் குறை காண விரும்பாத இளங்கோ ஈற்றில் கண்ணகி வீழ்ச்சி-யடைந்தது போலத் தாமும் வீழ்ச்சியடைந்தார் என பாரத நவமணிகளில் 'வில்லிபாரதம்' என்னும் தலைப்பின் கீழ் (பக். 16-17) பண்டிதமணி கூறியுள்ளார்.

> "பழிக்கஞ்சி உயிர் நீத்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன். பழிக்கஞ்சுதல் உயர்ந்த தருமம். அதனோடு உயிர் நீத்தல் அளவு கடந்த தருமம். இந்த நீதியைக் கண்ணகி என்ற பாத்திரம் பொருள் செய்யவில்லை. அதனைப் பராமுகஞ்செய்து, கண்ணகி கதாநாயகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றதனாற்போலும் அப்பாத்திரத்தைப் பேணினார் இளங்கோ. அதனாற் கண்ணகி போலவே தாமுந் தவறி வீழ்ந்தார். அப்படி வீழ்ச்சி வியாசர் போன்ற முனிவர்கள் கனவிலும் அறியாதது."

சிந்தனைக் களஞ்சியத்தில் 'இலக்கிய உலகில் கிழக்கும் மேற்கும்' என்னுங் கட்டுரையில் "தான் ஏமாந்து செய்த பிழையைச் சரியென்று நினைத்துக் கொண்டு பாண்டியன் நெடுஞ்செழியன் சாகவில்லை; அப்படிச் சாக அந்தராச கவிஞன் விடவில்லை" என்று கூறிவிட்டுப் பண்டிதமணி, உடனே, "இல்லை! இல்லை! பாண்டியன் நீதிவிடவில்லை" எனக் கூறுவதன் மூலம் ராச கவிஞனைச் சற்று மட்டந்தட்டுவது போல உள்ளது.

செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'பழந்தமிழர் வாழ்க்கையும் தமிழும்' என்னுங் கட்டுரையில் (பக். 64) பண்டிதமணி இளங்கோவுக்குக் கதா-நாயகியிற் கருத்து இல்லை என்பர். திணைப்பாடல்களில் இளங்கோவுக்கு இருந்த ஆற்றலைக் காட்டுவதற்கு வாய்ப்பாகியிருந்தது கண்ணகி கதை என்பர். மேலும்,

"மணமக்களின் அலங்கார மண்டபம் போன்றது சிலப்பதிகாரம். உரியான உயிர்ப்பொருளைப் பேணாத இதனைத் தமிழ் என்று சங்கம் ஏற்றுக்கொள்ளுமா? சிந்திக்குக.

நெஞ்சை அள்ளுவது, கண்ணகி கோவலர் கதையா? திணைப் பாடல்களா? காமஞ்செப்பாது கண்டது மொழிமோ."

எனக் கூறிப் பண்டிதமணி தமது சிலப்பதிகாரக் காழ்ப்பைக் காட்டுகிறார். மேலும் மேலும் தமது கருத்தை அழுத்திக் கூறும் பொருட்டு வெவ்வேறு உவமைகளைக் காட்டிச் சிலப்பதிகாரத்தின் தரத்தைக் குறைக்கின்றார். முன் குறிப்பிட்ட நூலிலே 'சீவக சிந்தாமணியை விழுங்கிவிட்டது கம்பநாடன் கவிதை' என்னுங் கட்டுரையில் (பக். 111) பண்டிதமணி "சிலப்பதிகாரம் முகந்த பொருளை இவ்வாறாராயின் 'கானல்வரியுங் குரவைகளும் தொடக்கமும்' என்றிவைகளே நமது விழாக் கோயில்களின் செயற்கைக் கோபுர சிகரங்கள் போல் எஞ்சி நின்று ஒழியுமென்க' என்பர்.

இளங்கோ தமது காப்பியத்தில் கண்ணகியைக் கையாளும் முறையை அங்கீகரிக்காத பண்டிதமணி இலக்கியம் என்னும் கட்டுரையில் (பக்.133) கண்ணகி கம்பர் கைப்பட்டாலோ என ஆசைப்படுபவர் அதே கட்டுரையில்,

"பாவம்! இந்தக் கண்ணகி சேக்கிழார் கைப்பட்டாலோ! ஒரு எறிபத்தர் ஆகாளா? கண்ணகியின் இந்த நிலையில் எறிபத்தரைப் பாடிய சேக்கிழாரின் திருவாய் கண்ணகியைப் பற்றி என்ன சொல்லும்! வள்ளுவரில் உரைத்துப் பாருங்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார். இதே கட்டுரையில் கண்ணகி பெண்மையைச் செய்யவில்லை என்று கூறிய பண்டிதமணி அப்பாத்திரத்தின் கோத்திரத்தை நோக்காது, கண்ணகியைச் சந்திக்கு இழுத்தது கண்ணகியின் குற்றமன்று; கவிஞன் குற்றம் - அதாவது இளங்கோவின் குற்றம் எனக் கூறுகின்றார். மேலும் இதே கட்டுரையில் இளங்கோவின் குறையை,

"இளங்கோ செங்குட்டுவன் கூற்றிலும், தெய்வக்கண்ணகி கூற்றிலும் வைத்துக் கூறியவைகள் பாராட்டுக்குரியவைகள்; ஆயினும் அவர்கள் கட்டி நடத்திய கதாநாயகியாகிய கண்ணகியை அபாத்திரமாகத் தாழ்வுபடுத்தியிருக்கின்றன. பாண்டியன் உணர்ச்சியும், பாண்டிமாதேவி உணர்ச்சியும் பாடலுட் பயிலுதற்கு வாய்த்த உரிகள். அவைகளை நன்றாகப் பாடலாம். அவ்விருவருக்கும் இரு புராணமே பாடலாம். அச்சற்பாத்திரங்கட்கு எதிரிலே, கண்ணகியை நிறுத்தி, அவமானப்படுத்துவதுதான் வருத்தத்துக்கு உரியது; காவியத்தின் உயிரை வதைப்பது."

எனக் கூறுவதன் மூலம் காட்டுகின்றார்.

சிலப்பதிகாரத்திலே, அதனை எழுதிய காப்பிய ஆசிரியன் இளங்கோவிலே குறைகாணும் பண்டிதமணி மேற்குறிப்பிட்ட கட்டுரையிலே (பக். 140),

"ஒரு பாத்திரம் அழ நாமும் அழுகின்றோம், சிரிக்கச் சிரிக்கின்றோம். பிறகுதான், இப்படி நம்மை ஆட்டி வைத்தவன், அந்த வம்பன்-கம்பன் என்று புலவனை நோக்குகிறோம். சிலப்பதிகாரத்தில் இப்படியில்லை. எடுத்த உடனே இளங்கோவையே நோக்குகின்றோம்; அவரது பாஷாலங்காரத்தைப் பாராட்டுகின்றோம்; அவர், எங்கேயும், பாத்திரங்களை மறைத்துக் கொண்டே நிற்கின்றார். மாணவர்களுக்கும் இலக்கிய பாத்திரத்துக்கும் குறுக்கே ஆசிரியன் நிற்பது வெறுக்கத்தக்கது.

சிலப்பதிகாரத்தில் தடவுங்கள். பாத்திரங்களைக் காணோம். இளங்கோ தான், என்ன! என்ன! என்று வினவுகின்றார்."

என்பர்.

பண்டிதமணியின் சிலப்பதிகாரக் காழ்ப்பு யார் யார் மீதெல்லாம் பரவுகின்றது என நோக்குவோம். சிலம்பில் மயங்கிய கோவலர்களில் பாரதியாரும் ஒருவராம். அவர் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாராட்டியதைப் பொறுக்க முடியாத பண்டிதமணி அவருக்கு ஒன்று சொல்ல விழைகின்றார். அது பின்வருமாறு (செந்தமிழ்க் களஞ்சியம், ப. 142) :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா, பாரதியார் அவர்களே, ஸ்ரீநிவாச சாஸ்திரியார் இருந்தார். சேர்ச்சில் துரை சீவந்தராய் இன்னுமிருக்கிறார். அவர்களுடைய உயர்ந்த பாஷை நடைக்கு எங்கள் இரு செவிகளையும் தாராளமாகக் கொடுக்கிறோம். ஆனால் நெஞ்சை மாத்திரம் கொடுக்கத் தயாரில்லை. ஏனென்றால், காந்திஜிக் கிழவரின் கருத்துக்குத்தான் நெஞ்சைக் கொடுக்கிறோம்; கொடுத்து விட்டோம். பாஷைக்குக் கருத்துத்தானே உயிர்; உள்ளீடு உள்ளீடற்ற சிலப்பதிகாரத்துக்கும் அப்படித்தான் செய்யப்போகிறோம். "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்ற வார்த்தையைத் தள்ளி 'செவியை' என்ற வார்த்தையை வைத்துக் கொள்ளும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்."

செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'சீவகசிந்தாமணியை விழுங்கிவிட்டது கம்ப நாடன் கவிதை' என்னுங் கட்டுரையில் (பக். 110) "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் தீட்டியதொரு முத்திரையோடு, அது இன்று நின்று திகழுகின்றது. சிலப்பதிகார ரசிகர்கள், புராணங்களை எட்டியும் பாரார்கள்; கிட்டவும் வாரார்கள்" என்று தம் ஏக்கத்தையும் வெளியிட்டுள்ளார்.

இதுகாறுங் கூறியவற்றால் பண்டிதமணியின் சிலப்பதிகாரக் காழ்ப்புப் புலனாகும். அக்காழ்ப்பு அவரது கட்டுரைகள் பலவற்றில் சிதறிக்கிடக்கிறது; தேடித் திரட்டி ஒன்று சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது. பண்டிதமணி தனிநூல் என்று யாதும் எழுதிவெளியிடவில்லை-கந்தபுராண தக்ஷகாண்ட உரையைத் தவிர. அவர் எழுதிய சிலப்பதிகாரக் காழ்ப்புப் பற்றிய தனிக் கட்டுரைகள் கிடைக்காமற் போனது பெரும் இழப்பாகும்.

## IV

தமது இளமையில் கண்ணகியைப் போற்றிய பண்டிதமணி, பின்னர் அவளைத் தூற்றி, மீண்டும் தமது முதிர்ந்த வயதில் 'தெய்வக் கண்ணகி' எனக் குறிப்பிடுகின்றார். இதனை அவரது அத்வைத சிந்தனையில் (பக். 97) காண்க. பண்டிதமணி இளங்கோவையும் அவர்தம் காப்பியத்தையும் ஒரோவிடத்துப் போற்றியுமுள்ளார். அவர்தம் போற்றுதலையும் காண்போம். இலக்கிய வழியின் முன்னுரையில் சுவாமி விபுலானந்தரின் பாடல்கள் பற்றிக் கூறும்போது அவை "சிலப்பதிகாரத்தில் வரும் இனிய பாடல்கள், 'கலித்தொகைப் பாடல்கள் என்றிவைகளின் வரிசையில் வைத்துச் சுவைத்தற்குரியவை" என்கின்றார். 'இலங்கை வளம்' என்னுங் கட்டுரையில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் "அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி" என்னும் பாடலைக் கேட்கும்போது நமது வாய்க்குள்ளே "பெரியவனை மாயவனை" என்ற சிலப்பதிகாரப் பாட்டு வரலாம் என்கிறார். சோமசுந்தரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரின் இலங்கை வளம் என்ற கவிதை நூலுக்குப் பண்டிதமணி அளித்த அணிந்துரையில்,

"இலங்கை வளம் கேளாத செவியென்ன செவியே
இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே."

என ஆய்ச்சியர் குரவையைப் பின்பற்றிப் பாடிவிட்டார். சிந்தனைக் களஞ்சியத்தில் நெய்தல் என்னும் கட்டுரையில் இரங்குதலாகிய அன்புக் கண்ணீர் பெருகுவதற்குச் சிலம்பில் இருந்து பாடல்களைக் காட்டியுள்ளார். அன்பினைந்திணை என்ற நூலிலும் நெய்தலுக்கு 'மோதுமுது திரையால்' என்ற பாடலையும் முல்லைக்கு 'கன்று குணிலாக்கனியுதிர்த்த மாயவன்' என்ற பாடலையும் எடுத்தாண்டிருக்கிறார். பாஷை-இலக்கணம் இலக்கியம் கற்பித்தல் என்னும் நூலில் (பக். 49-50) பண்டிதமணி சிலப்பதிகாரத்தில் வரும் குரவைப் பாடல்கள் மத்திய வகுப்பு மாணவர்கள் முழுகித் திளைக்கக் கூடியவை எனப் பரிந்துரை செய்கின்றார். செந்தமிழ்க் களஞ்சியத்தில் இலக்கியம் என்னும் கட்டுரையில் பண்டிதமணி இளங்கோவின் ஒப்புயர்வில்லாத முத்தமிழ் வன்மை பற்றிக் கூறுகின்றார்; இளங்கோவின் பாஷாலங்காரத்தைப் பாரட்டுகின்றோம் என்கிறார். சுருக்கமாகக் கூறின் திணைப்பாடல் கைவந்தவர் இளங்கோஎனப் பண்டிதமணி பாராட்டுவர். கம்பராமாயணக் காட்சிகளில் 'கோதென்றுண்டிலன்' எனுங் கட்டுரையில்,

"முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்."

என்னும் சிலப்பதிகார வரிகளை மேற்கோள் காட்டுகிறார். சில இடங்களில் சிலப்பதிகார நிகழ்வுகளை உவமையாகக் காட்டுகிறார். செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'தமிழ் நுதலியது களவு களவியல் நுதலியது தமிழ்' என்னும் கட்டுரையில், "மாதவியின் கானற் பாணி கனக விசயரின் முடித்தலையை நெரித்தது போல இந்தக் கதையும் மூன்று பெரிய சுமைகளாய்ச் சிந்தனையாளர்களின் தலைகளை நெரிக்கலாம்" என்றும், கம்பராமாயணக் காட்சியில் 'சீதை கேள்வன் வனமாள்வது' என்னுங் கட்டுரையில் "கனக விஜயரின் முடித்தலையைக் கண்ணகிக் கருங்கல் நெரிப்பது போலக், கைகேயிக்கு ஒரு நாள் வாக்குத்தத்தஞ் செய்த வரங்களிரண்டும் சக்கரவர்த்தியின் முடித்தலையை நெரிக்கின்றன" என்றும் ஒப்புமை காட்டப்படுகின்றது. பாரதநவமணிகள் என்னும் நூலில் 'வில்லிபாரதம்' என்னும் பகுதியில் (பக். 22) "ஆறு, கடல், மலை, நாடு, நகர் வருணனைகள் பாரதத்தில் இல்லை. சிலப்பதிகாரம் தொடங்குவது போல், நேரே கதையில் தொடங்குகிறது பாரதம்" எனப் பண்டிதமணி கூறும் ஒப்புமை சிலம்பின் நல்ல அமிசம் ஒன்றைக் கூறுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V

பண்டிதமணி சிலப்பதிகாரம் மீது தமக்குள்ள காழ்ப்பைப் பல கட்டுரைகளில் இடையிடையே வெளிப்படுத்திய அளவிற்குச் சீவக-சிந்தாமணி மீது இருந்த காழ்ப்பை வெளிப்படுத்தவில்லை. காரணம் சிலப்பதிகாரம் போற்றப்படும் அளவிற்குச் சிந்தாமணி போற்றப்படுவதில்லை என்பதாகலாம். பண்டிதமணி சிந்தாமணி பற்றித் தனிக் கட்டுரைகள் மூன்று எழுதியுள்ளார்: சிந்தனைக் களஞ்சியத்தில் 'சீவக சிந்தாமணி' எனுங் கட்டுரை உண்டு. 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி சீவக சிந்தாமணி', 'சீவக சிந்தாமணியை விழுங்கிவிட்டது கம்பநாடன் கவிதை' ஆகிய இரு கட்டுரைகளும் செந்தமிழ்க் களஞ்சியத்தில் உண்டு. இவற்றை விட, இலக்கிய வழி முன்னுரையிலும், 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள், 'வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை', 'தமிழ் தந்த தாமோதரம் பிள்ளை' ஆகிய கட்டுரைகளிலும் சிந்தனைக் களஞ்சியத்தில் 'சங்க காலத்துக்குப் பிறகு.....', 'புலவர் பெருமான் திரு. அ. கு. அவர்கள்' ஆகிய இரு கட்டுரை-களிலும், கம்பராமாயணக் காட்சிகளில் முன்னுரையிலும், அத்வைத சிந்தனையில் சிந்தனை 10, கன்மம் 7 இலும், செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'எமது சொந்த அநுபவம்', 'டாக்டர் உ. வே. சா. ஐயர்அவர்களில் ஏன் இந்தத் துவேஷம்' ஆகிய கட்டுரைகளிலும் பண்டிதமணி சிந்தாமணி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவரது குறிப்புக்களில் காழ்ப்பே மிக அதிகம்; பாராட்டு மிக மிகக் குறைவு.

சீவகனின் துறவு பொய்த்துறவு எனப் பண்டிதமணி விளக்குகின்றார். திராட்சைப் பழம் எட்டாததால் நரிக்கும் துறவு வந்தது. மனைவி மக்களோடு கோபித்துக் கொண்டு சிலர் கதிர்காமம் புறப்படுகிறது போன்ற பொய்த் துறவும் உண்டு. புத்தருக்கு வந்த துறவு அவலக் கவலை கையாறு அழுங்கல் சாக்காடுகளை நினைத்து வந்தது. சீவகன் பொய்த் துறவைப் புனைந்து செல்கின்றது சிந்தாமணி. அதனால் அது ஒரு காவியமாவதன்றி இலக்கிய-மாகாது என்று பண்டிதமணி சிந்தனைக் களஞ்சியத்தில் 'சீவக சிந்தாமணி' என்னும் கட்டுரையில் (பக். 58-67) விளக்குகின்றார். மேலும் "கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி" என்று உமாபதி சிவாசாரியரால் சேக்கிழார் புராணத்தில் இழித்துரைக்கப்பட்டது எனச் செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி சீவக சிந்தாமணி' என்னும் கட்டுரையில் தெரிவிக்கின்றார். பொய்யே கட்டிய சிந்தாமணியில் வருகின்ற பொய்யை விளக்குகின்றார். சீவகன் துறவுக்குக் காரணம் ஒருவகை அச்சம்; நிலையாதது நிலைக்க வழியில்லையே என்று வந்த துறவு சீவகன் துறவு; நரித்துறவு என்பர். சிந்தாமணி சிற்றின்ப ரசத்தை வர்ணிக்கும் நூல் என்றும் பொய்யாய சிற்றின்பத்தை மிகுத்துப் பேசுவதாலும் சிந்தாமணி 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி'யாயிற்று என்றும் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமணி இரசிகர்களுக்கு ஒரு வார்த்தை அருளுகின்றார் சிவஞான சுவாமிகள் எனக் கூறிய பண்டிதமணி,

> "சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
> தூக்கியுப தேசித்தார் சோமேசா - நோக்கின்
> பயனில் சொற் பாராட்டுவானை மகனெனல்
> மக்கட் பதடி யெனல்."

என்னும் செய்யுளைக் காட்டுகின்றார். நாவலர் தமிழ்ப் புலமை என்ற பாடத் திட்டத்தில் சீவக சிந்தாமணியைச் சேர்க்கவில்லை என்றும் கூறுகிறார். சீவக சிந்தாமணி இலக்கியமன்று என்ற கருத்து பெரிய புராண காலத்தது.

பண்டிதமணி 'துறவு' என்பதற்கு இலக்கணம் எனக் குறள் ஒன்றைக் காட்டுகின்றார்:

> "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன்."

இந்த அருமைத் திருக்குறளின் படி எதிலிருந்து எதிலிருந்து துறவு பூணுகிறானோ, பிறகு துறந்த அதனாலே அதனாலே, அதனைத் துறந்ததற்கு அவன் வருந்துவதில்லை. துறப்பது அமலத்தை அன்று; மலத்தை. பந்தங்கள் நித்திரையிற் கைப்பொருள் போல நீங்குவதே துறவு; நீக்குவது துறவன்று என விளக்கந் தருகிறார். மேலும் அத்வைத சிந்தனை 10, கன்மம் 7 இல் வள்ளுவர் காட்டும் வழியை விளக்கியுள்ளார்.

உமாபதி சிவாசாரியார் மட்டுமன்றிக் கம்பநாடன் கூடச் சிந்தாமணியை மதிக்கவில்லை; சிறிதும் பொருள் செய்யவில்லை எனப் பண்டிதமணி இலக்கியவழியில் 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்' என்னுங் கட்டுரையில் (பக். 9) குறிப்பிட்டுள்ளார்.

சிந்தாமணியின் தாக்கம், செல்வாக்குப் பற்றிப் பேசும் பண்டிதமணி,

> "சேக்கிழார் காலந்தொட்டு நாவலர் காலம் வரை, புத்தமும் சமணமும் பாரத நாட்டில் ஒடுக்கம் எய்தியது போலச் சிந்தாமணியும் ஒடுக்கம் எய்தியிருந்தது. அவ்வொடுக்கத்துக்குப் பெரிய புராணந்தான் முழுக்காரணம் என்று சொல்ல முடியாது. கம்பராமாயணந் தோன்றிக் காவிய ரசிகர்களைத் தன் வயப்படுத்திக் கொண்டது. அதனாற் சிந்தாமணி செத்தே போனது."

என்றும் பின்னர்,

> "சேக்கிழார் தொடக்கம் நாவலர் மறைவுக் காலம் வரை மறைந்து ஒடுங்கியிருந்த சீவகசிந்தாமணி ஐயரவர்களால் ஜீவதசையுற்றுத் தலை நிமிர்ந்தது. ஆயினும், கம்பநாடன் கவிதையே கற்றோருள்ளத்தைக் கொள்ளை கொண்டு, சீவக சிந்தாமணியை விழுங்கி விட்டது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கிறார் 'சீவகசிந்தாமணியை விழுங்கிவிட்டது கம்பநாடன் கவிதை' என்னுங் கட்டுரையில். சிந்தனைக் களஞ்சியத்தில் 'சீவக சிந்தாமணி' என்னும் கட்டுரையில்,

> "டாக்டர் ஐயர் அவர்கள், உமாபதி சிவத்தின் அருட்பெருமைகளை உணர்ந்தவர்களாயிருந்தும், துரதிர்ஷ்ட வசமாக 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணியென்றால் நமக்கென்ன! நாம் விரும்புவது 'தமிழ்ச்சுவை, சொற்சுவை, பொருட்சுவை' என்று தடித்த எழுத்தில் உரைத்திட்டார்கள்.
>
> தமிழ்த்தாத்தா இப்படி உரைப்பாராயின், பொய்ம்மையில் சுவை காண்பாராயின், இனித்தாய் நாட்டு நிலையை ஆராய்வதிற் பயனில்லை. பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குவது புலைமையாமன்றி புலமை ஆகாதே. தாய்நாடு செக்குக்கும் சிவலிங்கத்துக்கும் சமரசம் பண்ணிச் சாம்பார் பண்ணுகின்றது. பொருளைப் பற்றிய சிந்தனையற்ற சாதாரண கவிஞனும், தெய்வப் புலவர் திருவள்ளுவரும் இன்றைய தாய் நாட்டுக்கு ஒரு பண்டந்தான்."

எனக் கூறிய பண்டிதமணி தம் காழ்ப்பைக் காட்டுகின்றார்.

பண்டிதமணியின் காழ்ப்புத் தோன்றும் மற்றுமோர் இடமுண்டு. செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி சீவகசிந்தாமணி' என்னுங் கட்டுரையில் (பக். 106),

> "சிந்தாமணியில் இறுதி இலம்பகம் முத்தியிலம்பகம். அதனைக் காவிய இரசிகர்கள் எட்டியும் பார்ப்பதில்லை. அதற்கு முன்எட்டு மதுக்குடங்கள். எட்டு இலம்பகங்கள் என்ற பெயரில் நிரைக்கப்பட்டிருக்கின்றன.......... (இரசிகர்கள்) மதுக்குடங்களுடனேயே நின்று விடுகின்றார்கள். சிந்தாமணிக்கு 'மணநூல்' என்று மற்றொரு பெயரும் உண்டு. அதனை 'மதனூல்' என்று திருத்துவது பொருத்தம்."

என உள்ளதைக் காண்க.

இவ்வாறெல்லாம் கூட்டங்களில் பேசியும் பத்திரிகைகளில் எழுதியும் வந்த பண்டிதமணியின் சிந்தாமணிக் காழ்ப்பை யாழ்ப்பாணத்தவர் அறிந்திருந்தனர். சேக்கிழார் விழாவொன்றில் சிந்தாமணியையோ உ. வே. சா. ஐயர் அவர்களையோ தாம் தீர்த்துக் கட்டப்போவதாக எண்ணம் சிலர் பால் இருந்தது பற்றியும் பண்டிதமணி செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'டாக்டர் உ. வே. சா. ஐயர் அவர்களில் ஏன் இந்தத் துவேஷம்' என்னும் கட்டுரையில் (பக். 94) குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI

இனி பண்டிதமணி சிலப்பதிகாரத்தில் திணைப் பாடல்களைப் பாராட்டியது போலச் சிந்தாமணியிலும் யாதும் குறித்துப் பாராட்டியுள்ளாரா எனக் காண்போம். இலக்கிய வழி முன்னுரையில் பண்டிதமணி சுவாமி விபுலாநந்தரின் பாடல் ஒன்றைச் சீவகசிந்தாமணிப் பாடல்களோடு ஒப்பிடுவதன் மூலம் சிந்தாமணிப் பாடல்களுக்குச் சிறப்புண்டு என்ற கருத்தைத் தெரிவிக்கின்றார். சுவாமிகளின் 'தாழ்ந்து மென்மொழி பகர்ந்திடேல்' என்கின்ற கெம்பீரமான பாட்டு - யூலிய சீசர் கூற்றாய் வருவது, 'சீவகசிந்தாமணிப் பாடல்களோடொப்பிடத்தக்கது' என்கிறார். மேலும் டாக்டர் உ. வே. சா. ஐயர் அவர்கள் வித்துவசிரோமணிக்குச் சிந்தாமணியின் ஆழம் பற்றி எழுதிய கடிதத்தைப் பண்டிதமணி செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'எமது சொந்த அநுபவம்' என்னுங் கட்டுரையில் மேற்கோள் காட்டுவதன் மூலம் சிந்தாமணிச் சிறப்பை ஒரு வகையில் ஏற்றுக்கொள்கின்றார்.

## VII

இனி, மணிமேகலை மீது பண்டிதமணியின் காழ்ப்பு எத்தகையது எனக் காண்போம். மணிமேகலை பௌத்த காப்பியம். பண்டிதமணி சிலப்பதிகாரம் மீதும் சிந்தாமணி மீதும் தமக்கிருந்த காழ்ப்பை வெளிப்படுத்திய அளவிற்கு மணிமேகலை மீது கொண்டிருந்த காழ்ப்பை வெளிப்படுத்தவில்லை எனலாம். சிலப்பதிகாரம் போற்றப்படும் அளவிற்கு, சிந்தாமணி இரசிக்கப்பெறும் அளவிற்கு மணிமேகலை போற்றப்படுவதுமில்லை, இரசிக்கப் பெறுவது-மில்லை என்பது காரணமாகலாம். எனினும் இரண்டொரு கட்டுரைகளில் இடையிடையே பண்டிதமணி தம் காழ்ப்பை வெளியிட்டுள்ளார்.

சிலப்பதிகாரம் பற்றிக் கூறும்போதும் சிந்தாமணி பற்றிக் கூறும் போதும் திருக்குறளை உரைகல்லாகக் கொண்டது போல இங்கும் திருக்குறளைக் கொள்கின்றார். செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'சீவக சிந்தாமணியை விழுங்கிவிட்டது கம்பநாடன் கவிதை' என்னும் கட்டுரையில் (பக். 109),

> "துறவியாகிய மணிமேகலை என்பாள், சாதுவன் ஆதிரை என்கின்ற தம்பதிகளிடம் தன் அக்ஷய பாத்திரத்தில் முதற் பிக்ஷையை ஏற்கின்றாள். அத்தம்பதிகள் இட்ட பிக்ஷைப் பொருளை,
>
> அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரளவிடல் என்கின்ற பொருளாதாரத் திருக்குறள் என்கின்ற தேவ உரை கல்லில், காவிய ரசிகர்கள் உரைத்துப் பார்க்க வல்லவராயின், சிந்தாமணியின் துறவுப் பொருள் போலவே, மணிமேகலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளும் பொருளற்றதாய், மணிமேகலை வெறும் மேகலை-யாதலைக் கண்டு நாணுவர் என்க."

எனப் பண்டிதமணி கூறுவதன் மூலம் தமது மணிமேகலைக் காழ்ப்பைப் புலப்படுத்துகிறார். சமயக் கட்டுரைகள் என்னும் நூலிலும் அநுபந்தத்தில் இதே குறளைக் காட்டி இதே கருத்தைக் கூறுகின்றார். சாதுவனுக்கும் இந்தக் குறள் கூறும் சுவதர்மத்துக்கும் எவ்வளவு தூரம் என்பதுதான் சிந்திக்கத்தக்கது என்கிறார். இதனோடு,

"தெண்ணீ ரடு புற்கை யாயினுந் தடாந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில்."

என்னும் குறளையும் காட்டி,

"இந்த உலகத்திலே சாதுவன் போன்றவர்களே பெரிய பிரமுகர்கள். இதிலிருந்து சாதாரண உலகின் நிலை எப்படியிருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம். சுவதர்மி என்று ஒருவன் இந்த உலகில் இருந்தால் அவனைத் தரிசிப்பதே ஜன்ம சாபல்யம். அதனாலே தான், 'தருமம் என்று ஒரு பொருள் உளது'. அது 'அருமையின் வரும் பொருளாகும்' என்றார் காசிப முனிவர்."

என்பர் பண்டிதமணி.

இலக்கிய வழியில் 'வாழ்க்கையின் மூன்று படிகள்' என்னுங் கட்டுரையில் மணிமேகலையில் வரும் பாத்திரம் ஆபுத்திரன் என்பவன் அமுத சுரபி மூலம் உணவுகளை உயிர்களுக்கு வழங்கி மகிழ்ந்ததைக் கூறிப் பின்னர் ஒரு காலத்தில் மழைபெய்து நாடு செழித்துச் செல்வம் பெருகியதால் ஒருவரும் அவனுடைய கொடையை விரும்பாததால் அவனுக்குத் துக்கம் வந்துவிட்டது என்றும், செல்வம் பெருகி உயிர்கள் நல்வாழ்வு வாழ்வதை அவன் மகிழவில்லை என்றும் பண்டிதமணி கூறி ஆபுத்திரனின் கெட்ட மனதைக் காட்டுகின்றார்.

ஒரு காலகட்டம் வரை - சேலம் இராமசாமி முதலியார் என்ற பிரபுவை, பெரிய உத்தியோகத்தரை 1880 ஆம் ஆண்டு சென்னையில் சந்திக்கும் வரை - சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களைப் படிக்காத, கண்ணால் பார்க்காத உ. வே. சா. ஐயர் அவர்கள் அவற்றையும் பின்னர் சங்க இலக்கியங்களாக ஆக்கிவிடப் பாடுபட்டாரே; மணி-மேகலைக்கு நல்ல அதிர்ஷ்டம் என்று சிந்தனைக் களஞ்சியத்தில் 'சங்கத் தமிழ்' என்னும் கட்டுரையில் (பக். 109) கிண்டலாகக் கூறியுள்ளார். மணிமேகலை பற்றி அதிகம் எழுதாத பண்டிதமணி அதனில் எதையும் பாராட்டிக் கூறியதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIII

பண்டிதமணி அவர்களைத் தொடர்ந்து சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை ஆகிய காப்பியங்களில் குறைகள் உண்டு; அவை இலக்கியங்கள் ஆகா என்று பெரிதுபடுத்தி பண்டிதர் மு. கந்தையா தவிர வேறு யாரும் குறிப்பிடக்கூடிய அளவிற்கு எழுதியதாகத் தெரியவில்லை.[7] வேந்தனாரைத் தவிர வேறு யாரும் பண்டிதமணி எழுதியவற்றை மறுத்து எழுதியதாகவும் தெரியவில்லை. பண்டிதர் சச்சிதானந்தன் மட்டும் பண்டிதமணியின் விருப்பு வெறுப்புப் பற்றி பண்டிதமணி பிறந்த தினச் சொற்பொழிவொன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சிலப்பதிகாரம் பற்றி, இளங்கோவடிகள் பற்றி, கண்ணகி - மாதவி பற்றி, கானல் வரி பற்றி, ஆராய்ந்து எத்தனையோ அறிஞர்கள் நூல்கள் பல எழுதியுள்ளனர்; கட்டுரைகள் பல எழுதியுள்ளனர். இவர்கள் கருத்தும் நோக்கும் பண்டித-மணியின் கருத்து, நோக்கு, காழ்ப்பு என்பனவற்றில் இருந்து வேறுபட்டவை. பின்னர் வந்த அறிஞரிடம் சிலப்பதிகாரக் காழ்ப்பே இல்லை என்று துணியலாம். பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர் போன்ற அரசியல் வாதிகளின் கருத்தை இங்கு கருதவில்லை.[8] தமிழில் ஆதிகாவியமாக விளங்கும் சிலப்பதிகாரம் பற்றி ஏனைய ஆய்வாளரின் கருத்தை, குறிப்பாக மு. வரதராசன், தெ. பொ. மீனாட்சிசுந்தரன் ஆகியோர் கருத்தைப் பண்டிதமணியின் கருத்துடன் ஒப்புநோக்கிப் பார்ப்போம்.

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியார் பாடிய போதிலும் அது மிகப் பிரபல்யம் அடைந்தது முடிந்த நூற்றாண்டின் தொடக்கத்திற்குப் பின்னரே தான். கண்ணகி - கோவலன் கதை மிகப் பழமை வாய்ந்தது. அது பல நூற்றாண்டுகளாக மக்கள் அறிந்த கதையாக இருந்து வந்துள்ளது. 1942க்குப் பின்னரே இக்காவியத்திற்கு ஒரு புதிய வாழ்வு உண்டாயிற்று என்று கூறலாம் என்பர் வையாபுரிப்பிள்ளை (இலக்கிய மணிமாலை, பக். 128). ஆயின் 1872இல் சுப்பராயச் செட்டியாரும், 1876இல் ரி. இ. சீநிவாசராகவாசாரியாரும் புகார்க்காண்டத்தை வெளியிட்டு விட்டனர்.[9] டாக்டர் உ. வே. சாமிநாதையர் 1892 தொடக்கம் நூல் முழுவதையும் உரையுடன் (அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரை) பதிப்பித்தனர். சேர். ஆர். கே. சண்முகம் செட்டியார் புகார்க் காண்டத்தைத் தாம் எழுதிய எளிய உரையுடன் பதிப்பித்து வெளியிட்டார். ந. மு. வேங்கடசாமி நாட்டாரது உரையுடன் ஒரு பதிப்பும் வெளிவந்தது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், மயிலைநாதர், பேராசிரியர் போன்றோர் தத்தம் உரைகளில் இக்காப்பி-யத்தில் இருந்து மேற்கோள் காட்டியுள்ளனர்.

வரதராசன் "இளங்கோவடிகளின் காவியத்தை வழிவழியாகப் பலர் போற்றிப் பயன்பெற்றிருக்கிறார்கள். சமயப்போராட்டங்கள் இல்லாத காலத்தில் இக்காவியம் போற்றிக் கற்கப்பட்டது. சமண பௌத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசல்களும் அச்சமயங்களை எதிர்த்த சைவ வைணவப் போராட்டங்களும் வளர்ந்த காலத்தில் (கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பதினோராம் நூற்றாண்டு வரையில்) சமணர் அல்லாத பிற சமயத்தார் சிலப்பதிகாரத்தைக் கற்பது குறைந்தது. சமணர் மட்டுமே கற்கும் நூலாக நின்றது..... இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகத்துச் சமயங்களை எல்லாம் கற்று உணரும் வாய்ப்பும், பலவகைச் சமயத்தினரும் கூடிப் பழக வேண்டிய தேவையும் வளர்ந்தன; இலக்கியத்தைச் சமயப் பயன் கருதிக் கற்காமல் கலைப்பயன் கருதிக் கற்கும் முறையும் ஆங்கில இலக்கியப் பயிற்சியால் அறிஞர் பலர்க்கு வாய்த்தது; சமய வேறுபாடுகளைக் கடந்து பொதுமை நோக்கத்துடன் பல்வேறு சமயச் சான்றோர்களையும் போற்றும் தெளிவும் ஏற்பட்டது. இவற்றின் பயனாக, சிலப்பதிகாரத்தைத் தமிழர் பலரும் சமய வேறுபாடு இன்றி இலக்கியச் செல்வமாகப் போற்றிக் கற்கும் நன்னிலை தோன்றிற்று" (இளங்கோ அடிகள், பக். 5-6) என்பர்.

கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற இலக்கியங்களைப் படித்துச் சுவைப்பது போல் சிலப்பதிகாரத்தையும் படித்துச் சுவைப்பவர் பலர் உளர். இதனை வரதராசன்,

> "வாழ்க்கையில் நேரும் துன்பத்தை மக்கள் அனைவரும் வெறுக்கின்றனர். ஆயினும் கலைவடிவு பெறும் துன்பத்தை எவரும் வெறுப்பதில்லை....... ஆழ்ந்து நோக்கினால், காவியம் ஓவியம் இசை நாடகம் முதலியவற்றுள் துன்பப் பகுதி உள்ளத்தைக் கொள்ளை கொள்வது போல் இன்பப் பகுதி உள்ளத்தைக் கவர்வதில்லை. சிலப்பதிகாரத்தில் மதுரைக்காண்டம் பலமுறை கற்கப்படுவதற்கும், கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டமும், சுந்தர காண்டமும் திரும்பத் திரும்பப் படிக்கப்படுவதற்கும் காரணம் இதுவே."

(இலக்கிய ஆராய்ச்சி, பக். 66) என்பர். "இளங்கோவடிகள் சமண மதக் காப்பியம் எழுதவில்லை. சிறந்த இலக்கியம் எனும் பொதுக் காப்பியமே எழுதுகிறார்" (குடிமக்கள் காப்பியம், பக். 135) என்பர் மீனாட்சிசுந்தரன்.

மக்களின் சமய நோக்கு காலத்திற்குக் காலம் மாறுகிறது என்பதனைப் பண்டிதமணியும் உணர்ந்துள்ளார். ஆனால் அது அவருக்குக் கசப்பாகவே உள்ளது. சமயக் கட்டுரைகளில் சமயம் 11 என்பதில் (பக். 89) "இப்பொழுது பௌத்தம் உலக சமயங்களுள் தலை நிமிர்ந்து விளங்குகின்றது. உபநிஷத்துக்கள் உதித்த பாரததேசம் புத்ததர்ம சக்கரத்தையே தனது ஆக்ஞா சக்கரம் என்கிறது. கீதாபாராயணக்காரரே அர்ச்சுனனுக்கு மேலே அசோகனைத் தூக்கி வைக்கிறார்கள். உலகம் போற்றும் இந்தியத் தத்துவ சாத்திரிகள் புத்ததர்மம் இந்து தர்மத்துக்கு உறுதுணை என்று புத்தகம் ஆங்கிலத்தில் எழுதுகின்றார்கள்" எனக் கவலைப்படுகின்றார். சில விஷயங்களில் புதுமையையும் மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி மற்றும் சில விஷயங்களில் பழமையையே இறுக்கிப் பிடித்துக்-கொள்வார். இதுவும் ஒரு வகைப் பற்று எனலாம்.

சங்கம் முடிவுற்ற காலத்தில் அல்லது சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய காலத்தில் சிலப்பதிகாரம் தோன்றியது. பண்டிதமணி எண்ணுவது-போல் இக்காலத்தைப் பொருள் மரபு குன்றிய காலம் எனக் கருத வேண்டிய-தில்லை. உலகமே போற்றும், தமிழுக்குக் கதி இரண்டு, அவற்றில் ஒன்று எனக் கொள்ளப்படும் திருக்குறள் தோன்றிய காலமும் சங்கம் ஒடுங்கிய காலமேயாகும். திருக்குறள் சங்ககாலத்தது (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 61) எனக் கொள்வது தவறு. சமண பௌத்த காவியங்களைச் சங்கம் அங்கீகரிக்குமா எனின், சங்க காலத்திலேயே சமண பௌத்த மதத்தைச் சேர்ந்த புலவர்கள் வாழ்ந்தனர் என மீனாட்சிசுந்தரன் கூறுவர். சங்கத்துச் சான்றோர் கடைப்பிடித்த அறத்தையும் சங்கம் மருவிய காலத்தவர் கடைப்பிடித்த அறத்தையும் விளக்கும் போது மீனாட்சி சுந்தரன் (Papers on Linguistics and Literature, p.97-108),

"The poems of that (Cankam) age paint for us the ideal of human life, either from the internal or external points of view. That is, they give us the poetry of ethical mysticism where nothing is of greater value than the life of an ideal man, living for others inspired by the fundamental principles of love and in that way becoming one with that universal life of Dharma.

The poetry of the Cankam age, from another point of view, could be thought of merely as the poetry of the human passion of love and the poetry of human glory on the battle field. The Jains and Buddhists naturally wanted to avoid this interpretation. Therefore they have tried to build poetry on the solid foundations of the ideal life of love and self sacrifice which the Cankam poets have enshrined in their verses.

Thiruvalluvar has been governing the destinies of Tamil literature ever since he wrote Thirukkural in this country. Thiruvalluvar does not merely enunciate the moral principles. We get in his work the picture of an ideal man and therefore the epics in this country have tried to follow Thiruvalluvar in their characterisation of their heroes and heroines. For instance, it is said, Thiruvalluvar gives us a grammar of the ideal man whilst Kampan's Ramayana gives us the poetry or epic of the ideal man. This has to be generalised with reference to all the epics of the Tamil country. Any way, the people of the later generation, especially the Jains and Buddhists have

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

come to interpret this as to mean that every epic should be emphasising, as its message, an ethical principle. Dandin speaks of the figure of speech called bhāvika. It is really the unity of the epic, the unity which gives it a beautiful poetic form. But the later day critics have come to interpret it as referring to the one great moral principle which underlies the story of an epic. For instance, truth is the message of any epic on Harischandra. Once this kind of thought is current in the society of the educated, it is easy to interpret all epics in terms of some moral principle or other. The great epic Cilappatikaram therefore comes to be interpreted as emphasising the inevitability of fate, the greatness of chastity, and the inescapable nature of punishment for swerving, even by a hair breadth, from the way of justice. Manimekalai, the Buddhist epic gives us the portrayal of the ideal Buddhist life and dharma, a way of life which will yield salvation and sainthood even to a young girl born in the community of public women. It will be thus seen that the epics also come under the influence of this ethical mysticism, one need not refer to the other well known characterisation of epics like Ramayanam as they naturally come under the influence of religious bhakthi, the other great force which has been shaping the Tamil literature in this land."

என விருப்பு வெறுப்பு எதுவுமின்றி நோக்குவதை நாம் கருத்தில் கொள்தல் நன்று. அவர் தம் பரந்துபட்ட அறிவும் பன்மொழி இலக்கிய அநுபவமும் இத்தகைய விளக்கத்தை தருவதற்குத் தூண்டுதலாக அமைந்திருக்கலாம்.

சிலப்பதிகாரத்தைத் திருக்குறளில் உரைத்துச் சிறந்த இலக்கியம் என்றே மீனாட்சி சுந்தரன் கொள்கின்றார். "திருவள்ளுவரது குறள் மனிதப் பண்பாட்டு வாழ்வின் இலக்கணம் கூறுகிறது. அந்த இலக்கணம் அமைந்த இலக்கியமாவது இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமேயாம்" என்றும், "சிலப்பதிகார உரையாசிரியர்கள் திருக்குறளை ஒட்டிச் சிலப்பதிகாரத்திற்கு உரை கூறுகின்றனர்" (குடிமக்கள் காப்பியம், பக். 167, 170) என்றும் கூறியுள்ளார். இவர் போன்று வரதராசனும் சிலப்பதிகாரம் பற்றித் தாம் எழுதியவற்றில், குறிப்பாகக் கண்ணகி என்னும் நூலில் இளங்கோவடிகள் குறள்வழி நிற்பதைப் பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளார். போ. குருசாமி, எஸ். இராமகிருஷ்ணன், மா.பொ.சி., ஆர். பி. சேதுப்பிள்ளை ஆகியோரும் இவ்வாறு விளக்கியுள்ளனர்.

தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்கள் இலக்கியத்திற்குரிய சிறந்த அறக் கோட்பாடுடையவை என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து ஆய்விலே சிறந்த அறிஞர்க்கு உண்டு. அறக்கோட்பாட்டுக் கருத்தை வரதராசன் மிக நுட்பமாக விளக்குகின்றார் (இலக்கிய ஆராய்ச்சி, பக். 93-95):

"தமிழகத்திற்குத் தனிநிலைச் செய்யுட்கள் மட்டும் இருத்தல் போதாது; தொடர் நிலைச் செய்யுட்களும் வேண்டும்; பெரிய நூல்களும் வேண்டும் என்ற உண்மையை முதல் முதலில் உணர்ந்தவர் யாரோ, அறியோம். ஆனால் இந்தக் குறையை முதல் முதலாகப் போக்கியவர் இருவர்; அவர்கள் இளங்கோவடிகளும் சீத்தலைச்சாத்தனாருமாவர்.

பாரி முதலான பெருமக்களைப் பாடிய கபிலர் போன்ற புலவர்கள் செய்யாத அரிய இலக்கியத் தொண்டை இளங்கோவடிகளும் சீத்தலைச்சாத்தனாரும் செய்ய முடிந்தது எதனால்? கபிலர் போன்ற புலவர்களின் நெஞ்சில் இருந்தவை அவர்களுடைய உணர்ச்சி ஒன்றே, அவர்களுடைய அனுபவங்களும் புலவர்களின் பண்புகளுமே அந்த உணர்ச்சியில் ஊறிக்கிடந்தன. அதனால் வருங்காலத்தைப் பற்றி அவர்கள் எண்ணவில்லை.

ஆனால் இளங்கோவடிகளின் நெஞ்சத்திலும் இத்தகைய உணர்ச்சி மட்டும் இருக்கவில்லை; வேறு குறிக்கோள்களும் இருந்தன. கண்ணகி என்னும் பத்தினியின் சிறப்பை உலகம் அறிய வேண்டும் என்றும், தாம் உணர்ந்த வாழ்வின் உண்மைகளை உலகம் உணர வேண்டும் என்றும் இளங்கோவடிகள் கொண்டிருந்த குறிக்கோளே அவரைப் பெரிய காவியம் எழுதுமாறு தூண்டியது. மணிமேகலையின் தூய தொண்டினையும் புத்தர் பெருமானின் அறநெறியையும் உலகிற்கு உணர்த்த வேண்டும் என்னும் குறிக்கோளே சீத்தலைச் சாத்தனாரை ஒரு காவியம் எழுதவேண்டும் என்று தூண்டியது. இவ்வாறு சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தோன்றித் தமிழன்னைக்கு அணி செய்த காரணம் இலக்கிய உணர்ச்சி மட்டும் அன்று; இலக்கியத்தை உயர்ந்த குறிக்கோளுக்குப் பயன்படுத்த வேண்டும் என்னும் ஆர்வமும் காரணமாகும். இந்த ஆர்வமே காரணம் என்று கூறினும் ஓரளவு உண்மையே ஆகும்."

இனி, சிலப்பதிகாரப் பாத்திரங்களை ஏனைய இலக்கியப் பாத்திரங்களோடு ஒப்பு நோக்கிப் பண்டிதமணி உயர்வு தாழ்வு அன்றிச் சிறப்பு இழிவு எனப் பேசுவதை ஆராய்வதற்கு முன் ஓர் எச்சரிக்கையாக இலக்கியங்களை ஒப்பீடு செய்வது குறித்து மீனாட்சி சுந்தரன் கூறுங் கருத்தொன்று (குடிமக்கள் காப்பியம், பக். 45-46) உளங்கொள்ளத்தக்கது :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒவ்வோர் இலக்கியத்தையும் ஆராயும்போது பிற இலக்கியப் போக்கோடு அதனை ஒருங்குவைத்து ஆராய்வதால் பல உண்மைகள் தோன்றினாலும் எல்லா இலக்கியங்களையும் ஒரே இயல்புடையன என்று கொள்வதற்கில்லை. ஒவ்வோர் இலக்கியத்திற்கும் ஒவ்வொரு சிறப்பியல்பு உண்டு. அதனை அறிய முயன்றாலன்றி அதன் அழகினை உணர முடியாது. அந்த நிலையிலே சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்பினையும் புதிய காப்பியப் போக்கினையும் அறிந்தாலன்றி அதன் அழகினை முற்றமுடிய நாம் உணர்ந்து துய்த்தவர்களாக மாட்டோம்."

சிலப்பதிகாரத்தில் வெறுக்கத்தக்க பாத்திரம் என ஒன்றில்லை என்பதே அறிஞர் பலரின் பொதுவான கருத்து. இதற்குப் பண்டிதமணி (மட்டும்?) விதிவிலக்கு. "இளங்கோவடிகள் இராவணன், மாக்பத்துப் போன்ற எதிர்த்தலைவர் (Villain) இல்லாமல் எல்லோரும் நல்லோராக விளங்கும் காப்பியம் ஒன்று எழுதுகிறார்" (குடிமக்கள் காப்பியம், பக். 162), என்றும் "பிறரிடத்தில் காரணமின்றிக் குற்றம் காணும் மனம் - குற்றம் காணினும் குற்றம் இருப்பினும் அதைப் பெரிதாக்கிக் காட்டும் போக்கு - சான்றோர்க்கு இல்லை. இளங்கோவடிகளுக்கும் இல்லை" (இளங்கோ அடிகள், பக். 112) என்றும் அறிஞர், (முறையே, மீனாட்சி சுந்தரனும் வரதராசனும்) கூறுவர்.

பண்டிதமணி சீதையையும் கண்ணகியையும் ஒப்பிட்டு யார் உயர்ந்தவள், சிறந்தவள் என எடைபோட்டு ஆராய்ந்த அளவு ஏனைய அறிஞர் யாரும் ஆராய்ந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆயின் சீதையைப் பற்றி எழுதியுள்ளார்கள்; கண்ணகியைப் பற்றியும் எழுதியுள்ளார்கள். சீதையைப் பாராட்டுவதில் கருத்து வேறுபாடில்லை எனலாம். கண்ணகியைப் பொறுத்தவரை பெரும்பாலான அறிஞர் பாராட்டியே உள்ளனர்; ஒரு சிலர் மட்டும் சில குறைகளைக் கூறியுள்ளனர். "'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற குறளின் இலக்கியமன்றோ கண்ணகி?" (நீங்களும் சுவையுங்கள், பக். 30) என மீனாட்சிசுந்தரன் வினவுகின்றார். "படிப்படியாகக் கண்ணகி கடவுட் தன்மை அடைவதைக் கூறுவதன்றோ சிலப்பதிகாரம்"எனவும், அதே நூலில் அதே பக்கத்தில் வினவுகின்றார். வரதராசனும் "'கற்பின் திண்மை இருந்தால், பெண்ணை விடப் பெருமை உடையவை எவை உள்ளன? என்று திருவள்ளுவர் உலகத்தை வினவிய வினாவுக்கு விடை சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வாழ்வில் உள்ளது" (கண்ணகி, பக். 101) என்பர்.

பண்டிதமணி சீதையையும் கண்ணகியையும் எடைபோட்டுக் கண்ணகி மீது காழ்ப்பைச் சொரிந்தார்.[10] ஏனைய அறிஞர்களும் ஓரளவு ஒப்புநோக்கியுள்ளனர். ஆனால் அவர்கள் ஒப்பிட்டுக் கண்ணகி மீது காழ்ப்புக் காட்டவில்லை. அவர்கள் கூறிய கருத்தைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி பாரதம் போற்றிய பண்பாட்டிற்கேற்ப வாழ்ந்த சீதை, சகுந்தலை, நளாயினி, அனசூயை ஆகியோருக்கு நிகரானவள் என்பர் அறிஞர் சிலர். இராமகிருஷ்ணன் "'யான்', 'எனது' என்ற செருக்கைத் துறந்து இறைமை உணர்வினைப் பெறுதலே கடவுள் வழிபாட்டின் குறிக்கோள் என்பதும், கணவனைக் கண்கண்ட தெய்வமாகக் கருதி அவனுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணிக்கும் மங்கையாலேயே இல்லறம் சிறக்கும் என்பதும் பாரதம் ஏற்றிப் போற்றிய பண்பாடே ஆகும். சீதை, கண்ணகி, சகுந்தலை, நளாயினி, அனசூயை முதலியோரது கதைகள் இதனை விளங்கவைக்கும்" (இளங்கோவின் பாத்திரப்படைப்பு, பக். 170) என்கிறார். மேலும் அவர் சிறையிருந்த சீதை தனிமையில் புரிந்த தவம் போன்றது கண்ணகியின் தனிமைத் தவமும் என்றும் 'இராமன் இருக்கும் இடம் அயோத்தி' என்ற உணர்வோடு செயல்பட்ட சீதைபோல், கோவலனோடு இணைந்து இருப்பதே பெருவாழ்வு என்ற தெளிவோடு கண்ணகி வினை ஆற்றுகிறாள் என்றும் (இளங்கோவின் பாத்திரப் படைப்பு, பக். 166, 172) கூறியுள்ளார். வரதராசன் "மதுரை நகரை அடைந்துவிட்டால், காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்தது போலவே அங்கும் கவலையின்றி வளமாக வாழமுடியும் என்று அறிந்தே (கோவலன்) உடன்வருமாறு கண்ணகியை அழைத்தான். இன்பக் காலத்தில் வாழ்க்கைத் துணையாய் இருந்ததைப் போல் - அதனினும் மிகுதியாகத் துன்பக் காலத்தில் கணவனுடன் துணையாக இருப்பது கடமை என்றே சீதை உடன் செல்லத் துணிந்தாள். தனக்குத் தவறு செய்த காலத்திலும் துன்பம் விளைந்த காலத்திலும் அவனுடைய மகிழ்ச்சியே தன்னுடைய வாழ்வு என்ற மன நிலையோடு பல ஆண்டுகளைக் கழித்தவளாதலின், 'புறப்படு' என்ற சொல்லைக் கேட்டதும் உவந்த உள்ளத்தோடு கண்ணகி இசைந்து சென்றாள்" (கண்ணகி, பக். 64-65) என்கிறார். மேலும், கண்ணகியிடம் கொள்கைத் திண்மையுடன் காணப்படும் தன்னலம் இழந்த தூய்மையை 'இற் பிறப்பு என்பது ஒன்றும் இரும்பொறை என்பது ஒன்றும் கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்' என்று கம்பர் கூறும் திண்மை வாய்ந்த சீதையின் வருத்தத்திலும் காணலாம் (கண்ணகி, பக். 89-90) என்றும் கூறியுள்ளார். கம்பராமாயணத்தில் தோய்ந்த மீனாட்சி சுந்தரனோ "கண்ணகி ஒரு கற்புக்கரசி. கம்பனுடைய சீதையும் அவள்வழிச் செல்லும் கற்புக் கடவுள். சிலம்பின் எதிர் ஒலிகளைக் கம்பராமாயணத்திலே முழுதும் கேட்கலாம்" (நீங்களும் சுவையுங்கள், பக். 61) என்று தெளிவாகக் கூறியுள்ளார். அவர் கண்ணகிக்குக் கொடுக்கும் நிலையைக் கருதுக.

சீதையையும் கண்ணகியையும் ஒப்பிட்டுக் கண்ணகியிடம் குறை காணும் பண்டிதமணி கண்ணகியின் பெண்மை வெண்ணெயாயுருகுதற்குரிய வேளையில் "போற்றா ஒழுக்கம் புரிந்தோய், யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேனாதலின் ஏற்றெழுந்தன்" எனக் கோவலனிடம் கூறியது குற்றம் என்பர். இது பற்றி ஏனைய அறிஞரின் கருத்தைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியைத் தவிர "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" எனக் கண்ணகி கூறியதைக் குற்றம் என்று அறிஞர் பிறர் கூறியதாகத் தெரியவில்லை. கண்ணகி "நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு" என்ற நெறியில் வாழ்ந்தவள். கோவலன் தனக்குச் செய்த தீங்கை அவள் பொருட்படுத்தவில்லை. "பெற்றோர் உள்ளகம் வருந்துமாறு தகாத ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தீர்" என்று கடிந்துரைக்க வேண்டும் என அதற்கு உரிய வாய்ப்பை எதிர்பார்த்திருந்தாள். மதுரைக்குச் சென்று மாதவி வீட்டில் கோவலன் துயர் தீர்ந்து இனிது இருக்கும் வாய்ப்பு நேர்ந்தபோதுதான் இடித்துரைத்தாள். "கண்ணகி! வருக இங்கே" என்று அழைத்து அன்போடு இருந்தபோது, அந்த வாய்ப்பை மகிழ்ந்திருக்கப் பயன்படுத்திக் கொள்ளவில்லை கண்ணகி. கடிந்துரைப்பதற்கே பயன்படுத்திக்கொண்டாள். அவன் தனக்குச் செய்த தீங்கு பற்றி ஒரு சொற்கூடக் கூறவில்லை. அவன் பிறர்க்கு - பெற்றோர்க்குச் - செய்த துன்பத்தை மட்டுமே எடுத்துரைத்துக் கடிந்தாள். அந்தக் கருத்தாலேயே "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்றாள். நகுதற்கு வந்த வாய்ப்பை இடித்துரைத்துத் திருத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்ட உண்மையன்பை இங்கு காண்கிறோம் (கண்ணகி, பக். 80-82) என்பர் வரதராசன். இதே கருத்தை அவர் தமது இளங்கோஅடிகள் என்னும் நூலில் (பக். 121-123) மேலும் தெளிவுறச் செய்துள்ளார்.

மீனாட்சி சுந்தரன் தரும் விளக்கத்தையும் பார்த்துவிடுவோம். அது அவரது கானல் வரியில் (பக். 86-87) பின்வருமாறு உள்ளது:

> "செல்வத்தின் வீறாப்புச் சிதைந்து வீழ்ந்தாலும் அறத்தின் வீறாப்பு ஒழிந்தபாடில்லை. முனைப்பென்பது பல வடிவம் கொள்ளுமன்றோ? வழியெல்லாம் அவ்வறத்தின் வீறாப்பைக் கவுந்தி அடிகள் கூறிவந்தார் அல்லரோ? ஆய்ச்சியர்க்கும் அதனை ஒரு புராணமாக அவர் ஆக்கிக் கூறவில்லையா? இவள் காதலிலே இந்த வீறாப்பு ஒரு புறத்தே ஒதுங்கிக் கிடக்கிறது. தன்பால் உரிமையும் அவன்பால் பரத்தமையும் தோன்றக் கூறுவது, தொல்காப்பியர் கண்ட பழைய நெறியேயாம். ஆனால், அதிலும் சிறிது செருக்குத் தோன்றும். அது மறையவே, ஊடலின் பின்கூடல் எழும். ஆனால், இவள் அவனைக் காதலிக்கும் நிலையில், அவனினும் சிறந்தவளாகவே இவள் அடிமனம் இவளைக் கருதிக்கொள்கிறது.
>
> அவனுடைய புறஒழுக்கம் இவள் நெஞ்சில் தைக்கும் ஒருமுள். அந்த முள்ளே தற்செருக்கு என்கின்ற நஞ்சு பூசி நிற்கின்றது. இதனை எடுத்தாலன்றி அவள் நெஞ்சு அமைதியுறாது.
>
> இதற்கென்ன மருந்து? மனத்து எழும் நோய்கள் வியத்தகு வழியில் மறைகின்றனவாம். நோய் இன்னதென்று உணர்வதே - அதனை இன்னதென வெளியிடுவதே - மனநோய்க்குத் தனிப்பெரு மருந்தென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன தத்துவ நூலோர் கூறுகின்றனர். மனத்திலுள்ளதையெல்லாம் கொட்டி ஆற்றிக் கொள்வது என்று பாட்டிகளும் பேசுகின்றனர். செய்த பாவத்தைக் கூறி, அதற்கு இரங்கினால், அந்தப் பாவம், முள்ளாக நெஞ்சில் தைப்பதில்லையாம். பாவ மன்னிப்பு எழும் வழியென இதனைப் பலர் கூறுவர். எனவே இத்துணை நாளும் தன்மனநோயினைக் கோவலனிடம் சிறிதும் கூறாது, தற்செருக்கால், வாய் பொத்தி நின்றதே பெருநோயாம். 'எழுகென எழுந்தாய்' என்று கேட்டவுடன் அவள் தன் வயிற்றெரிச்சலை யெல்லாம் கொட்டி அளக்கிறாள். வழிநடையில் நிகழ்ந்த மாறுபாட்டால், அவள் காதல், உண்மைக் காதலாய்த் - தன்னையே மறந்து அவனையே எண்ணும் காதலாய் - அற உருவமும் அன்பு உருவமும் கொண்டு அவளது உண்மை உருவமாய் ஓங்கி வருகிறது. அதிலே அந்தப் பழைய முள், இவன் இவ்வாறு கேட்டதும் தானாகவே வெளிவருகிறது.

"போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவது
மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்றெழுந் தனன்யான்"

(xvi : 81-83)

என்று இவள் கூறி முடிக்கிறாள். நெஞ்சினில் தைத்த முள் காதலாக உருகிக் கரைகிறது; தூய காதலாக நெஞ்சம் மலர்கிறது. காதல் வகையில், அவனினும் தான் உயர்ந்தவள் என்ற எண்ணம் இனி அவளிடம் இல்லை."

கண்ணகியையும் சீதையையும் ஒப்புநோக்கியதுபோல் மாதவியையும் சீதையையும் அறிஞர் ஒப்பு நோக்கியுள்ளனர். மீனாட்சி சுந்தரன் (குடிமக்கள் காப்பியம், பக். 112),

"கோசிகமாணி மாதவியின் இரண்டாவது திருமுகம் கொண்டு வருகிறான். 'உடனுறை காலத்து உரைத்த நெய்வாசம் குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக் காட்டியதாகலின் கைவிடல் ஈயானாய்க்' கோவலன் பிரித்து ஓதுகிறான். (கம்பனுடைய சீதை நமக்கு நினைவிற்கு வருகிறாள். கம்பன் இங்கிருந்துதான் இதனைக் கற்றான் போலும்!) தன்னைப் பிரிந்த அன்றைக் கோலத்தை நீக்காது இருப்பதை உணர்கின்றான்."

எனக் கூறியுள்ளார். இதே கருத்தை இன்னும் தெளிவாகத் தமது கானல் வரியில் (பக். 56),

"கோவலனைப் பிரிந்தபின், அசோக வனத்திற் சீதையைப் போல, அன்றைய கோலத்தோடேயே நின்று அவள் அனுப்பிய ஓலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> மேலிட்ட மண்பொறி, மாதவியின் உண்மை அன்பினையும் உணர்த்த, அவன் 'தன்தீது' என்று உணர்ந்து தளர்ச்சி நீங்குகிறான்."

எனக் கூறியுள்ளார். மேலும், "எவ்வாறாயினும், சீதையின் கற்பொடு மாதவியின் கற்பை ஒப்பிட்டுக் கூற இடமுண்டு" என்றும் (பக். 59) கூறியுள்ளார்.

இனி, கோவலனை இராமனுடனும் நளனுடனும் ஒப்பு நோக்குவதையும் காணலாம். வரதராசன் (கண்ணகி, பக். 63),

> "மாதவியை வெறுத்துத் திரும்பிய அன்று மாலை கோவலன் கண்ணகியின் வாடிய மேனி வருத்தம் கண்டு தவறு உணர்ந்து வருந்திக் கூறிய பின், மதுரைக்குப் புறப்படு என எண்ணிப் பார்க்காமல் கூறியதும்,அவ்வாறே கண்ணகி புறப்பட்டதும் உரிமை அற்ற அடிமை வாழ்வைக் காட்டுகின்றன எனக் கூறுவாரும் உளர். உரிமை வாழ்வாக இருந்திருப்பின், சீதையைப் பிரிந்து காட்டிற்குச் செல்லுமுன் இராமன் கூறியதுபோல் கூறித் தடுத்திருக்க வேண்டும் என்றும், அவன் தடுத்தும் கேளாமல் உடன் செல்லத் துணிந்து நின்ற சீதைபோல் கண்ணகியும் தானே நினைந்து சென்றிருக்க வேண்டும் என்றும் கூறுவர்.
>
> கம்பரின் காவியத் தலைவனான இராமன் இளங்கோவடிகளின் கோவலனை விட மிக மிக உயர்ந்தவன் என்பது தெளிவு. ஆயினும், கோவலனும் கண்ணகியும் வாழ்ந்த வாழ்வை அடிமை வாழ்வு என்று கூற இடமில்லை. அயோத்தியை விட்டு இராமன் பிரிந்து சென்ற நிலைமைக்கும் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுக் கோவலன் பிரிந்து சென்ற நிலைமைக்கும் மிகப் பெரிய வேறுபாடு உண்டு....... காட்டில் பதினான்கு ஆண்டுகளும் கழிக்கும் போது சீதை உடன் இருப்பது பெரிய இடையூறு என்று இராமன் உணர்ந்தான்; என்னோடு நீ வந்தால் எனக்கு எல்லையற்ற இடர் தருவாய்' என்று சீதைக்கு உண்மையை எடுத்துரைத்தான். கோவலன் அதற்கு மாறாக உணர்ந்ததால்தான் கண்ணகியை உடன்வருமாறு அழைத்தான்; இதற்கு முன்பே தனித்திருந்து துயருற்று வாடிய கண்ணகியை இன்னும் விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் தனித்திருக்கச் செய்வது அறம் அன்று என்று உணர்ந்தே உடன் வருமாறு அழைத்தான்."

என விளக்கியுள்ளார். கோவலன்,

> "நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி
> நறுமலர் மேனி நடுங்குதுய ரெய்த
> அறியாத் தேயத்(து) ஆரிடை யுழந்து
> சிறுமை யுற்றேன்."

எனப் புலம்புதலைக் கேட்ட கவுந்தி, பெண்ணோடு வாழ்வார்க்கேயன்றித் துறவிகளுக்கு இத்துயரம் இல்லையென்றும் தத்துவோபதேசம் செய்யத் தொடங்கி அவனுக்கு ஆறுதல் அளிக்கிறார். இவ்வாறு துயரப்பட்டோர் பலர் எனக்கூறி,

> "அனையையும் அல்லை ஆயிழை தன்னொடு
> பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே."

என்றார். இவ்வாறு ஆறுதல் அளிக்கும்போது குத்தலாக இராமனைப் பற்றிப் பேசும் அவர் குரலைக் கேட்கிறோம். எங்கும் எப்பொழுதும் குற்றமே காண்கின்ற கவுந்தி - சிறு குற்றத்தையும் பெரிதாகக் காண்கின்றவர் - கோவலனுடன் பல நாட்கள் உடனிருந்து பழகியபோதும் குற்றமொன்றும் காணாது அவனின் உயர்வையே எண்ணி அவனுடைய துயரத்திற்கெல்லாம் ஒப்புமை கூறும்போது இராமனையும் நளனையுமே எண்ணுகிறார். காப்பியத்தில் கோசிகமாணி "அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப் பெரும் பெயர் மூதூர் பெருந்துயர் உற்றது" எனக் கூறுவதையும் கருத்திற் கொள்க.

இராமகிருஷ்ணன் கண்ணகியையும் சீதையையும், சிலப்பதிகாரப் போக்கையும் கம்பராமாயணப் போக்கையும் ஒப்பு நோக்குவதைக் காண்போம். அவர் தமது இளங்கோவின் பாத்திரப் படைப்பில் (பக். 113),

> "கண்ணகி சமுதாயப் புரட்சியைச் சாதிப்பதற்குக் கோவலனது உயிர்த் தியாகம் முன் தேவையாகிறது.
>
> கற்பின் கனலியான சீதை, ஐயிரு திங்கள், அரக்கனது அசோக வனத்தில், ஊண் உறக்கம் துறந்தும், வெயிலிடைப் பட்ட விளக்கென ஒளியிழந்தும், கண்ணீரால் நனைந்தும், உடல் வெம்மையால் உலர்ந்தும், நோன்பிருக்கிறாள். பாவத்தின் திரண்ட வடிவினரான இராவணாதியர் அழிவதற்கு அது அவசியமாயிருந்தது. அதேபோல, மதுரை எரிவதற்குக் கோவலன் வெட்டுண்டு விழவேண்டியதாயிற்று."

என நோக்குகின்றார்.

அடுத்து, பண்டிதமணி கண்ணகி என்னும் பெயர் பற்றிக் கூறும் கருத்து எந்த அளவிற்கு ஏற்புடைத்து எனப் பார்ப்போம். கண்ணகி கதை மிகப் பழங் கதை எனக் கூறிவிட்டோம். அது பண்டு தொட்டு நாடறிந்த கதை. அப்படியிருந்தும் கண்ணகியென்னும் பெயர் பண்டைத் தமிழ் மகளிர்க்கு இடப்பெற்றுப் பயில வழங்கிய பெயர்களுள் ஒன்று. வையாவிக் கோப்பெரும்பேகன் என்னும் வள்ளலின் மனைவியார் பெயரும் கண்ணகியென்பது புறநானூற்றால் தெரிகின்றது. ஒரு பெயரை ஏற்பதும் விலக்குவதும் காலத்திற்குக் காலம் மாறக் கூடிய சமுதாய நோக்கைப் பொறுத்தது. அத்வைத சிந்தனை 10, கன்மம் 5, ஆகாமியம் 11 இல் (பக்.80) பண்டிதமணி அகல்யை, மண்டோதரி, வியாழன் மனைவியாகிய தாரை மூவரும் திரௌபதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதை போலத் தீண்டாத கற்புடைய செழுந்திருக்கள்" என்றார். ஆயின் இன்று ஒரு பெண்ணைப் பார்த்து 'திரௌபதி' என்று சொல்ல முடியுமா? 'செங்கமலம்' என்னும் பெயர் ஒரு சினிமாப் பாட்டிற்குப் பின் கைவிடப்பெற்றது. பின்னர் வழக்குக்கு வந்தது. கண்ணகி என்னும் பெயருக்கு மதிப்புக் கொடுத்து அடியார்க்கு நல்லார் 'கண்ணகியார்' என்றே வழங்குகின்றார். இவரைப் பின்பற்றிப் போலும் ஔவை துரைசாமிப்பிள்ளையும் கண்ணகியார் என்றே சிலப்பதிகாரம் பற்றிய தமது நூலில் கையாள்கின்றார். இவ்வாறு நோக்கு வேறுபடுவதைக் காண்க.

கண்ணகியைச் செங்குட்டுவன் அங்கீகரிக்கவில்லை என்ற வாதமும் நலிவுடைத்தாம். அவன் கண்ணகியைச் "செயிரொடு வந்த சேயிழை" என்றானாம். செயிர் மோசமான அடையாம். ஆயின், காப்பியத்திலே கண்ணகியை அங்கீகரித்தவர் எத்தனை பேர் என எண்ணிப் பார்த்தல் வேண்டும். போற்றியவர் எத்தனைபேர்! சிலப்பதிகாரத்தை ஆராய்ந்தவர்கள் கண்ணகியை எவ்வாறு கொண்டனர் என அவர்தம் நூல்கள் மூலம் அறிதல் வேண்டும். இராமகிருஷ்ணன் தமது நூலில் (பக். 178) கண்ணகியின் செயிரைச் "செம்மை சேர் சீற்றம்" எனக் காண்கின்றார். அரசையும் மதுரையையும் அழித்தது கண்ணகியின் கண்ணீரா சீற்றமா என்பதும் ஆராயத்தக்கது. தமிழுக்குக் கதி கம்பராமாயணமும் (க) திருக்குறளும் (தி) என்ற கருத்துப் பண்டிதமணிக்கு உண்டு. ஆயின் வரதராசன் கண்ணகி என்னும் நூல் முகவுரையில் "தமிழகத்தின் முழு மணிகளாய் விளங்கி உலகிற்கு ஒளி பரப்பி வருவன சில. அவற்றுள் இங்கு குறிக்கத்தக்கன இரண்டு : ஒன்று, திருவள்ளுவரின் திருக்குறள்; மற்றொன்று கண்ணகியின் கற்பு" என்கிறார். இவ்வாறே ஏனைய அறிஞரும் கண்ணகி பற்றித் தம்தம் நூல்களில் கூறுவதைக் காண்க. இங்கு மேலும் விரிக்கிற் பெருகும்.

பாண்டியன் பழிக்கஞ்சி உயிர் நீத்த நீதியைக் கண்ணகி மதித்திலள்; சிலப்பதிகாரம் மதித்திலது என்னும் கருத்துக்கள் ஏற்புடையனவல்ல. கண்ணகி பெண்மையைச் செய்யவில்லை என்னுங் கருத்தையும் அறிஞர் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

கண்ணகி வழக்குரைத்தது தகும் என்றே அறிஞர் பலர் கொள்கின்றனர். கண்ணகி பாண்டியனிடம் வழக்காடியது தன் பொருட்டு அன்று; கள்வன் என்று பழிசுமத்திக் கொல்லப்பட்ட தன் கணவன் பொருட்டே. தன் கணவன் புகழ் காக்கப்பட வேண்டும் என்று எண்ணினாள்; வழக்குரைத்தாள்; வெற்றி கண்டாள்; தகை சான்ற சொற்காத்தாள்; கோவலன் கள்வன் அல்லன் என ஊர் உணரச் செய்தாள். கணவன் பாண்டிய மன்னன் "யானோ அரசன், யானே கள்வன்" என வாய்விட்டு அலறி இறந்தபோது கோப்பெருந்தேவியின் கடமை என ஒன்றும் குறையாக இருக்கவில்லை. கணவனே தன் குற்றத்தை உணர்ந்து விட்டானாதலால் அவனுடைய புகழைக்காப்பது இயலாததாகிவிட்டது. ஆகவே கோப்பெருந்தேவி குலைந்து நடுங்கிக் கண்ணகியின் இணையடி தொழுது வீழ்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் கள்வன் அல்லன், வேந்தனே தவறுடையான் என்பதை ஊரறியக் காட்டும் வரையில் அவள் சீற்றத்துடன் முனைந்து நின்றாள். ஊரறியச் செய்தபின், அவளுடைய சீற்றமும் தணிந்தது; உள்ளத்தின் உரமும் ஒடுங்கியது. உடல்மட்டும் நடந்து சென்று திருச்செங்குன்றின் வேங்கை மர நிழலை அடைந்து பதினான்காம் நாள்வரையில் நின்றது. ஆதலின், தகை சான்ற சொல்லைக் காப்பதற்காகத் தன்னுயிர் காத்து நின்ற கண்ணகியின் செயலே, வாழ்க்கைத் துணைவிக்கு உரிய செயலாகும்; திருவள்ளுவர் உணர்த்திய நெறியும் இதுவே ஆகும்.

ஆகவே, கோப்பெருந்தேவிக்குக் கண்ணகியை விடத் தனிச் சிறப்பு இதனால் இல்லை என்பது தெளிவு என வரதராசன் தமது கண்ணகி என்னும் நூலில் (பக். 85, 86) தெளிவாகக் கூறியுள்ளார். பண்டிதமணி "கணவனுடைய உயிருடன் சென்ற ஒரு மகள் கதை சிலப்பதிகாரத்திற் சிந்திக்கத்தக்கது" எனக் கூறியதை இவ்விடத்து நினைவு கூர்க.

ஔவை துரைசாமிப்பிள்ளை தரும் விளக்கமும் கருத்திற் கொள்ளத்தக்கது. அவர் தமது முப்பெருங்காவியங்களில் ஒன்றான சிலப்பதிகார ஆராய்ச்சி என்னும் நூலில் (பக். 67, 68) கண்ணகியார் அரசன் முன் வழக்குரைக்குமிடத்து 'வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச் சூழ்கழல் மன்னா நின் நகர்ப் புகுந்து' என்று கூறியவள் வல்வினையுணர்வு பெற்றிருந்தார் என்றும்,

> "இவ்வுணர்வு, பாண்டி வேந்தனும் தேவியும் இறந்தது கண்டும், கண்ணகியாரின் மனத்தையடக்கியதாகத் தோன்றவில்லை....... அவர் வேந்தனும் தேவியும் இறந்த பின்னரும் சினம் தணியாது நகரைத் தீக்கிரையாக்கிய பின்பே தணிகின்றார். அன்றியும், 'நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன், உண்மை யறிவே மிகும்' (குறள்) என வள்ளுவர் கூறியாங்கு, மதுரை நகர் தீக்கிரையாவது குறித்திருந்த ஊழ், அவர் சினத்தீ வாயிலாகப் புகுந்து தன் தொழிலை முற்றுவித்துக் கொள்வதாயிற்று என்றும் கருதலாம்."

என விளக்குவர்.

கம்பனால் கையாளப்படும் சகோதரத்துவம் பற்றியும் இளங்கோவினால் கையாளப்படும் சகோதரத்துவம் பற்றியும் ஏனைய அறிஞர் எதுவும் கூறியதாகத் தெரியவில்லை. கம்பராமாயணத்தில் கூறப்படும் சகோதரத்துவம் அங்கே வரும் பிரதான பாத்திரங்கள் பற்றியது. ஆயின், சிலப்பதிகாரத்தில் அவ்வாறு இல்லை. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எழுதியவாறு அது நமக்குக் கிடைத்துள்ளது என்று கூறமுடியாது. இளங்கோ அடிகளைத் தமிழராக, கலைஞராக, அறவோராகக் கண்டு மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்திய வரதராசன் தம் சொற்பொழிவுகளில் நிமித்திகன் இளங்கோ அடிகளிடம் இராசலக்கணம் அமைந்திருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறியது பற்றியோ அவன் தமையன் செங்குட்டுவன் சீறியெழுந்தது பற்றியோ ஒரு வார்த்தையேனும் குறிப்பிடவில்லை. அதனைப் பொருட்படுத்தவே இல்லை எனலாம். அவர் தமது சொற்பொழிவுகளில் இளங்கோவடிகளின் சிறப்புக்களை விளக்கியுள்ளார். அடிகளை அறவோர் என்று புகழ்கிறார். "தன் சமயம் ஒன்றாக இருந்தும் பிற சமயங்களை வெறுக்காமல் பொதுமை உணர்ந்தது போலவே இளங்கோவடிகள் தாம் துறவு நெறியில் நின்ற போதிலும் இல்லறத்தைப் பழிக்காமல் காவியம் இயற்றியது போற்றத்தகும்" (பக். 123) என்கிறார். "இளங்கோவடிகள் பொழுதுபோக்குக்காகக் கலைக்காவியம் இயற்றவில்லை. கற்பவர் உள்ளத்தில் விழுமிய உணர்ச்சிகளைத் தோற்றுவித்து அவர்களை உயர்த்த வேண்டும் என்று விரும்பியுள்ளார்." (பக். 135) என்றும் கூறுகிறார்.

இளங்கோவுக்குக் கதாநாயகியிற் கருத்தில்லை என்னுங் கருத்துச் செல்லுபடியற்றது. இன்றுவரை அறிஞர் கண்ணகி பற்றி எழுதியவற்றில் அவ்வாறு கூறியிருக்கிறார்களா எனச் சிந்தித்துப் பார்க்க.

திணைப் பாடல்கள் பண்டிதமணி கூறுவது போன்று பாஷாலங்காரம் மட்டும் உடையனவல்ல. வரதராசன் தமது இளங்கோவடிகளில் (பக். 3,5) "கானல் வரிப் பாட்டைக் கேட்கும் போதெல்லாம் சங்க இலக்கிய மரபில் பாடும் தமிழர் குரலையே கேட்கிறோம்" என்பர். "அடையல் குருகே அடையல் எம் கானல்" என வரும் கானல் வரிப் பாடலில் உள்ள உணர்ச்சியையே தெய்வத்தன்மையுடையதாக நம்மாழ்வார் "நீ அலையே சிறுபூவாய் நெடுமாலார்க்கு என் தூதாய்" என வரும் பாடலில் அமைத்துவிட்டால் எனப் போற்றுகின்றார். மீனாட்சிசுந்தரன் தமது கானல் வரி முன்னுரையில் சிலப்பதிகாரத்தின் உயிர் நிலை கானல்வரியெனக் கொண்டுள்ளார்.

கானல்வரிப் பாடல் ஒன்றில் கண்ணகியின் பெருமனம் விளக்கம் பெறுவதாகக் கருதப்படுகின்றது. கணவனுக்காகத் தன் உரிமையைத் தானே இழந்து, இழப்பதில் மகிழ்ச்சியும் கொண்டு வாழ்ந்தவள் கண்ணகி. இந்த வாழ்வின் பெருமையை உணர்வது எல்லோர்க்கும் இயலாது எனக் கூறும் வரதராசன்,

> "வீடு செல்வம் முதலியவற்றைத் துறப்பதும், மனைவி மக்கள் முதலானோரைத் துறப்பதும் ஒருவகையில் எளியவைகளே. பதவி, புகழ் முதலியவற்றைத் துறப்பது அவற்றைவிட அரிய நிலையாகும். உயிரினும் சிறந்த உரிமையைத் துறந்து அதில் இன்பம் காண்பது மிக மிக அரியதாகும்.

தம்முடைய தண்ணளியும் தாமுந்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கானல் வரியில் அமைந்த பாட்டில் இத்தகைய பெருமனம் விளக்கப்பட்டுள்ளது.

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால்
நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம்
உன்னையல்லாது எங்கள் உத்தமனே."

எனத் தமது இளங்கோ அடிகளில் (பக். 117, 118) நுட்பமாக விளக்கியுள்ளார்.

இளங்கோவடிகளை வரதராசன் அறவோர் எனக் குறிப்பதைக் கூறினோம். அரசிளங்கோவாகிய இளங்கோ மேற்கொண்டிருந்த துறவு மிகத் தூய்மையானது. பின்னர் வந்த துறவியர் உள்ளத்தே மிக்க தூயராய் இருந்தபோதும் அவர்கள் பாடிய பாட்டுக்களை நோக்கின், இன்பச் சுவையில் ஈடும் எடுப்பும் இல்லையென்னுமாறு பாடினர். திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணி, தோலாமொழித் தேவரின் சூளாமணி, கச்சியப்ப முனிவரின் தணிகைப் புராணம் எடுத்துக் காட்டுகளாகும். வரதராசன் (இளங்கோ அடிகள், பக். 130-131).

> "பெண்களை வருணிக்க சிலப்பதிகாரக் கதையிலுள்ள வாய்ப்பு மிகுதி..... இந்நிலையில் எங்கு வேண்டுமாயினும் ஒரு புலவர் உடல் உறுப்புக்களை அளவு கடந்து வருணித்துச் செல்லலாம்..... ஆனால் இளங்கோவடிகளின் அறநெஞ்சம் அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவேயில்லை."

என்பர். கோவலன் கண்ணகியின் தலை முதல் அடியீறாகப் பார்த்துப் பார்த்துப் பாடும்போது கடவுள் எண்ணங்களே கலந்து கலந்து வருகின்றன என்கிறார் மீனாட்சி சுந்தரன் (கானல்வரி, பக். 22).

இளங்கோவடிகள் தாம் எழுதிய காவியத்தை, காவியத்தில் வரும் பொருளை, பாத்திரங்களைச் சிறந்த முறையில் அமைத்துள்ளார் என்பதே அறிஞர் கருத்து. இளங்கோவடிகள் எழுதியுள்ள காவியம் பெருஞ் சிக்கல்களுக்கு இடந்தரக்கூடிய காவியமாகும். எனினும், அதனைக் கூடியவரையில் உண்மையையும் நடுநிலைமையையும் போற்றிக் கலைச் சுவை குறைந்தாலும் கவலையில்லை என்று காவியம் இயற்றியுள்ளார் என வரதராசன் (இளங்கோ அடிகள், பக். 97) கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY



பண்டிதமணி இளங்கோவின் பாத்திரப் படைப்பில் குறைகள் உண்டு என்றும் சிலப்பதிகாரத்தில் பாத்திரங்களைக் காணோம்-இளங்கோதான் என்ன, என்ன என வினவுகின்றார்-என்றும் கூறியதைக் காட்டினோம். இது உண்மையா? இராமகிருஷ்ணன் இளங்கோவின் பாத்திரப் படைப்பு என ஒரு நூலே எழுதியுள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் பாத்திரங்கள் பற்றி அறிஞர் பலர் தனித்தனி நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளனர். வரதராசனின் கண்ணகி என்னும் நூலைக் குறிப்பிட்டோம். அவர் மாதவி என்னும் நூலும் எழுதியுள்ளார். காப்பிய ஆசிரியர் இளங்கோவின் உள்ளம் எனவும் ஒருவர் நூல் எழுதியுள்ளார். அறிஞர்களிடையே சிலப்பதிகாரப் பாத்திரங்கள் பற்றிச் சிறிது வேறுபட்ட, மாறுபட்ட கருத்துக்களும் உண்டு. சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியம் எனக் கொண்டு அதனில் வரும் பாத்திரங்கள் குறித்து மீனாட்சி சுந்தரன் குடிமக்கள் காப்பியம் என்னும் நூலில் 'சங்கப் பாடலும் சிலப்பதிகாரமும்' என்னும் கட்டுரையில் (பக். 42) கூறியுள்ள கருத்தை இங்கு தருகின்றோம். அது,

> "(சிலப்பதிகாரத்தில்) ஒவ்வொரு காதையும் தனித்தனிச் செய்யுளாக வருவதனால் காப்பிய முழுவதனையும் ஓதி முடித்தாலன்றிப் பாத்தி-ரங்களின் முழு வடிவமும் நமக்குத் தோன்றாது. ஒவ்வொரு கோணத்திலிருந்து ஒவ்வொரு காதையையும் ஆசிரியர் எழுது-வதால் அவற்றிடையே முரண்பாடு சிலபோது தோன்றுவதும் இயற்கையேயாம். புகார்க் காண்டத்தை மட்டும் நோக்கினால் கோவலனின் இழிவே தோன்றும். மாதவியின் உயர்வும் தோன்றாது. கண்ணகியின் காதல் உள்ளமும் புலனாகாது. இவையெல்லாம் பின்னே வருகின்ற காதைகளில் பிற பிற கோணங்களினின்றும் கதையைக் காணும்போது எழுவனவாம். புலவர் தாமே கூறாது கண்டோர் கூற்றும் பிறர் கூற்றுமாகப் பாடி வரும்பொழுது முரண்-பாடில்லாமல் பாடவேண்டுமென நாம் எதிர்பார்ப்பதற்கில்லை."

என்பதாகும். அடைக்கலக் காதைக்குப் பின்னர்தான் கோவலன் பெருமையும் மாதவியின் இல்லற வாழ்வும் புலனாகும்; கண்ணகியின் காதல் உள்ளமும் தோன்றும். இளங்கோ அடிகள் நாடக ஆசிரியனாக நிற்பது பற்றி,

> "ஆசிரியன் உலகத்தோடு ஒன்றுபடுதல் வேண்டும். உலகமாய்ப் பரந்த உள்ளமுடையவன் ஆதல் வேண்டும். ஆசிரியனது சிறப்-பியல்பு தோன்றாதபடி மாறுதல் வேண்டும்; அதற்கு நாடகத்தில் வரும் அந்தப் பாத்திரங்களாகவே ஆகிவிட வேண்டும், அவரவர்-களுடைய வாழ்வும் உணர்ச்சியும் பேச்சுமாக மாறி மாறிப் பேசி வர வேண்டும். கடவுள் எங்கும் பரந்து நிற்கின்ற நிலை போன்றது இது. ஆசிரியன் தன்னைப் படிப்போர் தனியே கண்டு பிடிக்காதபடி நாடக முழுவதிலும் எங்குமாய் நிறைந்து நிற்பான். இளங்கோவடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASA...



கண்ணகியேயாகிப் பேசுகின்றார்; செங்குட்டுவனாகவும் பேசு-கின்றார். கள்ளங் கைவந்த பொற்கொல்லனாகவும் பேசுகின்றார். தம் நிலை தோன்றாது அவரவர் நிலையே தோன்றப் பேசுவதே இங்குள்ள சிறப்பு."

என மீனாட்சிசுந்தரன் குடிமக்கள் காப்பியத்தில் 'பாட்டில் கேட்கும் குரல்' எனுங் கட்டுரையில் (பக். 63-64) நுட்பமாக விளக்கியுள்ளார்.

## IX

குறைந்தது மூன்று தலைமுறையாவது தமிழ் கற்றுத் திளைத்த குடியில் பிறந்ததன் பயனாகத் தமிழ் நூல்களின் சூழலிலேயே பிறந்தது முதல் வாழ்ந்து வந்த - இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த பேராசிரியர்களுள் ஒருவராகத் - திகழ்ந்த மீனாட்சிசுந்தரன் சிலப்பதிகாரத்தை வாயாரப் புகழ்கிறார்." சிலப்பதிகாரத்தைப் பற்றி அப்போதப்போது பேசும் வாய்ப்பு இளங்கோவடிகள் பிறந்த தமிழ் நாட்டில் தமிழ் வாயாடிக்குக் கிட்டாமற் போகுமா? எனக்கு நிறையக் கிடைத்தன அத்தகைய வாய்ப்புக்கள்" எனப் பெருமையுடன் மீனாட்சிசுந்தரன் குடிமக்கள் காப்பியம் முன்னுரையில் கூறியுள்ளார்.

மேலும் அதே நூலில் (பக். 28) "காந்தியுலகம் கனிய வேண்டுமானால் வெற்றாரவாரக் கதைக்ளை விட்டு, சிலப்பதிகாரம் போன்ற கதைகளில் ஈடுபட வேண்டும்" என்கிறார். இன்னும், சிலப்பதிகாரம் "செந்தமிழை வாழ்விக்கிறது; பல இலக்கிய ஆராய்ச்சிகளுக்கு அதுவே வற்றாத ஊற்றாகவும் இருக்கிறது" எனவும் அதே நூலில் (பக். 125) குறிப்பிட்டுள்ளார். வரதராசன் பண்டைய தமிழிலக்கியத்தில் ஊறிய பெரும் பேராசிரியர். சங்க இலக்கியத்தை நுட்பமாக ஆராய்ந்து நூல்கள் பல எழுதியவர். திருக்குறளை நன்குணர்ந்தவர்; தெளிவாக விளக்கியவர். அவர் இளங்கோவடிகளை "தமிழும் தமிழ்நாடும் வாழப் பிறந்த தமிழர் இளங்கோவடிகள்....... வழிவழியாக வந்த தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையான அறநெறியைப் போற்றித் தலை சிறந்த அறவோராய் விளங்கிய தமிழர் அவர்" (இளங்கோ அடிகள், பக்.1) எனப் பாராட்டியுள்ளார்.

அறிஞர் பெருமக்கள் சிலப்பதிகாரம் பற்றி எழுதிய அளவு சிந்தாமணி பற்றியோ மணிமேகலை பற்றியோ எழுதவில்லை; குறிப்பாக வரதராசனோ மீனாட்சிசுந்தரனோ எழுதவில்லை. ஆதலால் அவ்விரு காப்பியங்கள் பற்றி அவர்கள் கருத்துக்களை இங்கு தரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# X

பெங்களூர் அர்ச். சூசையப்பர் கல்லூரியில் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனின் மாணவன் பேராசிரியர் தண். கி. வெங்கடாசலம் அவர்களிடம் மணிமேகலையில் பாத்திரம் பெற்ற காதையைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் மு. வரதராசனின் மாணவனாக இருந்தபொழுது சிலப்பதிகாரம் முழுவதையும் சென்னை மாநிலக் கல்லூரியில் பேராசிரியர் மீனாட்சி சுந்தரன் அவர்களிடம் பாடங் கேட்கும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. யான் சிலப்பதிகாரத்தைச் சுவைத்துப் படித்ததற்கு இவ்விரு பெருங்குரவர் தான் காரணமாவர். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவனாகவும் விரிவுரையாளனாகவும் இருந்தபோது மணிமேகலை மொழி பற்றி ஆராய்ந்து கொண்டிருந்த நண்பர் எஸ். என். கந்தசாமி அவர்களிடம் மணிமேகலை பற்றி மேலும் அறியும் வாய்ப்புக் கிடைத்தது. யாழ்ப்பாணம் திரும்பியதற்குப் பின் பண்டிதமணியின் நூல்களை மிக்க ஆர்வத்துடன் படித்துப் பயனடைந்து வந்த எனக்கு அவர்தம் காப்பியக் காழ்ப்பு, குறிப்பாகச் சிலப்பதிகாரம் பற்றிய காழ்ப்பு ஆச்சரியத்தைத் தந்தது. சச்சிதானந்தன் தமது உரையொன்றில் (பக். 25) "சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை யென்பன இலக்கியங்களாகா என்பது மரபுவழி ஆசிரியர்கள் கைமாறிக் கொடுக்கப் பண்டிதமணி பெற்றது" என்பர். ஆயின் இக்கோட்பாட்டைப் பின்னர் ஏனைய அறிஞர் ஏன் போற்றவில்லை என்ற எண்ணம் தோன்றலாம். உலக இலக்கியங்கள் எனப் பேசும்போது உரைகல் எப்படி அமையும் என்பது ஒரு வினா. பண்டிதமணியின் சிலப்பதிகாரம் பற்றிய கருத்துக்கள் எனது அறிவுக்கு அப்பாற்பட்டவையோ என ஏங்கி அவற்றைப் புரிந்து கொள்வதற்காகச் சிலம்பு குறித்து ஏனைய அறிஞரின் கருத்தையும் அறிய முற்பட்டேன். சிலம்பு பற்றிக் கிடைத்தவற்றையெல்லாம் படிக்கலானேன். சிலம்பு பற்றி அறிஞர்தம் கருத்துக்களை ஒப்பு நோக்கிப் பார்ப்பதால் பயனுண்டு என்று நீண்ட நாளாக என்னிடம் இருந்த நம்பிக்கையின் தூண்டுதலாலே இக்கட்டுரை எழுந்தது." கருத்து வேறுபாடு அறிஞரின் நோக்கிற்கேற்ப அமையும். பெரும் அறிஞர்களிடமும் நிறையும் குறையுமுண்டு. காலத்திற்குக் காலம் ஆராய்வோரே சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. பண்டிதமணி சமண-பௌத்த நூல்களைச் சிறிதேனும் ஏற்றுக் கொள்ளாதவர். சில விஷயங்களில் நாவலரை விடக் கடும் போக்குடையவர் என்றே கருத வேண்டியுள்ளது. நாவலர் நன்னூலை ஏற்று அதன் அடிப்படையில் இலக்கணச் சுருக்கம் எழுதினார். நன்னூற் காண்டிகையுரை, விருத்தியுரை பதிப்பித்திருக்கின்றார். பண்டிதமணியோ,

   பவனந்தி ஒரு சமணன். நல்ல முகூர்த்தத்தில் நன்னூல் செய்யப்பட்டது. அது எத்தனையோ இலக்கணங்களையும் விழுங்கித் தொல்காப்பியத்தையும் வழக்கறச் செய்துவிட்டது. நம்மவர்கள் தமக்கென ஒன்று இல்லாதவர்கள் ஆனார்கள். சார்ந்ததன் வண்ணமாய் நடுக்கடலிலே தத்தளிக்கின்றார்கள்.

   எனச் சிந்தனைக் களஞ்சியத்தில் (பக். 107) குறிப்பிட்டுள்ளார். இதைவிட, பண்டிதமணி புதுமை இலக்கியத்தில் கொண்ட ஆர்வத்தையும் கருதவேண்டும். அவை இலக்கியக் கோட்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என எண்ணினாரோ எனத் தெரியவில்லை.

2. "புது விஷயங்களையும் சர்ச்சைக்குரிய பொருள்களையும் பற்றி ஆசிரிய சங்கங்களிலே தான் முதன் முதல் பேசுவர். பிரமாதமான சர்ச்சையைக் கிளப்பிய சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை என்பன ஆசிரிய சங்கங்களிற் பேசப்பட்டனவே." கனக செந்திநாதன், மூன்றாவது கண், பக். 33, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம். 1959.

3. பார்க்க : ஆ. வேலுப்பிள்ளை, பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ப் பாரம்பரியம், 1989.

4. "பெரிய புராணத்தின் பெருமையை உணர்ந்து அதில் ஆராமை கொண்ட ஒரு மகான் ஆறுமுகநாவலர் அவர்கள்" (சிந்தனைக் களஞ்சியம், பக்.155) எனவும், "நாவலர் அவர்களுக்குப் பெரிய புராணம் போலப் பொன்னம்பலபிள்ளைக்குக் கம்பராமாயணம்" (இலக்கிய வழி, பக். 87) எனவும் பண்டிதமணி கூறுவர். நாம் இங்கு பண்டிதமணிக்குக் கம்பராமாயணம் போல....... எனக் கூறலாம் போலத் தோன்றுகிறது.

5. வேலுப்பிள்ளை, ஆ., மு. கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சிந்தனைக் களஞ்சியம், பக். 110-112. "டாக்டர் உ. வே. சாமிநாதையர் மணிமேகலை ஆசிரியரைச் சங்கப் புலவர் ஆக்கி விட்டார்" எனக் கூறும் பண்டிதமணி "சிலப்பதிகாரம், சிந்தாமணிக்கு இந்த அதிர்ஷ்டம் கொடுத்து வைக்கவில்லை. என்றாலும் டாக்டர் ஐயா அவர்கள் இரங்கி அவற்றையும் சங்க நூலாக்கி விட்டார்கள்" எனக் கேலியாகக் கூறுகிறார்.

7. பண்டிதர் மு. கந்தையா "சிந்தாமணித் துறவு, சிலப்பதிகாரத் துறவு, மணிமேகலைத் துறவுகள் வள்ளுவர் நீதிப் பக்கந் தலைகாட்டவும் இயலாத நிலையுண்டு" (காரைநகர் மணிவாசகர் சபை, பொன்விழா மலர், 1993) என்பர்.

பேராசிரியர் வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் சிலப்பதிகாரம் பெருங்காப்பியமன்று, சிறுகாப்பியமே என்றும் அதன் ஆசிரியர் இளங்கோவடிகள் அல்லர் என்றும் சிலப்பதிகாரச் செங்குட்டுவன் கற்பனைச் செங்குட்டுவனே யாவான் என்றும் ஏனைய அறிஞர்களிலிருந்து வேறுபட்டுச் சில கருத்துக்களைத் தமது சிலப்பதிகார ஆராய்ச்சி என்னும் நூலில் கூறியுள்ளார்.

8. பெரியார் ஈ. வே. இராமசாமி நாயக்கர் (1879-1993) சிலப்பதிகாரம் "விபச்சாரத்தில் ஆரம்பித்து பத்தினித் தனத்தில் வளர்ந்து, முட்டாள் தனத்தில் மூடநம்பிக்கையில் முடிந்த பொக்கிஷமாகும்" என்றார். பார்க்க : பெரியார், தந்தை (1974), அறிவு விருந்து, பக். 30. பெரியார் சுய மரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.

9. வையாபுரிப்பிள்ளை தமது இலக்கிய மணிமாலை என்னும் நூலில் இந்த ஆண்டுகளைத் தந்துள்ளார். ஆயின் சஞ்சீவி தமது சிலம்புத் தேன் (பக். 46, 49) என்னும் நூலில் சுப்பராயச் செட்டியார் பதிப்பு 1881 ஆம் ஆண்டு வெளிவந்தது என்றும் சீநிவாச ராகவாசாரியார் பதிப்பு 1855 ஆம் ஆண்டு வெளிவந்தது என்றுங் கூறுவர்.

10. பண்டிதமணி கண்ணகியிடம் கண்ட குறைகளைவிட வேறு சில குறைகளையும் அவளிடம் காண்பவர் இன்று உளர். எடுத்துக்-காட்டாக தினக்குரலில் (9.9.2001, பக். 20) வெளிவந்த 'கற்புக் கரசியாய்....? கற்பு இயந்திரமாய்....? எதுதான் உண்மை இந்தப் பெண்மைக்கு?' என்னும் கட்டுரையைப் படித்துப் பார்க்க. இதனில் உள்ள கருத்துக்கள் போன்றவற்றைப் பல ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உளவியல் விரிவுரையாளராக இருந்து பின்னர் பேராசிரியரான இராசமாணிக்கம் தமது சிறிய நூலொன்றில் வெளியிட்டார். பின்னர் தமது நூல் பற்றி ஒருமுறை மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராசனுடன் நீண்ட நேரம் உரையாடியதற்குப் பின் இராச-மாணிக்கம் தமது கருத்துக்களை மாற்றிவிட்டார். தமது நூலையும் கைவிட்டுவிட்டார். சென்னை மரீனாகடற்கரையில் வைக்கப்-பெற்றிருந்த கண்ணகி சிலையை அகற்றியது பற்றி எழுந்த சர்ச்சை-யையும் கருதுக. அகற்றியதற்குக் காரணம் மறைமுகமாகவே கூறப்பட்டது. பார்க்க : சுடரொளி, 23.12.2001, கொழும்பு.

11. மேலும் "சிலப்பதிகாரம் - சிந்தாமணி - மணிமேகலை ஆகியன பொருட்பிறழ்வுடையன என அவர் (பண்டிதமணி) வெளியிட்ட புலமை - இலக்கியம் - தமிழ் என்ற கட்டுரைக் குறிப்புக்கள் இன்னும் தகர்க்கப்படவே இல்லை. இவற்றை வைத்துக் கொண்டு தமிழ் பேசும் நல்லுலகம் எத்தனை வருடங்களுக்கும் ஆராயலாம்" என கனக செந்திநாதன் மூன்றாவது கண்ணில் (ப. 38) எழுதியமையும் தூண்டுதலாக அமைந்தது.

## உசாத்துணை நூல்கள்


இராமகிருஷ்ணன், எஸ். (1964), *இளங்கோவின் பாத்திரப் படைப்பு*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

குருசாமி, ம. ரா. போ. (1955), *சிலப்பதிகாரச் செய்தி*, சென்னை.

சச்சிதானந்தன், க. (1993), *பண்டிதமணியின் மும்முகங்கள்*, பண்டிதமணியின் 94 ஆவது பிறந்ததின உரை, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

சஞ்சீவி, ந. (1956), *சிலப்பதிகார விருந்து*, திருச்சிராப்பள்ளி.

...................... (1959), *சிலம்புத்தேன்*, காஞ்சிபுரம்.

சண்முகன், மு., *கவுந்தியடிகள்*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சுப்பிரமணிய ஆச்சாரியார், வெ. சு. (1947), *சிலப்பதிகார ஆராய்ச்சி*, சென்னை.

சேதுப்பிள்ளை, ஆர். பி. (1956), *சிலப்பதிகார நூல் நயம்*, சென்னை.

துரைசாமிப்பிள்ளை ஔவை, சு. (1942), *முப்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகார ஆராய்ச்சி*, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மார்க்கபந்து சர்மா, எஸ். ஆர். (1961), *சிலம்பின் பாயிரம்*, தொல்காப்பியர் நூலகம், சென்னை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.............................. (1961), *சிலம்பும் மேகலையும்*, தொல்காப்பியர் நூலகம், சென்னை.

.............................. (1962), *சிலம்பின் தகுதி*, தொல்காப்பியர் நூலகம், சென்னை.

மீனாட்சி சுந்தரன், தெ. பொ. (1954), *நீங்களும் சுவையுங்கள்*, வசந்தம் பதிப்பகம், சென்னை.

.............................. (1961), *குடிமக்கள் காப்பியம்*, தொல்காப்பியர் நூலகம், சென்னை.

.............................. (1961), *கானல்வரி*, கலைக்கதிர் வெளியீடு, கோவை.

.............................. (1961), *சமணத் தமிழ் இலக்கிய வரலாறு*, கலைக்கதிர் வெளியீடு.

வரதராசன், மு. (1956), *கண்ணகி*, சென்னை,

.............................. *மாதவி*, சென்னை.

.............................. (1960), *இளங்கோ அடிகள்* (சொர்ணம்மாள் சொற்பொழிவுகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

வேலுப்பிள்ளை, ஆ. (1989), *பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ப் பாரம்பரியம்*, பண்டிதமணி அவர்கள் பற்றிய நினைவுப் பேருரை, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (1964), *இலக்கிய மணிமாலை*, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

ஜெபரத்தினம், ஆ. (1956), *இளங்கோ உள்ளம்*, சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# பண்டிதமணி ஆய்வில் சிக்கல்களா?

பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள் ஈழம் பெற்றெடுத்த தலைசிறந்த தமிழ் அறிஞர்களுள் ஒருவர் என்பதில் ஐயமில்லை. அவர் தமது வாழ்நாளில் அவ்வப்போது பல பாடல்கள், கட்டுரைகள் எழுதியுள்ளார். அவரது கட்டுரைகள் பல நூல்களாக வெளிவந்துள. அவர் கந்தபுராண தக்ஷ காண்டத்துக்கு உரை எழுதியுள்ளார். அவர் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய பெருந்தொண்டைக் கருத்திற் கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கியது. பண்டிதமணியவர்கள் இறைவனடி எய்தியபோது வெளிவந்த நினைவு மலரில் தமிழ் நாட்டறிஞர்களும் ஈழத்தறிஞர்களும் பண்டிதமணியின் பணியைப் பாராட்டி எழுதியுள்ளனர். அவரது பெயரில் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன; நினைவுச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன. அண்மையில் பண்டிதமணியின் உருவந்தாங்கிய முத்திரை இலங்கை அரசால் வெளியிடப்பட்டது. இவை அனைத்தும் அவரது உயர்வைக் காட்டுவன.

பண்டிதமணியவர்கள் நாவலர் வழிநின்று சைவத்தைப் போற்றியவர்; தமிழ் இலக்கியங்களுள் சிலவற்றை உச்சிமேற் கொண்டு போற்றிப் பாராட்டி எழுதியவர். கம்பராமாயணம், சேக்கிழார் பெரிய புராணம், திருக்குறள் ஆகியவை அவரது உள்ளத்தைக் கவர்ந்தவை. ஆனால், வேறுசில இலக்கியங்களை இகழ்ந்து இலக்கியமன்று என்று வெறுத்து எழுதியவர். அவற்றை இலக்கியம் என்று கூறியவர்களுடன் சண்டையும் போட்டவர். இதற்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற இலக்கியங்களைக் காட்டலாம்.[1] ஒரு காலத்தில் தாம் கொண்ட கருத்தைப் பின்னர் எதிர்மாறாக மாற்றியமைத்தும் கொண்டுள்ளார். 1926ஆம் ஆண்டிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கன்னி முயற்சியாகக் கண்ணகி அம்மை தோத்திரம் பாடினார். அதனில் "சிலப்பதிகாரம் என்னும் தேனே" என்று பாடினார். பின்னர் சிலப்பதிகாரம் ஒரு மாதவி; அதில் மயங்கிய கோவலர் பலர் - பாரதியாரும் ஒருவர் என்று இகழ்ந்தார்.[2] தனிப்பட்ட அறிஞர் சிலரிடத்துப் பெரும் மதிப்புக் கொண்டு போற்றி எழுதியது மட்டுமன்றி அவர்களைக் குறை கூறியவர்களைக் கடுஞ் சொற்களால் கண்டித்துக் கேலி செய்தும் எழுதியுள்ளார். அவர் நாவலரிடம் கொண்ட மதிப்பையும் ஈடுபாட்டினையும் நாம் அறிவோம். உ. வே. சாமிநாதையர் அவர்களைக் கண்டித்துக் கிண்டல் பண்ணி எழுதியதையும், சாமிநாதையர் தொடர்பாக சு. நடேசன் அவர்களையும் கிண்டல் பண்ணி எழுதியதையும் நாம் அறிவோம். வடலூர் இராமலிங்கசுவாமிகளிடமும், அவர் பற்றி எழுதிய ம.பொ. சிவஞானத்திடமும் பண்டிதமணி கொண்டிருந்த காழ்ப்பையும் அறிவோம். பண்டிதமணி தாம் கொண்ட நிலைப்பாடுகளுக்குப் பெரும்பாலும் காரணங்களைக் கூறியுள்ளார்.[3] ஆயின், அவரது காரணங்களை ஆய்வு முறைகளும் அறிவும் வளர்ச்சி பெற்றுள்ள இன்று அனைவரும் ஏற்றுக்கொள்வர் என நாம் எதிர்பார்க்க முடியாது. பல இன, மத, கலாசார, மொழிச் சமுதாயங்கள் உருவாகும்போது சகிப்புத் தன்மையும் ஓரளவாவது தோன்றுகிறது.

பண்டிதமணியவர்களின் கருத்துக்கள் சிலவற்றை ஏற்க மறுத்து முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் எழுதியவர் வித்துவான் க. வேந்தனார் அவர்களே. சிலப்பதிகாரம் பற்றிப் பண்டிதமணி, வேந்தனார் ஆகியோரின் மாறுபட்ட கருத்துக்கள் 1948ஆம் ஆண்டிலே ஈழகேசரிப் பத்திரிகையில் வெளிவந்தன.[4] இவை அன்று யாழ்ப்பாண அறிஞர் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தின. சிலப்பதிகார மாநாடு ஒன்றும் யாழ்ப்பாணத்திலே தீவுப் பகுதியில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் இருந்து அறிஞர்கள் மாநாட்டிற்கு வந்திருந்தனர். அந்த மாநாட்டையும் பண்டிதமணி விரும்பவில்லை. இன்று இலங்கைப் பல்கலைக்கழகங்களிலே சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பிற மதக்காப்பியங்களும் சிறந்த இலக்கியங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. நோக்கிற்கேற்பக் கருத்து மாறுகின்றது.

பண்டிதமணியவர்களைத் தனிப்பட்ட முறையில் குறை கூறுவது வேண்டாத, விரும்பத்தகாத காரியம். அது அழகன்று; அருவருக்கத்தக்கதுமாம். ஆயின், அறிவு வளர்ச்சியின் பொருட்டுப் பண்பொடு நின்று அவரது கருத்துக்களை விமர்சிப்பது வரவேற்கத்தக்கது அல்லவா? இன்று மேடைகளில் "பாராட்டுரை", "நயப்புரை", "சிறப்புரை", "வாழ்த்துரை" என்பன சம்பிரதாயமாக நடைபெற்று வருகின்றன. பேசிப் பேசி இவற்றில் விசேட பயிற்சி பெற்றவர்கள் அறிவியல் அடிப்படையில் விமர்சிப்பதை விரும்பாமல் இருக்கலாம். அதற்காக ஒருவரது கருத்துக்களில் உள்ள சிக்கல்களை உள்ளவாறே சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. பண்டிதமணி அவர்களே சமண, பௌத்த காவியங்களைச் சங்கம் அங்கீகரிக்குமா? போன்ற பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களை எழுப்பிக் காமஞ் செப்பாது கண்டது மொழிமோ என்றார். இது அவரது சிந்தனையின் தனித்துவத்தைக் காட்டுகிறது. எதையும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்; சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாக இருத்தல் ஆகாது என்பது அவர் கோட்பாடு. அது பாராட்டத்தக்கது. இன்றைய ஆய்வாளர் அனைவரும் அறிஞரிடையே உள்ள கருத்து வேறுபாட்டை அறிவு வளர்ச்சிக்கு உகந்ததாகக் கொள்கின்றனர்.

பண்டிதமணியின் ஆக்கங்களில் உள்ள நிறைகுறைகளை அறிவியல் ஆய்வு அடிப்படையில் கண்டு கொள்ளுதல் வேண்டும் என்ற விருப்பு எனக்கு நீண்டகாலம் இருந்து வந்தது. எனது தந்தை பண்டிதமணியைப் பெரிதும் போற்றுபவர். எனது மூத்த சகோதரனும் (ஆனந்த குமாரசுவாமி) அவ்வாறே. இவர்கள் இருவரும் அந்தக் காலத்தில் ஆங்கிலேயப் பேராசிரியர்களிடம் ஆங்கில இலக்கியத்தைத் தம் பீ.ஏ. பட்டத்திற்குப் பாடமாகக் கற்றவர்கள். தமிழிலக்கியத்தைத் தாமாகவே கற்றுக் கொண்டவர்கள். அவ்வப்போது அவர்களுடன் பண்டிதமணி அவர்களின் ஆக்கங்கள் சிலவற்றைப் பற்றித் தர்க்கப்பட்டுள்ளேன். இதற்குக் காரணம் மு. வரதராசன், தெ. பொ. மீனாட்சி சுந்தரன், அ. ச. ஞானசம்பந்தன் ஆகியோரிடம் பெற்ற பயிற்சியாகலாம். அதே சமயம் பண்டிதமணியின் ஆற்றல்களை, நிறைகளை அவர்களுடன் சேர்ந்து பாராட்டிப் பேசியுமுள்ளேன். பண்டிதமணியின் பாரதநவமணிகள் என்னும் நூலுக்கு யான் தினகரனில் எழுதிய மதிப்புரை பற்றியும் அது பற்றிப் பண்டிதமணி, தந்தை ஆகியோர் கருத்துப் பற்றியும் "நினைவில் நிற்கும் பண்டிதமணி" என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். மற்றவர்கள் கூறுவனவற்றைக் கேட்டுச் சிந்தித்து எனது கருத்தை மாற்றியும் உள்ளேன்; மாற்றிக் கொள்வதற்கு மறுத்ததும் உண்டு. ஒன்றைப் பல கோணங்களில் இருந்து பார்த்தால் அறிவைக் கூர்மைப்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இப்பின்னணியில் பண்டிதமணி பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதினேன். பண்டிதமணியை ஆராய முற்படும்போது சில சிக்கல்கள் தோன்றின. அவற்றை எடுத்து விளக்கிக் கூற விரும்பி "பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள்" என்னும் தலைப்பில் எனது ஆய்வுக் கட்டுரை அமைந்தது. இத்தகைய சிக்கல்கள் உண்டு என்பதைக் கண்டு கொள்ள அறிஞர் மறுக்கின்றனர்; அஞ்சுகின்றனர்; கண்டு கொண்டாலும் மௌனம் சாதிக்கின்றனர் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் இருந்தது. இதற்குப் பல்கலைக்கழகத்து அறிஞர் சிலரும் விதிவிலக்கன்று என எண்ணினேன்.[5] யான் எழுதிய ஆய்வுக் கட்டுரையைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களிடம் நுட்பமாகப் படித்துக் கருத்துரைக்குமாறு வேண்டினேன். அப்பொழுது வேலுப்பிள்ளை அவர்கள்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர். அவர் தமது ஆய்வில் ஆய்வு நெறிமுறைகளைத் திறம்படக் கடைப்பிடிப்பவர். அரசியல் காரணமாகவோ பிறரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷப்படுத்துவதற்காகவோ தமது கருத்தைத்திரித்துக் கூறுபவர் அல்லர். எனது கட்டுரையை நிதானமாகப் படித்துச் சில கருத்துக்களைக் கூறிக் கட்டுரையை ஏற்றுக்கொண்டார். யானும் கட்டுரையில் சில மாற்றங்களைச் செய்தேன். இது தமிழ் இலக்கியத்தை விட்டு மொழியியலில் விசேட பயிற்சி பெற்றுப் பொழுதெல்லாம் மொழியியல் ஆய்வில் ஈடுபட்ட எனக்கு உற்சாகம் அளித்தது. முன்னரும் சிலப்பதிகாரம் பற்றி இரு கட்டுரைகள் எழுதி ராஜன் சுவாமிநாதன் என்னும் பெயரில் "சுதந்திரன்" பத்திரிகையில் வெளியிட்டதை நினைத்துக் கொண்டேன். தமிழை விடுவதில்லை என உறுதி கொண்டேன். இடையிடையே இலக்கியத்தையும் புரட்டிப் பார்த்துக் கொண்டேன்.

அந்தக் காலகட்டத்தில் தான் எமது முயற்சியால் பல்கலைக்கழகத்துக் கலைப்பீடத்தில் கல்விசார் ஆய்வு வட்டம் (Academic Forum) என ஒன்று நிறுவப்பட்டது. இது ஏனைய ஆய்வு அரங்குகளில் இருந்து வேறுபட்டது. ஆய்வாளர் தாம் விரும்பிய யாதேனும் பொருள் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதியதும் கலைப்பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு அக்கட்டுரையை ஸ்ரென்சிலில் அடித்து வேண்டிய பிரதிகள் எடுத்து, பல்கலைக்கழகத்து அறிஞர்களுக்கும் வெளியே உள்ள அறிஞர்களுக்கும் ஆய்வுக் கூட்டம் நடைபெறும் நாளுக்கு குறைந்தது இரண்டு வாரங்கள் முன்னதாக அனுப்புதல் வேண்டும், ஆய்வுக் கூட்டத்தில் பங்கு கொள்வோர் கட்டுரையை நன்கு படித்து கலந்துரையாடலுக்கு ஆயத்தமாக வருதல் வேண்டும், ஆய்வுக் கூட்டம் நடைபெறும் நாளில் கட்டுரை முழுவதையும் ஆசிரியர் வாசிக்காமல் சுருக்கத்தை மட்டும் குறிப்பிட்ட நிமிடங்களில் கூறுதல் வேண்டும் போன்ற கண்டிப்பான சில ஒழுங்குகள் கல்விசார் ஆய்வு வட்டத்தில் பின்பற்றப்பட்டன. கலந்துரையாடலுக்கே முக்கியத்துவம் அளித்து அதிக நேரம் ஒதுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்தக் கல்விசார் ஆய்வு வட்டத்தில் ஆய்வுக் கட்டுரை படிக்க யாருமே முன்வராத நிலையில் யான் எனது கட்டுரையைப் படிக்க முன்வந்தேன். கல்விசார் ஆய்வு வட்டக் கருத்தரங்கு 17.07.1987 அன்று காலை நடைபெற்றது. பல்கலைக்கழகத்து அறிஞர்களும் பண்டிதமணியின் பழைய மாணவர்களும் மற்றும் யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர்களும் வந்திருந்தனர். கருத்தரங்கிற்குப் பேராசிரியர் வேலுப்பிள்ளை தலைமை வகித்தார். யான் ஆய்வுக் கட்டுரையின் சுருக்கத்தைக் கூறியதற்குப் பின்னர் கலந்துரையாடல் சுமார் இரண்டரை மணிநேரம் நடைபெற்றது. எல்லாரும் கட்டுரையை நன்கு படித்துக் கலந்துரையாடுவதற்கு ஆயத்தமாகவே வந்திருந்தனர். சிலர் தத்தம் கருத்துக்களை நிலைநாட்டுவதற்கு ஆதாரமாகச் சான்றுகளையும் கொண்டு வந்திருந்தனர். கலந்துரையாடலில் பங்குபற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பேராசிரியர் சிவத்தம்பி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கன், க. சி. குலரத்தினம், அ. பஞ்சாட்சரம், தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் ஆவர். முடிவில் அத்தகைய ஆய்வரங்கு மிகப் பயனளிக்கும் என்று பலர் கருத்துத் தெரிவித்தனர். அவர்களுள் ஆங்கில இலக்கியத்தில் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவரும் ஓய்வு பெற்றிருந்த அதிபருமாகிய எஸ். சிவபாதசுந்தரமும் ஒருவராவர். தலைவர் கட்டுரையைப் பாராட்டிச் சபையோர் கட்டுரையை ஏற்றுக்கொண்டதாகக் கூறினார்.

எனது கட்டுரை ஆய்வரங்குக் கூட்டத்திற்கு வந்தவர்களுள் இரண்டொருவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. பண்டிதமணி ஆய்விலா சிக்கல்கள்? அவரைக் குறை கூறுவதா? குறை கூறியவரைச் சும்மா விட்டுவிடுவதா? என்ற எண்ணம் அந்த இரண்டொருவரிடம் குடிகொண்டது. இது பற்றிச் சிலருக்குச் சொல்லியும் விட்டார்கள். ஏதாவது ஒரு பத்திரிகை ஆசிரியரைப் பிடித்துக் கட்டுரை ஆசிரியரையும் கட்டுரையையும் கேலி பண்ணி எழுத வேண்டும் என்று முடிவு கட்டினர் போலும். கருத்தரங்கு நடைபெற்றுச் சில நாட்களுக்குப் பின்னர் 20.07.1987 அன்று யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முரசொலி என்னும் பத்திரிகையில் பொடிப்பொழுது என்னும் பகுதியில் உண்மைக்குப் புறம்பாகக் கட்டுரையைக் கேலி செய்து, கட்டுரையாசிரியராகிய என்னையும் கேலி செய்து செய்தியொன்று வெளியிடப் பெற்றது.[6] பல்கலைக்கழகத்தவர் பொய்யான இச்செய்தியைப் படித்து ஆச்சரியப்பட்டனர். கல்விசார் ஆய்வு வட்டத்திற்குப் பொறுப்பாக இருந்த பீடாதிபதிக்குக் கோபமும் வந்துவிட்டது. செய்தியைக் கடும் வார்த்தைகளால் மறுத்து கடிதம் எழுதி அதை வெளியிடும்படி முரசொலி ஆசிரியரைக் கேட்டுக் கொண்டார். அக்கடிதத்தைத் தமது பத்திரிகையில் வெளியிடுவதாகக் கூறிக்கொண்டு முரசொலி ஆசிரியர் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்.

பல்கலைக்கழகத்தில் ஆய்வு வளர்ச்சிக்காக நடைபெறும் முயற்சிக்கு முரசொலி நிலையிழந்து குந்தகம் விளைவிக்கிறது என்ற எண்ணம் பலருக்கும் இருந்தது. இதுபற்றிக் கலைப்பீடக் கூட்டத்திலும் மூதவைக் கூட்டத்திலும் பேசப்பட்டது. முரசொலிச் செய்தியை மறுத்துத் துணைவேந்தர் அவர்களே யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வேறொரு பத்திரிகையில் உண்மை நிலையை விளக்கிச் செய்தியொன்று வெளியிட வேண்டும் என்று மூதவை ஏகமனதாக முடிவு செய்தது. அம் முடிவிற்கேற்ப 15.09.1987 அன்று வெளிவந்த ஈழநாடு என்னும் பத்திரிகையில் நான்காம் பக்கத்தில் "பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஆய்வு வட்டம்" என்னும் தலைப்பில் துணைவேந்தர் பெயரில் மக்கள் கருத்தாக ஒன்று வெளியிடப்பெற்றது. அது பின்வருமாறு :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஆய்வு வட்டம்

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற் கலைப்பீடம் அண்மையில் உத்தியோகபூர்வமாக ஓர் ஆய்வறிவு வட்டத்தினை அமைத்துள்ளது. பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களிடையே ஒழுங்கான முறைகளில் பல்துறைகளின் ஆய்வுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கலந்துரையாடல்களையும், ஆய்வரங்குகளையும் ஒழுங்கு செய்யும் பணிகளில் ஆய்வறிவு வட்டம் ஈடுபட்டுள்ளது.*

*இந்த ஆய்வறிவு வட்டத்தின் முதலாவது கருத்தரங்கு பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் தலைமையில் 17.07.87இல் நடைபெற்றது. இக்கருத்தரங்கிலேயே மொழியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் சு. சுசீந்திரராஜாவினால் "பண்டிதமணியின் ஆய்வில் எழும் சிக்கல்கள்" எனும் பொருள் பற்றி ஆய்வுக் கட்டுரை வாசிக்கப்பட்டது. இக்கருத்தரங்கிலே பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் சிறப்பு விருந்தினர்களாக வெளியிலிருந்து அழைக்கப்பட்ட சிலரும் கலந்து கொண்டனர்.*

*இக்கருத்தரங்கு பற்றிச் சில தவறான கருத்துக்கள் ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வெளியிட்டமை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.*

*கருத்தரங்கின் பொருள் சார்பான பல்வேறு அம்சங்கள் பற்றி இரண்டரை மணித்தியாலங்கள் மிக ஆர்வத்துடன் உரையாடல் நடைபெற்றது. ஆய்வுக் கட்டுரை பற்றி இக்கருத்தரங்கில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. கட்டுரை உயர்ந்த தரத்தைக் கொண்டதாக இருந்தது என்பதும் கலந்து கொண்டவர்களின் அபிப்பிராயங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.*

*இந்த ஆய்வறிவு வட்டம் மேலும் நல்ல கருத்துக்களை ஒழுங்கு செய்து பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி வளர்ச்சிக்காக தொடர்ந்தும் பணியாற்ற வேண்டுமென்றும் பலர் விருப்பம் தெரிவித்தனர்.*

பேராசிரியர்
சு. வித்தியானந்தன்
(துணைவேந்தர்)
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகராறு ஏற்படுவதற்கு முன்னர் வித்தியானந்தன் அவர்களின் மணிவிழாவின் போது விழாக்குழுச் செயலாளராக இருந்து விழாவைச் சிறப்பாக நடத்தியவர் முரசொலி ஆசிரியர். ஆயினும், துணைவேந்தர் உண்மைக்காகவே நின்றார். துணைவேந்தரின் கடிதம் ஈழநாட்டில் வெளிவந்ததற்குப் பின் முரசொலியில் கட்டுரையைக் கேலி செய்து எழுதியவரும் முரசொலி ஆசிரியரும் யாதும் சொல்லுவதற்கு ஆற்றாத நிலையில் மௌனத்தைக் கடைப்பிடித்தனர். பண்டிதமணி ஆய்வில் சிக்கல்களா என்பதற்குத் தலைசிறந்த தமிழ்ப் பேராசிரியர்களுள் ஒருவரான துணைவேந்தரே பதிலளித்துவிட்டார். பல்கலைக்கழகத்தில் ஆய்வு முயற்சி ஆய்வு வட்டத்தினூடாகத் தொடர்ந்தது. மற்றவர்கள் கூறிவந்த கருத்துக்களையே ஆய்வாளரும் தொடர்ந்து கூறுதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பிற்கு இவ்வாய்வரங்கில் இடம் இல்லாமற் போயிற்று. நாம் கசப்பான உண்மைகளையும் உண்மையின் பொருட்டு ஏற்றுக்கொள்வதற்குப் பழகுதல் வேண்டும் அல்லவா?

## குறிப்புகள்

1. அறிஞர் பலர் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய காப்பியங்களையும் சிறந்த இலக்கியங்களாக ஏற்றுக்கொள்கின்றனர். தெ. பொ. மீனாட்சி சுந்தரன் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றின் இலக்கியக் கோட்பாட்டினைச் சங்க இலக்கியக் கோட்பாட்டுடன் ஒப்பு நோக்கி விளக்குவதையும் திருக்குறள், பெரிய புராணம் பற்றிக் கூறுவதையும் கருத்திற் கொள்க. பார்க்க: Meenakshisundaran, T. P. "Sāntvāni or Ethical Literature in Tamil", Papers on Linguistics and Literature, Annamalainagar, 1965.

   சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களுள் சிலப்பதிகாரம் இலக்கிய நயம் கருதிப் பிறமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றிச் சிலப்பதிகாரம் பற்றித் தமிழறிஞர் பலர் மிகப் பல ஆய்வுநூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்.

2. ஆறுமுகநாவலர் கண்ணகி அம்மை வழிபாட்டினை ஏற்றுக்கொண்டதில்லை, பார்க்க : கணபதிப்பிள்ளை, சி., கந்தபுராண கலாசாரம், பக். 75 - 83, 1959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சங்க இலக்கியத்தைப் போற்றிய பண்டிதமணி அதனில் உள்ள பரத்தையர் ஒழுக்கத்தைப் பற்றி என்ன கருதினார் எனத் தெரியவில்லை.
4. அவர்கள் இருவரும் மாறுபட்டு எழுதியவை நூலாக வெளிவந்தால் ஆய்வாளர்க்குப் பயன்படும். அவற்றை அழிய விடக்கூடாது.
5. பண்டிதமணியின் புலமை மையத்தை ஆராய்ந்தவர் சிக்கல் பற்றி ஒன்றுமே கூற முற்படவில்லை.
6. முரசொலியில் வெளிவந்த முழுமையான செய்தியைத் தரமுடியவில்லை. வைத்திருந்த பத்திரிகைப் பிரதி 1995இல் நடைபெற்ற இடப்பெயர்வின் போது தொலைந்துவிட்டது. முரசொலிப் பத்திரிகையும் நின்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# பண்டிதமணியும் உப அதிபர் கைலாசபதியும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் அறிஞர் சிலரிடம் பாடங்கேட்டவர்; மாணவர்கள், ஆசிரியர்கள் பலருடன் நெருங்கிப் பழகியவர். ஆயினும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை உபஅதிபர் பொ. கைலாசபதியவர்களிடம் கேட்ட பாடமும் கொண்ட பழக்கமுமே பண்டிதமணியின் வாழ்க்கையில் பெருந் திருப்பத்தை ஏற்படுத்தின என்றால் மிகையாகாது. இதனைப் பண்டிதமணியின் எழுத்துக்கள், சொற்பொழிவுகள் மூலம் அறிகிறோம். பண்டிதமணி தாம் கைலாசபதி அவர்களிடம் கொண்ட தொடர்பால் தமக்கு ஏற்பட்ட விளைவு பற்றி ஆங்காங்கே கூறியுள்ளார். கைலாசபதி அவர்களும் தாம் பண்டிதமணியிடம் கொண்ட தொடர்பு பற்றி ஓரிடத்து எழுதியுள்ளார். சுருக்கமாகக் கூறின், பண்டிதமணி கைலாசபதியைத் தம் கருத்துக்களின் ஊற்றாகக் கொண்டார் (சிந்தனைக் களஞ்சியம்). கைலாசபதி அவர்கள் பண்டிதமணியைத் தாம் சொல்ல விரும்பியதைக் கேட்குந் தகுதி வாய்ந்த ஒரு முக்கியஸ்தராகக் கொண்டார் (பண்டிதமணி மணிவிழா மலர், 1959 : 1). எனவே, பண்டிதமணியை நன்கு அறிந்து கொள்வதற்குப் பண்டிதமணி - உப அதிபர் கைலாசபதி தொடர்பு பற்றிய ஆய்வு இன்றியமையாததாகிறது.

முதற்கண் பண்டிதமணி - உபஅதிபர் பற்றிய ஆய்விற்குக் கிடைக்கக்கூடிய ஆதார ஏடுகளைப் பற்றிச் சுருக்கமாகச் சிந்தித்தல் நன்று. மேலும், அவர்கள் இருவர் வாழ்க்கையைத் தனித்தனியாகவும் ஒப்பீட்டடிப்படையிலும் சுருக்கமாகச் சிந்தித்தலும் நன்று. இவ்வாறு சிந்திக்கும் போது போதிய செய்திகள் இல்லாததால் எழக்கூடிய சிக்கல்களைக் காட்டி அவற்றின் ஊடாகவும் இயன்றளவு விஷயத்தைத் தெளிந்து கொள்ள முயல்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்விலே பயனற்றுப் போகாது. பண்டிதமணி உப அதிபர் தாம் மாணவராக இருந்த காலத்தில் ஏற்பட்ட தொடர்பு, சைவாசிரிய கலாசாலையில் பணியாற்றிய காலத்துத் தொடர்பு, உபஅதிபர் இறந்ததற்குப் பின் பண்டிதமணியிடம் அவர் பற்றித் தோன்றிய எண்ணங்கள் என்ற அடிப்படையில் சிந்திக்கலாம். பண்டிதமணி - உப அதிபர் பற்றியும் அவர்கள் தொடர்பு பற்றியும் இன்றுவரை பிறர் கூறிய பயனுள்ள கருத்துக்களையும் வேண்டிய இடத்து கூறியோர் தகுதிப்பாட்டினை மனங்கொண்டு ஆய்விற்குக் கருதலாம்.

பண்டிதமணியின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் வண்டமிழ்த் தொண்டையும் கனக செந்திநாதன் எழுதியுள்ளார். நூற்பெயர் மூன்றாவது கண். பண்டிதமணியையும் புலவர் மணியையும் ஒப்பிட்டு செபரெத்தினம் வாழையடி வாழை என நூல் எழுதியுள்ளார். க. சி. குலரத்தினம் அவர்கள் பண்டிதமணியின் காலமும் வரலாறும் பற்றிச் சஞ்சீவியில் தொடர்ந்து எழுதினார். மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க. என இ. சிதம்பரப்பிள்ளை எழுதியுள்ளார். பண்டிதமணி அவர்கள் மணிவிழா மலரும் (1959), பாராட்டு விழா மலரும் (1978) வெளிவந்துள்ளன. பண்டிதமணி நினைவாக பெரிய மலர் ஒன்றும் வெளிவந்துள்ளது. பண்டிதமணியின் நூல்கள் பல வெளிவந்துள்ளன. பண்டிதமணியின் நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஆய்வு பல்கலைக்கழக மட்டத்தில் வெளிவந்துள்ளது. மேலும், நடைபெற்று வருகிறது. இவை அனைத்தும் பண்டிதமணி பற்றிய ஆய்வு வளர்ச்சிக்குத் துணை செய்யும் ஆதார ஏடுகளாக அமையும். இது ஒரு புறம். மறுபுறம் கைலாசபதி அவர்கள் பற்றி இந்த அளவிற்கு எதுவும் வெளிவரவில்லை. கைலாசபதியவர்கள் பற்றி எழுதியவர் மிகக் குறைவு. பண்டிதமணி கைலாசபதி பற்றி "அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்" என ஒரே ஒரு கட்டுரை (சிந்தனைக் களஞ்சியம்) எழுதியுள்ளார். அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கைலாசபதி அவர்களின் நினைவு விழா-வொன்று 26.11.1978 அன்று நடைபெற்றபோது பண்டிதமணி, கைலாசபதி பற்றி ஆற்றிய உரை தினகரனில் 12.12.1978 அன்று வெளிவந்தது.

பண்டிதமணி தமது ஏனைய கட்டுரைகள் சிலவற்றில் கைலாசபதி பற்றி ஆங்காங்கு பெயர் கூறாது சில சுட்டுக்களால் அவரைக் குறித்து சில கருத்துக்களைக் கூறியுள்ளார் என உய்த்துணர முடிகிறது. இவ்வாறு உய்த்துணர்வதிலும் சில இடத்துச் சிக்கல்கள் தோன்றுகின்றன. பிறர் கைலாசபதி அவர்களுக்கு அளித்த மதிப்புப் பற்றியும் பண்டிதமணி ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார். கைலாசபதி அவர்கள் பதவியிலிருந்து ஒய்வு பெற்றபோது அவர்கள் சேவையைப் பாராட்டுமுகமாக வெளியிடப்பெற்ற மலரில் அறிஞர் சிலர் எழுதியுள்ளனர். அம்மலர் மிகச் சிறிது. கைலாசபதி அவர்கள் எழுதியவையும் மிகக் குறைவு. அவை நமக்கு எளிதில் கிடைப்பதாக இல்லை. அவர் 1933ஆம் ஆண்டு வெளிவந்த கலாநிலைய ஞாயிறு இதழ்களில் (இளவேனிற் கதிர், கூதிர்க் கதிர் ஆகிய இரண்டிலும்) தமிழகத்துத் தருக்க நூல் வளர்ச்சி என்னும் பொருள் பற்றி எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவர் 1934ஆம் ஆண்டு வயாவிளான் வாலிப தூதனில் வெளியிட்ட "உண்மைச் சமயமும் கட்டுச் சமயமும்" எனும் கட்டுரை முரசொலி வார மலரில் (20.06.1989) மறுபிரசுரமாகியது. உப அதிபரது எழுத்துக்களைத் தேடி வெளியிடும் முயற்சியில் அக்கறை கொள்வோரையும் இன்றுவரை காணோம். கைலாசபதி அவர்களுடன் நெருங்கிப் பழகிய ஒரு சிலருள் பலர் இன்று இல்லை. இருப்பவர் மௌனமாக உள்ளனர். கைலாசபதி அவர்களின் மாணவர் பலர் இன்னும் உளர். பண்டிதமணியே கைலாசபதி அவர்களைச் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை என்றால் மாணவர் தம் நிலை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பண்டிதமணியுடன் நெருங்கிப் பழகிய சிலர் உப அதிபர் அவர்களின் கருத்துக்கள் தனிப்பட்ட முறையில் சாதகர்களுக்குச் சொல்லப்பட்டவை, சாதனையில் நாட்டமற்ற, நம்பிக்கையற்ற ஆய்வாளருக்கல்ல எனக் கருதுகின்றனர். (இது பண்டிதமணி ஆர்வலர் ஒருவர் தனிப்பட்ட முறையில் கூறிய கருத்து). இவ்வாறு இன்று எப்படிப் பார்த்தாலும் ஒரே ஒருவர் எழுத்துக்கள் மூலம் தான், அதாவது பண்டிதமணி மூலம் தான் கைலாசபதி அவர்களின் சிந்தனை பற்றி நாம் முயன்று ஏதேனும் அறிந்து கொள்வதற்கு வழி உண்டு. அது எளிதில் கைகூடுவதாகத் தெரியவில்லை.

பண்டிதமணி நிலையையும் உப அதிபர் நிலையையும் சுருக்கமாகக் காட்டினோம். இந்த இரு வகை நிலை ஏற்பட்டதற்குக் காரணம் பண்டிதமணி, கைலாசபதி ஆகியோர் வாழ்க்கை முறையே எனலாம். பண்டிதமணி மிகத் தாராளமாகக் கூடிப் பழகும் இயல்பினராய் இருந்தார். கைலாசபதி அவர்களோ மிக ஒதுங்கி வாழும் இயல்பினராய் இருந்தார். பண்டிதமணியின் கருத்துப்படி உப அதிபர் பெரும்பாலும் சிந்தனை உலகிலே சஞ்சரித்தவர். உப அதிபர் தாம் தமது கருத்துக்களை எழுத விரும்பாததுடன் தன்னைப் பற்றிப் பிறர் எழுதுவதையும் அதிகம் விரும்பவில்லை போலும். பண்டிதமணி "அறிவான் மிக்க பெரியார் ஒருவரைத் 'தாங்கள் ஒரு நூல் எழுதலாகாதா? தங்களுடைய ஆன்ற அறிவு தங்களுடன் முற்றுவதா?' என்று வினவிய போது, 'நூல் எழுதல் முடியலாம். அந்நூலுக்கு முகவுரைதான் எப்படி எழுதுவது என்பது தெரியவில்லை' என்று அப்பெரியார் சொன்னார்" என ஓரிடத்துக் (சைவ நற்சிந்தனைகள், முகவுரை) கூறியுள்ளார். "அறிவான் மிக்க பெரியார்" யார் என்பதும் வினவியது யார் என்பதும் தெளிவாக இல்லையென்றாலும் பண்டிதமணி கைலாசபதி அவர்களையும் தம்மையும் குறிப்பிடுகின்றாரா என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. குறிப்பிட்ட முன்னுரையில் பண்டிதமணி அப்பெரியார் கருத்தைத் தாமும் ஏற்றுக்கொள்வது போல நூல் எழுதியது ஏன்? வெளியிடுவது ஏன்? என்ற வினாக்களுக்குத் தன்னை வஞ்சியாமல் விடை கூறுவது இக்கலியில் எளிது அன்று என்கிறார். நூல் எழுதுவதில் பண்டிதமணிக்கும் தயக்கம் இருந்ததன்றோ! இனி, கைலாசபதி அவர்கள் தமது சிந்தனைகளைச் சிலர் பலரிடம் கூற முற்பட்டதற்கு தாமே காரணம் கூறியுள்ளார். சிலர் பலருக்கு அந்த யோசனைகளைச் சொல்கிற முறையாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த யோசனைகள், ஆராய்ச்சிகள் விருத்திப்பட சீர்படக் கூடிய முறையும் அமைந்தது (மணிவிழா மலர், ப. 1) என்பதே காரணமாகும். உப அதிபர் ஒதுங்கி வாழ்ந்தவராயினும் கலாசாலை வகுப்பிலே ஆசிரியனாகக் கடமை தவறாது தமது சுவதர்மத்தைச் செய்து வந்தார் என அறிகின்றோம்.

பண்டிதமணி மட்டுவிலில் 1899ஆம் ஆண்டு பிறந்தவர். அவர் குடும்பத்தில் ஒரே ஒரு பிள்ளை. இளமையில் ஊரில் உள்ள பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கற்றவர். உரையாசிரியர் வேற்பிள்ளை அவர்களின் பிள்ளைகளுடன் சேர்ந்து நெருங்கிப் பழகியவர். தாயார் இறந்தபின் பன்னிரண்டாவது வயதில் தனங்கிளப்பிற்குச் சென்று அங்கு வாழ்ந்தவர். படிப்பு வசதி இல்லாததால் பொழுதை வீணே போக்கிக் கொண்டிருந்தவர். தந்தையாருக்கு மைந்தன் கணபதிப்பிள்ளை புராணம் படித்துக் கோயிலிற் பயன் சொல்ல வேண்டும் என்பது ஆசை. வித்துவசிரோமணி பொன்னம்பல-பிள்ளையின் மாணவர் மூவரிடம் முறையே கணபதிப்பிள்ளை அவர்களைத் தந்தையார் ஒப்பித்ததுண்டு. ஆயினும், ஆண்டு இரண்டு மூன்று கழிந்த பின்னரும் தம்மிடம் படிப்புப் பலிக்கவில்லை என்று பண்டிதமணி எழுதியுள்ளார். ஆசிரியரிடம் கூடாத வார்த்தைகளால் ஏச்சும் வாங்கினாராம். அப்பொழுது பண்டிதமணிக்கு வயது 19 ஆகிறது. திருமணம் செய்து வைக்கும் எண்ணம் தந்தைக்கு இருந்தது. மணப்பெண்ணும் வீட்டிலே இருந்தார் (சிந்தனைக் களஞ்சியம், ப. 224 - 227). எனினும் எதிர்பாராத வகையில் வேற்பிள்ளை அவர்களின் மகன் நடராசா அவர்கள் கொண்ட முயற்சியால் பண்டிதமணி வண்ணார்பண்ணை நாவலர் காவிய பாடசாலையில் சேர்ந்து குமாரசுவாமிப் புலவர், வித்துவான் சுப்பையாபிள்ளை ஆகியோரிடம் கற்றார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதரானார். பின்னர் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய உடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுது ஆண்டு 1929. பண்டிதமணிக்கு வயது 30.

கைலாசபதி அவர்கள் அளவெட்டியில் 1902ஆம் ஆண்டு பிறந்தவர். தேவாரப் பண் பாடுவதிலே திறமை மிக்க வேதாரணியத்துச் சைவ குருமார்கள் வாழ்ந்த மடச் சூழலிலே கைலாசபதி அவர்கள் குழந்தைப் பருவத்தைக் கழித்து வந்தவர். பண்ணிசையால் பண்பட்டதனாற் போலும் கைலாசபதி தச நாடிகளையுஞ் சுத்தஞ் செய்து, நாட்டங்களைப் பண்படுத்துவது பண் என்று பிற்காலத்தில் கூறினார். தந்தையாருக்கு மைந்தன் கைலாசபதியை ஒரு தமிழ் உபாத்தியாயராக ஆக்கும் நோக்கம் இருந்தது. ஆயினும் கைலாசபதி பத்தாவது வயதில் வித்துவான் சிவானந்தையரிடம் ஆங்கிலம் கற்றார். ஊரிலே இருந்த பாடசாலைகளில் ஏழாம் வகுப்புவரை படித்துவிட்டு மல்லாகம் ஆங்கில பாடசாலையில் சேர்ந்து படித்தார். அங்கே வகுப்பின் ஒரு பிரிவில் இருந்தவர் எந்த உத்தரவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாமல் இரத்தினசபாபதி உபாத்தியாயர் என்பவர் ஆசிரியராக இருந்த பிரிவில் போய் இருந்து விட்டார். பாடசாலை அதிபரும் மற்றவர்களும் இந்த மாணவரின் தோற்றத்தையும் ஆர்வத்தையும் கண்டு அவர் விரும்பிய பிரிவில் இருக்க விட்டு விட்டனர். பாடசாலை ஓய்வு நாட்களில் இரத்தினசபாபதி உபாத்தியாயர் கைலாசபதிக்கு விசேடமாகவும் கணிதம் கற்பித்தார் (சிந்தனைக் களஞ்சியம், ப. 233). பிற்காலத்தில் இரத்தினசபாபதி உபாத்தியாயரே கைலாசபதி அவர்களின் ஆன்மீகக் குருவானார். கைலாசபதிக்கும் இரத்தினசபாபதி உபாத்தியாயருக்கும் ஏற்பட்ட தொடர்பை சைவாசிரிய கலாசாலை அதிபர் சுவாமிநாதன் அவர்கள் விட்ட குறை, தொட்ட குறை இருவரையும் ஒருங்கு சேர்த்து வைத்தன (கைலாசபதி பாராட்டு விழா மலர், ப 2, 1958) என்பர். கைலாசபதி 1920ஆம் ஆண்டில் இ.எஸ்.எல்.சி. பரீட்சையில் தேறினார். பின்னர் பாடசாலையிலோ கல்லூரியிலோ படிக்கவில்லை. இலண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கு 1921ஆம் ஆண்டு பிரத்தியேகமாகத் தோற்றி முதற்பிரிவில் சித்தியடைந்தார் (பண்டிதமணி நினைவு மலர், ப. 45).

பரமேசுவரக் கல்லூரியில் 1923ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்து இன்ரசயன்ஸ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டபோது அவ்வகுப்பில் கைலாசபதியும் சேர்ந்தார். பண்டிதமணியின் நண்பன் நடராசாவும் அவ்வகுப்பில் சேர்ந்தார். நடராசா, கைலாசபதி, கு. சிவப்பிரகாசம் இன்னும் சிலர் திருநெல்வேலி தெற்கில் இருந்த ஈரப்பலாத் தோட்ட வளவில் தங்கியிருந்தனர்.

அன்று பரமேசுவரக் கல்லூரி புகழ்பெற்ற கல்வி நிறுவனமாக விளங்கியது. சிறந்த கல்விமான்கள் பலர் அங்கே கற்பித்தனர். சைவப் பெரியார் எனப் புகழ்பெற்ற திரு. சு. சிவபாதசுந்தரமும் அங்கு கற்பித்தார். இவர்கள் தொடர்பு கைலாசபதிக்குக் கிடைத்தது. மல்லாகத்தில் படிக்கும்போதும் கைலாசபதிக்கு சிவபாதசுந்தரம் அவர்களின் தொடர்பு இருந்தது என அறிகின்றோம் (சிந்தனைக் களஞ்சியம், ப. 34).

கைலாசபதி அவர்கள் இன்ரசயன்ஸ் சித்தியடைந்த பின்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டே பி. எஸ்.சி. இலண்டன் தேர்வில் சித்தியடைந்தார். பின்னர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் உப அதிபரானார். அப்பொழுது ஆண்டு 1930. உப அதிபருக்கு வயது 28.

1921ஆம் ஆண்டு கைலாசபதி அவர்கள் மற்றிக்குலேசன் சித்தியடைந்ததை அடுத்து ஏதோ ஒரு நாள் வண்ணை சிவன்கோயிலடியில் சென்று கொண்டிருக்கும் போது யாரோ ஒருவர் பண்டிதமணிக்கு அவரைக் காட்டி இந்த முறை உவரும் மற்றிக்குலேசன் பாஸ் பண்ணியவர்களுள் ஒருவராம் என்று காட்டினாராம் (பண்டிதமணி நினைவு மலர், ப. 44). இதுவே முதன் முதலாகப் பண்டிதமணி கைலாசபதியைக் கண்டது. பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி காவிய பாடசாலையில் கற்கும் போது (1917 - 1927) நடராசாவைச் சந்திப்பதற்கு ஈரப்பலா வளவிற்கு வருவதும் அங்கு தங்குவதும் உண்டு. அப்பொழுதுதான் பண்டிதமணிக்கும் கைலாசபதிக்கும் தொடர்பு ஏற்பட்டது. கணபதிப்பிள்ளை நாவலர் காவிய பாடசாலையில் கற்கும் மாணவன் என்ற காரணத்தினாலோ அன்றி கைலாசபதி நாவலரிடம் தாம் கொண்டிருந்த ஆர்வத்தினாலோ பண்டிதமணியிடம் நாவலரைப் பற்றியும் மாணவர் பரம்பரை பற்றியும் கேட்பாராம். இரவு எல்லாரும் உறங்கியதற்குப் பின் பதினொரு மணி தொடக்கம் நான்கு மணிவரை படிப்பாராம். காலையில் சிவன் கோயிலுக்குச் சென்று மிக்க ஆராமையுடன் கும்பிடுவாராம். பண்டிதமணி கைலாசபதியை ஈரப்பலா வளவில் முதன்முதற் கண்டபோது "பூணூல் தரியாத ஒரு பிராமணன்" என்று எண்ணினாராம். ஈரப்பலாவளவில் ஏற்பட்ட தொடர்பு அங்கு ஈராண்டுகள் மட்டும் நீடித்தது. பின்னர் இருவரும் ஆங்காங்கு பிரிந்து சென்றனர் (சிந்தனைக் களஞ்சியம், ப. 235).

மீண்டும் 1930ஆம் ஆண்டிலிருந்து சைவாசிரிய கலாசாலையில் கைலாசபதி அவர்களும் பண்டிதமணியும் முறையே உபஅதிபராகவும் தமிழ் விரிவுரையாளராகவும் பழைய நண்பர்களாகவும் தொடர்பு பெற்றனர். இத்தொடர்பு பண்டிதமணி வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உப அதிபர், பண்டிதமணி ஆகிய இருவரும் கலாசாலை வளவினுள் ஒருங்கு வாழ்ந்தனர். இது பற்றிக் கூறும்போது பிரிந்தவர் கூடினாற் பேச வேண்டுமா? என்று பேரானந்தப் பட்டு பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார் (சிந்தனைக் களஞ்சியம், ப. 235).

பண்டிதமணியும் கைலாசபதி அவர்களும் சைவாசிரிய கலாசாலையில் மேலும் நெருங்கிப் பழகினர். நட்பு வளர்ந்தது. சில பல நூல்களை ஆராய்ந்தனர். கைலாசபதி தம் கருத்துக்களைக் கூறலானார். பண்டிதமணி கேட்கலானார். ஆட்களைப் பற்றியும் ஊர்ச் சங்கதிகள் பற்றியும் ஒவ்வொரு காலத்தில் அவர்கள் பேசியதுண்டு. உப அதிபர் தொடாத துறைகளே இல்லை என்பர் பண்டிதமணி (சிந்தனைக் களஞ்சியம், ப. 238). உப அதிபர் தீராப் பெரு வேட்கையுடைய வாசிப்பாளர். உப அதிபர் கலாசாலையில் பதவியேற்றதை அடுத்து ஒரு விடுமுறையின் போது பண்டிதமணியும் உபஅதிபரும் கீரிமலை மடம் ஒன்றில் தங்கினர். பண்டிதமணி உப அதிபருக்குத் தொல்காப்பியம் பாடம் சொல்லுவதாகவும் உப அதிபர் பண்டிதமணிக்கு ஆங்கிலம் கற்பிப்பதாகவும் ஒழுங்கு. தொல்காப்பியம் பாடம் சொல்ல முற்பட்ட பண்டிதமணி உபஅதிபரிடமே தொல்காப்பியம் பாடம் கேட்கும் நிலை ஏற்பட்டதை பண்டிதமணி மூலம் அறிவோம். பண்டிதமணி ஆங்கிலம் கற்க முடியாது கைவிட்டுவிட்டார். ஆயினும், காலப்போக்கில் ஆங்கிலம் (இலக்கியம்) பற்றி அறிந்து கொண்டார். கைலாசபதி அவர்கள் இலக்கியமும் அறிந்தவர் என்பதை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். உபஅதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய கலாசாலையில் ஆரம்ப காலத்தில் இலக்கியம் (பற்றிக்) கற்பித்ததும் உண்டு.

1933ஆம் ஆண்டு உபஅதிபரின் போக்கில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. அவர் சமயப் போக்கினைத் தழுவினார். இலக்கிய இரசனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பண்டிதமணிக்கு சமயப் போக்கில் அதிகம் நாட்டம் எழவில்லை. பண்டிதமணி 1933ஆம் ஆண்டு தொடக்கம் 1940ஆம் ஆண்டு வரை உபஅதிபருடன் நெருக்கமான தொடர்பின்றி இருந்தார். உப அதிபர் 1940ஆம் ஆண்டு தொடக்கம் நூல்களை வாசிப்பதை நிறுத்திச் சிந்தனையுலகில் அமிழ்ந்திருந்தார் (சிந்தனைக் களஞ்சியம், ப. 237).

பண்டிதமணி 1942ஆம் ஆண்டு தொடக்கம் சமயத்தில் பெரும் நாட்டம் கொண்டார். சமய அறிவு பெறுவதில் காலங் கழித்தார். பண்டிதமணியின் இந்த அகத்தூண்டுதலுக்குரிய மூலம் கைலாசபதி அவர்கள்தான் என்றால் மிகையாகாது. கைலாசபதி அவர்கள் சமயம் தான் இலக்கியம், பாஷை யாவற்றுக்கும் மூல உயிர்ப்புப் பொருள் எனக் கருதினார். பண்டிதமணி சமயம் பற்றி உபஅதிபரிடம் கேட்டார். வைதிக சைவ சித்தாந்தியாக விளங்கினார். உபஅதிபர் தமக்கு நடாத்திய பாடம் ஆயிரத்துக்குக் குறையா என்று பண்டிதமணி கூறியுள்ளார். அவற்றுள் தாம் சிலவற்றை விளங்கிக் கொண்டதாகவும், "பெரும்பாலும் அவர் சிந்தனைகளை எட்ட முடியவில்லை" (சிந்தனைக் களஞ்சியம், ப. 238) என்றும் கூறியுள்ளார். பண்டிதமணி விளங்கியவற்றையும் விளங்காதவற்றையும் பல கொப்பிகளில் எழுதிக் கொண்டார்.

உப அதிபர் அவர்கள் பல்துறைப்பட்ட ஆழ்ந்த அறிவை எப்படிப் பெற்றார் எனக் கூறமுடியவில்லை. அவர் தீராப் பெரு வேட்கையுடைய வாசிப்பாளர் என்றோம். தாமே கற்றுத் தேடிக் கொண்டார் எனலாம். சைவக் குருமார்கள், செந்திநாதையர், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், இரத்தினசபாபதி உபாத்தியாயர், பண்டிதமணி ஆகியோர் தொடர்பு இருந்தது. ஆயினும் இதன் அடிப்படையில் உப அதிபர் அவர்களின் ஞான வளர்ச்சியை விளக்க முடியுமா என்பது சந்தேகம். உப அதிபரின் புத்தி, அகங்காரம், மனம் மூன்றும் சுத்தப்பட்டு விருத்திப்பட்டன என்றும் விருத்திப்பட்டமை அவரது ஞானத்திற்குக் காரணம் என்றும் பண்டிதமணி கருதுகின்றார் போலும் (சிந்தனைக் களஞ்சியம், ப. 238). நம் முன்னோர் "ஞான திருஷ்டி" எனப் பேசினர். இன்றும் சிலர் பேசுகின்றனர். இன்றும் அது அனைவருக்கும் கைகூடுவதன்று. சிலருக்கு அவரவர் மனப் பக்குவத்திற்கு ஏற்ப அவ்வப்போது சில கருத்துக்கள் பளிச்சென்று தோன்றுவது உண்டு. அவ்வாறு கருத்துக்கள் தோன்றுவது அவர்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது போலும். அவை நினைத்தபோது உடன் தோன்றும் கருத்துக்கள் அன்று. பண்டிதமணி கைலாசபதி அவர்கள் பற்றிக் கூறியவற்றைச் சிந்திக்குமிடத்து கைலாசபதி அவர்களுக்கும் ஒருவகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான திருஷ்டி இருந்திருக்கும் என எண்ணத் தோன்றுகிறது. சில சமயம் கைலாசபதி அவர்கள் "இவ்வளவும் தெரிகிறது" என்று சொல்லுவார். பின்பு சில தினங்களின் பின் "அப்பாலும் தெரிகின்றது" என்று சொல்லுவாராம் (சிந்தனைக் களஞ்சியம், ப. 238). கைலாசபதி, பண்டிதமணி ஆகிய இருவரது சிந்தனைப் போக்கும் வேறுபட்டது. பண்டிதமணியின் சிந்தனை அறிஞர் என்ற நிலையில் எழுவது. ஆதலால் தான் பண்டிதமணியால் கைலாசபதி அவர்களை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியவில்லைப் போலும். இதுபற்றி மேலும் கூறுவதற்கு கைலாசபதி அவர்கள் பற்றி எவ்வளவோ செய்திகள் வேண்டும். செய்திகள் கிடைக்குமா என்பது ஐயம். நமக்கு அவருடன் நேரடிப் பழக்கம் இல்லை.

கைலாசபதி அவர்கள் தமக்குக் கூறியவற்றில் விளங்கியவற்றைப் பண்டிதமணி தமது சிந்தனையில் கலந்து தம் படைப்புகளில் வெளியிட்டிருப்பார் எனக் கொள்வதில் தவறில்லை. பணடிதமணி சமயம் பற்றித் தான் கூடுதலான அரிய விஷயங்களை உப அதிபரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும் என எண்ணுகின்றோம். பண்டிதமணியின் கருத்தடிப்படையில் போலும் ஏனையோர் பலர் கைலாசபதி அவர்களின் சைவசித்தாந்தப் புலமையைப் பாராட்டியுள்ளனர். சமயக் கட்டுரைகள், அத்வைத சிந்தனை எனும் நூற்களில் உபஅதிபர் கருத்து என மேற்கோள் எதுவும் இல்லாத போதிலும் அவரது கருத்துக்கள் பல அவற்றில் உண்டு என நம்பலாம். அவற்றை இன்று இனங்காண்பது எளிதன்று. உப அதிபர் கூறியவற்றுள் சிலவற்றைத் தமது ஏனைய நூல்களில் உள்ள கட்டுரைகளில் ஆங்காங்கு இயற் பெயருடனோ பிற சுட்டுக்களுடனோ மேற்கோள்களாகவும் தந்துள்ளார்.

பண்டிதமணி தாம் விளங்கிக் கொள்ளாதவற்றைத் தமது குறிப்பு-களுடன் வெளிவரச் செய்திருப்பாராயின் அறிஞர் மற்றும் ஆய்வாளர் கூட்டம் குதூகலித்துக் கொண்டிருக்கும். ஆயின், பண்டிதமணிக்கு ஒரு தயக்கம் இருந்தது போலும். அத்தயக்கம் கைலாசபதி அவர்களின் கருத்தை எடுத்துச் சொல்வதற்கு ஆளும் கேட்போரும் வேண்டும். அன்றிக் காலமும் இடமும் முக்கியமானவை. கேட்போரின்றிச் சொல்வதற்குத் தகுதியின்றிச் சொல்லத் தொடங்குவது பாலைக் கமரில் உகுப்பதாகும் (சிந்தனைக் களஞ்சியம், ப. 239) எனப் பண்டிதமணி கூறியதன் மூலம் தெரிகிறது. வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளைக்குச் சமையல் செய்து கொண்டிருந்த ஒருவர் பிள்ளை உரை விரிக்கும் போது தாம் கேட்டு எழுதிய குறிப்பையும் பின்னர் மாணவரிடம் கேட்டறிந்து எழுதியதையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணம் பதிப்பித்தபோது பயன்படுத்தியது (சிந்தனைக் களஞ்சியம், ப. 51 - 52). இது இவ்வாறு எனின் பண்டிதமணி கைலாசபதி அவர்களிடம் கேட்டு தமிழ், சமயம் பற்றி எழுதிய குறிப்புக்கள் மதிப்புப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அந்தக் குறிப்புக்கள் இன்றும் கையெழுத்து வடிவிலே வாழ்கின்றன எனப் பண்டிதமணியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வலர் மூலம் அறிகின்றோம். அவற்றை அச்சிட்டு வெளியிட வேண்டும் என ஆர்வம் கொண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக இருந்த காலஞ்சென்ற மயில்வாகனம் எடுத்த முயற்சி பயன்தரவில்லை எனவும் அறிகின்றோம். அவை காலப் போக்கில் அழிந்துபோய் விடுமோ என்ற அச்சமும் கவலையும் நம்பால் எழுகின்றன. அவற்றை ஏதோ காரணத்திற்காக வெளியிடாதுவிடினும் போற்றிப் பாதுகாக்கும் பொறுப்பைப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனம் ஏற்பது தவறா என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. அவற்றை ஒரு காலத்தில் யாராவது விளங்கிக் கொள்ளக்கூடும். விளங்கிச் சாதனைக்குக் கொள்ளக்கூடும். வருங்காலத்தில் ஏனையோர் அவற்றைப் படித்துச் சிந்திப்பதும் அவற்றைப் புரிந்து கொள்ள முயல்வதும் தவறான காரியங்கள் ஆகா. உப அதிபர் அவர்களே கூறியது போல "சில விதைகளை ஒரு காலத்தில் முளை கொள்ளலாம்" என்று எறிந்து விடுவது உண்டு (சிந்தனைக் களஞ்சியம், ப. 238) அல்லவா? உப அதிபர் அவர்கள் யோசனைகள் ஆராய்ச்சிகள் விருத்திப்பட வேண்டும், சீர்ப்பட வேண்டும் என விரும்பியவர் அல்லவா? இவை பற்றி சைவாசிரிய கலாசாலையின் பழைய மாணவர்கள் சிந்திப்பார்கள் ஆக.

ஈழத்திலே நாவலர் பெருமானின் நிலையை நன்கு உணர்ந்த இருவரில் ஒருவர் உப அதிபர் என்பர் பண்டிதமணி. நாவலரிடம் பண்டிதமணிக்குப் பெரும் ஈடுபாடு. பண்டிதமணி நாவலர் தர்மத்தில் வளர்ந்தவர்; நாவலர் வழி போற்றியவர். நாவலரைப் பற்றி எழுதியவர்; நாவலரிடம் குறை கண்டவர்களைக் கண்டனஞ் செய்தவர்; காவிய பாடசாலை நடத்தியவர்; சங்கங்கள் பலவற்றில் விறுவிறுப்பாகச் செயலாற்றியவர்; நாவலரைப் போன்று பிரமசாரியாக வாழ்ந்தவர். ஆயினும் நாவலர், பொன்னம்பலபிள்ளை போன்றோர் போற்றி நடாத்திய புராண படனத்தை பண்டிதமணி தாமும் போற்றி நடாத்துவதற்கு முன்வரவில்லை. புராண படனத்திற்குத் தனி ஆற்றல் வேண்டியதாகலாம். பண்டிதமணி புராண படனத்தில் மிளிர்ந்த யாழ்ப்பாணத்துக் கந்தபுராண கலாசாரத்தை விளக்கியுள்ளார். அவர் நாவலர் போன்று சமய பிரசாரகராகவும் விரும்பவில்லை. நாவலரைப் போல் நமக்கு ஆள் வேண்டும் என்று இல்லறம் நல்லறம் எனக் கொண்ட உப அதிபர் விரும்பினாராயினும் பண்டிதமணி தாம் சமயப் பிரசாரகராக விரும்பவில்லை. நாவலரைப் போல் நமக்காளில்லை. இக்காலப் போலி நடிப்பை எடுத்துக்-காட்ட நமக்காளில்லை என உப அதிபர் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார். உபஅதிபர் தொடக்க காலத்தில் கலா நிலையம் போன்ற இடங்களில் சொற்பொழிவாற்றினாராயினும் பின்னர் எதிலும் ஈடுபடாது ஒதுங்கிக் கொண்டார். பண்டிதமணி ஒரு சமய பிரசாரகராக வேண்டும் என்பது பற்றி உபஅதிபர் முன்னிலையில் பண்டிதமணியோடு தாம் நடாத்திய சம்பாஷணை பற்றி வைத்திலிங்கம் அவர்கள் தமது கட்டுரையில் (பண்டிதமணி நினைவு மலர், ப. 59) கூறியுள்ளார். அது சுவையான சிறு செய்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி உப அதிபர் அவர்கள் இறந்தபோது,

"ஆண்டறுபத் தொன்று நிகழ் கார்த்திகைய பரம்
பூண்ட சதுர்த்தி புனர்பூசம் - மாண்டலத்துக்
கைலாச மாமுனிவன் காயபந் தந்தவிர்ந்து
கைலாச மேற்செல் கதி."

என்று பாடினார். கைலாசபதி அவர்கள் இறந்ததற்குப் பின்னரும் அவர்களின் நினைவுடனே வாழ்ந்து வந்தார். பண்டிதமணி இலக்கியக் கலாநிதிப் பட்டம் பெற்றுப் பெரும் மேதகைமை அடைந்த போது கைலாசபதி அவர்களை நினைத்துக் கொண்டார். அப்பொழுது உபஅதிபர் இருந்தால் நான் இதை (கலாநிதிப் பட்டத்தை) ஏற்பதைப் பற்றிச் சிந்திப்பேனோ என்று தம் பழைய மாணவர் ஒருவரிடம் கூறினாராம் (பண்டிதமணி நினைவுமலர், பக். 47). பண்டிதமணிக்கு ஒருவகைத் தயக்கம் இருந்தது போலும். இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டதையொட்டி நடைபெற்ற விழாவின் போதும் பண்டிதமணி தாம் கூறிய பதிலுரையில் கைலாசபதி அவர்களை நினைந்து அவர்களுக்கு ஒப்பற்ற தகுதிப் பாராட்டை வழங்கினார் (பாராட்டு விழா மலர், 1978, பக். 65). பண்டிதமணி உபஅதிபர் கருத்துக்களைப் பிறருடன் பேசி மகிழ்வதுண்டு. யாராவது உப அதிபர் இப்படிக் கூறுவதுண்டு என்று யாதேனும் நல்ல கருத்தைச் சொன்னால், அதனைத் திரும்பச் சொல்லும்படி வேண்டிச் சொல்லுவதைக் கேட்டு மகிழ்வாராம். "ஆவி உலகில் அவரைச் சந்திக்க முடியாதோ" என்றும் அங்கலாய்ப்பாராம் (பண்டிதமணி நினைவு மலர், பக். 47).

கைலாசபதி அவர்களுக்கும் பண்டிதமணி அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்ட தொடக்க காலத்தில் கைலாசபதி எப்பொழுதும் வாசித்துக் கொண்டிருந்த காரணத்தினாலோ என்னவோ பண்டிதமணி கைலாசபதியை ஒரு புத்தகப் பூச்சி என்று எண்ணினார் (சிந்தனைக் களஞ்சியம், பக். 235). கைலாசபதியிடம் சமயப் போக்கு ஏற்பட்டபோது அவரைப் பண்டிதமணி ஒரு ஏலாவாளி என்று எண்ணியதுண்டு (பாராட்டு விழா மலர், பக். 65). சிந்தனையில் அமிழ்ந்திருந்து திடீரென்று ஏதாவது கூறியபோது - ஒருநாள் வழியில் சென்று கொண்டிருக்கும் போது திடீரென டகரம் தெரிகிறது என்றாராம் - பண்டிதமணி கைலாசபதி அவர்கள் சித்த சுவாதீனம் உள்ளவரோ எனத் தமக்குள் ஐயுற்றது உண்டாம் (பாராட்டு விழா மலர், பக். 65, நினைவு மலர், பக். 45, 47). காலப் போக்கில் கைலாசபதி அவர்கள் நூல்களை வாசித்தறிவதில் ஓர் அன்னம் எனப் பண்டிதமணி கண்டு கொண்டார் (சிந்தனைக் களஞ்சியம், பக். 235). பின்னர் கைலாசபதி அவர்களைச் சிந்தனைச் செல்வராக, தத்துவ விசாரத்தில் மூழ்கியிருப்பவராகக் கண்டார். ஈற்றிலே அவரைத் தெய்வப் பிறவியாக, மனிதத் தெய்வமாக (அத்வைத சிந்தனை, பக். 78), மகாத்மாவாக (அத்வைத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை ப. 80), மகானாக (அத்வைத சிந்தனை, பக். 81), நெற்றிக் கண்ணராக (அத்வைத சிந்தனை, ப. 84), புண்ணிய ஆத்மாவாகக் கண்டார்.

யாழ்ப்பாணத்திலே சிந்தனையாளர், ஞான திருஷ்டி பெற்றோர் சிலர் அவ்வப்போது பிறந்து தாம் வந்த கருமம் முடிந்து போய் விட்டனர். அவர்களில் சிலர் பலரை மக்கள் அறிந்தோ அறியாமலோ வாழ்ந்திருக்கின்றனர். பண்டிதமணியுடன் நன்கு பழகி அவரை அறிந்து உணர்ந்தனர் பலர். அவர்கள் தத்தம் நிலைக்கேற்ப உணர்ந்தனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக இருந்த ஆ. வி. மயில்வாகனம் பண்டிதமணியைக் கிரேக்க தத்துவஞானியாகிய சோக்கிரதீசுடன் ஒரு வகையில் ஒப்பிட்டுள்ளார். பண்டிதமணியை "உலகத் தத்துவ மேதாவி ஒருவர்" எனக் குறிப்பிட்டுள்ளார் (நினைவுமலர், ப. 5). கைலாசபதி அவர்களுடன் நன்கு பழகி அவரை நன்கு அறிந்து உணர்ந்தவர் பலர் இலர். அவ்வாறு ஒருவரே நாமறிய வாழ்ந்தார். அந்த ஒருவரும் கைலாசபதியை முழுமையாக அறியாது, உணராது வாழ்ந்தவர். அவர்தான் பண்டிதமணி அவர்கள். பௌதிகப் பேராசிரியருக்கு கைலாசபதி அவர்களைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்திலது. கிடைத்திருக்குமாயின் கைலாசபதி அவர்கள் பற்றி என்ன கூறியிருப்பாரோ! மெய்ஞ்ஞானி பற்றி விஞ்ஞானி கூறும் கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது ஆகும்.

தருமம் என்று ஒரு பொருள் உளது என்ற அடிப்படையில் சமயத்தை அணுகிய பண்டிதமணி பற்றி ஆராய்வோர் உபஅதிபர் கைலாசபதி அவர்களை மறத்தல் அரிது. இதே போன்று கைலாசபதி அவர்களை அறிய விரும்புவோர் பண்டிதமணியை விட்டு விடுதல் அரிது. இருவர் பற்றிய சிந்தனை தழைப்பதாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# பண்டிதமணி போற்றிய "சிந்தனைகள்": அவை வெளிவந்த வரலாறு

"ஆறுமுக நாவலருக்குப் பிறகு ஒரு கைலாசபதியை நாம் பெற்றெடுத்தோம். 'வாராது போல் வந்த மாமணி'யைத் தவறவிட்டு விடாமல் அவரது எண்ணங்கள், கருத்துக்களை நாடெங்கும் பரவச் செய்ய வேண்டும் என்பது பண்டிதமணியின் அவா. அந்த அவாவின் மேலெழுந்தவையே அவரது எழுத்தும் பேச்சும்" என்று கனக செந்திநாதன் எழுதினார்.[1] கைலாசபதி சிந்தனைகளை வெளியிடுவதற்கு ஒரு சபை இல்லாமற் போனது உண்மையிலே கவலைக்குரியது. இங்கு கைலாசபதி, பண்டிதமணி, பண்டிதமணி போற்றிய கைலாசபதி சிந்தனைகள், அச்சிந்தனைகள் வெளியிடப்பெற்றமை எனத்தொடர்புபடுத்திச் சிந்திப்பது பயனுள்ளதாகும்.

அளவெட்டி பொ. கைலாசபதியவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் நீண்ட காலம் (1930 - 1958) உப அதிபராகப் பணியாற்றியவர். கைலாசபதியவர்களோடு நெருங்கிப் பழகியவர் மிகச் சிலரே. அவர்களுள் அறிஞர் சிலர் கைலாசபதியவர்களைப் பலவாறு பாராட்டியுள்ளனர். சைவாசிரிய கலாசாலையில் 1929இல் இருந்து 1951 வரை அதிபராக இருந்த மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்கள் கைலாசபதி அவர்கள் பற்றிப் பேசும் போதெல்லாம் அவரை "நல்ல ஒரு விவேகி" எனக் குறிப்பிடுவது உண்டு. இவ்வாறு கூறுவதை யான் இளமையிலேயே கேட்டுள்ளேன். பின்னர், கைலாசபதியவர்கள் தம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றபோது வெளியிடப்பெற்ற சேவை நலம் பாராட்டு மலரில், உப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரை "வறுத்த வித்து" எனக் குறிப்பிட்டுள்ளார்.[2] சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்து ஈழத்தில் பெரும் புகழ் ஈட்டிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் கைலாசபதியவர்களைத் தெய்வப்பிறவி, மனிதத் தெய்வம், மகாத்மா, மகான், நெற்றிக் கண்ணர் எனப் போற்றியுள்ளார்.[3] "ஆத்மீகச் செல்வர்களான உபஅதிபர் திரு. பொ. கை. அவர்களின் சந்நிதி என் சிந்தனைக்கு ஊற்றாயிருந்தது" எனவும், தமக்கு "அவர் நடத்திய பாடம் ஆயிரத்துக்குக் குறையா" எனவும் எழுதியுள்ளார்.[4] இவ்வாறே ஈரப்பலாத் தோட்டத்தில் இருந்தவரும் சைவாசிரிய கலாசாலையுடன் தொடர்புடையவருமான உளவியல் அறிஞர் கலாநிதி கு. சிவப்பிரகாசம் அவர்கள் போன்ற ஏனைய அறிஞரும், சைவாசிரிய கலாசாலையில் படித்து வெளியேறிய திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் போன்ற ஆசிரியர்களும் கைலாசபதியவர்களைச் சிந்தனையாளரெனக் கைலாசபதி சேவைநலம் பாராட்டு மலரிலும் பத்திரிகைகளிலும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். பல்கலைக்கழக நிலையில் இன்று பண்டிதமணியை ஆய்வோரும் கைலாசபதியவர்களைப் பற்றிக் கூறத் தவறியதில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்கள் பண்டிதமணியின் "மெய்யியற் சிந்தனை வலிமையும் வளமும் திரு. பொ. கைலாசபதியுடனிருந்த தொடர்பு காரணமாகவே வந்தது" எனவும், "உப அதிபர் பொ. கைலாசபதியுடனான தொடர்பு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வாழ்க்கையில் ஒரு திருப்புமையமாக அமைந்த-தெனலாம்" எனவும் எழுதியுள்ளார்.[5] பேராதனைப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் "பண்டிதமணியவர்களின் ஆத்ம சிந்தனை, செந்திநாதையர் வழிச்சென்று, "உபஅதிபர்" வழிச் சென்று, ஆத்ம விசாரத்தினை அடைந்தபோது, பண்டிதமணியவர்கள் ஒடுக்கத்தையே நாடி நின்றார்கள்" எனக் கூறியுள்ளார்.[6]

இவர்கள் அனைவரும் தம்பாட்டில் ஒதுங்கி வாழ்ந்து வந்த கைலாசபதியவர்களை ஏன் இவ்வாறெல்லாம் சிந்தனையாளரெனப் போற்றினர்? சைவாசிரிய கலாசாலை அதிபர் தமது மாணாக்கனாக இருந்த கைலாசபதியவர்களைப் போற்றியதன் அர்த்தத்தையும், பண்டிதமணி தம்மிலும் இளையரான கைலாசபதியவர்களைப் போற்றியதன் அர்த்தத்-தையும் புரிந்துகொள்ள விரும்பினால் - ஏனையோர் புகழ்ந்தமையை எடைபோட்டுப் பார்க்க விரும்பினால் - கைலாசபதியவர்களின் சிந்தனை-களைப் பற்றிச் சிந்தித்தல் அவசியமாகும். பண்டிதமணியை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கும் கைலாசபதியவர்களின் சிந்தனைகள் பற்றி அறிதல் இன்றியமையாதது. ஆயின், கைலாசபதியவர்களின் சிந்தனைகள் கிடைப்பது அரிதாகவே இருந்து வந்துள்ளது. பண்டிதமணியின் எழுத்துக்-களில் கூட அவற்றை இனங்காண்பது எளிதன்று. ஆங்காங்கே சிலவற்றை ஊகித்துக் கண்டு கொள்ளக் கூடும். எடுத்துக்காட்டாக செந்தமிழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களஞ்சியத்தில் (பக். 18, 46) ஒரு மகான் கூற்றாகச் சிலவற்றைப் பண்டிதமணி கூறியுள்ளார். இதே போன்று, செந்தமிழ்க் களஞ்சியத்தில் 65ஆம் பக்கத்தில் "சிந்தனையாளராகிய பெரியார் ஒருவர்" கூற்றென வருவதைக் காண்க. மேலும், ஆறுமுகநாவலர் என்னும் நூலின் முன்னுரையில் "மகானொருவர் கூறியது" என வரும் கருத்தையும் காண்க. மேலும், அந்நூலில், 91 - 93ஆம் பக்கங்களிலும், 95 - 96ஆம் பக்கங்களிலும் "மகான்", "பெரியார்" கருத்து என வருவனவற்றையும் காண்க. நாவலர் என்னும் நூலில், 27ஆம் பக்கத்தில், "சாதகரும் பெருஞ் சிந்தனையாளருமான ஒரு பெரியாரின் கூற்று" என வருவதையும் காண்க. இவ்வாறு இன்னும் இரண்டொன்றைக் காட்டலாம்.

ஆயின், இவையெல்லாம் பண்டிதமணி குறிப்பிட்ட பாடம் ஆயிரத்தில் ஒருசிறு துளியேயாகும். பண்டிதமணி ஆரம்ப காலத்தில் கைலாசபதி-யவர்களுடன் உடனுறைந்தும், பின்னர் அவ்வப்போது அவரிடம் அடிக்கடி சென்றும் தமது நேரத்தைப் போக்கிக் கைலாசபதியவர்களின் சிந்தனை-களைப் பொன்னேபோற் போற்றிக் கொப்பிகளில் (32?) எழுதிக்-கொண்டதையும், அவர் எழுதிக் கொண்டவற்றை அறிஞர் சிலர் படித்துக் குறிப்புகள் எழுதிக் கொண்டதையும் பற்றி நாம் சிந்தித்தல் தகும். கைலாசபதியவர்களின் சிந்தனைகளில் தமக்கு விளங்காதவற்றையும் ஒதுக்கிவிடாமல் பண்டிதமணி எழுதிக் கொண்டாராம். அறிஞர் இவ்வாறு செய்தமைக்குத் தக்க காரணம் இல்லாமல் இருந்திருக்க முடியாது.

பண்டிதமணி இறைவனடி எய்தியதற்குப் பின்னர், அவரது நூல்களை ஆழ்ந்து படிக்கலானேன். அப்பொழுது கைலாசபதியவர்கள் பற்றிய எண்ணங்கள் தோன்றின. கைலாசபதியவர்கள் பற்றி ஓரளவாவது அறியாமல் பண்டிதமணியை முழுமையாக விளங்கிக் கொள்வது அரிதாகும் என உணர்ந்தேன். பண்டிதமணி போற்றிய கைலாசபதி பற்றி எழுதியவர் மிகக் குறைவு. கைலாசபதியவர்களை விளங்கிக் கொள்வதற்கு யாரும் வழி வகுக்கவில்லையே என்ற கவலை தோன்றியது. கைலாசபதியவர்களுடன் நேரடித் தொடர்பு இல்லாதவர்கள் அவரது சிந்தனைகள் மூலமன்றி வேறு எவ்வகையாலும் அவர் பற்றித் தெளிவான விளக்கம் பெறுதல் அரிதாகும். பண்டிதமணிக்கே விளங்காத (கைலாசபதியவர்களின்) சிந்தனைகள் நமக்கு விளங்குமா எனச் சிலர் கூறிக்கொண்டிருந்ததையும் அறிந்தேன். சிந்தனைகளை வெளியிடுவதற்குப் பண்டிதமணி பெரிதும் விரும்பியபோதும், சகாக்களிடையே கருத்து வேறுபாடு இருந்ததால், அவ்விருப்பம் நிறைவேற-வில்லை எனவும் ஒரு காலகட்டத்தில் ஊகிக்க முடிந்தது.

பண்டிதமணி - கைலாசபதி ஆகியோர் பற்றி எனது உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை வெளியிடத் துணிந்தேன். "பண்டிதமணியின் சிந்தனைகள் பல நூலாக வெளிவந்துள. ஆயின், கைலாசபதியின் சிந்தனைகள் நமக்குக் கிடைத்தில" என எழுதலானேன்.[7] "இன்றைய நிலையில் கைலாசபதியவர்களின் சிந்தனைகளையும் அவற்றின் அடிப்-படையில் பண்டிதமணியிடம் தோன்றிய கருத்துக்களையும் ஒப்பிட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபடுத்தியும் விளக்கக்கூடிய நிலையில் யாரும் இல்லை" என்றும் ஏக்கமுற்று எழுதினேன்.[8]

இவ்வாறு யான் எழுதியதற்குப் பதில் கூறுவது போல், க. உமா மகேஸ்வரன் அவர்கள் வார முரசொலியில் "ஒருவர் இருக்கிறார்" என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதினார்: "கைலாசபதியவர்களின் சிந்தனைகளையும் அவற்றின் அடிப்படையில் பண்டிதமணியிடம் தோன்றிய கருத்துக்களையும் ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் விளக்கக்கூடிய நிலையில் ஒருவர் இருக்கிறார். அவர் அளவெட்டி திரு. ச. பரநிருபசிங்கம் என்று எண்ணத் தோன்றுகிறது நமக்கு."[9] முரசொலியை வாசித்தபோது தான், பரநிருபசிங்கம் அவர்கள் பற்றி முதன்முதலாக அறிந்து கொண்டேன். அவர் பெயர் எனது உள்ளத்தில் பதிந்தது.

கைலாசபதியவர்களின் சிந்தனைகளைப் பண்டிதமணி எழுதிவைத்த கொப்பிகளைத் தேடிப் பெறுதல் வேண்டும் என்று எண்ணினேன். தனிப்பட்ட முறையிற் கேட்டுத்திரிய விரும்பவில்லை. புகழ், போட்டி, கட்சி மனப்பான்மை, பத்திரிகை மூலம் விளம்பரம் பெறும் ஆசை, பொறாமை என்பன நிறைந்த சமுதாயத்திலே தனியொருவர் முயற்சிக்கு இடையூறுகள் தோன்றலாம் என அஞ்சினேன். எனவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே நிறுவன ரீதியாக அந்தக் கொப்பிகளைத் தேடிப் பாதுகாப்பது நல்லது என எண்ணினேன். இதுபற்றி "ஞானி எனக் கருதப்பட்டவரின் சிந்தனைகளைப் பாதுகாத்தல்" என்னும் தலைப்பில் ஒரு வேண்டுகோள் நமது பல்கலைக்கழகக் கலைப்பீடத்திற்கு அனுப்பினேன். இந்த வேண்டுகோள் 30.05.1991 அன்று நடைபெற்ற கலைப்பீடக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பற்றிப் பல்கலைக்கழக நூல் வெளியீட்டுக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

கைலாசபதியவர்களின் சிந்தனைகளை அழிந்துபோக விடாது எப்படியும் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வத்தால், "பண்டிதமணியும் உப அதிபர் கைலாசபதியும்" என்னும் தலைப்பில் கட்டுரையொன்று எழுதினேன். கைலாசபதியவர்களின் சிந்தனைகள் பாதுகாக்கப்படல் வேண்டும் என்பதன் அர்த்தத்தைப் பலர் அறிதல் வேண்டும் என விரும்பினேன். எனது கட்டுரை தினகரனில் 16.03.1992 அன்று வெளிவந்தது.

பின்னர், பண்டிதமணியுடனும் கைலாசபதியவர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த திரு. ஆ. சபாரத்தினம் அவர்கள் தொடர்பு எதிர்பாராத வகையில் எனக்குக் கிடைத்தது. அவர் மூலம் பரநிருபசிங்கம் அவர்களின் உதவியைப் பெற நாடினேன். சபாரத்தினம் அவர்கள் இதுபற்றிப் பரநிருபசிங்கம் அவர்களிடம் பேசினார். பரநிருபசிங்கம் தயங்கினாராம். பரநிருபசிங்கம், க. சி. குலரத்தினம், ஆ. சபாரத்தினம் ஆகியோரைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்திற்கு வரவழைத்து இது பற்றிப் பேசினோம். பரநிருபசிங்கம் அவர்கள் முன்னைய நிலைப்பாட்டிலே, தயக்கத்திலே நின்றார். "வெளியிடுவதாயின் எப்பொழுதோ வெளியிட்டிருப்போம்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உப அதிபர் அவர்களின் சிந்தனைகள் தனிப்பட்ட முறையில் சாதகர்களுக்குச் சொல்லப்பட்டவை, சாதனையில் நாட்டமற்ற, நம்பிக்கையற்ற ஆய்வாளருக்கல்ல" என்றார். கைலாசபதியவர்களின் சிந்தனைகளைப் பண்டிதமணி வெளியிட விரும்பியபோது, தாம் அவருக்கு எழுதிய கடிதங்களின் பிரதிகளையும் எமக்குப் படித்துக் காட்டினார். சிந்தனைகளை அழிந்துபோக விடக்கூடாது என நாம் பிடிவாதமாக நின்றோம். அவரோ அசையவில்லை. கைலாசபதியவர்கள் பற்றிப் பண்டிதமணிக்குப் பிடித்தமான கட்டுரையொன்று எழுதி வைத்திருப்பதை அறிந்து, அதனை நமது கலைப்பீடத்துக் கல்விசார் ஆய்வு வட்டத்தில் (Academic Forum) படிக்குமாறு அவரிடம் வேண்டினோம். தயக்கத்துடன் இயைந்துவிட்டார். என்றாலும் அவரை அழைத்துவர முடியவில்லை.

மீண்டும் மீண்டும் சபாரத்தினம் மூலம் தொடர்பு கொண்டதால், பரநிருபசிங்கம் அவர்கள் நமது கலைப்பீடத்துக் கல்விசார் ஆய்வு வட்டத்தில் 11.08.1992 அன்று "திரு. பொ. கைலாசபதியவர்களும் பொருளாராய்ச்சியும்" என்னும் தலைப்பில் கட்டுரை வாசித்தார்.[10] சாதனையில் நாட்டமுடையவர்க்குத் தாம் உதவுவதாகவும் கூறிச் சென்றார். பல்கலைக்கழகத்து ஆசிரியர் ஒருவரோ இருவரோ அவருடன் சிறிது காலம் தொடர்பு கொண்டனர் போலும்.

சிந்தனைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் எனது உள்ளத்தில் உறுதி பெற்றுக் கொண்டே வந்தது. சபாரத்தினம் அவர்களை உதவுமாறு பிடித்துக் கொண்டேன். முதலில் தயங்கினார். தயங்கியதற்குப் பரநிருபசிங்கம் அவர்களின் நிலைப்பாடு காரணமாயிருந்திருக்கலாம். பின்னர் தயக்கத்துடன் ஒருவாறு உடன்பட்டுவிட்டார். சிந்தனைகள் எழுதப்பெற்ற கொப்பிகள் இருக்குமிடத்தைத் தேடிக் கண்டு கொண்டார். திருநெல்வேலி நொத்தாரிசு திரு. ச. தங்கமாமயிலோன் அவர்களிடம் பண்டிதமணியின் கொப்பிகள் சில இருந்தன. பண்டிதர் துரைசிங்கம், பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், மா. அப்புக்குட்டி உபாத்தியாயர், திரு. இ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் பண்டிதமணி வாழ்ந்த போது அவரிடம் கொப்பிகளைப் பெற்று, அவற்றைப் படித்து, குறிப்புகள் எழுதிக் கொண்டனர். திரு. மா. அப்புக்குட்டி உபாத்தியாயர் அவர்கள் 1962ஆம் ஆண்டில் எழுதிக்கொண்ட குறிப்புகள் நல்லூரில் அவரது மனைவியிடம் இருந்ததையும் சபாரத்தினம் அவர்கள் கண்டுகொண்டார். ஒருமுறை தங்கமாமயிலோனிடம் என்னையும் அழைத்துச் சென்றார். அவர் கொப்பிகளைத் தந்துதவ உடன்பட்டார். அப்புக்குட்டி உபாத்தியாயர் மனைவியும் தம் கணவன் எழுதி வைத்திருந்த கொப்பிகளைத் தந்துதவினர். இருவரும் தாம் தருவனவற்றைப் பயன்படுத்திவிட்டுத் தமக்குத் தரவேண்டும் என்றனர். உடன்பட்டோம்; பின்னர் கையளித்துவிட்டோம்.[11]

கொப்பிகளில் எழுதப் பெற்றிருந்த சிந்தனைகளைப் படம் எடுக்க (photostat) முடிவு செய்தோம். அவற்றைப் பல்கலைக்கழக நூல்நிலையத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கலாம் என எண்ணினோம். அந்தச் சிந்தனைகளைப் பண்டிதமணியின் கையெழுத்திலேயே யாராவது படிக்க விருப்பங் கொள்ளலாமல்லவா? பல்கலைக்கழகத்திலேயே படம் எடுப்பதற்குத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் ஏற்பாடு செய்தார். ஆயின், சில நாட்களால் படமெடுக்கும் கருவி பழுதடைந்துவிட்டது. ஆதலால், பொழுதை வீணாக்காது, சிந்தனைகளைத் தட்டச்சில் அடித்து மூன்று பிரதிகள் எடுக்க முடிவு செய்தோம். பண்டிதமணியின் கையெழுத்தை விளங்கிக் கொள்வது பிரச்சினையாக இருந்தது. கைலாசபதியவர்கள் சொல்லச்சொல்ல பண்டிதமணி விரைவாக எழுதியவை அந்தக் கொப்பிகளில் உள்ளவை. திரும்பவும் சொல்லும்படி கேட்பது அன்று சந்நிதி விரோதம் எனக் கருதப்பட்டது. சபாரத்தினம் அவர்கள் பண்டிதமணியின் கையெழுத்தைப் படித்தறியும் பழக்கம் பெற்றிருந்தார். எனவே, அவர் வாசிக்க, வாசிக்க மொழியியல் துறையைச் சேர்ந்த செல்வி ஜெயகௌரி சிவஞானசுந்தரமும் திருமதி. சு. சிவகுமாரனும் மிகப் பொறுமையாகத் தட்டச்சில் அடித்தனர். நமக்குக் கிடைத்த கொப்பிகள் அனைத்திலும் உள்ள சிந்தனைகளைத் தட்டச்சில் அடித்த பிறகு, அவற்றைப் பல்கலைக்கழக நூல் வெளியீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்தேன்.

இதற்குச் சற்று முன்னதாகவே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திரு. என். சபாரத்தினம் போன்ற யாழ்ப்பாணத்துக் கல்விமான்கள் சிலர் கைலாசபதியவர்களின் சிந்தனைகளைப் பல்கலைக்கழகம் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் துணைவேந்தருக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

துணைவேந்தர் தலைமையில் இயங்கிய பல்கலைக்கழக நூல் வெளியீட்டுக் குழு கைலாசபதியவர்களின் சிந்தனைகளை வெளியிடுவது, பாதுகாப்பது பற்றிப் பரிசீலிக்குமாறு மூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்தது. குழுவில் பேராசிரியர் சு. சுசீந்திரராசா, பரமேசுவரக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மு. ஞானப்பிரகாசம் அவர்கள், கவிஞர் இ. முருகையன் அவர்கள் உறுப்பினர். இம்மூவரும் "வெளியிடுவது தகும்" , "பாதுகாப்பது தகும்" எனப் பரிந்துரை செய்தனர். பல்கலைக்கழக நூல் வெளியீட்டுக் குழு 23.07.1993 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் கைலாசபதியவர்களின் சிந்தனைகளை அச்சேற்றுவதிலும், நூல்களை விலைப்படுத்துவதிலும் ஏற்படக்கூடிய தொல்லைகளைக் கருத்திற் கொண்டு, சிந்தனைகளைப் போற்றிப் பாதுகாக்கும் பொருட்டு, அவற்றைப் படியெடுப்பு உள்வெட்டுத் தகட்டில் (ஸ்ரென்சிலில்) அச்சடித்துச் சில பிரதிகளை நூலகத்தில் பாதுகாப்பது பொருத்தமான முயற்சி என முடிவு செய்தது. செல்வி. ஜெயகௌரி சிவஞானசுந்தரம் சிந்தனைகளைப் படியெடுப்பு உள்வெட்டுத் தகட்டில் மீண்டும் அச்சடித்து உதவினார். அச்சுப்படியை அவ்வப்போது படித்து, வேண்டிய திருத்தத்தைச் செய்துதவியவர் திருமதி இ. கைலைநாதன், திருமதி. சு. ரமேஷ், திருமதி. சி. சிறீசற்குணராசா ஆகியோர் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கைலாசபதியவர்களின் சிந்தனைகள் ஸ்ரென்சிலில் நூலாக மலர்ந்தது. ஸ்ரென்சில் மூலம் பெறும் பிரதிகள் நிலைத்து நிற்கக்கூடிய காலம் பற்றி நம் உள்ளத்தில் கவலை. ஏனெனில், பயன்படுத்திய கடதாசி காலப் போக்கில் சிதையக்கூடும்.

கைலாசபதியவர்களின் சிந்தனைகளைப் பதிப்பிக்கும் முயற்சியில் சபாரத்தினம் அவர்கள் என்னுடன் இணைந்தமை எனது நற்பேறே. துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் நூலுக்கு ஓர் அறிமுகம் எழுதி நம்மை உற்சாகப்படுத்தினார். கைலாசபதியவர்களின் சிந்தனைகளை வெளியிடுவதற்கு மற்றும் பலர் உதவினர். முன்னர் சிலர் பெயர்களை ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளோம்.

சிந்தனைகளைப் போற்றிப் பாதுகாப்பதே நமது முதல் நோக்கமாக இருந்ததெனினும், சிந்தனைகளை ஓரளவாவது விளங்கிக் கொண்ட சிலர் - கைலாசபதியவர்களுடனும் பண்டிதமணியுடனும் பழகிய சிலர் - உயிருடன் இருக்கும் போதே அவர்களைக் கொண்டு ஆர்வமுடைய ஏனையோரும் சிந்தனைகளில் நாட்டம் கொள்ளும் வண்ணம் பொருள் விளக்கக் குறிப்புகள் எழுதுவிப்பது நமது இரண்டாவது நோக்கமாக உள்ளத்தில் எழுந்தது. சாதனை செய்வதாயினும் இன்றைய நிலையில் விளக்கம் இன்றியமையாததே.

பரநிருபசிங்கம், சபாரத்தினம் ஆகிய இருவர் பெயர்களும் பண்டிதமணி எழுதிக் கொண்ட சிந்தனைக் குறிப்புகளில் வருகின்றன. கைலாசபதியவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பின்னர் திருநெல்வேலியை விட்டு அளவெட்டியில் வாழ்ந்தபோது அவர்களைப் பரநிருபசிங்கம் அவர்கள் அடிக்கடி சந்திந்துச் சிந்தனைகளுக்கு விளக்கம் கேட்டறிந்தது உண்டு என்றும், அவர் கைலாசபதியவர்களின் சிந்தனைகளைப் பொருளடிப்படையில் வகுத்து வைத்திருக்கிறார் என்றும் அறிந்துள்ளேன்.[12] ஆயினும் அவர் நிலைப்பாடு வேறு. சிந்தனைகளை ஓரளவாவது விளங்கியவர் மூலம் ஏனையோரும் விளங்கிக் கொள்ள வழிவகுத்தல் ஓர் அறமாகும் என எண்ணலானேன்.

ஏழாலையூர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் சைவசித்தாந்தத்தில் அறிஞர் போற்றும் நல்ல ஓர் அறிஞர். கைலாசபதியவர்களின் சிந்தனைகளை விளக்கி ஒரு நூல் எழுதித் தருமாறு அவரை எமது பல்கலைக்கழகம் அழைக்க வேண்டும் என்று விரும்பி இதுபற்றிப் பல்கலைக்கழகத்து மூதவைக்கு மகஜர் சமர்ப்பித்தேன். அவரை அழைப்பது குறித்தும் அவரைக் கொண்டு நூல் ஆக்குவது குறித்தும் சிலரது எதிர்ப்பு இருந்த போதிலும் மூதவை எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது. பண்டிதர் கந்தையா அவர்கள் கைலாசபதி சிந்தனைகளைக் கைலாசபதி ஸ்மிருதி என்றார். அவரது "சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்னும் நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்தது. அந்நூலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரையில் மேலும் விபரங்கள் உண்டு. பண்டிதர் கந்தையாவின் கருத்துக்களை, விளக்கங்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலையில் இருந்த சபாரத்தினம் அவர்கள் செல்வி. மு. லலிதாமினி தமது எம்.பில் பட்டத்திற்குக் கைலாசபதி சிந்தனைகளை ஆராய முன்வந்தபோது தமது கருத்துக்களை லலிதாமினிக்கு விளக்கி வந்தார். சபாரத்தினம் அவர்களின் விளக்கங்களை லலிதாமினியின் ஆய்விலே ஆங்காங்கு காணலாம். லலிதாமினி அக்கருத்துக்களை நன்கு ஜீரணித்துக் கொண்டார். லலிதாமினியைப் போலக் கைலாசபதி சிந்தனைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு இன்னும் பலர் முன்வருதல் வேண்டும். கைலாசபதி சிந்தனைகளை விளங்கிக் கொள்வதன் மூலம் பண்டிதமணியவர்களை நன்கு விளங்கிக் கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை. இதனைத் தமிழிலும் சைவ சித்தாந்தத்திலும் ஈடுபாடுடையவர்கள் உணர்தல் வேண்டும். பல்கலைக்கழக நிலையில் அக்கறை உண்டாதல் வேண்டும். அது எந்நாள் நிகழுமோ?

## குறிப்புகள்

1. கனக செந்திநாதன், மூன்றாவது கண், பக். 51, யாழ்ப்பாணம், 1959.
2. சுவாமிநாதன், சி., ஒரு மெய்ஞ்ஞானி வறுத்த வித்து, பொ. கைலாசபதி அவர்களின் சேவை நலம் பாராட்டுமலர், 1958.
3. கணபதிப்பிள்ளை, சி., அத்வைத சிந்தனை, பக். 78, 80, 81, 84.
4. ........................... சிந்தனைக் களஞ்சியம், பக். xvii, 238, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, 1987.
5. சிவத்தம்பி, கா., "பண்டிதமணி அவர்களின் புலமை மையம்," பண்டிதமணி நினைவு மலர், பக். 166, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, 199...
6. பூலோகசிங்கம், பொ., "நாவலர் பரம்பரை", பண்டிதமணி நினைவு மலர், பக். 108.
7. சுசீந்திரராசா, சு., பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள், சிந்தனை, பக். 21, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1985.
8. மே. கு.
9. உமா மகேசுவரன், க., "ஒருவர் இருக்கிறார்", வார முரசொலி, 25.06.1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இக்கட்டுரை நூல் வடிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கலைப்பீட வெளியீடாக வெளிவந்தது. 1994.

11. இவையெல்லாம் 1995இல் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது தொலைந்துபோய்விட்டன என அறிந்தோம்.

12. பரநிருபசிங்கம் அவர்கள் "பொ. கைலாசபதியும் பொருளாராய்ச்சியும்" என்னும் பொருள் பற்றி நிகழ்த்திய உரை நூலாக வெளியிடப்பெற்ற போது அந்நூலின் பின்புற அட்டையில் பரநிருபசிங்கம் பற்றிப் பண்டிதமணி 16.12.1968இல் எழுதிய நற்சான்று வெளியிடப் பெற்றுள்ளது. அதனில் பண்டிதமணி "சமயத் துறையில் நானும் பரநிருபசிங்கமும் ஒருவருக்கொருவர் ஆசிரியராயிருந்து வருகிறோம் ........... பரநிருபசிங்கம் அம்மகானிடம் (கைலாசபதியவர்களிடம்) முகந்து கொண்டவைகள் நான் முகந்தவைகளிலும் மிகமிக அதிகம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# சிந்தனைக்கும் விருப்பிற்கும் உரியனவாகப் பண்டிதமணி வழங்கியவை

பண்டிதமணி தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவசித்தாந்தம் ஆகியவை பற்றி நன்கு சிந்தித்த ஓர் அறிஞர் ஆவர். தமது சிந்தனையில் எழுந்த கருத்துக்களை அவ்வப்போது தாம் எழுதிய கட்டுரைகளில் வெளிப்படுத்தியுள்ளார். சில விஷயங்கள் பற்றிச் சிந்தித்து முடிவு காணாத நிலையில், மேலும் சிந்திக்க வேண்டிய நிலையில் அவற்றைப் பிறர் சிந்தனைக்கு உரித்தாக்கித் தாம் எழுதிய கட்டுரைகளில் அவை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவரது இத்தகைய சிந்தனைகள் ஆங்காங்கே கட்டுரைகளில் காணப்படுகின்றன. இவை போன்று (பிறர் நிறைவேற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன்) தமது விருப்பிற்குரியனவாகவும் சிலவற்றைக் கூறியுள்ளார்கள். அவற்றையெல்லாம் தொகுத்து ஆய்வுப் பொருளாகக் கொண்டு மேலும் சிந்திப்பதும், அவை பற்றி எழுதுவதும், பண்டிதமணியின் விருப்பை நிறைவேற்றுவதும் வருங்காலத்து அறிஞர், ஆய்வாளர், ஆர்வலர் கடனாம். இன்று வரை யாரும் அவற்றில் பெரும் அக்கறை கொண்டு பேசியதாகவோ எழுதியதாகவோ முயன்றதாகவோ தெரியவில்லை. நமது சமுதாயத்தில் மேடைப் பேச்சுடன், கைதட்டுடன் காரியங்கள் நின்று விடுவது கவலைக்குரியது. பண்டிதமணி வழங்கியவற்றில் சிலவற்றையாவது இங்கு சுட்டிக்காட்டி அறிஞர் மேலும் அவை குறித்துச் சிந்திப்பதற்கு, முயல்வதற்குத் தூண்டும் முயற்சி பயனுள்ளதாக அமையும் என எண்ணுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி நாவலரில் மிக ஈடுபாடு கொண்டவர் என்பதை அழுத்திக் கூறவேண்டியதில்லை. அவர் தமது ஆறுமுகநாவலர் என்னும் நூலில் (பக். 15),

> "கனவான்கள், நாவலரின் நீதிவழுவா நெறிமுறைகளையும் அவர் வகுத்த திட்டங்களையும் சிந்திப்பார்களாக."

எனக் கூறியுள்ளார். இவை பற்றிச் சிந்தித்து யாரும் இன்றுவரை ஆராய்ந்த-தாகத் தெரியவில்லை.

பண்டிதமணிக்கு உ. வே. சா. ஐயர் அவர்களிடம் துவேஷம் உண்டு. அவர் இது பற்றி ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார். ஐயர் அவர்கள் நாவலருக்குத் துரோகம் செய்தவர் என்பது பண்டிதமணி கருத்து. ஆறுமுகநாவலர் என்னும் நூலில் "நாவலர் சரித்திர ஆராய்ச்சி" என்னும் கட்டுரையில்,

> "மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும் நாவலர் அவர்களும் அங்கே செய்யுள் இங்கே வசனம் என்று பாராட்டும்படி வாழ்ந்தவர்கள் ....................... பிள்ளையும் நாவலரும் கபில பரணர். டாக்டர் உ. வே. சாமிநாதையர் 700 பக்கங் கொண்ட மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரத்தில் பிள்ளையும் நாவலரும் ஒருவரை ஒருவர் சந்திப்புச் செய்யாத பிரகாரம் எழுதிவிட்டார். ஐயர் பிள்ளையின் சரித்திரத்தை எழுதி அரை நூற்றாண்டு கழித்துத்தான் வெளியிட்டார். காலதாமதத்தின் கருத்துச் சிந்திக்கத்தக்கது."

என எழுதியுள்ளார். வஞ்சம் தான் காரணம் என்பது பண்டிதமணியின் கருத்துப் போலும். ஆனால், அதனை அறிஞர் நிறுவ வேண்டுமே என்று பண்டிதமணி விரும்பினார் போலும்.

செந்தமிழ்க் களஞ்சியத்தில் "அன்பொடு புணர்ந்த காமக்கூட்டம்" என்னும் கட்டுரையில் (பக். 124),

> "அறத்துப் பால் பொருட்பால் என்று சொல்லி வந்தவர், அந்த முறையில் இன்பத்துப் பால் என்று சொல்லாமல், காமத்துப் பால் என்று சொல்லிய இரகசியம் சிந்திக்கற்பாலது."

எனக் கூறி விளக்கம் எதுவும் தராது விட்டு விட்டார். மேற்குறித்த நூலில் (பக். 98),

> "நாவலர், "மடம்" என்ற பாடம், ஏன் எழுதினார் என்பது ஆராயப்-படத்தக்கது."

என்றார். மடம்தான் ஆறுமுகத்துக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கியது. இவ்விடத்து உப அதிபர் மடத்துக்காரரைச் சுட வேண்டும். (பொ. கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சிந்தனைகள், பக். ......) என்று கூறியது நினைவிற்கு வருகிறது. திரு. வி.க. போன்ற சிலரும் மடங்களை வெறுத்தனர்.

இனி, சமயம் பற்றியும் இவ்வாறு ஆய்வுக்குரியன எனச் சில கருத்துக்களைக் கூறியுள்ளார். அவற்றிலும் சிலவற்றைக் காட்டுவோம்.

சமயக் கட்டுரைகள் என்னும் நூலில் சமயம் 4இல்,

"எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே
அல்லாது இலைஓர் அணுவும் அசை யாதுஎவையும்
நில்லா அருளின்றேல் நீ இன்று அவன்பாலிற்
செல்லாய் உனது செயலும் அவன் செய்கையதே."

- கந்: காமதகன. 40

"உலகத்திலே உள்ள எல்லார் செய்யும் செயலும் இறைவன் செய்யும் செயலே; ஆகையினாலே, மன்மதனே நீசெய்கின்ற உனது செயலும் அவன் செயலே. "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்கின்ற ஆப்தர் மொழியை மறவாதே. "நீ இன்று அவன் பாலிற் செல்". நீ உன்னை ஆட்டுகின்ற அந்தக் கடவுளுக்குப் பக்கத்தே பயப்படாமற் போ. புஷ்ப பாணங்களை அக்கடவுள் மேல் தூவு, உன் செயல் அவன் செயலே. உனக்கு வரக் கடவதொன்றுமில்லை.

இது பிரமாவின் பிரமை செய்கின்ற பிரம சித்தாந்தம்; அப்பொழுதைய காரிய சித்தியின் பொருட்டுச் செய்த அபத்த உபதேசம். இதனை அப்படியே ஏற்றுக்கொள்ளுதற்கு மன்மதன் உடன்படவில்லை. கடவுள் நம்மோடு ஒன்றாய், நம்மை இயக்குகிறார் என்பதை மன்மதன் மறுக்கவில்லை; அதை உடன்படுகின்றான்.

'நம் செயலெல்லாம், கடவுள் செயல்' என்ற முடிவைத் தான் அவன் ஒத்துக் கொள்ளவில்லை. அது தான் நுணுகி ஆராயற்பாலது."

என்றார்.

சமயம் 8, மனிதர் "மூவகையர்" என்னுங் கட்டுரையில்,

"ஆறு சமயங்களுந் தனித்தும் சேர்ந்தும் அறுபத்து மூன்று வகையில் அநுட்டிக்கப்படலாம். அறுபத்து மூன்று வகைக்கும் வகைக்கொருவரை உதாரணங் காட்டியது பெரியபுராணம் போலும். இது பெரிதும் சிந்தனைக்குரியது."

என்றார்.

சமயம் 9, "இன்று சங்கற்ப நிராகரணஞ் செய்ய நேர்ந்தால்" என்னும் கட்டுரையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமயம் அகம்புறம் என்ற இரு வகையுள் அடங்கும்.

புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்ற பிரிவுகள் பிற்காலத்தில் வந்தவை.

புறப்புறத்தில் புறமும், புறத்தில் அகப்புறமும் மோசமானால் நால்வகைப் பிரிவினால் பயனே உண்டாகாது. இது, தத்துவரீதியிலும், தத்துவத்துக்குச் செய்யும் அர்த்தத்திலும் வைத்து ஆராயத்தக்கது."

என்றார்.

சமயம் 10, "பிராசீனர் நவீனர் வகுத்த சமயங்கள்" என்னும் கட்டுரையில்,

"சைவம் முதலிய ஆறும் பெரிய புராணத்திலும், தேவாரங்களிலும் மதிப்புப் பெற்றிருக்கின்றன. பாடாணவாதம் முதலியவற்றுக்கு அவ்வாறான மதிப்பைக் காணோம். சமய வாதிகள் இதனை ஆராயக் கடவர்."

எனச் சமய வாதிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

சமயம் 24, "சிவசத்தியைச் சாராது உண்மையைக் காணமுடியாது" என்னுங் கட்டுரையில்,

"இந்த உலக முளைக்குத் தாரகம் மாயை; மாயைக்குத் தாரகம் சிவசத்தி; அதற்குத் தாரகம் சிவம்; அது பெரிய முதல். மாயை சின்ன முதல். சிவசத்தியாகிய முதலைப் பெரிய முதலோடு சேர்த்துக் கொள்ளலாம்.

பெரிய முதல், சின்ன முதல் இரண்டும் உலகத்துக்கு இன்றியமையாதன. இரண்டு முதல்களிலும் எந்த முதல் இல்லையாயினும் உலகம் இல்லை.

வள்ளுவ நாயனார்,

"ஆதிபகவன் முதற்றே உலகு" என்று வித்தாகிய சிறிய முதலைப் பற்றிப் பேசாது பெரிய முதலாகிய வினை முதலின் இன்றியமையாமையே பேசியிருக்கின்றார்.

'நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகம் முகிழ்த்தன முறையே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சங்கப் புலவர்களும், 'வாலிழை" ஆகிய ஆதியை இன்றியமையாத, "ஒருவன்" ஆகிய ஆதிபகவனையே சிந்தனை செய்திருக்கின்றார்கள்.

சிறிய முதலாகிய - வித்தாயுள்ள - மாயை என்கிற சடசத்தியைப் பற்றிப் பேசவில்லை. இது பெரிதும் சிந்தனைக்குரியது."

என்றார்.

செந்தமிழ்க் களஞ்சியத்தில் "கீதையின் உதயம்" என்னுங் கட்டுரையில்,

"ஞானத்துக்கும் ஞானத்துக்கு நிமித்தமாய கருமத்திற்கும் உள்ள தொடர்பு பெரிதும் விசாரிக்கற்பாலது."

என்று கூறியுள்ளார். மேற்குறித்த நூலிலே "ஞானப்பிரகாச முனிவர்" என்னுங் கட்டுரையில்,

"வடமொழிச் சிவஞான போதத்து இறுதிச் சூத்திரத்து இறுதியடி,

"ஏவம் வித்தியாத் சிவஞ்ஞான போதே சைவார்த்த நிர்ணயம்" என்பது. இதில் சிவஞ்ஞானபோதே என்பதற்கு ஞானப்பிரகாசர் செய்த உரை பெரிதும் சிந்தனைக்குரியது.

உரைகாரர்கள் (இச்) சிவஞான போதத்தில் என ஒரு சுட்டு வலிந்து வருவித்துக் கொண்டார்கள். ஞானப்பிரகாச முனிவர் அப்படி ஒரு சுட்டு வருவிக்கவில்லை. ஆகவே முனிவர் கருதும் சிவஞான போதம் யாதாம் என்பது விசாரிக்கற்பாலதாம்."

என உள்ளது. மேலும், அதே நூலில் "திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும், அவர்தம் ஆசிரியரும்" என்னும் கட்டுரையில், (பக். 176),
ஆராயவேண்டியவை :

1. நாவலர் வழக்கில் மஞ்சக்குப்பக் கோர்ட்டு வழக்குப் புத்தகம் பேசுவது என்னவாயிருக்கும் ?

2. கதிரைவேற்பிள்ளை நிருபித்த இருபத்தேழு குற்றங்கள் எவை ?

இவற்றைச் சிந்திப்பாரில்லை. வெறும் அபிமானக் கற்பனைகள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து கொண்டிருக்கின்றன

என உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி, பண்டிதமணி விரும்பிய இலக்கிய, சமய செயற்பாடுகளையும் வருங்காலத்து அறிஞர் அறிந்திருப்பது நல்லது. அவற்றைச் செய்து முடிக்க முடியுமாயின் அவர்கள் பண்டிதமணிக்குச் செய்யும் நல்ல கைமாறாக அவை அமையும். பண்டிதமணி பெரிதும் விருப்பங் கொண்டவற்றில் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவோம்.

இலக்கிய வழி முன்னுரையில் பண்டிதமணி,

> "சுவாமிகளின் (விபுலாநந்தர்) செய்யுள்கள் அனைத்துந் தொகுத்து நீண்டதொரு விமரிசனஞ் செய்தல் வேண்டும்."

எனத் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். மேலும், அதே முன்னுரையில்,

> "மட்டக்களப்பு வாவியின் மீன்பாடல் அழியாநிலை படைத்தது. இவ்வாற்றால் இலக்கிய வழி சுவாமிகளை அணுகிய வழிப் புத்தம் புதியதொரு வழியாய்க் கீழிருந்து மேலே மெல்லென உயர்ந்து வீரங் கிளர்ந்து செல்லுவதனைக் காணலாகும். அதனைச் சொல்லுவ-தொரு தனித்த விமரிசன நூல் மிக மிக இன்றியமையாதது."

என்றார்.

இலக்கிய வழியில் "தமிழ் தந்த தாமோதரம்பிள்ளை" என்னுங் கட்டுரையில்,

> "அவர் (தாமோதரம்பிள்ளை) பதித்த பதிப்புக்களில் உள்ள பதிப்புரைகளைத் தொகுத்துப் புத்தக உருவத்தில் "தாமோதரம்" என்ற பெயரில் வெளியிடுதல் நன்று."

எனக் கூறியுள்ளார். அதே நூலிலேயே "ஈழ நாட்டுப் புலவர்" என்னுங் கட்டுரையில்,

> "ஈழநாட்டுப் புலவர்களின் இலக்கிய ரசனை பற்றி ஒரு புத்தகம் அத்தியாவசியம் வெளிவருதல் வேண்டும். அன்றி சென்ற நூற்றாண்டில் தாய்நாட்டுக்கே வழிகாட்டியாய்ப் பலதுறைகளிலும் ஈழநாட்டுப் புலவர்கள் உழைத்த உழைப்புக்களும் மற்றொரு புத்தகமாய் வெளிவருதல் வேண்டும்."

என்றார். அவரது விருப்பை ஓரளவு நிறைவேற்றக்கூடிய இருநூல்களை இங்கு குறிப்பிடலாம். ஒன்று, பொ. பூலோகசிங்கம் எழுதிய "தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்" என்னும் நூல்; மற்றது க. கைலாசபதி எழுதிய "ஈழத்து இலக்கிய முன்னோடிகள்" என்னும் நூல்.

சிந்தனைக் களஞ்சியத்தில் "வடுவடு நுண்ணயிர்" என்னும் கட்டுரையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேலும் பதிற்றுப்பத்து நண்டின் மூலம் நற்றிணை நண்டு,.......... கலித்தொகை நண்டு, அகத்து நண்டு, மற்றும் புறத்து நண்டு, ஐங்குறு நூற்று நண்டு என்றித்துணை நண்டுகள் நடந்த வழிகளையெல்லாம் எடுத்துக்காட்டி வாயூற வைக்கின்றது அருளம்பலவனாரின் ஆராய்ச்சி உரை. நண்டுகள் நடந்த நடை ஒவ்வொன்றனையும் தனித்தனி எடுத்து இனித்தல் செய்யின் நண்டு இலக்கியம் அனந்த பேதமாம்."

என்றார். அதே நூலில் "அளவெட்டி தந்த அறிவுச் செல்வம்" என்னும் கட்டுரையில் உப அதிபர் தமக்கு நடாத்திய பாடம் ஆயிரத்துக்குக் குறையா எனக் கூறி,

"உப அதிபர் ஆயிரம் என்று ஒருவாறு ஒரு புத்தகம் தொகுக்கலாம் போலும்."

என்றார்.

கம்பராமாயணக் காட்சிகள் என்னும் நூலில் "முனிவோடெழுந்தனன் முனி" என்னுங் கட்டுரையில்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் என்ற வள்ளுவரிலே, கணமேனும் என்ற வார்த்தைக்கு இனியாயினும், விசுவாமித்திரரின் வெகுளியைப் பார்த்த பிறகாயினும், பரிமேலழகர் உரையைச் சற்றே திருத்தஞ் செய்யல் வேண்டாமா!"

என்கிறார்.

இவ்வாறு பண்டிதமணி தமது கட்டுரைகளில் இலக்கியம், சமயம் பற்றித் தமது விருப்பையும் வெளியிட்டுள்ளார். அவரது நூல்கள் முழுவதையும் படித்தாலன்றி சிந்தனைக்குரியவற்றையும் விருப்பிற்குரியவற்றையும் அறிதல் இயலாது. பண்டிதமணியைச் செம்மையாகப் புரிந்து கொள்வதற்கு இவற்றையும் அறிதல் இன்றியமையாதது.

பண்டிதமணி எச்சரிக்கை போலவும் சிலவற்றைக் கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக, இலக்கியவழி முன்னுரையில்,

"ஈழமண்டலம் தாய் நாடாகிய தமிழ்நாட்டின் ஒரு சிறு துளி. தமிழ்நாட்டின் இலக்கிய வளம் மகா சமுத்திரம். ஈழமண்டலத்திலக்கிய வழி அந்த மகா சமுத்திரத்திற் சென்று சேராதாயின் நின்று வற்றிவிடும்."

என்று கூறியுள்ளார். பண்டிதமணி தாம் கவலைப்படுவன பற்றியும் கோபப்படுவன பற்றியும் துவேஷப்படுவன பற்றியும் தமது கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் மிக முக்கியத்துவம் வாய்ந்தனவே. ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் பண்டிதமணியின் ஆளுமையில் இரண்டற ஒன்றிப்போயுள்ள இவற்றையும் பாராது ஒரு பக்கத்தை மட்டும் பார்த்துவிட்டு அவரை நன்கு அறிந்து விட்டோம், அவரை நமக்கு நன்கு தெரியும் என்று ஓரளவு இறுமாப்புடன் பேசமுடியாதல்லவா?

மொழியியல் துறைசார்ந்த யானோ பண்டிதமணியையும் அவரது ஞான குருவாகிய உபஅதிபர் அவர்களையும் என் தந்தை மூலம் அறிந்தும், தமையன் மூலம் அறிந்தும், பண்டிதமணியை நேரில் சிறிது அறிந்தும், அவரது நூல்கள் மூலம் அறியக்கூடிய அளவு அறிந்தும் நன்கு அறிந்திலேன் என அறிய முயல்கின்றேன். தமிழ், இந்து நாகரிகம், சைவசித்தாந்தம் ஆகிய துறை சார்ந்த அறிஞர்கள் பண்டிதமணியில் அக்கறை கொள்வார்களாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# பண்டிதமணி – அதிபர் கூட்டரவு

யாழ்ப்பாணத் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை புகழ்பெற்று விளங்கிய காலத்தில் கலாசாலையிலே "பண்டிதர்", "பண்டிதமணி" (1951க்குப் பின்னர்), "உப அதிபர்", "அதிபர்" என்ற சொற்பிரயோகங்கள் "ஐயா" என்னும் பதத்துடன் சேர்ந்து மாணவர் மத்தியிலும், பொதுவாகக் கலாசாலையுடன் தொடர்புடையோர் மத்தியிலும் வேரூன்றி நின்றன. அவர்களின் உள்ளத்தில் நிலைத்திருந்த பயபக்தியின் வெளிப்பாடாகவே இயற்பெயர்கள் வழங்காமல் இப்பெயர்கள் வழங்கலாயின. அவர்கள் நா கணபதிப்பிள்ளை, கைலாசபதி, சுவாமிநாதன் ஆகிய பெயர்களை உச்சரிக்கத் தயங்கியது. அவர்கள் கலாசாலையைத் தபோவனமாக, கலாக்ஷேத்திரமாகக் கண்டனர்.[1] அண்மையில் பேரறிஞர் ஒருவர் சைவாசிரிய கலாசாலை பற்றிக் குறிப்பிடும்போது அது அன்றைய ஈழத்தின் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கல்விக்கு ஓர் உயர்பீடமாக அமைந்தது என்றார்.[2] அன்று கலாசாலையில் அதிபரும் ஆசிரியர்களும் ஆங்காங்கு அமைந்திருந்த கொட்டில்களில் தங்கினர்; கலாசாலையைக் கண்ணுங் கருத்துமாகப் பேணி வளர்த்தனர்.

சைவாசிரிய கலாசாலை புகழ்பெற்று ஓங்குவதற்குக் காரணமாயிருந்தோர் மூவர் ஆவர். அவர்கள் அதிபர், உப அதிபர், பண்டிதமணி ஆவர். அவர்களைச் சைவாசிரிய கலாசாலையின் "மூன்று கண்கள்" எனவும்,[3] "மும்மூர்த்திகள்" எனவும்,[4] "மூவர் முதல்வர்கள்" எனவும்[5] அறிஞர் வருணித்துள்ளனர். அம்மூவரின் கூட்டரவை "திரிவேணி சங்கமம்" எனவும்[6] வருணித்துள்ளனர். இவ்வருணனைகள் அவர்களின் மதிப்பைக் காட்டுவன. மேலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணியின் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை நண்பர்கள் பற்றியும் ஒருவர் விபரமாக விளக்கி எழுதியுள்ளார்.[7]

மயிலிட்டி சி. சுவாமிநாதன் சைவாசிரிய கலாசாலையின் இரண்டாவது அதிபராக 10.11.1929 அன்று தொடக்கம் நியமனம் பெற்று 01.06.1951 வரை பணி புரிந்தார். பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை 1929இல் சைவாசிரிய கலாசாலைத் தமிழ்விரிவுரையாளராகப் பதவி ஏற்று முப்பது ஆண்டுகள் தமிழும் சைவமும் தழைக்கப் பணிபுரிந்தார். பொ. கைலாசபதி அவர்கள் B.Sc. பட்டதாரியாகி 1930இல் சைவாசிரிய கலாசாலையின் உபஅதிபர் ஆனார். அவர் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் திரு. சுவாமிநாதனிடம் கல்வி கற்றவர் ஆவர். உப அதிபர் ஞானி ஆக விளங்கிப் பண்டிதமணி அவர்களின் சிந்தனைகளுக்கு ஊற்றாக விளங்கியவர். அதிபர் அவர்கள் தம்முடன் பணிபுரிந்த பண்டிதமணி, கைலாசபதி ஆகியோரின் பெருமையை உள்ளவாறு உணர்ந்து அவர்களுக்கு அளிக்க வேண்டிய மதிப்பினை அளிந்து வந்தார்.[8]

சைவாசிரிய கலாசாலை தோன்றி வளர்ந்து வரும் போது அதிபருக்கும் இந்துபோட் மனேஜருக்கும் தகராறு ஒன்று ஏற்பட்டது. அது சில காலம் நீடித்து ஊரறிந்த தகராறாகியது. இத்தகராறு பற்றி ரி. முருகேசம்பிள்ளை (அன்று A.G.A., யாழ்ப்பாணம்) சுவாமிநாதன் அவர்களின் நினைவு மலரில் எழுதியுள்ளார்.[9] இந்துபோட் தொடர்புடையோர் இரு கட்சியாகப் பிரிந்து நின்று மோதினர். சேர். பொன். இராமநாதனின் மருகர் சு. நடேசன், சேர். அருணாச்சலம் மகாதேவா, சேர். வைத்திலிங்கம் துரைசாமி, ஜி. ஜி. பொன்னம்பலம், டாக்டர் கு. சிவப்பிரகாசம் போன்றோர் அதிபர் பக்கம். பண்டிதமணி (அன்று பண்டிதர்) மனேஜர் பக்கம். இந்நிலைமை பற்றிக் கனக செந்திநாதன் தமது கருத்தைத் தாம் எழுதிய மூன்றாவது கண் என்னும் நூலில் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.[10] இதுபற்றி மாவை, பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்கள் பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்களின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தின விழாவில் ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறியுள்ளார்.[11]

> "(இந்துபோட்) இராசரத்தினம் சுவாமிநாதன் மோதலில், பண்டிதமணி இராசரத்தினத்தின் பக்கமாயிருந்தார். சில காலமாக நடந்த இந்தத் தகராறில் சுவாமிநாதனைப் பதவி நீக்கம் செய்யவிருந்த இராசரத்தினமே மனேஜர் வேலையையிழந்தார்.
>
> பண்டிதமணி நவபாரதம் என்ற பெயரில் 1937ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மடலில் ஒரு உருவகக் கதை எழுதினார். அதில் டொக்டர் சிவப்பிரகாசத்தைச் சகுனியாகப் பாத்திரம் கொடுத்திருந்தார்."

டொக்டர் சிவப்பிரகாசம் ஈரப்பலாத் தோட்டத்தில் பண்டிதமணிக்கு உற்ற நண்பராக இருந்தவர். தகராறு நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இந்துபோட் மனேஜர், அதிபர், பண்டிதமணி ஆகியோர் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்கும் போது மிக மரியாதையுடனும் பண்புடனும் நடந்து கொண்டனர். தகராறு கொள்கையடிப்படையிலேயே என்று கொண்டனர். தகராறு முடிவடைந்த பின் அதனை மறந்து விட்டனர். பின்னர் வலிகாமம் வடக்கில் இருந்த சைவப் பாடசாலைகளுக்கு மக்களிடம் இருந்து நிலம் நன்கொடையாகப் பெறுவது பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக மனேஜர் பதவியை இழந்ததற்குப் பின் இந்துபோட் செயலாளராக இருந்த இராசரத்தினம் அவர்கள் அதிபரின் வீட்டுக்குப் பலமுறை வந்ததுண்டு. இருவரும் சேர்ந்து நிலம் பெறுவதற்கு அரும் பாடுபட்டனர், பண்டிதமணியும் முன்பு போல அதிபருடன் மிக நெருங்கிப் பழகினார். இருவரும் சேர்ந்து இந்தியாவுக்கு யாத்திரை சென்றனர்; சித்திரை விடுமுறைக் காலத்தில் இருமுறை நுவரெலியாவுக்குச் சென்றுள்ளனர். இதுபற்றிப் பண்டிதமணி "அதிபர் சுவாமிநாதன் அவர்களுடன் மலைக்காட்சி" என்னும் கட்டுரை-யொன்றில் எழுதியுள்ளார்.[12]

சைவாசிரிய கலாசாலையின் பழைய மாணவர்கள் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை என ஒன்று அமைத்தபோது ஓய்வு பெற்றிருந்த அதிபர் சுவாமிநாதன் அவர்களையே சபைக்குத் தலைவராகக் கொண்டனர். அவர் தலைமையில் இலக்கிய வழி (திருத்தப் பதிப்பு) வெளியீட்டு விழா சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் விமரிசையாக நடைபெற்றது. மேலும், ஓய்வு பெற்றிருந்த அதிபர் கந்தபுராண தக்ஷகாண்ட உரையாசிரியர் பண்டிதமணி-யவர்களுக்கு 2.3.67 அன்று வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் பொன்னாடை போர்த்தினார்.

அதிபர் பதவியிலிருந்து சுவாமிநாதன் ஓய்வுபெற்றபோது வெளியிடப் பெற்ற சேவை நலம் பாராட்டு மலரிலும், பின்னர் 15.5.1969 அன்று அவர் இறைவனடி சேர்ந்தமைக்குப் பின் வெளியிடப்பெற்ற நினைவுமலரிலும் பண்டிதமணியவர்கள் தம் அதிபரைப் பற்றி எழுதியவை பண்டிதமணி - அதிபர் கூட்டரவை உணர்ந்து கொள்வதற்கு உதவும். அவற்றை இங்கு தருகின்றோம். முதலில் சேவை நலம் பாராட்டு மலரில் (பக். vii) எழுதியதைப் பார்ப்போம்.[13]

> "அவர்கள்" என்ற வார்த்தையைச் செழுமையான தடித்த எழுத்திற் கண்டால் - அழுத்தம் திருத்தமாக அந்த வார்த்தையை யாராவது உரிய முறையில் உச்சரிக்கக் கேட்டால் - எங்கள் சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. சுவாமிநாதன் B. A அவர்கள் ஞாபகம் எனக்கு வந்துவிடுகின்றது; கௌரவம் நிரம்பிய அவர்களுடைய செந்தமிழ்ப் பேச்சு என் செவிகளில் ஒலிக்கத் தொடங்குகின்றது; ஆஜாநுபாகு ஆகிய கெம்பீரமான அவர்கள் தோற்றம் என் உள்ளத்தில் உதயம் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குலஞ்சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்" என்பது கம்பர் வகுத்த திருநாட்டில் வழங்கிய ஒரு அருமந்த தொடர். ஆறானது பெருக்கு அற்று அடிசுடுகின்ற முதுவேனிற் காலத்திலேயும், ஊற்றுப்பெருக்கினால் உலகை ஊட்டுவது போல உயர்ந்த குடியிற் பிறந்தவர்களுக்கு, அக்குடிப்பிறப்பு, அவர்களை அறியாமலே நல்லொழுக்க பழக்கங்களை, மிக மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களிலுங் கூட, அவர்கள் அந்தக் கரணங்களை ஊடுருவிச் சுரந்து கொண்டிருக்கும்; குடிப்பிறந்தவர்கள் தம் நிலையில் தாழார்கள்; தாழ்வு நேர்ந்த வழி உயிர் வாழார்கள்.

இக்கருத்துக்கள் அத்தொடர் சுரக்கும் அருமந்த கருத்துக்கள். இந்தக் கருத்துக்களுக்கு ஒரு நல்ல இலக்கியம்

**அதிபர் திரு. சி. சுவாமிநாதன் B. A அவர்கள்.**

இருபது வருஷங்களுக்கு மேலே ஊடியும், கூடியும் உடன் வாழ்ந்த வாழ்க்கை அநுபவம் இது.

**சி. கணபதிப்பிள்ளை"**

சுருக்கமாக எழுதப்பெற்ற இதனில் பண்டிதமணி தம் ஆசிரிய கலாசாலை வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்து மீளச் சிந்தித்து மனந்திறந்து கையாண்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும் உற்று நோக்கத்தக்கவை; ஏன் என்றால் அவை அர்த்தபுஷ்டியானவை. அடுத்து, திரு. சி. சுவாமிநாதன் அவர்களின் நினைவுமலரில் (பக். 21) உள்ளதைத் தருகின்றோம்.[14]

**"அதிபர் திரு. சி. சுவாமிநாதன் அவர்கள்**

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையிலே அதிபர் சுவாமிநாதன் அவர்களுக்குக் கீழே உபஅதிபராயிருந்தவர் ஒப்பற்ற ஒரு தத்துவஞானி. அதிபர் பிரபு; உபஅதிபர் ஞானி.[15] பிரபு ஆகிய அதிபர் அவர்களுக்கும் ஞானி ஆகிய உப அதிபர் அவர்களுக்கும் கீழே நீண்ட காலம் சேவை செய்யும் ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது கிடைத்தற்கரியதொரு பெரும் பேறு.

அதிபர் அவர்கள் கல்கத்தாவிலும் காசியிலும் உள்ள சர்வகலாசாலைகளிற் கல்வி பயின்றவர்கள்; பெரியோர்களின் தொடர்பும் பழக்கமும் உள்ளவர்கள்; பாரத கலாசாரத்தை நன்குணர்ந்தவர்கள்; பல்வேறு கலைகளிலும் இரசனையுள்ளவர்கள்; கலாவினோதர்களோடு கலந்துரையாடுவதில் அதிப் பிரியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை கல்கத்தாவிலுள்ள புகையிரத ஸ்தானமொன்றிற் காந்திக் கிழவர் வந்திறங்கினார். மற்றொரு கிழவர் வரவேற்றார். அக்கிழவர் விஞ்ஞான மகாமேதையாகிய மதிப்புக்குரிய ராய் என்ற பெரியோர். இரு கிழங்களும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி நீண்ட நேரம் பிடிவிடாது நின்ற காட்சியைக் கண்நிறையக் கண்டுகளித்தவர்கள் எங்கள் அதிபர் அவர்கள். அதை அவர்கள் வர்ணிக்கும் போது கண்ணும் வாயும் ஊற்றெடுக்கும்.

சில வருடங்களுக்கு முன் இந்திய முதற் ஜனாதிபதியாகிய பெருமை மிக்க இராசேந்திரப் பிரசாத் அவர்கள் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போது எங்கள் அதிபர் அவர்கள் மாலையிட்டு அப்பெருமகனாரை வரவேற்றார்கள் என்றும், தந்தையும் மைந்தனும் போல ஒருவரையொருவர் ஆராமை மிக்கு அணைத்துக் கொண்டார்களென்றுங் கேள்விப்பட்டதுண்டு. இச்சம்பவம் பற்றி விசாரித்த போது, அதிபர் சுவாமிநாதன் அவர்கள் கல்கத்தாவில் படித்தபோது சர்வகலாசாலையின் விடுதி அதிபராயிருந்தவர்கள் இராசேந்திரப் பிரசாத்தென்பது தெரிய வந்தது.

இத்துணைப் பெருஞ் சிறப்பினர்களாகிய அதிபர் சுவாமிநாதன் அவர்கள் எவர்களுக்குங் கொடாததொரு தனிச்சிறப்பை உப அதிபர் அவர்களுக்குக் கொடுத்தார்கள். உபஅதிபர்களோ உருவத்தாற் சின்னஞ்சிறியவர்கள். அயலூரை அறியாதவர்கள். சர்வ கலாசாலை வாசனையில்லாதவர்கள். அப்படியிருந்தும் உப அதிபர் அவர்களுக்குப் பெருமதிப்புச் செய்தார்கள் அதிபர் சுவாமிநாதன் அவர்கள். இதற்குக் காரணம் அந்தச் சின்னஞ்சிறிய உபஅதிபர் அவர்கள் பெருந் தத்துவ ஞானியாயிருப்பதைக் கண்டுகொண்டதேயாம்.

வாலிபர்கள் படிக்குமிடத்திற் குறும்புகள் நடப்பது இயற்கை. அதிபர் அவர்கள் சில சந்தர்ப்பங்களில் "உப - அதிபர் அவர்களைத் திருப்தி செய்து கொள்ளுங்கள்" என்று எச்சரிப்பதுண்டு. உப - அதிபர் அவர்களை எக்காலத்திலாயினும் தமது அலுவலகத்துக்கு அதிபர் அவர்கள் அழைத்ததில்லை. உப - அதிபர் அவர்கள் அறியாத பிரகாரம் அவர்கள் எழுந்து மரியாதை செய்வதற்கு முன்னமே, அவர்கள் முன்னிலையிற் திடீரென்று சென்று அமர்ந்து கொண்டு, "இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்" என்று கேட்பார்கள். தமக்கும் உப - அதிபர் அவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசந் தரும் வியவகாரமாயினும் உப - அதிபர் அவர்களது முடிவையே தம் முடிபும் ஆக மாற்றிக் கொள்வார்கள் எங்கள் அதிபர் அவர்கள். உப - அதிபர் அவர்கள் மல்லாகத்தில் கனம் அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் இளமையிற் படித்தவர்கள் என்பதும் இங்கே நினைக்கத்தக்கது.

இவ்வாறாகிய ஒழுகலாறுகள் அதிபர் சுவாமிநாதன் அவர்களின் ஆத்மீக அறிவாற்றலையும் உயர்குடிப் பிறப்பையும் பிரபுத்துவத்தையும் குணநலங்களையும் மேன்மேற் பிரகாசிக்கச் செய்வனவாயிருந்தன. சைவாசிரிய கலாசாலையில் ஒரு பயபக்தி தவழ்ந்து கொண்டிருந்தது.

அதிபர் அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் எவர்களோடு உரையாடும் போதும் மரியாதைத் தப்பான வார்த்தைகளை மறந்தும் உபயோகிப்பதில்லை. எவரையும் "அவர்கள்" என்ற வார்த்தையினாலே கௌரவப்படுத்திப் பேசுவதே அதிபர் அவர்கள் பழக்கம். சுடலையில் ஈமச்சடங்கு நடக்கும்போது "எங்க சீமான் எங்களை விட்டுப் போகுதோ" என்று ஒரு குரல் எழுந்தது. அக்குரல் அதிபர் அவர்களின் ஊழியர் ஒருவரின் குரல் என்றார்கள். பழைய வேளாண் பிரபுக்களுக்கும் ஊழியர்களுக்குமுள்ள தொடர்பு, புத்திர வாத்சல்யமானதொரு தொடர்பு என்பதை அக்குரல் எடுத்துரைப்பதாயிருந்தது.[16] தமிழில் "ழகரம்" தனிச் சிறப்பு வாய்ந்தது. ழகர ஓசை மற்றெந்தப் பாஷையிலும் இல்லாதது. ழகர மெய்யோடு கூடிய யாழ்ப்பாணத்திலே, ழகர ஓசை கலந்த வார்த்தைகளை, உரிய உச்சரிப்போடு வழங்குபவர்கள், விரல் மடித்தெண்ணக்கூடிய ஒரு சிலரினுஞ் சிலரேயாவர். அந்தச் சிலரினுஞ் சிலருள் ஒருவர் எங்கள் அதிபர் சுவாமிநாதன் அவர்களேயாம். அவர்கள் திருவாய் தமிழ்வாய்.

"கல்கி" ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, "ஆனந்தவிகடன்" ஆசிரியராயிருந்தபோது முதன்முதல் யாழ்ப்பாணம் வந்த தருணத்தில் சைவாசிரிய கலாசாலைக்கும் வந்தார்கள். அதிபர் சுவாமிநாதன் அவர்கள் நீண்ட அங்கியின் மீது முழந்தாளுக்குக் கீழே தொங்குகிற வழக்கமான சால்வை அழகுக்கு அழகு செய்யக் கெம்பீரமான தோற்றப் பொலிவோடு கல்கியாசிரியரை வரவேற்று வழங்கிய தலைமையுரை திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் முழக்கமான பேச்சுப் போலக் கல்கியாசிரியருக்குத் தோன்றியது. தம்பேச்சு "இனி எடாதே" என்றதொரு ஏக்க நிலையையும் கல்கி ஆசிரியருக்கு வருவித்துவிட்டது.

தமிழ்த் தனிச்சிறப்போசை அதிபர் சுவாமிநாதன் அவர்களோடு மறைகின்றது. இம்மறைவு தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் வருவதொரு தாக்கத்துக்கு அறிகுறி போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மகாரான அதிபர் சுவாமிநாதன் அவர்களின் ஆத்மா தமிழ்மயமான தண்ணிய நல்ல சாந்த நிலையை எய்துவதாக என்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

கிருத கிருத்தியர் :

கிருத கிருத்தியர் என்ற சம்ஸ்கிருத வார்த்தைக்குச் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவர் என்பது பொருள்.

அதிபர் அவர்கள்தம் பிள்ளைகளில் மிக்க பற்றுள்ளவர்கள். அந்தப் பற்றுத் தந்தை அன்பு என்ற அளவில் முற்றுப்பெறாதது; தாயன்பும் ஒருங்கு சேர்ந்தது. பிள்ளைகளின் உத்தியோக வாழ்க்கை மணவாழ்க்கைகளைக் கண்டு களிப்பதில் பேரார்வம் மிக்கவர்கள் அதிபர் அவர்கள். அவர்கள் ஆர்வம் அவர்கள் எண்ணியவாறே பரிபூரணம் எய்தியது. அவர்களுக்கு மகா சந்தோஷம். அதற்கு மேலே பேரப்பிள்ளைகளின் கல்வி செல்வ வாழ்க்கையைக் கண்டுகளிக்கும் பாக்கியமும் அதிபர் அவர்களுக்கு வாய்த்தது. பிள்ளைகளின் மணவாழ்க்கையைப் போலவே, தம் மாணவ மாணவிகளின் நல்வாழ்க்கையிலுங் கண்ணுங் கருத்துமாயிருந்தவர்கள் அதிபர் அவர்கள். அவர்கள் இருதயம் கள்ளங்கபடமற்றது; வெளிப்படையானது.

எத்தனையோ ஆசிரியர்களின் இதயங்களிலும் ஆசிரியைகளின் இதயங்களிலும் அதிபர் அவர்களின் திருவுருவம், அமரத்துவம் எய்தி வீற்றிருக்கின்றது. அவர்கள் புகழுடம்பு வாழ்க!"

இனி பண்டிதமணியவர்கள் தம் பதவியிலிருந்து 1959ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற பொழுது வெளியிடப்பெற்ற மணிவிழா மலரில் அதிபர் எழுதியதும் அவர்கள் கூட்டரவைத் தெளிவுறுத்தும். அதையும் இங்கு தருகிறோம்.[17]

"பண்டிதர் அவர்கள்

(திரு. சி. சுவாமிநாதன் அவர்கள் B.A.
சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர்)

இன்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை என்று அழைக்கப்படும் அவர்கள் என்றுமே தமிழ் ஆசிரியர்களாலும், ஆசிரிய மாணவர்களாலும் பொதுவாகத் தமிழ் நன்கு கற்ற யாழ்ப்பாணத்தவர்களாலும் "பண்டிதர் அவர்கள்" என்றே அறியப்பட்டார்கள். யானும் அவர்களை இன்றும் என்றும் பண்டிதர் அவர்கள் என்றே சொல்லி வந்துள்ளேன். பண்டிதமணி என்று சொல்ல வாய் வருகிறதில்லை; மனம் இடம் கொடுப்பதாயில்லை. பழக்கம் பெரிதல்லவா? ஆதலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எந்நாளும் "பண்டிதர் அவர்கள்" என்றே விளங்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

வட இந்தியாவில் பண்டிதர் எனப்படுவார் பிராமணர்களாகவே இருப்பார்கள். அவர்களுள்ளும் அதிகம் படித்த அதிவிவேகி-களுக்குச் சாஸ்திரி, சரஸ்வதி, மகோ பாத்தியாய என்ற பட்டங்-களும் உண்டு. உதாரணமாக, சிவகுமார் சாஸ்திரி, சுவாமி தயானந்த சரஸ்வதி என்போர் வடஇந்தியாவில் யாவராலும் போற்றப்படும் மகா மேதைகள். இவர்களைப் போல கல்வி அறிவு, சமயப் பற்று, ஒழுக்கம் என்பவற்றோடு பரந்த அரசியல் ஞானத்-தையும் உடையவராய் யாவராலும் பண்டிட்ஜி (Punditji) என்று அழைக்கப்பட்டவர் மதன் மோகன் மாளவியா அவர்களே. காசி மாநகரில் இந்து சர்வ கலாசாலையைத் தாபிப்பதற்குக் காலா-யிருந்து அதனை நிறுவுவதில் தமது உடல், பொருள், ஆவி அனைத்-தையும் அர்ப்பணித்து உழைத்த பெருமை பண்டிட்ஜி அவர்களையே சாரும். அப்பெருமகனை எத்தனையோ பண்டிதர்களைக் கொண்ட காசி மாநகரம் பண்டிட்ஜி என்றே சிறப்பாக அழைத்தது. வேறெவரும் அவ்விதம் அழைக்கப்பட்டதில்லை. இதை யான் காசி மத்திய இந்துக் கல்லூரியில் படித்த காலத்தில் அறிந்தேன்.

முப்பது வருடங்கட்கு முன் யான் சைவாசிரிய கலாசாலை அதிபராக நியமிக்கப்பட்ட காலை மேற்கூறிய பிரகாரம் பண்டிதர் கணபதிப்-பிள்ளை அவர்களை மாணவர் அனைவரும் ஏனைய ஆசிரியர்களும் பொதுப்பட "பண்டிதர்" என்றே சொல்லி வந்தார்களேயன்றி அவர்களுடைய பெயரைச் சேர்த்துச் சொல்வது வழக்கமாக இருக்கவில்லை. நாவலர் என்றால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களையும் வித்துவசிரோமணி என்றால் பொன்னம்பலபிள்ளை அவர்களையும் நாம் கருதுவது போல பண்டிதர் என்றால் கணபதிப்-பிள்ளை அவர்களையே கருதி வந்தோம். இந்த நிலை பண்டிதர் அவர்களின் விசேட அறிவு, ஆற்றல்களையும் மதிப்பையும் காட்டுவ-தாகும். இப்பொழுது பண்டிதர்களும், வித்துவான்களும், புலவர்-களும், பண்டிதமணி, ஆசிரியமணிகளும் தோன்றியிருக்கும் நிலையிலும், பண்டிதர் என்ற தனிப்பெயர் பொதுவாகவும் சிறப்பாகவும் கணபதிப்பிள்ளை அவர்களையே குறிக்கும் என்பதை ஈழநாட்டில் தமிழ் அறிந்தோர் யாவரும் ஒப்புக்கொள்வர். அப்படிப்-பட்ட சிறப்பு வாய்ந்த ஒருவரின் பண்புகளை அளவிடுவதற்கு யான் தகுதியுடையவன் அல்லன் என்பதையும் ஈண்டு கூற விரும்புகிறேன்.

ஆசிரிய கலாசாலைகளில் பலவித பாடங்களை மாணவர் படிப்-பித்துக் காட்டுவதும் அப்படிப் படிப்பித்துக் காட்டும் பாடங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் ஆசிரியர்களும் மதிப்புரை (விமர்சனம்) கூறுவதும் வழக்கம். அப்பாடங்களை (முன்) மாதிரிப் பாடம், மதிப்புரைப் பாடம், கண்டன பாடம் என்று பலவாறாகப் பெயர் சூட்டுவார்கள். இலக்கியம், பாஷை என்னும் பாடங்களைப் படிப்பிப்பதற்கு மாணவர் தெரிந்து கொண்டால் அப்பாடங்களுக்குப் பண்டிதர் அவர்கள் மதிப்புரை கூறுவது மிகச் சிறப்பாகவும் விருந்து போல் சுவைக்கத்தக்கதாகவும் இருக்கும். அவ்வித சிறப்பையும் இரசனையையும் பண்டிதர் அவர்கள் மேற்பார்வை செய்து மதிப்புரை கூறும் ஒவ்வொரு பாடத்திலும் எதிர்பார்க்கலாம். குற்றங்குறைகளை எடுத்துக்காட்டுவதிலும் அழகும் சிறப்பும் தோன்றும். எந்த மாணவரும் அதைரியப்படாமல் உற்சாகமடையக்கூடியதாகவே பண்டிதர் அவர்களின் குறிப்புரைகள் விளங்கும். அவர்களுடைய குறிப்புரைகளைக் கேட்டுக் கேட்டு யானே இலக்கியங்களைச் சுவைக்கக் கற்றுக்கொண்டேன். அவர்களிடம் கல்வி பயின்றவர்களின் நிலை எவ்வாறிருந்திருக்குமென்பதை யான் சொல்லத் தேவையில்லை. இலக்கண இலக்கியங்களை எவ்வித அலுப்புமின்றிச் சோர்வடையாது இலேசாக அவர்களிடம் கற்கலாமென்பதை எத்தனையோ மாணவர்களும் பாலபண்டிதர், பண்டிதர்களும் எனக்குச் சொல்லியுள்ளார்கள். அவர்களுடைய சகவாசத்தால் யானுமே அநேக அணிகளையும், இலக்கிய நயங்களையும் கல்லாமற் கற்றுக்கொண்டேன். அப்படியான பேராசிரியர் ஒருவரைச் சைவாசிரிய கலாசாலை இனி எப்பொழுது பெறப்போகின்றது?

பண்டிதர் அவர்கள் இலக்கியங்களுக்கு நயங்காண்பதில் இயல்பாகவே சுயவிவேகத்தைஉபயோகித்து ஏனையோர் அதிசயிக்கத்தக்க ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக்காட்டும் இயல்பினர் என்பதை யான் எத்தனையோ சந்தர்ப்பங்களில் கண்டுள்ளேன். மகா கவிஞர் யாவரும் ஒருவித இயற்கை வரங் கொண்டே கவிபாடுவர் என்ற கொள்கை இங்கும் மேலைத்தேயங்களிலும் இருந்து வருகின்றது. ஆனால் சில சமயங்களில் அவர்களுக்குத் தங்கள் கவிகளில் பொதிந்து கிடக்கும் அற்புதக் கருத்துக்கள் நயங்கள் தோன்றாமற் போகலாம். அப்படியான அரிய நயங்களைப் பண்டிதர் அவர்களைப் போன்ற அதி விவேகிகள் எடுத்துக் கூறக் கவிஞர்களே ஆச்சரியப்படுவார்கள். அதனாலேயே சிறந்த இலக்கியங்கட்குப் பலப்பல வியாக்கியானங்களும் விசேட உரைகளும் எழுந்தன. பண்டிதர் அவர்கள் இவ்விதம் புதுப்புதுக் கருத்துக்களைக் கண்டறிவதில் மிக்க ஆற்றலும், சாமர்த்தியமும் படைத்தவர்கள்.அப்பண்புகளைச் சாதாரண ஆசிரியர்களோ பண்டிதர்களோ அறியார்கள். தவிர, அவற்றைப் பயன்படுத்தவும் வழி கண்டிலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சந்தர்ப்பத்தில் பண்டிதர் அவர்களின் அபாரமான விவேக-சக்தியை விளக்குவதற்கு யான் கல்கத்தாவில் மாணவனாயிருந்த போது கேள்விப்பட்ட கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. யோகி அரவிந்தரின் தமையனார் ஒருவர் (Prof. M. M. Ghosh) அரவிந்தரைப் போலவே இங்கிலாந்தில் பிறந்து, அங்கேயே வளர்ந்து, ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்டு படித்து, ஆங்கில இலக்கியங்களில் நிரம்பிய அறிவைப் பெற்று அவற்றை நயப்பதில் விசேட ஆற்றலும் பிரியமும் உடையராய் கல்கத்தாவில் உள்ள "பிறெஸிடென்ஸி"க் கல்லூரியில் (Presidency College) ஆங்கில இலக்கியப் பேராசிரியராக நியமனம் பெற்றார். அக்கல்லூரிக்கு அந்நேரம் அதிபராய் விளங்கியவர் ஓர் ஆங்கிலேயராவர். தெனிஸன் (Tennyson) என்னும் ஆங்கிலப் புலவரின் பாக்களுக்கு நயம் காண்பதிலும் உரை கூறுவதிலும் இப்பேராசிரியர்கள் இருவருக்குமிடையில் அநேக வாதவிவாதங்களும் கருத்து வேற்றுமைகளும் ஏற்பட்டன. கடைசியாக இருவரும் ஒரு முடிபுக்கு வந்து அப்பொழுது உயிரோடிருந்த கவிஞர் தெனிஸன் அவர்களையே கேட்டறிந்து கொள்வதென்று தீர்மானித்தனர். முடிபு என்னவாயிற்று? தெனிஸன் அவர்கள் இருவரின் கருத்துக்களையும் ஒப்புக்கொண்டு தாம் பாட்டியற்றிய காலத்தில் இந்தியப் பேராசிரியர் கொண்ட கருத்தைக் கனவிலும் சிந்தையிற் கொள்ளவில்லை என்றும், ஆனால் தற்பொழுது ஊன்றிப் பார்க்கும் பட்சத்தில் அக்கருத்துப் பொருந்துவதைத் தாம் கண்டறிந்து சந்தோஷப்-படுவதாயும் இந்தியப் பேராசிரியர் அவர்களின் ஆற்றலை மெச்சுவ-தாயும் எழுதினர். அப்படிப்பட்ட வியக்கத்தக்க கருத்துக்களைக் கம்பனிலோ, காளமேகத்திலோ, இளங்கோவிலோ, வில்லிபுத்தூர-ரிலோ கண்டறியக் கூடிய ஆற்றல் படைத்தவர் பண்டிதர் அவர்கள் என்பதை அத்தாட்சிப் பண்ணுவதற்காகவே இக்கதையை எழுதலானேன்.

யான் இளைப்பாறிய காலை பண்டிதர் அவர்கள் என்பொருட்டு வெளியிடப்பட்ட பாராட்டு மலரில் "இருபது வருஷங்களுக்கு மேலே ஊடியும், கூடியும், உடன் வாழ்ந்த வாழ்க்கை அநுபவம் இது" என்று தமது உரையை முடிக்கின்றார்கள். அவர்கள் கூற்றை யான் மிக்க மனமகிழ்ச்சியோடு அங்கீகரிப்பதுடன் அதில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த உண்மையைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில், சைவாசிரிய கலாசாலையில் எங்கள் வாழ்க்கை ஒரு குடும்ப வாழ்க்கை போலத் திகழ்ந்தது. யான் அதிபராயிருந்த காலம் முற்றிலும் அதன் பின்னரும் பேராசிரியர்கள் அனைவரும் உடன் பிறந்த சகோதரர் போல் மூத்தோரைக் கனம் பண்ணுவதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு அன்பும் மதிப்பும் காட்டுவதிலும் இளையோரை அன்பாய் அணைத்துக் கொள்வதிலும் தவறியது கிடையாது. ஆனால், சில சந்தர்ப்பங்களில் எங்கள் குடும்ப வாழ்க்கைக்குப் பங்கம் விளைந்ததென்றால் அது முகாமைக்காரர்களின் சதி-யாலோ, சூழ்ச்சியாலோ, சர்வாதிகாரத்தாலோ வந்ததென்றே சொல்ல வேண்டும். அவ்விதம் குடும்ப வாழ்க்கையைப் புறக் காரணங்கள் பாழ்படுத்துவது சகசம். ஆனால், எங்கள் வாழ்க்கை "ஊடலின் பின் கூடல்" எவ்விதம் இருக்குமோ அவ்விதம் இருந்த-தென்பதைப் பண்டிதர் அவர்களே சொல்லாமற் சொல்லிவிட்டார்கள். அத்தகைய பேரன்புக்குரிய அவர்களை நாம் என்றுமே பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இளைப்பாறிய பண்டிதர் அவர்களைப் பழைய மாணவர்களும் ஆசிரியர்களும் பண்டிதர்களும் எம்மொழிக்கும் சமயத்துக்கும் அரும்பெருஞ் சேவைகளைச் செய்யக்கூடிய முறையில் எவ்விதம் பயன்படுத்தப் போகிறார்களென்பது ஒரு முக்கிய பிரச்சினையாகும். அவர்களுடைய சுகத்தைப் பேணவும் கல்வி, சமயம், இலக்கிய இலக்கண முயற்சிகளை ஊக்கப்படுத்தவும் கூடிய ஒழுங்குகளைப் பழைய மாணவர்கள் செய்து அவர்களின் அரிய பொக்கிஷங்களைப் பெற்று நன்மை அடைவார்களாக. இளைப்பாறிய நிலையிலும் பண்டிதர் அவர்கள் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றக்கூடிய உடல் நலத்தையும் நீண்ட ஆயுளையும் இறைவன் அவர்களுக்கு அருளுவாராக என்று பிரார்த்திப்போமாக."

ஒருவர் மற்றவரைப் பற்றி மனந்திறந்து மதிப்புடன் எழுதியதைப் பார்த்தோம். யான் எழுதிய "நினைவில் நிற்கும் பண்டிதமணி" என்னும் கட்டுரையிலும் பண்டிதமணி - அதிபர் கூட்டரவு குறித்துச் சில அமிசங்கள் கூறப்பெற்றுள்ளன. பண்டிதமணி நினைவுமலரில் உள்ள சில கட்டுரைகளிலும் இக்கூட்டரவு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. கனக செந்திநாதன், மூன்றாவது கண், பக். 6, 23, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், 1959.
2. வித்தியானந்தன், சு., இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்-பிள்ளை, பண்டிதமணி நினைவு மலர், பக். 2, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கனக செந்திநாதன், மே. கு. முகவுரை.

4. கனகசிங்கம், க., திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பின்னணியில் பண்டிதமணி, பண்டிதமணி நினைவு மலர், பக். 70.

5. பண்டிதமணி நினைவுமலர், படங்களின் கீழ், பக். 128.

6. கனகசிங்கம், க., மே.கு. பக். 70.

7. சண்முகசுந்தரம், த., பண்டிதமணியின் பார்வையில் ஈழத்துத் தமிழ்ப் புலவர், பண்டிதமணி நினைவு மலர், பக். 24, 1989.

8. கனகசிங்கம், க., மே.கு. பக். 70.

9. Murugesapillai, T., Mr. S. Swaminathan, B. A., J.P., திரு. சி. சுவாமிநாதன் அவர்களின் நினைவுமலர், 14.06.1969.

10. கனக செந்திநாதன், மே. கு. பக். 26., கனகசெந்திநாதன் அதிபர் பக்கம் நின்றவர்களை பெரிய மனிதர்கள், கனவான்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

11. சச்சிதானந்தன், க. பண்டிதமணியின் மும்முகங்கள், 94ஆவது பிறந்த தின உரை, பக். 17, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, 1993.

12. கணபதிப்பிள்ளை, சி. பண்டிதமணி, "அதிபர் திரு. சுவாமிநாதன் அவர்களுடன் மலைக்காட்சி", ஈழநாடு, வாரமலர், 14.10.1984.

13. சி. சுவாமிநாதன் அவர்களின் சேவை நலம் பாராட்டு மலர், யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கம், 29.12.1951.

14. திரு. சி. சுவாமிநாதன் அவர்களின் நினைவு மலர், பக். 21, 14.06.1969.

15. பண்டிதமணியவர்கள் மக்களால் பி.எஸ். எனக் குறிப்பிடப்பெற்ற டாக்டர் எஸ். சுப்பிரமணியம் (Provincial Surgeon) அவர்களையும் வண்ணார்பண்ணை வைத்தியலிங்கம் செட்டியார் போன்றோரையும் தமது கட்டுரைகளில் பிரபு, மகாப்பிரபு என்ற வார்த்தைகளால் குறிப்பிட்டுள்ளனர். டாக்டர் சுப்பிரமணியம் பண்டிதமணியின் வைத்தியர்.

16. பண்டிதமணியின் இக்கருத்து கைலாசபதி அவர்கள் "எல்லோரும் வாழட்டும்" என்ற அருள் நோக்கை (அன்பு முகத்தை) பண்டைய எசமான் அடிமைகளிற் காணலாம். அடிமை விரும்பி ஆட்பட்டது. எசமானின் "ஆசௌசம் கூட அடிமைக்குண்டு" எனக் கூறியதன் எதிரொலி எனலாம் (பார்க்க: மௌன தவ முனிவர் பொ. கைலாசபதி வாழ்வும் சிந்தனையும், தொகுப்பு: சுந்தரலிங்கம் கைலாசபதி, அளவெட்டி, யாழ்ப்பாணம், 2001).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சுவாமிநாதன், சி., பண்டிதர் அவர்கள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் மணிவிழா மலர், யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கம், 1959. இதே மணிவிழா மலரில் பண்டிதமணியின் ஞானகுருவாகிய உடபஅதிபர் கைலாசபதியவர்களும் பண்டிதமணியைப் "பண்டிதர்" என்றே குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# பண்டிதமணியின் 1951 தமிழ் விழாச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் 1951 ஆம் ஆண்டு ஒரு தமிழ் விழா (மகாநாடு?) நடைபெற்றது. அது "முன் பின் கண்டு கேட்டறியாத பாரிய தமிழ்மகாநாடு. சென்னையும் யாழ்ப்பாணமும் சேர்ந்து நடத்தின" (செந்தமிழ்க் களஞ்சியம், ப. 93). தமிழ் விழாவில் இந்திய அறிஞர்களும் ஈழத்து அறிஞர்களும் சொற்பொழிவாற்றினர். பண்டிதமணி 01-05-1951 அன்று இலக்கியப் பகுதியில் "தமிழ்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இலக்கியப் பகுதிக்குத் தலைமை தாங்கியவர் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள்.

தமிழ்விழாப் பந்தலில் முன்னர் என்றும் கண்டிராத சனக்கூட்டம் இருந்தது. கூட்டத்தில் இளைஞனாக யானும் ஒருவன். திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையின் உபஅதிபர் பொ. கைலாசபதி அவர்களின் சில கருத்துக்களைப் பண்டிதமணி ஒரு கோட்பாடாகத் தமிழ் விழாவில் வெளியிடப் போகிறார் என்று தமிழ் விழாவிற்கு முன்னரே எனது தந்தையார் பலரிடம் கூறியது நினைவில் இருக்கிறது. இது பற்றி நினைவில் நிற்கும் பண்டிதமணி என்னும் கட்டுரையில் சிறிது விரிவாக எழுதியுள்ளேன்.

இந்தத் தமிழ் விழாவில் பண்டிதமணியின் சொற்பொழிவு யாழ்ப்பாணத்துக்கே பெரும் புகழைத் தேடித் தரும் என ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் எதிர்பாராத வகையில் பண்டிதமணியின் சொற்பொழிவு அன்று சிறப்பாக அமையவில்லை. மக்கள் எதிர்பார்ப்புத் தோல்வியில் முடிந்தது. பண்டிதமணியே தமது அன்றைய சொற்பொழிவு தோல்வி என ஒப்புக்கொண்டுள்ளார். அவர் செந்தமிழ்க் களஞ்சியத்தில் 'டாக்டர் உ. வே. சா. ஐயர் அவர்களில் ஏன் இந்தத் துவேஷம்' என்னும் கட்டுரையில் (பக். 93),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பினைந்திணை என்னுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிற்று" என்பதில் தமிழ் என்பது பற்றி நான் சொற்பொழிவாற்றினேன். சமண, பௌத்த காவியங்களைச் சங்கம் அங்கீகரிக்குமா என்ற பிரச்சினையை எழுப்பினேன். என் கருத்துக் காத்திரமானதாயிருக்கலாமாயினும், தலைவர் என் விஷயத்திற் 'கூனி'யாயிருந்தார். முன்னமே என் கண்டன பாணங்களுக்கு இலக்காகி இருந்தவர் தலைவர். நான் அதனை மறந்திருக்கலாம்; மனிதர் அதை மறந்திருக்கவில்லை. எனது கண்டனப் போக்கை விரும்பாதவர்களுக்கு அவர் செயல், மகிழ்ச்சியளித்ததாயினும், சிலரைக் கொதிக்க வைத்தது. 'தினகரன்' ஆசிரியர் கொதிப்புத் தலைக்கு மிஞ்சியது. தலைவரைத் தாக்கி, 'தமிழ்ச்சாறு' என்று தலையங்கத்தைத் தீட்டி, தமிழ் பற்றிய கருத்துக்களுக்கும் தலைவர்க்கும் வெகுதூரமென்றதன்றி, எனக்கொரு "மணி"ப்பட்டமும் சூட்டினார். அதைக் கல்கி ஆசிரியர் கல்கியில் அநுவதித்தார். தோல்வித்தானத்தில் "மணி"ப்பட்டமொன்று தோன்றி நிலைத்து விட்டது. அதில் உள்ளூரப் பெருமதிப்பு எனக்கு உண்டு போலும்."

என எழுதியுள்ளார். பண்டிதமணியின் சொற்பொழிவு எனது தந்தையாருக்குப் பெரிய ஏமாற்றமாகியது. அதனைக் கனக செந்திநாதனும் தோல்வியென்றே தமது மூன்றாவது கண் என்னும் நூலில் (பக். 33) குறிப்பிட்டுள்ளார். பண்டிதமணியுடன் நெருங்கிப் பழகியவர் ஒருவர் மட்டும் "தமிழ்" பற்றிய பண்டிதமணியின் உரை உச்சமாயமைந்தது (பண்டிதமணி நினைவுமலர், பக். xi) என்கிறார். அவர் என்ன கருத்தில் இப்படிக் கூறினாரோ தெரியவில்லை.

தோல்விக்கு உண்மையிலே காரணம் யாது? பண்டிதமணி தலைவர் சேதுப்பிள்ளை மீது பழிபோடுகிறார். தலைவர் தமது கண்டனங்களுக்குப் பழிவாங்கினார் எனப் பொருள்பட எழுதியுள்ளார். சேதுப்பிள்ளையின் திருக்குறள் நூல் நயம் என்னும் நூலுக்குப் பண்டிதமணி (இந்து சாதனத்தில்?) கண்டனம் எழுதியதாக அறிகிறோம். தலைவர் தம் விஷயத்தில் கூனியாயிருந்தார் எனக் கூறும்போது "எப்படி" எனக் கட்டுரையில் இருந்து எதுவுமே தெளிவாக, உறுதியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. தலைவர் பண்டிதமணிக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தைக் கொடுக்கவில்லை - நேரம் கட்டுப்படுத்தப்பட்டது என்பர் சிலர். இதுதான் "கூனி"யாயிருந்தார் என்பதற்குப் பொருள் என்பர். ஆயின், பண்டிதமணியின் மற்றும் ஒரு கூற்றையும் கருத்தில் கொள்தல் வேண்டும். அது (செந்தமிழ்க் களஞ்சியம், பக். 93)

"திரு. சேதுப்பிள்ளை அன்று தாம் நடந்து கொண்டதற்குப் பச்சாத்தாபம் உற்றார் என்று நான் அறிந்ததுண்டு. அதனால் நான் குற்றமற்றவனென்று சொல்ல முடியாது. ஒன்றைச் சொல்லும்போது, சொல்லுவோன், தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பது பழைய மரபு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். சேதுப்பிள்ளையவர்கள் அன்று எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை அறிந்தால்தான் அவரது பச்சாத்தாபத்தை விளங்கிக் கொள்ள முடியும். "நடந்து கொண்டது" என்பது நேரத்தைக் கட்டுப்படுத்தியது மட்டுமா? அன்றி அவர்தம் தலைமையுரையில் ஏதாவது கிண்டலாக, கேலியாகக் கூறியதுமா? பண்டிதமணி கூறவந்த ஆழமான பொருளைக் கண்டுகொள்ளாமல் பாடல்களில் வந்த சிலேடைகளைச் சுவைத்து சிலேடையுள்ள வேறு சில பாடல்களைச் சேதுப்பிள்ளை எடுத்துக்காட்டினார். அவர் பொருளை விளங்காமல் சிலேடையில் மட்டும் மயங்கியது பண்டிதமணிக்கு ஆச்சரியமாய் இருந்ததாம். இனி, பண்டிதமணி தாம் குற்றமற்றவன் என்று சொல்ல முடியாது என ஏன் கூறுகின்றார்? அவர்தம் குற்றந்தான் யாது? ஒன்றுமே தெளிவாகத் தெரியவில்லை. பண்டிதமணி சொற்பொழிவு நிகழ்த்தத் தம்மைத்தாம் தகுதிப்படுத்திக் கொள்ளவில்லை என நினைத்தாரா? அதைத்தான் குற்றம் எனக் கருதினாரா? உப அதிபர் அவர்களின் கருத்துக்களைப் பண்டிதமணி விளங்கியும் விளங்காமலும் எழுதிக் கொண்டார் என அறிவோம். தமது பொருள் காத்திரமான-தாயிருக்கலாம் என அவர் கருதியதை முன்னரே காட்டினோம். அன்றி, காலம், இடம் போன்றவற்றிற்கு ஏற்பப் பேசுவதற்குத் தம்மைத் தகுதிப்படுத்தவில்லை எனக் கருதினாரா? எதையும் உறுதியாகக் கூறமுடியாத நிலையில் உள்ளோம். சான்று இன்றி அப்படி இருந்திருக்கலாம்; இப்படி இருந்தி-ருக்கலாம் என ஊகிக்க விரும்பவில்லை. இவ்விடத்து கனக செந்திநாதன் தரும் விளக்கம் ஒன்று கருதற்பாலது. அது (மூன்றாவது கண், பக். 33),

> "நல்ல தலைமையும் சிறந்த இரசிகக் கூட்டமும் சந்தித்துவிட்டால் அவர் பிரசங்கம் உச்ச நிலைக்குப் போய்விடும். இவை இல்லாது தோற்றுப்போன பிரசங்கங்களும் உண்டு. தமிழ் விழாப் பிரசங்கம் அப்படித் தோற்ற பிரசங்கத்தில் ஒன்று."

என உள்ளது. தலைவர் "கூனியாயிருந்தார்" என்றமையால் பண்டிதமணிக்குத் தலைவர் பற்றி - அன்றைய தலைமை பற்றி - நல்ல அபிப்பிராயம் இருக்க-வில்லை என்பது உண்மை. சேதுப்பிள்ளையவர்கள் இந்தியர் - வேண்டு-மானால் வேறுநாட்டவர் என்றும் சொல்லலாம். ஆயின் விழாப் பந்தலில் இருந்தவர்கள் யாழ்ப்பாணத்தவரே. அன்று பண்டிதமணியின் வழக்கமான இரசிகக் கூட்டமும் அங்கு முன்வரிசையில் இருந்திருக்கும். கனக செந்தி-நாதன் கூறும் "நல்ல தலைமை", "இரசிகக் கூட்டம்" என்பன பற்றி பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள் என்னும் கட்டுரையில் ஓரளவு விரிவாகக் கூறியுள்ளேன்.

பண்டிதமணி சொற்பொழிவுக்கு எடுத்துக்கொண்ட பொருள் "தமிழ்" என்றோம். "தமிழ்" என்றால் பொதுவாக அனைவரும் அறிந்த ஒரு பொருள் எனக் கொள்ளப்படும். இதுபற்றிப் பேசுபவர் என்ன பேசக்கூடும் என்ற எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்பார்ப்பு - பந்தலில் இருந்தவர்களிடம் இருந்திருக்கும். ஆனால், சொற்பொழிவைக் கேட்கும் போது ஏதோ வேறு விஷயம் பேசுவதாகத் தோன்றியிருக்கும். பண்டிதமணி இராகத்துடன் பாடிய திருவெம்பாவைப் பாடலடிகள், திருப்பாவைப் பாடலடிகள் திரிகூடராசப்ப கவிராயர் பாடல் அடிகள், இருபாலைச் சேனாதிராய முதலியார் பாடல், முத்துக்குமாரகவிராச சேகரரின "முடிவிலாதுறை" என்னும் பாடல், அப்பாடலில் வரும் - அனைவருக்கும் பழக்கமான - ஊர்ப் பெயர்கள் மக்களுக்கு இனித்திருக்கும். இவற்றைப் பாடும்போது பந்தலில் இருந்த யானும் சுவைத்தேன். அதற்கு மேல் அவர் கூறிய கருத்தை - கோட்பாடாகிய கருத்துப் பொருளை - எத்தனை பேர் விளங்கிக் கொண்டார்கள் என்பது கேள்விக்குறி. பண்டிதமணி நேரக் கட்டுப்பாடு காரணமாகச் சொற்பொழிவை மிகச் சுருக்கியதால் தெளிவின்மை ஏற்பட்டிருக்கும். தினகரன் ஆசிரியர் பண்டிதமணியின் தமிழ் பற்றிய கருத்துக்களுக்கும் தலைவர்க்கும் வெகுதூரம் என்று தலையங்கத்தில் எழுதினாரல்லவா? அவ்வாறெனின் பந்தலில் இருந்த பொதுமக்களின் நிலையை நாம் சொல்ல வேண்டுமா? அவர்கள் ஏழைகளாகவே இருந்திருப்பர்.

பண்டிதமணி தமிழ்விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்தான் தினகரனில் 13.05.1951 அன்று வெளிவந்தது. முழுமையான சொற்பொழிவு ஏன் வெளியிடப்படவில்லை எனத் தெரியவில்லை. அங்கு கட்டுப்பாடு எதுவும் இருந்திருக்காது. சொற்பொழிவையே போற்றித் தலையங்கம் எழுதிய தினகரன் ஆசிரியர் விரும்பினால் வெளியிட்டிருக்கலாம். சுடச்சுட வெளியிட விரும்பியமை காரணமாகலாம். அது பின்னர் செந்தமிழ்க் களஞ்சியத்தில் முதலாவது கட்டுரையாகப் பதினெட்டுப் பக்கங்களில் வெளியிடப்பெற்றுள்ளது. இந்த நூலிலாவது முழுமையான கட்டுரை ஏன் வெளியிடப்படவில்லை எனத் தெரியவில்லை. இது பண்டிதமணியின் கட்டுரைகள் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டதாகவே காணப்படுகிறது. பொதுவாக அவரது கட்டுரைகளில் உள்ள கருத்துக்களைப் புரிந்துகொள்வது கடினமாக இருப்பதில்லை. அவரது தமிழ், தமிழ்நடை எளிமை வாய்ந்தன. ஆனால், குறிப்பிட்ட இந்தக் கட்டுரையின் கருத்தோட்டத்தைப் பின்பற்றுவது நமக்குக் கடினமாகவே உள்ளது. கட்டுரையில் இருப்பது கருத்தியலான பொருள். எனவே, கட்டுரைக் கருத்துக்களை விளங்கிக் கொள்வதற்கு முயற்சி வேண்டியுள்ளது. முயன்றாலும் பூரண வெற்றி கிடைப்பதாக இல்லை. சொற்பொழிவு சாரமாக வெளிவந்த காரணத்தாலும் கடினமானதாகலாம். செந்தமிழ்க் களஞ்சியத்தில் உள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றின் சாரமும் "திறவுகோல்" என பக்கங்கள் ix - xxii இல் தரப்பட்டுள்ளது. ஆயத்தம் செய்த சொற்பொழிவின் சாரமே தமிழ்விழாவில் சொற்பொழிவாய், அதன் சாரமே கட்டுரையாய், அதன் சாரமே "திறவுகோல்" எனத் தரப்படும் போது அத்திறவுகோல் கட்டுரையைத் திறப்பதற்கு உதவுவதாக இல்லை. எனினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு தமிழ் இலக்கிய அறிவுடன் கட்டுரையைப் படிக்கும்போது ஓர் அரிய, புதிய கோட்பாடு கூறப்படுகிறது என்ற உள்ளுணர்வு தோன்றுகிறது. ஆயின் முழுமையும்பொருள் விளக்கமும் இல்லாததால் அது கடினமாகத் தோன்றுகிறது.

தமிழ்விழாவில் "தமிழ்" என இருந்த தலைப்புப் பின்னர் "தமிழ் நுதலியது களவு களவியல் நுதலியது தமிழ்" என மாற்றப்பட்டுள்ளது. இப்படி மாற்றியவர் தினகரன் பத்திரிகை ஆசிரியராக இருக்கலாம். இது வினோதமான தலைப்புக்களில் ஒன்று; ஒரு புதிர்; அதிர்ச்சியைத் தரவல்லது; இத்தகைய வேறு தலைப்புக்களும் உண்டு என்பர் சச்சிதானந்தன் (பண்டிதமணியின் 94ஆவது பிறந்ததின உரை, பக். 8). மேலும், அதே உரையில் (பக். 26) சச்சிதானந்தன் பண்டிதமணியின் சொற்பொழிவு பற்றி,

> "தென்னகத்திலே ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள் இராமாயணத்தை விளக்குமுகமாகப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். பி. ஸ்ரீ ஆசார்யா ஆனந்தவிகடனில் கம்பராமாயணம் முழுவதையுமே தொடராக விளக்கியுள்ளார்; டி.கே.சி. கம்பரின் இராமாயணக் காட்சிகளை இரசனை தோன்ற விரித்திருக்கிறார். யாருமே கம்பராமாயணத்தைத் தொல்காப்பியம் வழிவந்த அன்பினைந்திணைக் கோட்பாட்டுக்கும் இறையனார் களவியல் சொன்ன பொருளதிகாரத்துக்கும், வள்ளுவர் கண்ட அறநெறிக்கூடே செல்கின்ற ஒரு தனியிழை என்ற கருத்திற் காணவில்லை. இதைத்தான் தமிழ்விழாவிலே தமிழ் நுதலிற்று என்று விரித்துரைக்க முயன்றிருக்கிறார்."

எனக் கூறியுள்ளார். இவ்வாறு கொண்டமை சிந்திக்கற்பாலது. விரித்துரைக்க முயன்றிருக்கிறார் என்னும் புதிய கருத்து - புதிய கோட்பாடு - என்பதனால் சொற்பொழிவைக் கேட்டவர்களை, பின்னர் கட்டுரையை வாசிப்பவர்களைப் பொறுத்த வரையில் கொண்ட பொருள் விளக்கம் பெறும் வண்ணம் விரித்துரைத்தமை போதாது என்று கருத வேண்டியுள்ளது.

பண்டிதமணியின் கட்டுரை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பொதுவாக தமிழ்கற்ற அனைவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால், அதனால பயன் அடைய முடியவில்லை. இந்தக் கட்டுரையில் உள்ள கருத்தைப் பண்டிதமணி வேறு சில கட்டுரைகளிலும் குறிப்புப் போலக் கூறியுள்ளார். இங்கே எமது அறியாமையை அறியாமை என்று சொல்லி ஒரு வேண்டுகோள் செய்ய விரும்புகிறோம். இன்றும் பண்டிதமணியிடம் கற்றவர்கள் இருக்கிறார்கள்; அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் சிலர் இருக்கிறார்கள்; இவர்களைவிட தமிழ்ப் பேரறிஞர்களும் பல்கலைக்கழகத்து தமிழ்ப் பேராசிரியர்களும் உளர். பலருக்கும் பயன்படும்படி பண்டிதமணியின் இந்தக் கட்டுரைக்கு யாராவது விரிவான பொருள் விளக்கம் (interpretation) எழுதித் தெளிவுபடுத்தி வெளியிடுவதற்கு முன்வருவார்களா? இது பெருந்தொண்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாகும். உப அதிபர் பொ. கைலாசபதியவர்களின் சிந்தனைகளுக்குப் பொருள் விளக்கம் எழுதும் முயற்சி ஆரம்பமாகியுள்ளது. இங்கு இலக்கியக் கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களின் "சைவ சித்தாந்த நோக்கிற் கைலாசபதி ஸ்மிருதி" என்னும் நூலைக் காட்டலாம். மேல்நாடுகளில் பெரும் அறிஞர்களுடைய சிந்தனைகளுக்குப் பொருள் விளக்கம் எழுதி வெளியிடும் வழக்கம் உண்டல்லவா? அவ்வாறு இங்கும் செய்யலாம் அல்லவா? அறிவு வளர்ச்சியில், தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் முன்வருவார்களாக!

## உசாத்துணை நூல்கள்

கணபதிப்பிள்ளை, சி. (1987), *செந்தமிழ்க் களஞ்சியம்*,

கனக செந்திநாதன். (1959), *மூன்றாவது கண்*,

சச்சிதானந்தன், க. (1993), *பண்டிதமணியின் மும்முகங்கள்*, பண்டிதமணியின் 94ஆவது பிறந்த தின உரை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# பண்டிதமணியின் பதிப்பு

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதி வெளியிட்ட கட்டுரைகள் மிகப் பல. அவர் உரை எழுதிய நூல் ஒன்று - அது கந்தபுராண தக்ஷகாண்ட உரை என்பது. மேலும் கண்ணகி தோத்திரம் உட்பட அவ்வப்போது பாடல்கள் சிலவும் எழுதியுள்ளார்; இரண்டொரு கதைகளும் எழுதியுள்ளார். இவற்றை விட அவர் பதிப்பித்த நூல் ஒன்றும் உண்டு. அது சேற்றூர் அருணாசலக் கவிராயர் பத்தியரூபமாக இயற்றிய ஆறுமுக நாவலரவர்கள் சரித்திரம் என்னும் நூலாகும். இந்நூலைப் பண்டிதமணி இரண்டாம் பதிப்பாக கலி. ௫௦௩௬ (பவ ௵ ஆவணி ௴) இல் (1934) பருத்தித்துறை கலாநிதியந்திரசாலையிற் பதிப்பித்தார். இது முன்னர் சென்னை அல்பீனியன் அச்சுக்கூடத் தலைவர் சா. யோ. சவுரியப்பா அவர்களால் 1898 இல் பதிப்பிக்கப்பட்டது.

பண்டிதமணி தமது பதிப்பிற்கு எழுதிய முகவுரையின் முடிவில்,

> "இந்நூல் சில காலம் கிடையாமலிருந்தமையால், யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சிவாலயப் பிரதமாசாரியர் ஸ்ரீமத் சி. சபாபதிக் குருக்கள் அருமையாகப் பேணி வைத்திருந்த பிரதியை வாங்கி, நூலிலாவது முகப் பேட்டிலாவது ஒரு அக்ஷரமேனும் மாற்றாது அந்தப்படியே இந்நூலை அச்சிட்டேன்."

எனக் கூறியுள்ளார்.

சரித்திரத்தை இரண்டாம் பதிப்பாகப் பதிப்பிப்பதற்குக் காரணம் சில காலம் கிடையாமலிருந்த சரித்திரத்தைக் கிடைக்க வைப்பதே எனக் கூறப்பெற்றுள்ளது. இதற்கு மேல் முக்கியமானவை எனக் கருதப்பெற்ற சில விஷயங்களையும் கூறுவதற்கு ஒரு வாய்ப்பைப் பண்டிதமணி இப்பதிப்பின் மூலம் தேடிக் கொண்டார் எனக் கொள்வது தவறாகாது. இரண்டாம் பதிப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவுரையை ஊன்றிப் படிப்பவர்கள் பண்டிதமணியின் உள்ளக்கிடக்கையை உணரத் தவறமாட்டார்கள். சரித்திரத்தின் மூன்றாம் பதிப்பிற்குத் தாம் எழுதிய முகவுரையில் காரணத்தை வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

பண்டிதமணி தமது முகவுரையில் இறுதிப் பந்திக்கு முந்திய பந்தியில் - ஒரு சிறிய வசனத்தையும் இரண்டு நீண்ட வசனங்களையும் கொண்ட அந்தப் பந்தியில் மட்டும் அருணாசலக் கவிராயரவர்கள் பற்றிக் கூறியுமுள்ளார்; அருணாசலக் கவிராயர் கூறிய சரித்திரத்தின் நம்பகத் தன்மையைத் தக்க சான்று வலிமையுடன்

> "பத்தியரூபமாகிய இச் சரித்திரத்தை இயற்றியவர் ஸ்ரீமத் அருணாசலக் கவிராயரவர்கள். இவர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களுக்கும் நாவலரவர்களுக்கும் மாணாக்கரும், திருவாவடுதுறையாதீனத்தில் இரண்டாம் பட்டமாயிருந்தவரும், இந்நூல் அச்சிடுங்காலத்தில் உயிரோடிருந்தவருமாகிய ஸ்ரீமத் நமசிவாயத்தம்பிரான் சுவாமிகளுக்கு மாணாக்கர். ஆகவே ஆதீனத்துக்கும் நாவலரவர்களுக்கும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் தம்பிரான் சுவாமிகளுக்கு நன்றாகத் தெரிந்தன என்பதும், அவற்றிற்கு மாறுபடா வகையாகவே கவிராயரவர்கள் பாடினார்களென்பதும் தெரிகின்றன."

என அழுத்திக் கூறிவிட்டு உ. வே. சா. ஐயரவர்களின் குழப்பம் பற்றிக் கூறுகிறார்.

பண்டிதமணி பன்னிரு பக்கங்களைக் கொண்ட தமது நீண்ட முகவுரையில் மூன்று வசனங்களை மட்டும் கொண்ட ஒரு பந்தி தவிர்ந்த ஏனைய பந்திகளில் சாமிநாதையர் எழுதிய பிள்ளையவர்கள் சரித்திரம் பற்றியும் நாவலர் பற்றியுமே எழுதியுள்ளார். ஐயரவர்கள் தாம் எழுதிய சரித்திரத்தில் நாவலர் பற்றித் தம் மனம் போனவாறு எழுதியதைச் சுட்டிக்காட்டி, "ஐயரவர்களுடைய எழுத்தின் உண்மையை அறிஞர்கள் ஆராய்ந்து சிந்திக்கக்கடவர்கள்" என எழுதியுள்ளார். பண்டிதமணியின் முகவுரையாலே நாவலரவர்கள் சரித்திரம் இரண்டாம் பதிப்புச் சிறப்புப் பெறுகிறது எனலாம். அதாவது பதிப்பின் விசேடம் முகவுரையே. பண்டிதமணி தமது முகவுரையை மிக நிதானமாக ஆய்வு நோக்கில் எழுதியுள்ளார். பின்னாளில் ஐயரவர்கள் மீது கடுஞ்சொற்களைப் பிரயோகித்துக் கொட்டிய துவேஷம் இம்முகவுரையில் இல்லை. எனினும் ஐயரவர்கள் பற்றிப் பண்டிதமணி அன்று கொண்டிருந்த அபிப்பிராயத்தை

> "(பிள்ளையவர்கள் சரித்திரம் முதற் பாகத்தில் உள்ள) கதைகளை யாரும் நம்பத்தக்கனவாக வர்ணிப்பதில் கம்பர் முதலிய எந்த வித்துவானும் ஐயரவர்களுக்குச் சமமாகார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இது மெய்தானா - இராமசாமிப் பிள்ளையுடைய சூழ்ச்சியா - ஐயரவர்களுக்குச் சொன்னவர்களது அணாப்பு வார்த்தையா என்பது ஆராயத்தக்கது. எல்லாமாயுமிருக்கலாம்."

என அவர் எழுதியுள்ளதன் மூலம் அறியலாம்.

இறுதியாக, பதிப்பு என எண்ணும்போது அருணாசலக் கவிராயரின் நாவலர் சரித்திரம் பாடலிலே இருப்பதால் இக்காலத்தில் அதனைப் படித்து விளங்கும் ஆற்றல் உள்ளவர் மிகச் சிலரே. பாடல் மொழி கடினமானதல்ல. பாடல்களைச் சந்தி பிரித்துப் படிப்பதுதான் பிரச்சினையாக இருக்கும். எனவே அடுத்து வெளிவரும் பதிப்பில் பாடல்களைச் சந்தி பிரித்து வேண்டிய இடத்துப் பாடற்பொருள் பற்றிக் குறிப்பெழுதிச் சேர்த்துக்கொள்வது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். தமிழகத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தமிழறிவு வேண்டுபவர் அனைவருமே நாவலர் சரித்திரத்தை அறிதல் வேண்டும். பண்டிதமணி, பொ. கைலாசபதி போன்றோர் நாவலரைப் பற்றிச் சிந்தித்தனர். ஆனால் இன்று?

(குறிப்பு : இம்முகவுரை தமது பெயரில் உளதாயினும் அதனை எழுதியவர் த. கைலாசபிள்ளையவர்களே எனத் தம்முடன் நெருங்கிப் பழகிய சிலருக்குப் பண்டிதமணி கூறியதாக அறிகின்றோம்.)

V. SIVASAMY
UNIVERSITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# சரியான பண்டிதமணியைக் கண்டு கொள்தல்

ஈழத்திலே தமிழும் சைவமும் என எண்ணிப் பார்க்கும் போது நாவலர் பெருமானுக்குப் பின் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களையே கருத வேண்டியுள்ளது. உமா மகேசுவரன் பண்டிதமணியைத் "தமக்குவமையில்லாத தமிழறிஞர்" என்று தாம் முன்னர் கூறியதை மீண்டும் காட்டியுள்ளார் (முத்திரையிற் பண்டிதமணி, பக். 48). தலைசிறந்த அறிஞர்களுக்கு உவமைதான் ஏது? பண்டிதமணியின் அறிவும் ஆற்றலும் ஆளுமையும் பன்முகப்பட்டன; தனித்தன்மை வாய்ந்தன. எனவே, இக்காலத்தில் சரியான பண்டிதமணியை ஒருவரே கண்டு கொள்வது என்பது எளிதான காரியமன்று.

பண்டிதமணியைப் பச்சைப்படியாக உணர்வது பற்றியும் (மூன்றாவது கண், பக். 17) சரியான பண்டிதமணியைக் கண்டுகொள்வது பற்றியும் (பக். 38) முதன்முதலாக எழுதியவர் கனக செந்திநாதனே. அவ்வாறு கண்டுகொள்வதற்குப் பண்டிதமணியின் கட்டுரைகளில் இருந்து தொகுக்கப்பெற்ற பல நூல்கள் வெளிவருதல் வேண்டும் என்று விரும்பினார். அத்தகைய நூல்கள்,

1 மறந்த பாரதம்
2. யாழ்ப்பாணக் கலாசார மூலம் கந்தபுராணம்
3. யாழ்ப்பாணத்து ஒளி விளக்குகள்
4. வேதாகம சைவசித்தாந்தம்
5. கதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நாடகங்கள்
7. கிருஷ்ணன் தூது
8. தெய்வயானையம்மை திருமணம்
9. துறவும் கீதையும்
10. ஆறுமுக நாவலர்
11. அன்பினைந்திணை

என விரியும் என்றார். ஆயின் இவற்றில் அடங்கக்கூடிய கட்டுரைகள் எவை எவை எனக் கூறவில்லை. கூறியிருப்பின் பின்னர் செயற்பட்டவர்களுக்கு வழிகாட்டலாக, பெருந்துணையாக இருந்திருக்கும். கனக செந்திநாதன் உயிர் வாழும்போதே கதிர்காம வேலவன் பவனி வருகிறான், இலக்கிய வழி, சைவநற்சிந்தனைகள் என பண்டிதமணியின் மூன்று நூல்கள் வெளிவந்துவிட்டன. கனக செந்திநாதனின் மூன்றாவது கண் என்னும் நூல் 1959ஆம் ஆண்டு வெளிவந்தது. அதற்குப் பின்னரும் பண்டிதமணி எழுதிக் கொண்டே இருந்தார்கள். இன்று மொத்தமாக 24 நூல்கள் வெளிவந்துள்ளன. அவை பின்வருவன :

1. கண்ணகி தோத்திரம்
2. கதிர்காம வேலவன் பவனி வருகிறான்
3. இலக்கிய வழி (வரதர் வெளியீடு)
4. சைவ நற்சிந்தனைகள்
5. பாரத நவமணிகள்
6. கந்தபுராண கலாசாரம்
7. கந்தபுராண போதனை
8. சிவராத்திரியிற் சிந்திக்கத் தக்கவைகள்
9. இருவர் யாத்திரிகர்
10. சமயக் கட்டுரைகள்
11. இலக்கியவழி (திருத்தப்பதிப்பு)
12. கம்பராமாயணக் காட்சி (கவிநயக் கட்டுரை)
13. கந்தபுராணம், தக்ஷகாண்டம் உரை
14. நாவலர்
15. சிந்தனைச் செல்வம்
16. நாவலரும் கோயிலும்
17. சிந்தனைக் களஞ்சியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. கோயில்
19. ஆறுமுக நாவலர்
20. கம்பராமாயணக் காட்சிகள்
21. அன்பினைந்திணை
22. அத்வைத சிந்தனை
23. செந்தமிழ்க் களஞ்சியம்
24. பாஷை - இலக்கணம் இலக்கியம் கற்பித்தல் (1994)

சரியான பண்டிதமணியைக் கண்டுகொள்வதற்கு அவரது வாழ்க்கை வரலாறு இன்றியமையாதது. பண்டிதமணியின் வாழ்க்கை வரலாறு பற்றி மூன்று நூல்களும் சில கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இன்று இவையே எமக்கு அடிப்படை ஆதாரங்கள். கனக செந்திநாதன் எழுதிய மூன்றாவது கண், நீர்வேலி இ. சிதம்பரப்பிள்ளை எழுதிய மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க. (1988) ஆகிய இரு நூல்களும் பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுவன. செபரெத்தினம் எழுதிய வாழையடி வாழை (1962) என்ற நூல் பண்டிதமணி பற்றியும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பற்றியும் கூறுவது. க. சி. குலரத்தினம் பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகச் சஞ்சீவியில் எழுதினார். அவரைப் போன்று பஞ்சாட்சரமும் பண்டிதமணி நினைவு மலரில் எழுதியுள்ளார். சரியான பண்டிதமணியைக் காணவிழைபவர்களுக்கு இந்நூல்களும் கட்டுரைகளும் போதா. இவை முழுமையற்றன; தெளிவுமற்றன. ஒரு நூலில் உள்ள சில கருத்துக்களை மற்ற நூல்களில் காணோம். கட்டுரைகளில் உள்ள சில கருத்துக்களை நூல்களில் காணோம். கருத்துக்கள் அரைகுறையாகவும் முரண்படும் வகையிலும் கூறப் பெற்றுள்ளன. நூல்களையும் கட்டுரைகளையும் நிதானமாக ஒப்புநோக்கிப் பார்க்கும் போது இக்குறைகள் புலனாகும். இந்தக்குறைகளை ஏனைய அறிஞர் சிலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக சிவத்தம்பி அவர்கள் பண்டிதமணியின் வாழ்க்கை வரலாறு தெளிவாக இல்லை; திட்பமான முறையில் எழுதப்படவுமில்லை (பண்டிதமணி நினைவுமலர், பக். 155) என்பர். பண்டிதமணி ஆய்வில் எழும் சிக்கல்கள் என்னும் எனது கட்டுரையையும் பார்க்க. வாழ்க்கை வரலாறு இயன்றளவு முழுமை வாய்ந்ததாக, நிதானத்துடன் எழுதியதாக அமைதல் வேண்டும்.

பண்டிதர் சு. வே. (சு. வேலுப்பிள்ளை) அவர்கள் பண்டிதமணியின் பழைய மாணவன். அவர் "பண்டிதரையா (பண்டிதமணியையா எனக் கூறவிரும்பவில்லை!) தம்மைப்பற்றி ஒரு சுயசரிதம் எழுதியிருந்தாலோ.......! மனம் அங்கலாய்க்கிறது" என பண்டிதமணி நினைவு மலரில் (பக். 64) எழுதியுள்ளார். இதுகாறும் வெளிவந்த வாழ்க்கை வரலாற்று நூல்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தியடையாத சு. வே. அவர்கள் பண்டிதமணியின் வாழ்க்கை வரலாறு பற்றி நூல்கள் எழுதுவதற்குப் பொருத்தமான தலைப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. வண்டிச் சவாரி
2. 14 வயது மாணவன்
3. நாவலர் பாடசாலையும் குமாரசாமிப் புலவரும்
4. பண்டிதர் கணபதிப்பிள்ளை
5. பண்டிதரும் மகாலிங்கசிவமும்
6. ஈரப்பலாவடிக் கூட்டம்
7. சைவாசிரிய கலாசாலை
8. காவிய பாடசாலை
9. உபஅதிபரும் பண்டிதரையாவும்
10. பொன்னுவாத்தியார் வீட்டு முன் கொட்டில்
11. பண்டிதரையாவும் தினகரனும் நாதனும்

என்பனவாம். இவற்றுள் பொன்னுவாத்தியார் வீட்டு முன் கொட்டில் தவிர்ந்த ஏனைய விஷயங்கள் பற்றி இதுவரை வெளிவந்த வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் கட்டுரைகளிலும் ஏதோ மிகச் சுருக்கமாக - இரண்டொரு வரியாவது - கூறப்பெற்றுள்ளன.

சு.வே அவர்கள் பண்டிதரையா யார் என்பதைச் சுருக்கமாகக் கூறும் பொருட்டு ஒரு நல்ல சமன்பாட்டையும் வகுத்துள்ளார். அது பின்வருமாறு :

"பண்டிதரையா = நாவலர் + இலக்கிய மருத்துவர் + சித்தாந்தச் சுவைஞர் + தத்துவ விசாரகர் + விமரிசனத்தாதை + உவகைச் சுவை + வேந்து + உவமைச் சாகரம் + குருமணி + தருக்க குடார தாலுதாரி."

சமன்பாட்டில் உள்ள ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்கியுமுள்ளார். பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றை அறிய விரும்புபவர்களுக்கு, சரியான பண்டிதமணியைக் கண்டுகொள்ள விரும்புபவர்களுக்கு இச்சமன்பாடு பயன்படும்.

பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர்கள் வருங்காலத்தில் பண்டிதமணி பற்றி ஆராய்வது பற்றியும் (பண்டிதமணி நினைவு மலர், பக். 12) பண்டிதமணி இயல் எனப் பெயர் கொண்ட ஒன்றினைப் பற்றியும் (பண்டிதமணி நினைவு மலர், பக். 54) எழுதியுள்ளனர். இந்த முயற்சிகள் கைகூடுவதற்கு முன்னோடி முயற்சியாகச் செய்ய வேண்டியவை உள. அவற்றை ஒருவரே செய்து விடலாம் என எதிர்பார்க்க முடியாது. பல்துறை அறிஞர்களின் கூட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி வேண்டும். இதுபற்றி யான் முன்னர் கூறியதை வரவேற்று உமாமகேசு-வரன் தமது கட்டுரை ஒன்றில் (முத்திரையிற் பண்டிதமணி, பக். 48) மேற்கோள் காட்டியுள்ளார்.

முதலில் நாம் செய்ய வேண்டியது இதுகாறும் வெளிவந்த பண்டித-மணியின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவரின் வாழ்க்கை பற்றிய எல்லாச் செய்திகளும் ஒரே நூலில் இடம்பெறத்தக்க முறையில் வரலாற்றை முழுமைப்படுத்தி மீள எழுதுதலேயாம். முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி சரியானதைக் காரணங்-களுடன் கூறமுடியுமென்றால் நன்று. பண்டிதமணியவர்களின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அவருடன் பழகியவர்கள், அவரிடம் கற்றவர்கள், அவரை அறிந்தவர்கள் எனச் சிலர் இன்றும் உளர். அவர்களிடமிருந்து பண்டிதமணி பற்றி மேலதிகமாக அறிய முடியுமென்றால் அவற்றையும் ஆராய்ந்து நிதானமாக நூலில் சேர்த்துக் கொள்வது வரவேற்கப்படும். பண்டிதமணி மொழி, சமயம், பெரியோர் பற்றி எழுதிய கடிதங்கள், அவர் பற்றி வெளிவந்த பத்திரிகைச் செய்திகள், படங்கள் என்பனவும் பயனுள்ளவையே. இவற்றை விழிப்புடன் ஆராய்ந்து சேர்த்துக் கொள்தல் வேண்டும்.

பண்டிதமணி யார் யாருடன் நெருங்கிப் பழகினார்களோ அவர்கள் தொடர்புபற்றி விரிவான செய்திகளை அறிய விரும்புகிறோம். பண்டிதமணி-யின் வாழ்க்கை, சிந்தனை, ஈடுபாடு, சமய நோக்கு ஆகியவற்றில் பெரும் மாற்றம் இடம்பெறுவதற்கு காரணமாக இருந்தவர் உப அதிபர் பொ. கைலாசபதி அவர்களே. பண்டிதமணி உப அதிபர் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். வேறு சில கட்டுரைகளிலும் உப அதிபர் பற்றிக் கூறியுள்ளார். இன்று பண்டிதமணி எழுதி வைத்திருந்த உப அதிபர் அவர்களின் சிந்தனை-கள் வெளிவந்துள்ளன. பண்டிதமணியின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதியவர்கள் உப அதிபர், உப அதிபரின் தொடர்பு பற்றிச் சுருக்கமாகவே எழுதியுள்ளனர். கனக செந்திநாதனின் நூலில் (6) எண்ண மாற்றம், (10) வைதிக சைவசித்தாந்தி ஆகிய இரு பகுதிகளும், சிதம்பரப்பிள்ளையின் நூலில் (21) தத்துவஞானியின் சந்நிதி விசேடம் என்ற பகுதியும் முக்கி-யத்துவம் வாய்ந்தன. உண்மையிலே பண்டிதமணியின் வாழ்க்கையில் உபஅதிபருடன ஏற்பட்ட தொடர்பை அறிவதற்கு இப்பகுதிகளில் கூறப்-பெற்றவை போதா. ஈரப் பலா வளவில் ஒன்றாக வாழ்ந்த டாக்டர் கு. சிவப்பிரகாசம் அவர்களைப் பண்டிதமணி தாம் எழுதிய நவபாரதம் என்னும் உருவகக் கதையில் சகுனியாகப் பாத்திரம் படைத்துள்ளாராம் (94வது பிறந்ததின உரை, பக். 17). பின்னர் இருவரும் பிற்காலத்தில் மீண்டும் நெருங்கிய நண்பர்களாகப் பழகலானார்கள். சைவாசிரிய கலாசாலை அதிபருடன் தாம் "ஊடியும் கூடியும்' வாழ்ந்தது பற்றிப் பண்டிதமணி குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் அவரது வாழ்க்கை வரலாற்றில் அடங்குவன. ஆனால், விபரம் கிடைப்பதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி சைவவித்தியாவிருத்திச் சங்கம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், சைவபரிபாலன சபை என்பவற்றின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டு பற்றி விரிவாக எழுதுதல் வேண்டும். இவை சம்பந்தமாக அவர் எழுதிய திட்டங்கள் அறிக்கைகள், கதைகள் ஏராளமாக உண்டு என்பர் கனக செந்திநாதன் (மூன்றாவது கண், பக். 21). பண்டிதமணி மட்டுவிலிலும் திருநெல்வேலியிலும் நடாத்திய காவிய பாடசாலை பற்றியும் விரிவான செய்திகளைப் பெற்றுக்கொள்தல் வேண்டும். திருநெல்வேலியில் நடத்திய காவிய பாடசாலை பற்றிப் பண்டிதமணி எழுதிய ஓர் அறிக்கை 3.10.38இல் ஈழகேசரியில் வெளிவந்தது. அதனைக் கனக செந்திநாதன் "இது பண்டிதமணியின் வாழ்க்கையில் ஒரு மைல்கல். தமிழ் மக்கள் - சைவ ஸ்தாபனங்கள் - செய்ய வேண்டிய வேலைத்திட்டம் இது. பொன்னே போல் காப்பாற்ற வேண்டிய பிரசுரமுமாகும்" என்றார். இந்த அறிக்கை போன்றவை அனைத்தும் வாழ்க்கை வரலாற்றில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். மேலும், பண்டிதமணி நான்கு மணிநேரம் சுதந்திரன் நிருபருக்கு அளித்த பேட்டி - 27.09.53 அன்று சுதந்திரனில் வெளிவந்த பேட்டி - அவரது வாழ்க்கை வரலாற்றில் இடம் பெறுதல் வேண்டும். இது அவரது உள்ளத்தை - ஆளுமையைக் காட்டுவதாகும்.

பண்டிதமணி தமிழறிஞராக வாழ்ந்தது மட்டுமன்றி அரசியலும் பேசியவர். சமசமாசக் கட்சித் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு முதன்முதல் வந்தபோது திருநெல்வேலியில் அவர்களை வரவேற்றுப் பேசியவர். தேர்தலில் சு. நடேசபிள்ளைக்கு மாறாக அ. பொன்னையாவை ஆதரித்துக் கூட்டங்களில் பேசியவர். ஹன்டி பேரின்பநாயகம், எம். பாலசுந்தரம் ஆகியோருடன் இணைந்து வாலிபர் காங்கிரஸில் சேர்ந்து உழைத்தார். அன்று இந்து வாலிபர் சங்கம் எனவும் ஒன்று இருந்தது. சைவமும் தமிழும் எனப் பேசி வந்த பண்டிதமணி இந்து வாலிபர் சங்கத்தில் இருந்தாரா இல்லையா என அறிதல் வேண்டும். பண்டிதமணி "செய்த சமயப் பணிக்கு ஒரு அத்தியாயமே எழுத வேண்டும். ஒரு அத்தியாயம் போதாது, பல அத்தியாயங்கள் எழுத வேண்டும்" என்கிறார் கனக செந்திநாதன் (மூன்றாவது கண், பக். 29). ஆயின் எழுதக்கூடியவர் எழுதவில்லையே. இனி யார் எழுதுவார்களோ! செந்திநாதன் இடநெருக்கடி என்று கூறிச் (பக். 32) சொல்ல வேண்டியவற்றைச் சொல்லாமல் விட்டாரே என்ற கவலை தோன்றுகிறது.

பிறர் பண்டிதமணி பற்றி எழுப்பிய ஐயங்கள், வினாக்கள் போன்றவற்றிற்கு இயன்றளவு பதிலளிக்கும் விதத்தில் விஷயங்களை ஆராய்ந்து பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றை எழுதுதல் பயனுடைத்து. பண்டிதமணி ஈழநாட்டுப் புலவர் பலரை அறிமுகஞ் செய்து தூக்கிவிட்டார்; எனினும் சிலரை ஏதோ காரணத்துக்காகப் புறக்கணித்தார்; அது தவறு என்ற கருத்தை சச்சிதானந்தன் பண்டிதமணியின் 94ஆவது பிறந்ததின உரையில் (பக். 22) கூறியதைக் கருத்தில் கொள்தல் வேண்டும். முதுபெரும் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதம்பியவர்களின் பரிசு பெற்ற ஒரு கவிதையை, நடேசபிள்ளையவர்களின் சகுந்தலை வெண்பாவை, நவநீத கிருட்டிண பாரதியாரின் காந்தி வெண்பா, செழுங்கதிர்ச் செல்வம் என்பவற்றைப் பண்டிதமணி ஒதுக்கி விட்டாராம். ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் ஒரு பாதி மறைந்துள்ளது; ஒரு பாதி மிதந்துள்ளது எனக் கூறி, கை வைத்ததைக் கனகமாக்கும் மந்திரவாதி பண்டிதமணி எனக் கூறுவதால் அவர் விருப்பு வெறுப்புக் கொண்டவர் என்னும் கருத்து மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்து அறிதல் அறிஞர் கடனாம். இதற்கு அன்று திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரி மேல்மாடியில் சு. நடேசபிள்ளையவர்கள் நடத்திய தமிழ்ப் பண்டிதாசிரிய கலாசாலை பற்றிய விபரங்கள் பயன்படும். சில விபரங்களைச் சச்சிதானந்தன் உரையில் (பக். 16, 17) காணலாம். கனக செந்திநாதன் தெளிவற்ற முறையில் சில வரிகள் (மூன்றாவது கண், பக். 20) எழுதியுள்ளார். மறுபுறம் சிலப்பதிகாரம் பற்றித் தம்முடன் முரண்பட்ட பரமேசுவரக் கல்லூரி ஆசிரியர் வேந்தனார் தமது "கவிதைப் பூம்பொழில்" என்னும் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் எழுதுமாறு வேண்டியபோது பண்டிதமணி அவரைக் கவிஞர் என மதித்து சிறப்புப் பாயிரம் வழங்கியதை இவ்விடத்துச் சுட்டிக் காட்டலாம். இங்கு பண்டிதமணியின் நிலைப்பாட்டை ஓர்க.

இதுகாறும் பண்டிதமணி பற்றிப் பிறர் எழுதியவற்றைப் பற்றி அவரது வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுவது பயனுள்ளதாக இருக்கும். எழுத்து என்னும் பத்திரிகையில் ஈழத்தான் என்பவர் எழுதியதையும் (மூன்றாவது கண், பக். 16), "பிரகஸ்பதி" என்ற எழுத்தாளர் பண்டிதமணியின் சொற்பொழிவு ஒன்று பற்றி எழுதியதையும் (பக். 32) கனக செந்திநாதன் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தவர் பண்டிதமணியைப் புகழ்ந்து எழுதியவற்றையும் சேர்த்துக் கொள்வது நன்று. அதேசமயம் பண்டிதமணியின் இலக்கிய வழிக்கு வசனப் பிழை கூறியமை பற்றியும் (பக். 38) விரிவாக அறிதல் வேண்டும்.

இவ்வாறு தேடிப் பெறக்கூடியவற்றையெல்லாம் பெற்றுப் பதிப்புக்கு வேண்டிய முறையில் உருவாக்கப் பெற்ற ஏட்டை அமைத்து பண்டிதமணியின் வாழ்க்கை வரலாற்றை வெளியிடுதல் விரும்பத்தக்கது. இது எளிதான காரியமன்று. அறிவும் அநுபவமும் உள்ளவர்கள் சேர்ந்து இதனைத் திட்டமிட்டு யாதேனும் ஒரு நிறுவன ரீதியாகச் செய்தல் வேண்டும். விருப்பு வெறுப்பிற்கு இடமளித்தலாகாது.

அடுத்துப் பண்டிதமணியின் எழுத்தாக்கங்கள் அனைத்தையும் தேடிப் பெற்று அவற்றை இலக்கியம், இலக்கணம், சமயம், விமர்சனம், கண்டனங்கள், அணிந்துரை, வாழ்த்து, பிரார்த்தனை உரை, பொது என வகைப்படுத்தி விபரங்களுடன் கூடிய தலைப்புக்களைப் பட்டியலாக (annotated bibliography) அமைக்கும் முயற்சி மிகப் பயனளிப்பதாகும். பண்டிதமணி பெரும் கண்டனகாரராக விளங்கியதால் அவரை வெறுத்தவர்களும் இருந்தார்கள் அல்லவா? எனினும் பண்டித பட்டதாரிகளுக்காக சுதந்திரனில் வெளிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்டிதக் கருச்சிதைத்த படலம்" என்னும் கண்டனம் போன்றவை வரவேற்கப்பட்டன. இவை பற்றியும் அறிந்து விபரமாக எழுதுவது வரவேற்கப்படும்.

பண்டிதமணி எழுதிப் பிறர் பெயரில் வெளிவந்தவை உண்டா, பிறர் எழுதிப் பண்டிதமணி பெயரில் வந்தவை உண்டா என அறிய வேண்டியுள்ளது. மேலும், கையெழுத்துப் பிரதியாகப் பண்டிதமணி திருவருட்பயனுக்கு எழுதிய உரையும் விளக்கமும் உண்டாம். கலை - சமயம் - சமயோசிதம் - பெரியவர்கள் கதை என அவர் சொல்லிய கதைகளையும் சம்பாஷணைகளையும் பல அன்பர்கள் சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்றும் அவை புத்தக உருவமாக வெளிவந்தாற் பல அரிய விடயங்களை அறிந்து கொள்ளலாம் என்றும் கனக செந்திநாதன் (பக். 48) கூறியுள்ளார். இன்று அவற்றின் நிலை என்ன என்று தெரியவில்லை. அருமை அறிந்து பேணிப் பாதுகாக்கும் பழக்கம் எம்மிடம் குறைவு, அல்லவா?

பண்டிதமணியின் நூல்களில் இன்னும் இடம்பெறாத ஆக்கங்கள் மிகப் பலவுண்டு என அறிகிறோம். "இலக்கிய சம்பந்தமாகவும், சமய சம்பந்தமாகவும் பண்டிதமணி அவர்கள் எழுதிய கட்டுரைகள் ஆயிரத்துக்கு மேல் என்று துணிந்து கூறலாம் எனப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் கூறியுள்ளார் (பண்டிதமணி நினைவுமலர், பக். xii). பண்டிதமணி எழுதிய அணிந்துரைகள், வாழ்த்துரைகள் நூற்றுக்கணக்கில் உள என்றும் கவிதைகளும் மிகப் பலவுண்டு என்றும் கூறியுள்ளார். "தமிழல்லாத் தமிழ்" (மூன்றாவது கண், பக். 34), "இலக்கணம் படிக்கிறதென்றால் இலக்கியம் படித்தல்" (பக். 30) எனப் பண்டிதமணி எழுதிய கட்டுரைகளைக் கண்டிலம். கட்டுரைத் தலைப்போ உள்ளங் கவர்வன. இன்னும் இவை போன்றவை இருக்கலாம். முதலில் இவற்றைத் தேடி ஓரிடத்தில் பாதுகாத்தல் வேண்டும். பின்னர் வசதி, வாய்ப்புக் கிடைக்கும் போது வெளியிடலாம். இவற்றையெல்லாம் பார்க்காது படிக்காது ஆராயாது சரியான பண்டிதமணியைக் கண்டுகொள்வது எங்ஙனம்? கைதட்டுக்காக மேடையில் மட்டும் ஏதாவது பேசிவிட்டால் போதாது.

இனி, இதுவரை வெளிவந்துள்ள பண்டிதமணியின் நூல்களில் உள்ள கட்டுரைகளைப் பொருளடிப்படையில் மீள் பரிசீலனை செய்து மீண்டும் பொருளடிப்படையில் தொகுத்து தொகுதிகளாக வெளியிடுதல் நல்ல பணியாகும். எடுத்துக்காட்டாக, சமயம் பற்றிய கட்டுரைகள், குறிப்புக்கள் அனைத்துமே ஒரு தொகுதியில் இடம்பெறுதல் வரவேற்கப்படும். கம்பராமாயணம் பற்றிய கட்டுரைகள், நாவலர் பெருமான் பற்றிய கட்டுரைகள் தனித்தனித் தொகுதியாகலாம். கட்டுரைகளைத் தொகுப்பவர் கட்டுரை எழுதப்பெற்ற காலம், கட்டுரை வெளிவந்த இடம், பத்திரிகை போன்ற செய்திகளுடன் தேவை ஏற்படின் கட்டுரைகளில் வரும் பொருளுக்கும் விளக்கக் குறிப்பு எழுதலாம். கட்டுரைகளில் உபஅதிபர் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள் கையாளப்பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டி விளக்கலாம். சில விஷயங்களைப் பொறுத்தவரை கைலாசபதியவர்களை விங்கிக் கொள்வதன் மூலம் தான் பண்டிதமணியை விளங்கிக் கொள்ளலாம். எனவே, கைலாசபதி பற்றிய ஆய்வும் வளர்தல் வேண்டும்.

பண்டிதமணிக்கு வழங்கப்பெற்ற சைவசித்தாந்த சாகரம், முதுபெரும் புலவர், மகாவித்துவான் போன்ற பட்டங்கள் பற்றியும் இலக்கியக் கலாநிதிப் பட்டம் பற்றியும் அவரது நூறாவது பிறந்த தின நிறைவையொட்டி முத்திரை வெளியிட்டது பற்றியும் விரிவாக எழுதுதல் வேண்டும்.

இறுதியாக இங்கு கூறியவற்றைவிட வேறு எவ்வகையிலெல்லாம் சரியான பண்டிதமணியைக் கண்டுகொள்ளலாம் என மேலும் மேலும் சிந்திப்போம், வாரீர். பட்டம், பதவி, பத்திரிகைப் புகழ் என ஆரவாரிக்காது அமைதியாகச் செயற்படுவோம், வாரீர்.

## உசாத்துணை நூல்கள்


கனக, செந்திநாதன். (1959), *மூன்றாவது கண்*,

சச்சிதானந்தன், க.(1993), *பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் 94ஆவது பிறந்ததின உரை.*

சிதம்பரப்பிள்ளை, இ. (1988), *மட்டுவில் தந்த பண்டிதமணி, சி. க.*

செபரெத்தினம், க. (1962), *வாழையடி வாழை.*

*பண்டிதமணி நினைவு மலர்*, (1989), பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை,

*முத்திரையிற் பண்டிதமணி*, (1999), பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை


இராமகிருஷ்ணன், எஸ். (1964), *இளங்கோவின் பாத்திரப் படைப்பு*, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

கணபதிப்பிள்ளை, சி. (1955), *இலக்கியவழி*, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

.................................... (1959), *பாரத நவமணிகள்*, செந்தமிழ் மன்ற வெளியீடு, சாவகச்சேரி.

.................................... (1959), *சைவ நற்சிந்தனைகள்*, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

.................................... (1959), *கந்தபுராண கலாசாரம்*, சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

.................................... (1960), *கந்தபுராண போதனை*, அகில இலங்கை சைவ இளைஞர் மத்திய மகா சபையினர், தெல்லிப்பழை.

.................................... (1961), *சமயக் கட்டுரைகள்*, பதிப்பாளர்: பழைய மாணவர்கள் - சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி.

.................................... (1963), *இருவர் யாத்திரிகர்*, சன்மார்க்க சபை, குரும்பசிட்டி.

.................................... (1964), *இலக்கிய வழி* (திருத்தப் பதிப்பு), திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை பழைய மாணவர் சங்க வெளியீடு.

.................................... (1965), *கம்பராமாயணக் காட்சி* என்னுங் கதை தழுவிய கவிநயக் கட்டுரை.

.................................... (1966), *மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.......................................... (1967), *கந்தபுராணம் - தக்ஷ காண்டம் உரை*, இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வெளியீடு, பேராதனை.

................................... (1968), *நாவலர்*, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் 120 ஆம் ஆண்டு ஞாபக வெளியீடு.

........................................ (1972), *சிந்தனைச் செல்வம்*, குரும்பசிட்டி திருமதி சபாரத்தினம் செல்லம்மா அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது.

....................................... (1978), *சிந்தனைக் களஞ்சியம்*, பண்டிதமணி பாராட்டு விழாச்சபை வெளியீடு.

........................................ (1979), *கோயில்*, கொழும்பு அண்டர்சன் மாடி நிரைச் சைவ கலாசார மன்ற வெளியீடு, கொழும்பு.

.................................... (1979), *ஆறுமுகநாவலர்*, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களின் தென்மராட்சி பாராட்டு விழாச் சபை.

.................................... (1980), *கம்பராமாயணக் காட்சிகள்*, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

.................................... (1983), *அன்பினைந்திணை*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

.................................... (1984), *அத்வைத சிந்தனை*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

........................................ (1987), *செந்தமிழ்க் களஞ்சியம்*, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

........................................ ( ? ), *கதிர்காம வேலவன் பவனி வருகிறான்*, மட்டுவில், சாவகச்சேரி.

கணபதிப்பிள்ளை, சி. (பதிப்பு) *சேற்றூர் அருணாசலக் கவிராயர் பத்திய ரூபமாக இயற்றிய ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரம்*, முகவுரை, பவ வருடம், ஆவணி மாதம், மட்டுவில்.

கனக, செந்திநாதன் (1954), *மூன்றாவது கண்*, வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தின உபாத்தியாயர், வே. (1968), *ஆறுமுகநாவலர் சரித்திரம் (மறுபிரசுரம்)*, யாழ்ப்பாணம் நாவலர் நூற்றாண்டு விழாச் சபையின் வெளியீடு.

குருசாமி, ம. ரா. போ. (1955), *சிலப்பதிகாரச் செய்தி*, சென்னை.

குலரத்தினம், க. சி. (1986), *பண்டிதமணியின் காலமும் வரலாறும்*, சஞ்சீவி.

கைலாசபிள்ளை, த. *ஆறுமுகநாவலர் சரித்திரம்*.

சச்சிதானந்தன், க. (1993), *பண்டிதமணியின் மும்முகங்கள்*, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தின உரை, பண்டிதமணி வெளியீட்டுச் சபை.

சந்திரசேகரம், ப. (1987), *யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி*, லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சஞ்சீவி, ந. (1956), *சிலப்பதிகார விருந்து*, திருச்சிராப்பள்ளி.

...................... (1959), *சிலம்புத்தேன்*, காஞ்சிபுரம்.

சண்முகன், மு., *கவுந்தியடிகள்*, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சிதம்பரப்பிள்ளை, நீர்வேலி இ. (1988), *மட்டுவில் தந்த பண்டிதமணி சி. க.*, சுன்னாகம்.

சிதம்பரப்பிள்ளை, இ. (1988), *மட்டுவில் தந்த பண்டிதமணி, சி. க.*

சுசீந்திரராசா, சு. *பண்டிதமணி காட்டும் நாவலர் பெருமான்* (கையெழுத்துப்படி).

சுப்பிரமணிய ஆச்சாரியார், வெ. சு. (1947), *சிலப்பதிகார ஆராய்ச்சி*, சென்னை.

செபரெத்தினம், க. (1962), *வாழையடி வாழை*, அரசு வெளியீடு, கொழும்பு.

சேதுப்பிள்ளை, ஆர். பி. (1956), *சிலப்பதிகார நூல் நயம்*, சென்னை.

சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கம் (1951), *ஸ்ரீமான் சி. சுவாமிநாதன் அவர்களின் சேவை நலம்* பாராட்டு மலர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைசாமிப்பிள்ளை ஔவை, சு. (1942), *முப்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகார ஆராய்ச்சி,* தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

நீதிவாணன், ஜெ. (1979), *நடையியல்,* முல்லை வெளியீடு, மதுரை.

நுஃமான், எம். ஏ. (1988), "பத்தொன்பதாம் நூற்றாண்டின் நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுகநாவலரும்," *மொழியியல்,* தொகுதி 11, இதழ் 1 - 4. அண்ணாமலை நகர், தமிழ்நாடு.

பண்டிதமணி சி. க. அவர்களின் நூல் வெளியீட்டுச் சபை (1989) *பண்டிதமணி நினைவு மலர்,* யாழ்ப்பாணம்.

பண்டிதமணி பாராட்டு விழாச் சபை (1959), *பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மணிவிழா மலர்,* யாழ்ப்பாணம்.

.............................. (1978), *இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பாராட்டு விழா மலர்,* யாழ்ப்பாணம்.

பாக்கியம், பொன். (1970), *நாவலர் சரித்திர ஆராய்ச்சி,* வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கம்.

மார்க்கபந்து சர்மா, எஸ். ஆர். (1961), *சிலம்பின் பாயிரம்,* தொல்காப்பியர் நூலகம், சென்னை.

.............................. (1961), *சிலம்பும் மேகலையும்,* தொல்காப்பியர் நூலகம், சென்னை.

.............................. (1962), *சிலம்பின் தகுதி,* தொல்காப்பியர் நூலகம், சென்னை.

மீனாட்சி சுந்தரன், தெ. பொ. (1954), *நீங்களும் சுவையுங்கள்,* வசந்தம் பதிப்பகம், சென்னை.

.............................. (1961), *குடிமக்கள் காப்பியம்,* தொல்காப்பியர் நூலகம், சென்னை.

.............................. (1961), *கானல்வரி,* கலைக்கதிர் வெளியீடு, கோவை.

.............................. (1961), *சமணத் தமிழ் இலக்கிய வரலாறு,* கலைக்கதிர் வெளியீடு.

*முத்திரையிற் பண்டிதமணி,* (1999), பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை,

வரதராசன், மு. (1956), *கண்ணகி,* சென்னை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.............................. *மாதவி,* சென்னை.

.............................. (1960), *இளங்கோ அடிகள்* (சொர்ணம்மாள் சொற்பொழிவுகள்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

வேலுப்பிள்ளை, ஆ. (1989), *பண்டிதமணி போற்றிய யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ்ப் பாரம்பரியம்,* பண்டிதமணி அவர்கள் பற்றிய நினைவுப் பேருரை, பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (1964), *இலக்கிய மணிமாலை,* தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

ஜெபரத்தினம், ஆ. (1956), *இளங்கோ உள்ளம்,* சென்னை.

Enkvist, N. E. (et al) (1964), *Linguistics and Style*, Oxford University Press, London.

Hudson, R. A. (1980), *Sociolinguistics*, Cambridge University Press.

Spencer, John (ed) (1965), *Linguistics and Style*, Oxford.

*The Hindu Board for the Promotion of Education* (1930), Jaffna, Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லடைவு

அதிபர் 2. 7. 23. 29. 30. 31. 33. 36. 44. 49. 50. 168. 176. 180. 192. 193. 194. 195. 196. 197. 198. 202. 203
அமுத சுரபி 133
அருணாசலக் கவிராயர் 113. 211. 212. 213. 225.
அற அடிப்படை 115. 116
அறக்கோட்பாடு 117. 138
அறநெறி 138. 150. 209
அறிவியல் நோக்கு 16. 20

ஆக்ஞா சக்கரம் 135
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் 31. 32. 52. 106. 110. 219
ஆறுமுகநாவலர் 27. 28. 42. 43. 44. 51. 55. 59. 61-63. 65. 67. 68. 70. 71. 73. 75-79. 81. 91-93. 95. 106. 108. 110. 112. 113. 115. 152. 177. 185. 226
ஆண்மாரி 123

இந்து வாலிபர் சங்கம் 32. 219
இந்துபோட் 33. 50. 51. 193. 194
இரப்புரைக் கடிதம் 109
இரங்கற்பா 105
இராசரத்தினம் 26. 33. 193. 194
இராமகிருஷ்ணன் 137. 140. 144. 145. 149. 226
இராமன் 121. 123. 124. 140. 143
இலக்கிய இரசனை 23. 30. 31. 51
இலக்கியக் கோட்பாடு 62. 111. 152. 162
இலக்கியத் திறனாய்வு 5. 9. 36. 66
இலக்கணத் தமிழ் 97. 98
இளங்கோவடிகள் 134. 135. 137. 138. 139 146. 147. 148. 149. 150. 153

ஈரப்பலா வளவு 23. 169
ஈழகேசரி 61. 63. 64. 118. 157. 193. 219.

உப அதிபர் 2. 5. 20. 21. 29. 44. 49. 50.52. 55. 80. 85. 93. 117. 164-167. 169-173. 176. 178. 179. 185. 186. 190. 192. 193. 195. 196. 207. 210. 218
உமாபதி சிவம் 74. 131
உமாமகேசுவரன் 218
உ.வே.சா. ஐயர் 104. 105

எப். எக்ஸ். ஸி. 78. 84. 88. 89

கச்சியப்ப முனிவர் 148
கதிரவேற் பிள்ளை 63
கந்தையா 11. 134. 153. 181. 182. 210
கந்தையாபிள்ளை 22
கந்தபுராணம் 12. 54. 59. 118. 214. 215. 223
கனக செந்திநாதன் 10. 16. 17. 18. 49. 50. 75. 84. 86. 87. 88. 152. 154. 165. 175. 182. 193. 202. 203. 207. 210. 215. 216. 219. 220. 221
கம்பன் 89. 98. 99. 123. 124. 126. 142
கம்பநாடன் 125. 129. 130. 131. 132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியலான பொருள் 208
கல்கி 48, 65, 88, 197, 206
கலாநிலையம் 52
கண்ணகி 41, 43, 72, 73, 115, 118-127, 134, 137-141, 143-150, 153-155, 157, 211, 215, 223, 226

காந்தி வெண்பா 220
காந்தியுலகம் 150
கானல்வரி 125, 147, 148, 155, 226

குமாரசாமிப் புலவர் 22, 86
குரவைப் பாடல்கள் 128
குருசாமி 137, 154, 226
குரு - சிஷ்ய உறவு 16
குறள் 130, 132, 133, 136, 137, 146

கைலாசபதி 9, 23, 44, 55, 58, 79, 80, 93, 106, 117, 164, 165, 167, 169, 170, 171, 173-177, 179, 181-183, 185, 186, 189, 192, 193, 203, 205, 210, 213, 218, 222
கைலாசபிள்ளை 22, 71, 78, 86, 91,-93, 95, 213, 225

கோவலன் 41, 115, 119-124, 134, 140-146, 148, 149

சகுந்தலை வெண்பா 220
சகோதரத்துவம் 123, 146
சங்கம் 12, 24, 26, 28, 31, 32, 52, 63, 66, 95, 106, 107, 115, 117, 125, 136, 157, 203, 206, 219
சச்சிதானந்தன் 105, 112, 113, 134, 151, 154, 193, 203, 209, 210, 219, 220, 222, 226

சபாரத்தினம் 54, 178-182, 224
சமணம் 75
சண்முகதாஸ் 84, 85, 89, 229

சாமிநாதையர் 35, 74, 104-106, 108, 111, 112, 134, 153, 157, 185, 212
சாமிநாதையா 105, 111, 112

சிந்தாமணி 35, 73, 74, 75, 86, 98, 105, 110, 111, 114, 129-132 150, 152-154
சிவத்தம்பி 53, 159, 176, 182, 216
சிவஞான சுவாமிகள் 130, 230
சிலம்பு 88, 122, 124, 126, 128, 140, 151, 153, 154

சீத்தலைச் சாத்தனார் 138
சீதை 119-122, 139, 140, 142-145
சீவகன் 73, 129,

சு. வே. 50, 216, 217
சுத்தானந்த பாரதியார் 37
சுத்தானந்தர் 76, 92
சுதந்திரன் 159, 219
சுப்பையாபிள்ளை 22, 49, 167
சுவாமிநாதன் 2, 28, 33, 50, 56, 159, 168, 175, 182, 192-198, 203, 204,225

செங்குட்டுவன் 122-124, 126, 145, 147,
செந்திநாதையர் 81, 105, 111, 112, 170, 176
செபரெத்தினம் 17, 50, 56, 84 88, 89, 95, 165, 216, 222, 225
செல்லையாபிள்ளை 92
செழுங்கதிர்ச் செல்வம் 220

சேக்கிழார் 74, 105, 106, 122, 125, 129, 130, 131, 156
சேதுப்பிள்ளை 7, 8, 19, 35, 87, 107, 137, 154, 205-207, 209, 226

சைவ பரிபாலன சபை 32
சைவசித்தாந்தம் 20, 66, 184, 191, 214
சைவ வித்தியா விருத்திச் சங்கம் 24, 26, 28, 219


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாசிரிய கலாசாலை 15, 16, 23, 24, 25, 27, 28, 29, 31-34, 36, 45, 49, 50, 54, 56, 57, 79, 94, 103, 112, 117, 164, 165, 167, 168

தசரதன் 124
தமிழ்ப் புலமை 130
தமிழ்ப் பண்டிதாசிரிய கலாசாலை 220
தமிழ்த் தாத்தா 74, 111
தமிழலல்லாத் தமிழ் 221
தனிநிலைச் செய்யுட்கள் 138

தாமோதரம்பிள்ளை 4, 5, 78, 81, 111, 189

தினகரன் 9, 10, 49, 55, 64, 88, 206, 208, 209
திரிவேணி சங்கமம 29, 192
திரு. அ. கு. அவர்கள் 129
திருவள்ளுவர் 139, 145, 146
திணைப் பாடல்கள் 122, 147

துரைசாமிப்பிள்ளை 8, 145, 146, 154, 226
துறவும் கீதையும் 90, 215

தெய்வக் கண்ணகி 73, 127

நரித்துறவு 129
நடராசா 22, 23, 51, 84, 85, 88, 89, 167, 168, 169
நடேசன் 157, 193
நடேசபிள்ளை 3, 4, 33, 35, 50, 219, 220
நவபாரதம் 193, 218
நல்லதம்பி 220

நாவலர் 22, 36, 44, 50, 100, 106, 108, 109, 111, 115, 116, 130, 152

நெடுஞ்செழியன் 124, 125

பஞ்சாட்சரம் 10, 12, 13, 78, 160
பரநிருபசிங்கம் 49, 178, 179, 181, 183
பரமேசுவரக் கல்லூரி 3-6, 26, 33, 41, 168, 180, 205, 220
பண்டிதமணி இயல் 217
பண்டிட்ஜி 199
பன்முகப்பட்ட ஆளுமை 22

பாஷாலங்காரம் 147
பாரதப் பண்பாடு 123
பாரதியார் 3, 49, 127, 134, 220
பாண்டியன் 122, 124, 125, 126, 145
பாண்டிமாதேவி 119, 126

புகழ்ச் சோழா 122
புத்த தர்மம் 43
புராண மடனம் 230
புலவர்மணி 17, 50, 85, 165, 216

பூலோகசிங்கம் 51, 176, 182, 189

பெரியபுராணம் 47, 186

பொன்னம்பலபிள்ளை 30, 69, 70, 79, 82, 116, 129, 152, 167, 172, 199

பௌத்தம் 135

மறந்த பாரதம் 214
மணநூல் 131
மணிமேகலை 35, 86, 88, 110, 114, 132, 133, 134, 137, 138, 150-154, 157, 162
மணிவிழா மலர் 52, 56, 164, 167, 198, 204, 225
மந்திரவாதி 220

மகாலிங்க சிவம் 85
மாதவி 115, 123, 128, 134, 141-143, 149, 155, 157, 227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சிசுந்தரன் 10. 32. 134-136. 139. 147. 150
மீனாட்சிசுந்தரம்பிள்ளை 108. 109. 185
முத்திரை 86. 87. 115. 156. 214. 218. 222. 227
மும்மூர்த்திகள் 29. 192
முரசொலி 94. 160. 162. 163. 166. 178. 182

மூன்று தோல்விகள் 107
மூன்றாவது கண் 10. 16. 17. 18. 25. 29. 30. 31. 35. 46. 49. 56. 75. 84. 85. 93. 95. 105. 112. 113. 152. 154. 165. 182. 193 202. 206. 207 210. 214. 216. 219. 220-222. 225

வரதராசன் 8. 62. 91. 134. 135. 138. 140. 141. 143. 145.-148. 150. 155. 158. 226
வண்டிச் சவாரி 217

வால்மீகி 18. 124
வாலிபர் காங்கிரஸ் 32

வி. கே. பி. நாதன் 9. 88
விகடசக்கரக் கணபதி 35
விபுலாநந்தர் 24. 132. 189
வித்தியானந்தன் 24. 31. 37. 94. 161. 162. 202
வித்துவ சிரோமணி 51. 129

வேந்தனார் 4. 5. 41. 88. 157. 220
வேதாந்தம் 66
வேதாகம சைவசித்தாந்தம் 214
வேற்பிள்ளை 21. 22
வேலுப்பிள்ளை 13. 90. 115. 116. 152. 153 .155. 158. 159. 161. 216. 225

டி.கே.சி. 62. 91. 209

ஹன்டி பேரின்பநாயகம் 31. 33. 219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துப் பண்டிதமணி

பேராசிரியர் சு. சுசீந்திரராஜா

---

பேராசிரியர் சுசீந்திரராஜா யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விமான்களில் ஒருவராக விளங்கிய மயிலிட்டி சுவாமிநாதனின் புதல்வர்களுள் ஒருவர். இளம் வயதிலேயே தமிழ் கற்பதில் ஆர்வங்கொண்ட இவருக்கு பண்டிதர் முத்துக்குமாரு, இளமுருகனார், வேந்தனார், நவநீதகிருஷ்ண பாரதியார், கணேசஐயர், பண்டிதர் நமசிவாயகம், பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் பாடங்கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. சீதாராம சாஸ்திரியிடம் சமஸ்கிருதம் கற்றார்.

பட்டப்படிப்பின்போது சென்னைப் பல்கலைக்கழகத்துப் பச்சையப்பன் கல்லூரியிலும், மாநிலக் கல்லூரியிலும் பேராசிரியர்கள் மு.வரதராசன், அ.ச.ஞானசம்பந்தன், தெ. பொ. மீனாட்சிசுந்தரன் ஆகியோரிடம் தமிழ் பயின்று பின்னர் எம். ஏ. பட்டம் பெற்றார். அதன் பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் தெ.பொ. மீனாட்சிசுந்தரன், சண்முகம்பிள்ளை, அகஸ்தியலிங்கம், எஸ். வி. சண்முகம் ஆகியோரிடம் எம். ஏ. (மொழியியல்) பயின்றார். பேராசிரியர் வெங்கடேஸ்வரனிடம் சமஸ்கிருதம் பயின்று பட்டப்பின் டிப்புளோமா பெற்றார். கன்னடமும் மலையாளமும் பயின்றார். மொழியியலில் கலாநிதிப் பட்டமும் பெற்றார்.

அண்ணாமலை, கொழும்பு, களனிப் பல்கலைக்கழகங்களில் மொழியியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே மொழியியல் முதுநிலைப் பேராசிரியராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார். யாழ்ப்பாணத்தில் சைவசித்தாந்த அறிவு வளர்ச்சிக்காக தொண்டாற்றினார்.

சுசீந்திரராஜா பேராசிரியர்கள் ஜேம்ஸ் கெயர், ஆர். இ. ஆஷர், டபிள்யு. எஸ். கருணதிலக ஆகியோருடன் இணைந்தும் தனித்தும் மொழியியலில் செய்த ஆய்வுகள் பன்னாட்டு அறிஞரின் பாராட்டைப் பெற்றன. இவரது பெயர் அமெரிக்காவில் வெளிவந்துள்ள *Marquis Who's Who* என்னும் அகராதியிலும் இங்கிலாந்தில் கேம்பிரிஜில் வெளிவந்துள்ள *Dictionary of International Biography* இலும் இடம் பெற்றுள்ளது. மொழியியலில் ஈடுபட்டிருந்த இவர் இப்போது தமிழ் இலக்கியத்தையும் சமயத்தையும் மீண்டும் கற்கிறார் ஒதுங்கி ஆரவாரமற்ற வாழ்க்கை நடத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org